# கூட்டுறவுக்கோர் அறிமுகம் 1




ஆசிரியர்
வை. சி. சிவஞானம்

வெளியீடு.
தெல்லிப்பழை பலநோக்குக்
கூட்டுறவுச் சங்கம்
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Janaki - M

237, 221, 215, 178, 208.

# கூட்டுறவுக்கோர் அறிமுகம்

# 1

ஆசிரியர் :

வை. சி. சிவஞானம்

வெளியீடு

தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

தெல்லிப்பளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்
கல்விச் சேவை வெளியீடு

* முதற்பதிப்பு : 1980-ம் ஆண்டு யூலை

* பதிப்புரிமை : தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

* அச்சுப் பதிப்பு : விவேகானந்தா அச்சகம் லிமிட்டெட்
யாழ்ப்பாணம்

விலை : 12-50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

கூட்டுறவுக் கொள்கைகளில் ஒன்று கல்விச் சேவையாகும். இக்கொள்கையின் அடிப்படையிலேயே கல்விச் சேவைக்கென நாம் அளித்துவரும் பல்வேறு கல்விச் சேவைகளுள் இந்நூல் வெளியீடும் ஒன்றாகும். கூட்டுறவுக் கருத்துக்களை உறுப்பினர்கள், ஊழியர்கள், பதவிநிலை வகிப்போர், பொதுமக்கள் ஆகிய சகலருக்கும் பரந்த அளவில் அளிக்கும் பொருட்டு இப்பெரு முயற்சியில் எமது சங்கம் ஈடுபட்டுள்ளது. இப்பெரு முயற்சியில் உதித்த ஓர் உதயசூரியனே "கூட்டுறவுக்கோர் அறிமுகம்"

இன்றைய நிலையில் பொதுமக்கள், அங்கத்தவர்கள் மாணவர்கள் ஆகியோருக்குக் கூட்டுறவு பற்றிய அறிவு, அதன் சட்டம், விதிகள், உபவிதிகள், நோக்கங்கள் என்பன பற்றிய ஒரு வரைபடத்தை விளக்கும் நோக்கமாகவே இந்நூலை வெளியிட முன்வந்துள்ளோம். நீண்டகாலமாகவே கூட்டுறவு இயக்கம் பற்றிய போதிய கல்வி அறிவைப் பெறும் சாதனங்கள் எமது மக்களுக்குக் குறைவாகவே இருக்கின்றன என்ற குறைபாடு எம்மிடம் இல்லாமல் இல்லை. அதுவும் தமிழ் மொழியில் இவ்வாய்ப்பு மிகவும் குறைவு என்றே கூறலாம். இக்குறையை எங்களால் வெளியிடப்படும் நூல் முற்று முழுவதாக நீக்கிவிடுமென நாம் கூறுவிடினும் ஏதோ ஒரு வகையில் சிறிதளவாவது நீக்குமென நம்புகின்றோம்.

இம்முயற்சி எம்மைப் பொறுத்தவரை ஒரு கன்னி முயற்சியே. இப்பணியை நாம் தொடர்வது இந்நூலுக்குக் கிடைக்கும் ஆதரவையே பொறுத்துள்ளது. கன்னி முயற்சி ஆகையாலும் குறுகிய காலத்தில் இந்நூலை வெளியிட நாம் ஆரம்பித்தமையாலும் கூட்டுறவு இயக்கம் பற்றிய பூரணமான ஒரு நூலை வெளியிட முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் உங்கள் சகலரது ஆசியும், ஆதரவும் கிடைக்கும் பட்சத்திலும் இந்நூலைத் தொடர்ந்து இதன் இரண்டாம் பகுதியையும் வெளியிட நாம் எண்ணியுள்ளோம்.

எமது நோக்கத்தை நாம் நிறைவேற்றுவதற்கு எமக்கு இந்நூலை ஆக்கித்தந்த திரு. வை. சி. சிவஞானம் அவர்களுக்கு கூட்டுறவு இயக்கமும் எமது சங்கமும் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. கூட்டுறவாளர் தினவிழாவை முன்னிட்டு இவ்வாறான ஒரு நூலை ஆக்கித்தருமாறு இரு மாதங்களுக்கு முன்னர்தாம் நாம் அவரைக் கேட்டிருந்தோம். அவருக்கு நீண்ட காலமாகக் கூட்டுறவுத் துறையில் இருந்த ஈடுபாடு காரணமாகவோ, அன்றி அவருக்கும் எமது சங்கத்துக்கும் உள்ள தனிப்பட்ட ஈடுபாடு காரணமாகவோ அவரது அயராத முயற்சியினால் இந்நூலை மிகக் குறுகிய காலத்தில் ஆக்கித் தந்துள்ளார். அவரைப் பற்றி நாம் கூறப்போனால் அது கூட்டுறவாளர்களுக்குச் சிரிப்பூட்டுவதாக அமையும்; ஏனெனில் அவரைத் தெரியாத கூட்டுறவாளர்கள் இல்லையென்றே கூறலாம். எனவே கூட்டுறவு இயக்கத்தில் அவர் மேற்கொண்டுள்ள இப்பணி மேலும் தொடரவேண்டுமென அவரை வாழ்த்தி அவருக்கு நாம் நன்றி கூறுகின்றோம்.

மேலும் இந்நூலை வெளியிடுவதற்கு பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் விவேகானந்தா அச்சகத்தினருக்கும் எமது சங்கச் சார்பாக நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

தெல்லிப்பளை,
07-07-1980.

தலைவர், இயக்குனர்கள், ஊழியர்கள்
தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

இங்கிலாந்தில் ஆரம்பித்த கூட்டுறவு இயக்கம் இன்று உலக இயக்கமாக மலர்ந்துவிட்டது. ஆயினும் கூட்டுறவுக் கொள்கைகளை எவ்வளவு தூரம் இலங்கைக் கூட்டுறவு அமைப்புக்கள் செயற்படுத்து கின்றன என்ற வினவுக்கு விடை காண்பதே எனது நோக்கம். அதற்காக கூட்டுறவுக் கொள்கைகள், அறிஞர்களின் கருத்துக்கள் ஆகியவற்றைத் தொகுத்துத் தந்து, இன்று இலங்கையில் உள்ள கூட்டுறவு அமைப்புக்களின் செயற்பாட்டு முறைகளையும் ஓரளவுக்கு எடுத்துரைத்துள்ளேன். இவற்றின் அடிப்படையில் விடை கூறும் பொறுப்பை உங்களிடம் விட்டுவிடுகின்றேன். விடை காண்பது மட்டு மல்ல கூட்டுறவுக் கொள்கைகளைப் பூரணமாகக் கடைப்பிடிக்கும் இலட்சியக் கூட்டுறவு இயக்கமாக இலங்கைக் கூட்டுறவு அமைப்பை மாற்றியமைக்க வேண்டிய பெரும் பொறுப்பும் உங்களுடையதாகும்.

கூட்டுறவு இயக்கம் உண்மை இலட்சியத்தோடு மலர்ந்திடக் கூட்டுறவுக் கல்வியை மக்களுக்குப் புகட்ட வேண்டும். இலங்கையைப் பொறுத்த வரையில் கல்விமான்களும் அறிஞர்களும் கூட்டுறவு இயக்கம் பற்றிய கருத்துக்களைக் கொண்ட கட்டுரைகள், நூல்கள் ஆகியவற்றை உருவாக்க முயற்சிப்பது மிகக் குறைவு. இலங்கை மக்கள் அறிய வேண்டிய கூட்டுறவுக் கருத்துக்கள் தகவல்களைக் கொண்ட பூரணமான ஒரு தமிழ் நூல் இல்லையென்றே கூறலாம். அக் குறையை நிவர்த்தி செய்யும் நோக்கோடுதான் இந் நூலை உருவாக்க முயற் சித்தேன். ஆயினும் முழுமையாக இந் நூலைப் பூர்த்தி செய்யக் குறு கிய காலம் இடந்தரவில்லை. எனவேதான் கூட்டுறவுக்கோர் அறி முகம் I என்ற பெயரில் வெளியிடப்படுகின்றது. கூட்டுறவாளர்கள் தரும் ஆதரவைக் கொண்டு இதன் இரண்டாம் பகுதியை வெளி யிட்டு பூரணத்துவம் அடையச் செய்யலாம் என நம்புகின்றேன்.

இந்நூலில் எனது கருத்துக்கள் அல்லது எனது சிந்தனைகள் என்பவை மிகக் குறைவு, ஏன் இல்லையென்றே கூறிவிடலாம். அறிஞர் களது கருத்துக்களையும் நடைமுறையிலுள்ள கூட்டுறவு சம்பந்தமான செயற்பாடுகளையும் தேவைக்கேற்பத் தொகுத்துத் தந்ததே எனது முயற்சி.

கூட்டுறவில் ஈடுபட்டுள்ளவர்களின் அறிவு விருத்திக்கும் எதிர் காலக் கூட்டுறவாளர்களை உருவாக்கும் நோக்கத்துக்கும் இந் நூல் வெளியிடப்படுவதாயினும் வணிக பாடத்தை உயர்தர பரீட்சைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கும் மாணவர்களுக்கும் கூட்டுறவு ஊழியர் பரீட்சை களுக்குத் தோன்றும் மாணவர்களுக்கும் உதவு நூலாக அமையும். இளைஞர்களும் மாணவர்களும் கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபடக் கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்திஞல்தான் எதிர்காலக் கூட்டுறவு இயக்கம் ஒளிமயமானதாக இருக்கும். அதற்கான முயற்சிகளில் கூட்டுறவு இயக்கங்கள் ஈடுபடவேண்டும்.

கூட்டுறவு தின விழாக் காலத்தில் வெளியிட வேண்டுமென்ற அவாவின் காரணத்தால் மிகக் குறுகிய காலத்தில் இரு மாதங்களுக் குள் வெளியிடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டமையால் அச்சுப் பிழைகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியவில்லை. தயைகூர்ந்து அவற் றைத் திருத்திக் கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

இந் நூல் உருவாக்கப் பலர் பலவகையில் உதவியுள்ளனர். எனது அருமை நண்பரும் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவருமாகிய திரு. சி. சிவமகாராசா அவர்கள் அடிக்கடி என்னைத் தூண்டியதன் விளைவாகவே இந் நூலை எழுத முற்பட்டேன். அவர் தூண்டியதுமல்லாது தன்னிடமிருந்த கூட்டுறவுத் தகவல்களைக் கொண்ட சாதனங்களையும் தந்துதவினர். அவருக்கு எனது இதய பூர்வமான நன்றிகள்.

திரு. R. M. நாகலிங்கம் (முன்னுள் கூட்டுறவுக் கல்லூரி விரி வுரையாளர்) அவர்களும் யாழ். கூட்டுறவுக் கல்லூரி பொறுப்பதிகாரி அவர்களும் பல தகவல்களையும் சாதனங்களையும் தந்துதவினர். ஸ்ரீ இலங்கா தேசிய கூட்டுறவு சபை யாழ் மாவட்டக் கிளை, யாழ் கடற் றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம். யாழ் மாவட்ட நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், மயிலிட்டிக் கடற்றொழிலாளர் கூட் டுறவுச் சங்கம் என்பவற்றின் முகாமையாளர்களும் பல தகவல்களைத் தந்துதவினர் தெல்லிப்பழை 'பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர். ஆளணி முகாமையாளர், கடனுதவு பகுதி முகாமை யாளர் உட்பட பல ஊழியர்கள் வேண்டிய தகவல்களைச் சேகரித்துத் தந்துள்ளனர். இறப்பர் கூட்டுறவுந் தலைமைச் சங்கம், இலங்கை கைத்தொழில் கூட்டுறவுத் தலைமைச் சங்கம், என்பன தபால் மூலம் தமது பூரண விபரங்களை அனுப்பி வைத்தன. இவர்கள் எல்லோ ருக்கும் எனது இதயபூர்வமான நன்றிகள்.

இந் நூலை மிகக் குறுகிய காலத்தில் அழகுற அச்சிட்டுதவியவர் கள் விவேகானந்தா அச்சகத்தினர். மின் வெட்டுப் போன்ற தடை களுக்கு மத்தியிலும் தளரா முயற்சியுடன் அதன் நிருவாகியும் ஊழியர்களும் கடமை நேரத்துக்கப்பாலும் நின்று உழைத்து இந் நூலை உருவாக்கித் தந்துள்ளனர். அவர்கள் யாவருக்கும் எனது இதயபூர்வமான நன்றி.

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 1 |
| 2. | கூட்டுறவுக் கொள்கைகள் (தத்துவங்கள்) | 13 |
| 3. | கூட்டுறவுச் சட்டங்கள் | 47 |
| 4, | இலங்கைக் கூட்டுறவுச் சட்டமூலங்கள் | 58 |
| 5. | கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொதுவான செயற்பாடுகள் | 72 |
| 6. | கூட்டுறவுத் தொழிலமைப்பு | 123 |
| 7. | கூட்டுறவுச் சங்கங்களின் வகைகள் | 139 |
| | I. சிற்றளவு முதனிலைச் சங்கங்கள் சிலவற்றின் விளக்கம் | 144 |
| | II. பேரளவு முதனிலைச் சங்கங்கள் சிலவற்றின் விளக்கம் | 167 |
| | III. இரண்டாம்நிலைச் சங்கங்கள் (சமாசங்கள்) | 193 |
| | IV. மூன்றாம்நிலைச் சங்கங்கள் (தலைமைச் சங்கங்கள்) | 197 |
| | V. கூட்டுறவுத் தேசிய நிறுவனம் | 208 |
| | VI. சர்வதேச நிறுவனங்கள் | 221 |
| 8. | கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு உதவும் நிறுவனங்கள் | 223 |
| 9. | கூட்டுறவில் அரசின் அதிகாரப் பரவல் | 232 |
| 10, | இலங்கைக் கூட்டுறவு இயக்கத்தின் முக்கிய நிகழ்வுகள் | 241 |
| 11, | கூட்டுறவின் தந்தை | 245 |
| 12. | இந்நூல் உருவாக உதவியவை | 248 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 8 | 33 | அடிமையாகவும் | அடிமையாக்கவும் |
| 11 | 35 | நிருவாகம் | நிருவாகத் |
| 17 | 36 | சககத்தின் | சங்கத்தின் |
| 18 | 26 | நிர்ப்பந்தமின்று | நிர்ப்பந்தமின்றி |
| 24 | 25 | கூட்டுறவுன் | கூட்டுறவின் |
| 28 | 8 | இன்னொரு | இன்ஞெரு |
| 33 | 25 | உள்ளச் | உள்ளகக் |
| 42 | 26 | கொள்கைகளுக்கு கிணங்க | கொள்கைகளுக் கிணங்க |
| 69 | 9 | பெற்ற | பெற்று |
| 69 | 10 | பெற்று | பெற்ற |
| 80 | 32 | முன்னேற்ற | முதற்ருேற்ற |
| 112 | 15 | தெரிவாக | தெளிவாக |
| 133 | 1 | கூட்டுறவுப் | கூட்டுப் |
| 153 | 30 | இழப்பிஞல் | இறப்பிஞல் |
| 211 | 30 | மூயயசிகளை | முயற்சிகளை |
| 214 | 8 | ஆறபப் | ஆற்றப் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. அறிமுகம்

அறிவு வளர்ச்சி மனித வாழ்வில் பல மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளது. மனிதன் அறிவுத்திறன் கொண்டு இல்லாத எதையும் உலகில் புதிதாகப் படைத்து விடவில்லை. ஆழ்ந்து சிந்தித்தால் உலகில் உள்ளவற்றையே மனிதகுலத் தேவைக்கேற்ப மாற்றியமைத்துப் புத்துருக் கொடுத்து மனிதகுல வாழ்வைச் சிறப்படையச் செய்ய அறிவு வளர்ச்சி பயன்பட்டு வந்தது. மனிதகுல வரலாறு உணர்த்தும் உண்மை இது. இந்த உண்மைக் கருத்துக்கு மாறுபட்டதல்ல கூட்டுறவு.

உயிரினத் தோற்றத்தோடு உடன் பிறந்த உவகை, அச்சம், பயம் போன்ற உணர்வுகள் இயல்புணர்வுகளாகக் கணிக்கப்படுகின்றன. அச்சம், பயம் என்பவற்றில் இருந்து மீளக் கற்றுக்கொண்ட ஒரு தற்காப்புணர்வுதான் கூடிவாழும் பண்பு. கூடி வாழும் பண்போடு உயிரினத்திடம் கூடி உழைக்குஞ் செயலும் பிறந்துவிட்டது. ஈ, எறும்பு, பறவைகள், நீர்வாழ் பிராணிகள், மிருகங்கள் முதலிய உயிரினங்களிடையே கூடி வாழ்தல், கூடி உழைத்தல் ஆகிய செயற்பாடுகள் இருந்து வந்ததை உயிரியல் ஆராய்ச்சியாளர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். உலகியல் வாழ்வில் இச்செயல்களை நாமும் கண்ணுல் காணக் கூடியதாகவுள்ளது. எனவே உயிரினத்தின் தோற்றத்தோடு பிறந்ததுதான் கூட்டுணர்வு.

மனிதகுலம் அறிவு முதிர்ச்சியடையாது, விலங்கொடு விலங்காக வாழ்ந்த காலத்திலுங்கூட அதனிடம் கூட்டுறவு உணர்வும் கூட்டுறவுச் செயல்களும் காணப்பட்டன. கூட்டுறவின் தேவையை உணர்ந்தோ உணராமலோ ஆதி மனிதன் தனது வாழ்க்கை முறையில் கூட்டுறவைக் கடைப்பிடித்து வந்துள்ளான். Cooperation (கூட்டுறவு) என்ற ஆங்கிலப்பதம் லத்தீன் வினையடிச் சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். இதன் நேர்கருத்து ''கூடி உழைத்தல்'' என்பதாகும். கூட்டு முயற்சி மூலம் கூடிய பலம் என்னும் பொருளும் கொள்ளப்படலாம். இன்று பொதுப் பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக ஒன்று கூடி உழைக்கும் பொருட்டுக் கூட்டுறவுச் சட்டத்தின் கீழோ அல்லது வேறு சட்டங்களின் கீழோ பதிவு பெற்ற நிறுவனங்களைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதகுலம் ஆதிகாலத்தில் வாழ்ந்த குழு வாழ்க்கை முறையே கருத்துணர்வு மிக்க கூட்டுறவுக்கு மிகப் பொருத்தமான எடுத்துக் காட்டாகும்.

குழு வாழ்க்கை முறை அறிவியல் வளர்ச்சி, அரசியல் வளர்ச்சி, பொருளாதார நாகரிக மாற்றங்கள் போன்ற காரணிகளால் குடும்பம், கிராமம், நகரம் போன்ற வாழ்க்கை முறைகளாக மாற்றமடைந்தன. மனித வாழ்வின் தொழில் துறைகளை அறிவியல், விஞ்ஞானம், தொழில் நுட்பம், அரசியல், பொருளாதர அமைப்புப் போன்றவற்றில் ஏற்பட்ட வளர்ச்சி பெருமளவு மாற்றியமைத்தன. கைத்தொழிற் புரட்சியின் காரணமாகப் பேரளவு உற்பத்தி முறைகளும் பேரளவு விநியோக அமைப்பு முறைகளுந் தோன்றி வாழ்க்கை முறையிலும் தொழில் முறையிலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. இம் மாற்றங்களின் விளைவாகத் தொழிலாளர் விவசாயிகள் வாழ்க்கையில் சகிக்க முடியாத பொருளாதாரக் கஷ்டங்கள் ஏற்பட்டன. பேராலை உற்பத்தி முறையில் சிறுவர்களும் பெண்களுங் கூட வேலைக்கமர்த்தப்பட்டு, மூலத்தேவைகளைக் கூட நிறைவேற்ற முடியாத குறைந்த கூலியில், நீண்ட நேரம் சுகாதாரமற்ற சூழ்நிலையில் வேலை செய்து வேதனை நிறைந்த வாழ்க்கையையே பெரும்பாலான மக்கள் வாழ்ந்தனர். கடின உழைப்பை நீண்ட நேரம் சுகாதார வசதியற்ற சூழ்நிலையில் அளித்த தொழிலாளர்கள் தம் வாழ்க்கையில் கண்டவை இட நெருக்கடி மிகுந்த சுகாதார வசதியற்ற வாழ்விடங்கள், வறுமை, நோய்பிணி, அரைப்பட்டினி வாழ்க்கை என்பவையே. இதே நேரத்தில் ஆலை அதிபர்களும் உரிமையாளர்களும் செல்வச் செழிப்பு மிக்க செருக்கு நிறைந்த உயர்ந்த ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்தனர்.

சமுதாய அமைப்பிலுள்ள இக்குறைபாடுகள் பல அறிஞர்களைச் சிந்திக்கத் தூண்டியது. 19-ஆம் நூற்றுண்டின் தலைசிறந்த புரட்சிச் சிந்தனையாளரான கார்ல் மார்க்ஸ் முதலாளித்துவ அமைப்பையே குழி தோண்டிப் புதைக்க வேண்டும் என்றுர். சமதர்ம அமைப்பொன்றை ஏற்படுத்தப் பொதுவுடமை இலட்சியத்தை நோக்கிச் செல்லும் கருத்துக்களையும் செயற்பாட்டு முறைகளையும் வெளியிட்டார். மனிதனின் கருத்துச் சுதந்திரம், தொழில் சுதந்திரம் போன்ற தனிமனித இயல்புகளின் வளர்ச்சிக்கு மார்க்ஸ் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. முதலாளித்துவ அமைப்பில் உள்ள சமூக பொருளாதாரக் கேடுகள் ஒரு புறம். அக் கேடுகளை அகற்றுவதற்காகத் தோன்றிய புரட்சிகரமான பொதுவுடமைத் தத்துவத்திலுள்ள தனிமனித சுதந்திரத் தன்மைக் குறைபாடுகள் மறுபுறம். இவ்விரு புறத்திலும் உள்ள நல்ல அம்சங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட உயர் இலட்சிய நோக்கே கூட்டுறவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளித்துவ நோக்கிலிருந்தும் பொதுவுடமை நோக்கிலிருந்தும் மாறுபட்ட இலட்சிய நோக்கையுடையது கூட்டுறவு. ஒவ்வொருவரும் அனைவருக்கென்பது பொதுவுடமை. அனைவரும் ஒருவருக்கென்பது முதலாண்மை. ஒவ்வொருவரும் அனைவருக்கும். அனைவரும் ஒருவருக்கென்பது கூட்டுறவு. பிறருக்கு உதவி செய்வதன் மூலம் தனக்கு உதவி செய்யலாம் என்பதே கூட்டுறவு உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு என்பன உற்பத்தியில் தாமளித்த சேவையின் அளவுக்கு விலையைப் பெறுதல். ஒரு உற்பத்திக் காரணியின் சேவைப் பெறுமதியை இன்னொரு உற்பத்திக் காரணி சுரண்டாதிருத்தல், அதேபோன்று உற்பத்தியாளர் நுகர்வோரையும், நுகர்வோர் உற்பத்தியாளரையும், உற்பத்தியாளரையும் நுகர்வோரையும் நடுவர்கள் (இடையிலுள்ள பல்வேறு வகையான வியாபாரிகள், தரகர்கள், முகவர்கள்) சுரண்டாதிருத்தல், மனித சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவரும் ஒருவருக்கொருவர் உதவியாகவும் ஒத்துழைப்போடும் வாழ்ந்து தமது வாழ்வை வளம்படுத்தும் அதே நேரத்தில் மற்றவர்களைச் சுரண்டாது வாழும் நீதியான உயர்ந்த வாழ்க்கை முறை ஆகியவற்றைக் கொண்ட இலட்சியமே கூட்டுறவு. வளமாக வாழ்வதற்கு வழிதேடுகின்ற ஒருவன் சமூகத்திலுள்ள மற்றவர்களையும் அதே வாழ்வுக்கு வழிவகுத்து வழிவிடுகின்ற உயர்ந்த இலட்சிய முறையே கூட்டுறவு. சுரண்டலுக்கெதிராகச் செயலாற்றும் அதே நேரத்தில் பலாத்காரத்தைப் பின்பற்றுது சாத்வீக முறையிலும் சமாதான முறையிலும் இலட்சியத்தை அடையும்வழி; போட்டிப் பொருளாதார அமைப்பிலிருந்து மாறுபட்டு போட்டியைத் தவிர்த்து சுய உதவி, பரஸ்பர உதவி, சிக்கனம் ஆகியவற்றைக் கொண்டு அமைக்கும் புதுமைப் பொருளாதார வழி. சுயநலங் கொண்ட பொருளாதார அமைப்பு முறையாக மட்டும் கூட்டுறவு அமையவில்லை. சுயநலமற்ற ஒத்துழைப்பு மனப்பான்மையும், பிறருக்கு உதவும் மனப்பான்மையும், அறவழி சார்ந்த உயர் பண்புகளும் நிறைந்த வாழ்க்கை முறையை இலட்சியமாகக் கொண்ட அமைப்பு முறையே கூட்டுறவு.

கூட்டுறவைப் பல அறிஞர்கள் அறிமுகஞ் செய்துள்ளனர். அவர்கள் அறிமுகப்படுத்தும் போது ஒவ்வொருவரும் தமது நோக்கு, தேவை, அறிமுகப்படுத்துங் காலம், நேரம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு பல்வேறு வழிகளில் அறிமுகஞ் செய்தனர். கூட்டுறவை முழுமையாக அவர்கள் கூற்றுக்கள் அறிமுகஞ் செய்யாது விடினுஞ் சில அம்சங்களையாவது தெளிவுபடுத்த உதவும் வகையில் அமைந்துள்ளன. எல்லோருடைய அறிமுகங்களையும் தர முடியாவிடினும் சில அறிஞர்களின் கருத்துரைகளையாவது தருவது நன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* "மனிதகுலம் தனது வாழ்வுத் தேவைகள் முழுவதையும் நிறைவேற்றக் கூட்டுறவுக் கொள்கைகள் காட்டும் வழியைப் பின் பற்றிப் பயன் பெற முடியும். தொடர்ந்து பின்பற்றுவது தனி மனிதனுக்கும் சமுதாயத்துக்கும் நலத்தைக் கொடுக்கும். இக் கொள்கையின் வழிகாட்டல்கள் சமுதாய ஏற்றத் தாழ்வுகளையும், சமூக அநீதிகளையும் சுரண்டலையும் ஒழித்து நீதியும் அறமுஞ் சார்ந்த பொதுநல சமுதாய அமைப்பொன்றை உருவாக்க இக் கொள்கைகள் வழி வகுக்கும்."

— றொபேர்ட் ஓவன்

* "மக்கள் தங்களின் பொதுப் பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டும் பொருளாதார உயர்வுக்குமாக எவ்வித கட்டாயமுமின்றித் தாமாகவே முன்வந்து மனிதர்கள் என்ற ரீதியில் சமத்துவ அடிப்படையுடன் ஜனநாயக முறையில் ஒருங்கிணைந்து இயங்கும் முறையே கூட்டுறவாகும்."

— கல்வெர்ட்

* "சீரிய பண்ணை முறை, சிறந்த வணிகம், வளமான வாழ்வு ஆகிய மூன்றையும் குறிக்கோளாகக் கொண்டதுதான் கூட்டுறவு."

— சேர் ஹோரேஸ் பிளங்கட்

* "குடியாட்சி போன்ற அமைப்பு, சுயேச்சையுடன் சேர்தல், சுயாதீனக் கட்டுப்பாடு, ஒழுங்குபடுத்தப்பட்ட விநியோகம், அங்கத்தவர்களிடையே அன்னியோன்யம், ஒற்றுமை, திருந்திய வளர்ச்சி ஆகிய கொள்கைகளை ஏற்றுச் சுயமரியாதையுள்ளவர்கள் ஒன்று சேர்ந்து உழைப்பதே கூட்டுறவு."

— E S. போகாடஸ்

* "உலகத்தைத் தழுவுந் தன்மை, குடியாட்சி முறை, சிக்கனம், நெறிமுறைமை, பிரசாரம் (கல்வி), ஐக்கியம், சுயாதீனம் ஆகிய அடிப்படைக் கொள்கைகளுடன் இயங்குவதே கூட்டுறவு."

— T. W. மேர்சேஸ்

* "ஒன்று சேர்தல், உலகத்தைத் தழுவுந் தன்மை, குடியாட்சி நெறிமுறைமை, சுயேச்சை, வினைத்திறன், உத்தரவாதம், பிரசாரம் (கல்வி) ஆகியவற்றைக் கடைப்பிடிக்கும் இயக்கமே கூட்டுறவு."

— J. J உவர்லி

* "ஐக்கியம், சிக்கனம், குடியாட்சி, நெறிமுறைமை, சுயாதீனம் என்ற அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டு அமைக்கப்படுவதே கூட்டுறவு."

— W. P. வாற்கின்ஸ்
(அனைத்துலகக் கூட்டுறவு
இணைப்பு நிறுவனத் தலைவர் 1952)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* '' ஒவ்வொருவரும் தமக்காகவும் பிறருக்காகவும் தமது திறன்களையும் சாதனங்களையும் தம்முடைய நிருவாகத்தின் கீழ்க்கொண்டு வந்து அதனுல் ஏற்படும் இலாபமோ நட்டமோ எதுவானுலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளும் முறைதான் கூட்டுறவு ''

— ஹெறிக்

* '' கூட்டுறவு ஒரு அமைப்பு மட்டுமன்று. மக்களின் இதயத்தில் எழுகின்ற ஊக்க உணர்வுமாகும். எனவே தொழிற்றுறையில் கடைப்பிடிக்கப்படும் ஒரு மதந்தான் கூட்டுறவு. சுயநிறைவும் சேவையுந்தான் அதன் வேதவாக்கு ''

— சேர் டார்விங்

* '' முதலாளித்துவ முறையில் கூட்டுறவு ஒன்றுதான் நல்ல அமைப்பு. அதை எப்பாடுபட்டாவது அப்படியே கட்டிக் காக்க வேண்டும். ''

— லெனின்

* '' பொதுவான பொருளாதார நோக்கினை நிறைவேற்றுவதற்காக மக்கள் தாமாகவே முன்வந்து அமைக்கும் மாபெரும் இயக்கத்தின் ஒரு பகுதிதான் கூட்டுறவு ''

— மேத்தா

* '' சோசலிச பொருளாதாரத் திட்டத்தை உருவாக்கும் பணியில் கூட்டுறவு இயக்கம் தலைசிறந்த பங்கு வகிக்கின்றது. நாட்டிலுள்ள சாதாரண மக்களின் நல்வாழ்வுக்காகப் பணிபுரிவதில் இந்த இயக்கத்திலுள்ள அனைவரும் சிறந்த நிருவாகத்திலும், தன்னலமற்ற சேவையிலும் முன்மாதிரியாக விளங்குவார்கள் என நம்புகின்றோம். ''

— டாக்டர் இராதாகிருஷ்ணன்

* '' சமூக நீதி வழங்கி, தொழிற் பிரச்சனைகளை மாற்றியமைத்து, எல்லா நலன்களும் பெற வழிவகுப்பது கூட்டுறவு ''

— ஜான் ஸ்டுவர்ட்மில்

* '' தனி மனிதப் போட்டி என்ற நிலையிலிருந்து கூட்டுழைப்பில் தனித்துவம் என்ற நிலைக்கு மனித முயற்சியை நெறிப்படுத்துவது கூட்டுறவு ''

— தோமஸ் கார்லைல்

* '' கூட்டுறவியக்கம் தனது அறவொழுக்கப் பணியில் தவறினுல் பொருளாதாரப் பணியிலும் தோல்வி காணும். ''

— வோக்வே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* " பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் அனைத்தையும் வெளிப்படையாக்குவதே கூட்டுறவு. ஐரோப்பிய நாடுகள் முழுவதிலும் விளம்பரந்தான் கூட்டுறவின் முதல் நிபந்தனையாகவுள்ளது."

— நிக்கல்சன்

* " கூட்டுறவு என்பது வெறுமனே ஒரு ஒழுங்கமைப்புமட்டுமன்றி, அது ஒரு மாபெரும் இலட்சியமுமாகும். அதன் பயன்பாட்டு வழிகளே பற்பல கூட்டுறவுக் கொள்கைகள் மனிதனிடமுள்ள மனிதத்துவத்தைக் கௌரவிக்கின்றது. அது எமது உடலுக்கும் ஆன்மாவுக்கும் ஒருங்கே உணவு ஊட்டுகின்றது."

— கவிஞர் தாகூர்

* " வலுவிழந்தவர்களுக்கும் ஏழைகளுக்கும் சேவை அளிப்பதே கூட்டுறவு. "

— மஹாத்மா

பல அறிஞர்கள் பல்வேறு வகையில் கூட்டுறவை அறிமுகஞ் செய்தாலும் " கல்வேர்ட் " அவர்களின் அறிமுகமே ஓரளவு பொருள் பொதிந்த அறிமுகமாகக் கருதப்படுகின்றது. கூட்டுறவுக் கருத்துக்களைப் பரப்பப் பிரசாரஞ் செய்வோர் நேர்முகமாகக் கருத்துக்களைக் கூறுது மறைமுகமாக மனத்தில் பதியக்கூடிய வகையில் கூறுவதுமுண்டு. இவ்வாறு மறைமுகமாகப் பயன்படுத்தும் முறைகள்.

## பழமை வாழ்க்கை முறை உதாரணங்கள்

1. விவசாயிகள் 40, 50 ஆண்டுகளுக்கு முன் நிலம் பண்படுத்தல், நீரிறைத்தல், பயிரிடல், அறுவடை செய்தல் போன்ற செயல்களில் ஒருவருக்கொருவர் உதவியாகப் பணம் பெருது உழைப்பை வழங்கித் தமக்கு உழைப்புத் தேவைப்பட்டபோது உதவியாகப் பெற்றமை.

2. கிராம மக்கள் வீடு வேய்தல், வேலியடைத்தல் போன்ற கருமங்களையும் இவ்வித உதவி உழைப்புக்களைப் பெற்றே பூர்த்தி செய்தமை.

3. விவாகம், மரணம் போன்ற நிகழ்வுகளில் ஒவ்வொருவரும் தம்மாலான உழைப்பையும் ஏனைய உதவிகளையும் இலவசமாக நல்குதல்.

4. சிங்கள மக்களிடையேயும் " அத்தம் " முறையின் கீழ் நெற்பயிர்ச் செய்கை வேலைகளில் பரஸ்பர உதவியும் உழைப்பும் வழங்கியமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பிங்கம, தொவில், பலி, கம்மடு போன்ற சமயாசாரச் சடங்குகளில் பரஸ்பர உதவியும் உழைப்பும் வழங்கியமை.

இத்தகைய கூட்டுறவு நடவடிக்கைகளின் சிறப்பு அம்சம் யாதெனில் அவ்வத்தொழில் முயற்சிகளில் நன்கு தேர்ச்சி பெற்றவர்களைத் தலைமை தாங்கச் செய்தலாகும். பணப் பொருளாதார அமைப்பு முறை மாற்றங்களும், விவசாயத்துறையில் இயந்திர உபயோகமுறை அதிகரித்தமையும் இக் கூட்டுறவுச் செயற்பாடுகள் இப்போது மறைந்து கொண்டு வரக் காரணங்களாயின.

## வரலாற்று நிகழ்ச்சிகள்

முடவனும் குருடனுமாக இருந்த இரு புலவர்கள் குருடன் தோளில் முடவன் ஏறியிருந்து வழிகாட்ட, குருடன் முடவனைச் சுமந்து சென்று அரசவைகள் தோறும் இருவரும் கவிதை பாடிப் பரிசில் பெற்று வாழ்ந்த இரட்டையர் வரலாறு.

## கதைகள்

தடிக்கட்டொன்றை முறிக்க முயன்ற ஐந்து சகோதரர்கள் முடியாது போகவே அவற்றைத் தனித்தனி தடியாக எடுத்து முறித்த கதை.

இவை, கூட்டுறவு உணர்வு, செயல், கருத்து என்பன அறிவியல் ரீதியாகக் கூட்டுறவு அறிமுகப்படுத்துவதற்கு முன்பே பழங்கால மக்களிடம் இருந்தது என்பதற்கு எடுத்துக் காட்டாகவும், பரஸ்பர உதவி, ஒற்றுமை, கூடி உழைப்பதால் தனக்கும் பிறருக்கும் பயன் அதிகம் என்பன போன்ற கருத்துணர்வுகளை ஏற்படுத்தவும் பிரசாரங்களில் எடுத்தாளப்படுகின்றன.

அறிவியல் ரீதியாக 1844–ஆம் ஆண்டில் கூட்டுறவின் எண்ணக் கருவுக்கு உலகில் முதன் முதல் உரு அமைக்கப்பட்டது. இலங்கையில் 1911-ஆம் ஆண்டு சட்டம் அமைத்து 1912-ல் உரு அமைக்கப்பட்டது அன்று தொட்டு இன்றுவரை இலங்கையில் கூட்டுறவு எண்ணக்கரு பல்வேறு வகையான உருவமைப்புப் பெற்று பெரும்பாலான மக்களின் வாழ்க்கையோடு இணைந்து விட்டது. இலங்கையிலுள்ள சாதாரண மக்களில் பெரும்பாலோர் தமது வாழ்க்கையின் பல்வேறு தேவைகளை நிறைவேற்றும் பொருட்டுக் கூட்டுறவு அமைப்புக்களை நாடியுள்ளார்கள். கடன்பெறல், நுகர்ச்சிப் பண்டங்களைப் பெறல், விவசாயத்துக்குதவும் இயந்திரப் பொறிகளைப் பெறல், உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்தல் போன்ற தேவைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்த அளவில் பெரும்பாலான மக்களால் கூட்டுறவு அமைப்புக்கள் மூலம் நிறைவேற்றப்பட்டு வந்தமையைக் கடந்தகால வரலாறு காட்டும்.

புதியனவற்றுக்கும் அறியப்படாதனவற்றுக்குந்தான் அறிமுகம் வேண்டும். நீண்டகால வரலாறும் மக்களிடம் பரந்து நெருங்கிய தொடர்பும் கொண்ட பழமை வாய்ந்த கூட்டுறவுக்கும் அறிமுகம் வேண்டுமா? இக்கேள்வி நியாயபூர்வமாகத் தோன்றினாலும் அறிமுகந் தேவை என்பதற்குக் காரணங்கள் உண்டு. மனித வாழ்வில் மிக நெருக்கமாகத் தொடர்புகொண்ட பல பொருள்களைப் பற்றிப் பல்வேறு வகையான அறிமுகங்களைப் பெறவேண்டிய நிலையிலேயே சாதாரண மக்களில் பலர் இருக்கின்றனர். மின்சாரம் நீண்ட காலமாக மக்களுக்கு நன்கு தெரிந்த பொருள். மனிதர்கள் தமது தேவைகள் பலவற்றிற்கு மின்சாரத்தைப் பயன்படுத்தி வந்துள்ளனர். ஆயினும் மின்சாரத்தின் பயனைப் பெறும் மக்களில் பெரும்பாலானவர்களுக்கு அதைப்பற்றிய பூரண அறிவு இல்லை. மின்சாரத்தைப் பற்றிப் பல்வேறு வகையான அறிமுகங்களைப் பெறவேண்டியவர்களாகவே இருக்கின்றார்கள். பணம் எல்லோராலும் நாளாந்த வாழ்க்கையில் பயன்படுத்தும் மிக முக்கியமான ஒரு பொருள். அதைப் பற்றியும் பெரும்பாலான மக்கள் பூரண அறிவைப் பெற்றிருக்கவில்லை. பணத்தைப் பற்றியும் பல்வேறு வகையான அறிமுகங்கள் சாதாரண மக்களுக்குத் தேவையாக இருக்கின்றது. இவற்றைப் போலவே கூட்டுறவுக்கும் பல்வேறு வகையில் அறிமுகந் தேவையாக இருக்கின்றது. கூட்டுறவின் உயர்ந்த இலட்சியத்தை அடையவும், அதன் உச்சப் பயனை மக்கள் அடையவும் கூட்டுறவு பற்றிய பல்வேறு அறிமுகங்கள் இன்று தேவையாக இருக்கின்றன.

கூட்டுறவின் நோக்கு மனித குலத்தின் அமைதியான சுபீட்சம் நிறைந்த வாழ்வுக்குத் தடையாக இருக்கும் சகல தடைகளையும் நீக்கி, ஒருவருக்கொருவர் பரஸ்பர உதவியுடன் அறவழி சார்ந்த நடவடிக்கைகளால் பொருளாதார சமூக கலாச்சாரத் துறைகளில் முன்னேற்றமடைந்த ஜனநாயக ரீதியான சமுதாயத்தை உருவாக்குவதாகும்.

" அடிமையாக இருக்கவும் மாட்டேன். அதே நேரத்தில் அடிமையாகவும் மாட்டேன். " எனக் கூறிய லிங்கனின் கூற்றுப் போல ஒரு கூட்டுறவாளன் சுரண்டப்படாமலும் அதே நேரத்தில் மற்றவர்களைச் சுரண்டாமலும் வாழும் உயர்நோக்குத்தான் கூட்டுறவு. சுரண்டல் என்பது பொருளாதாரச் சுரண்டலை மட்டுமல்லாது உரிமை அதிகாரம் போன்ற பல்வேறு வகையான சுரண்டல்களையும் உள்ளடக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரண்டாமலும் சுரண்டப்படாமலும் நீதி செறிந்த முறையில் அறஞ் சார்ந்த ஜனநாயக அமைப்பில் ஒருவருக்கொருவர் பரஸ்பர உதவி யுடன் வாழ்வின் சகல தேவைகளேயும் நியாயமான வழிகளில் பூர்த்தி செய்கின்ற புதிய சமுதாயமொன்றை அமைப்பதே கூட்டுற வின் மூல நோக்காகும்.

இந்நோக்கை எய்தும் நிலேயில்தான் கூட்டுறவாளர்கள் தமது பயணத்தை மேற்கொண்டுள்ளார்கள். சில நேரங்களில் பயணத்தின் வழிகள் பற்பல காரணங்களால் திசை திருப்பப்படுவதுமுண்டு. அந் நிலேயில் சரியான வழியைக் கண்டு பிடிப்பதுதான் ஒவ்வொரு கூட்டுற வாளனதும் முக்கிய கடமையாகும். எந்த உயர்ந்த இலட்சியத்தை அடைய வேண்டுமானுலும் அந்த இலட்சிய நோக்கின் கொள்கைகளே வரையறை செய்தல் வேண்டும். அந்தக் கொள்கைகளே நடைமுறைப் படுத்தக்கூடிய பாதுகாக்குந் தன்மை கொண்ட சட்டங்கள் உருவாக் கப்பட வேண்டும் கொள்கைகளே நிறைவேற்றிச் செயல்படுத்த அமைப்புக்கள் தேவை. எனவே இலட்சியத்தை அடையக் கொள்கை கள், சட்டங்கள், அமைப்புக்கள் என்பன முக்கிய உறுப்புக்களாக அமைந்திருப்பனவாகும்.

இலட்சியம், நோக்கு என்பன ஒரு மரத்தின் மூலவேர் போன் றது. கொள்கைகள், சட்டங்கள், அமைப்புக்கள் மரத்தின் வெளித் தோற்றங்கள். வெளித்தோற்றங்கள் காலத்திற்குந் தேவைக்கு மேற்ப மாற்றங்கள் அடையுந் தன்மை கொண்டவை. ஆனுல் இம் மாற்றங்கள் மூலவேரைத் தாக்கும் வண்ணம் நிகழின் மரமே அழிந்து விடும். மாற்றங்கள் செய்யும்போது மூலவேரைத் தாக்காது மிக்க அவதானத்துடன் செய்தல் வேண்டும். இலட்சியம் அல்லது நோக்கை மையமாகக் கொண்டே கொள்கைகள் உருவாக்கப்படல் வேண்டும். இலட்சியத்தை செயலுருவாக்கும்போது கொள்கைகள் இலட்சியத் தின் மூலத் தன்மை கெடாது சிறு மாற்றங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாத செயலாக அமைந்துவிடுகின்றது.

இலட்சியத்தை அடைவதற்குரிய கொள்கைகளே வகுப்பதிலும் கருத்து முரண்பாடுகள் ஏற்படுவதுண்டு. இலட்சியத்தை அல்லது நோக்கை தமது விருப்பு வெறுப்புக்கேற்ப வளேக்க முயல்பவர்களும் இருப்பார்கள். இக்காரணங்களால் கொள்கைகளில் கருத்து முரண் பாடுகள் தோன்றுவதுண்டு. கூட்டுறவுக் கொள்கைகளிலும் இவ்வித வேறுபாடுடையவர்கள் இருக்கத்தான் செய்கிறுர்கள். இவர்களே நான்கு குழுக்களாகப் பிரிக்கலாம். அவையாவன:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. கூட்டுறவுப் பொதுநலவாயக் குழாம்

இவர்கள் கடும் மரபுவாதிகள், கண்டிப்பான கோட்பாட்டுப் பற்றுடையவர்களாகவும் உயர்ந்த இலட்சியவாதிகளாகவும் விளங்குகின்றனர். மனித சமுதாயத்தின் பல்வேறு துறைகளிலும் கூட்டுறவுக் கொள்கைகளைக் கடைப்பிடிக்க முடியும். அதனால் மனித சமுதாயம் பெருமளவு நன்மையடையும். கூட்டுறவு இயக்கமும் வளர்ச்சியடையும் என நம்புகிறார்கள். இவ்வித கருத்தையே றேபேட் ஒவனும் கொண்டிருந்தார். இவ்வித குழுவினரை கற்பனாவாதிகள் என்றும், பழமைப் பற்றுடையவர்கள் என்றும் நடைமுறைச் சாத்தியமற்ற கருத்துக்களை அதிகமாகக் கொண்டவர்கள் என்றும் வியாக்கியானம் செய்தார்கள் சிலர்.

## 2. திருந்திய முதலாளித்துவ கருத்துக் குழாம்

கூட்டுறவுச் சங்கங்கள் முதலாளித்துவத்தின் மிகைப்பாடுகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டுச் சில நடவடிக்கைகளை எடுக்கும் இயக்கங்கள். சொந்த ஆதாயம் கட்டுக்கடங்காமல் செல்வதைத் தடுப்பதற்குக் கூட்டுறவு ஒரு ஆளுநர் போலக் கடமையாற்றுகிறது. கூட்டுறவு முதலாளித்துவத்தைக் கட்டுப்படுத்தும் ஒரு அளவுகோல். தனியார் துறையும் கூட்டுறவுத்துறையும் இலாபநோக்கத்தையே மையமாகக் கொண்டு செயலாற்றுகின்றன. "றொச்டேல் முன்னோடிகள்" இலாபத்தை அகற்றும் நோக்கமுடையவர்களல்ல என்றும் எல்லோருக்கும் சந்தர்ப்பம் அளிப்பதே அவர்கள் நோக்கு என்றும் கூறுபவர்கள். இக் கருத்தினர் கூட்டுறவின் சேவைத் தன்மையைப் புறக்கணித்து விட்டனர். இலாபத்தையே தனிநோக்காகக் கொண்ட வணிக முயற்சிகளுக்கும், சேவையை நோக்கமாகக் கொண்ட வணிக முயற்சிகளுக்குமுள்ள அடிப்படை வேறுபாடுகளை இவர்கள் உணரத் தவறி விட்டனர். அமெரிக்காவிலுள்ள பெரிய விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களும் கனடாவிலுள்ள சில கூட்டுறவுச் சங்கங்களும் இக்கருத்துக்குழாத்தைச் சேர்ந்தன.

## 3. சமூகவுடமை தழுவிய கருத்துக் குழாம்

முதலாளித்துவ சக்திகளை ஒழிப்பதற்கு அரசுக்கு உறுதுணையாக இருப்பதே கூட்டுறவு இயக்கம். பொதுவுடமைப் பொருளாதார அமைப்பின் ஒரு கூறே கூட்டுறவு. பேரளவுத் தன்மை கொண்ட வணிக அமைப்புக்கள் அரசின் கட்டுப்பாட்டுக்குள்ளும் சிற்றளவுத் தன்மை கொண்ட வணிக அமைப்புக்கள் கூட்டுறவுத்துறையின் கட்டுப்பாட்டுக்குள்ளும் இருத்தல் வேண்டுமென்ற கருத்துடையவர்கள். பொதுத் துறையின் நண்பனாகக் கூட்டுறவை இவர்கள் கருதுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது கருத்துக் குழுவினர் முதலாளித்துவத்தின் நண்பனாகக் கூட்டுறவைக் கருதுகின்றனர். சமூகவுடமை நாடுகளிலும் வளர்ச்சியுறும் நாடுகள் சிலவற்றிலும் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் சமூகவுடமை தழுவிய கருத்துக் குழாத்தைச் சேர்ந்தவையாகும்.

## 4. தனிக் கூட்டுறவுக் கருத்துக் குழாம்

கூட்டுறவு முதலாளித்துவத்திலிருந்தும் சமூகவுடமையிலிருந்தும் வேறுபட்டது. இவ்விரு கோட்பாடுகளுக்கும் நடுவழியாக அது அமைந்திருக்கின்றது. அதனால் இரு கோட்பாடுகளையுமுடையவர்கள் அது தமது பாதையெனக் கூறிக்கொள்ள முனைகின்றனர். இவை தூய முதலாளித்துவ அமைப்பைச் சார்ந்ததுமல்ல. தூய பொதுவுடமையைச் சார்ந்ததுமல்ல. இவை இரண்டிலுமிருந்து வேறுபட்டது. கூட்டுறவுக்கே உரித்தான தனிக் கோட்பாடுகள் உண்டு. அதற்கென அமைந்த அறநெறிகள் உண்டு. பொருளாதாரக் கூறுகளும் சமூகக் கூறுகளும் கூட்டுறவுக் கோட்பாட்டில் அடங்கியுள்ளன. சமூக, கல்வி சார்ந்த நோக்கங்களும் உண்டு. திட்டவட்டமான வணிகக் கொள்கைகள் உண்டு. அறஞ் சார்ந்த வியாபாரத் திறனையும், சீர்திருந்திய உளப்பாங்கையும் இணைக்க முயலும் புனித நோக்கே கூட்டுறவு என்னும் கருத்துடையவர்கள்.

கலாநிதி வொக்வே, கலாநிதி கோடி போன்றவர்கள் இக்கருத்துக் குழாத்தைச் சேர்ந்த சிறந்த சிந்தனையாளர்கள் வணிகக் கொள்கையைப் பொறுத்தவரை இவர்களின் சிந்தனைகள் யதார்த்தமானவை. நடைமுறைப்படுத்தக் கூடியவை. சமத்துவமும் சமூக நீதியும் நிறைந்த சமுதாய அமைப்பு என்னும் சிந்தனை ஒரு கற்பனவாதமாகும். இத்தகைய சமுதாய அமைப்பைக் கூட்டாக உழைக்கும் மனிதர்களின் தன்னம்பிக்கை மூலமே உருவாக்கலாம் எனக் கருதுகின்றனர். இந்தப் புனிதமான உயர் இலட்சியம் விண்மீனை நோக்கிச் செல்லும் பாதை என விமர்சனஞ் செய்யப்பட்டாலும் மனித சக்தியால் முடியாத செயல் என்று ஒதுக்கிவிடவேண்டியதுமல்ல.

இக்கருத்துணர்வின் வேறுபாடு காரணமாகவோ அல்லது சங்கச் செயற்பாடுகளின் புறத்தோற்றத்தைத் தவருக மதிப்பீடு செய்த காரணத்தாலோ அல்லது வேறு நிகழ்வுகளினாலோ கூட்டுறவு நிறுவனங்களைப் பற்றி மக்களிடம் மூவகைக் கருத்துக்கள் நிலவுகின்றன. ஒன்று, கூட்டுறவு நிறுவனங்கள் அரசாங்க நிறுவனங்கள். இக்கருத்து மக்களிடம் உருவாதலுக்கு முக்கிய காரணம் அரசின் அதிகபட்சத் தலையீடே. முகாமைக்குழு நியமனம், நிருவாகம் தலையீடு, நிருவாகக் கட்டுப்பாடு போன்ற அரசின் தலையீட்டு அம்சங்கள் பொதுமக்களி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டம் இக் கருத்தை ஏற்படுத்த உதவியாக இருந்தன. இக் கருத்து பொதுமக்களுக்கும் கூட்டுறவு இயக்கத்துக்குமுள்ள தொடர்புகள் நல்லமுறையில் அமைவதற்குப் பாதகமாகவுள்ளன.

இரண்டாவது கருத்து கூட்டுறவு நிறுவனங்கள் பொது நிறுவனங்கள் என்பதாகும், இக்கருத்து கூட்டுறவு நிறுவனங்களின் செயற்பாடுகளின் பகிரங்கத் தன்மையாலும் பரந்த சேவைத்தன்மையாலும், சமுதாயநலத்திற்கும் பொதுநலத்திற்கும் அதிக அளவு முக்கியத்துவம் கொடுத்தமையாலும் ஏற்பட்டவை. கூட்டுறவு நிறுவனங்கள் தமது சுய விருப்பத்தின் பேரில் அளிக்கின்ற சேவைகளைப் பெறவும் சமுதாய நலப்பணிகளின் பயன்களை அனுபவிக்கவும் உறுப்பினரல்லாத பொதுமக்களுக்கு உரிமையுண்டு. ஆனல் கட்டுப்படுத்தும் அதிகாரம் உறுப்பினரல்லாத பொதுமக்களுக்குக் கிடையாது. இவ்விரு கருத்துக்களும் கூட்டுறவு நிறுவனம் பற்றிய போலிக் கருத்துக்களாகும்.

மூன்ருவது கருத்து கூட்டுறவு நிறுவனங்கள் உறுப்பினர்களது நிறுவனங்கள். என்பதாகும் இதுவே கூட்டுறவின் உண்மைக் கருத்தாகும். இக்கருத்தைப் பொதுமக்களில் மிகச் சிலரே ஏற்றுக் கொள்வர். இக் கருத்தை ஏற்றுக்கொள்ளத் தடையாக அவர்கள் மனத்தைக் குழப்பும் பல செயல்களும் புறத்தோற்றங்களும் கூட்டுறவு இயக்கத்தில் ஏற்பட்டன. எனவே உண்மையான கூட்டுறவைப் பற்றிய தெளிவு எமக்கு ஏற்பட வேண்டுமானல் அதன் கொள்கைகள், சட்டங்கள், அமைப்புக்கள், வரலாறு போன்ற பல அம்சங்களை அறிமுகப்படுத்த வேண்டியது அவசியமாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. கூட்டுறவுக் கொள்கைகள் (தத்துவங்கள்)

ரொபேர்ட் ஓவன், டாக்டர் வில்லியம் கிங் போன்ற தன்னலமற்ற உயர் இலட்சியவாதிகளின் சிந்தனைகளைப் பின்பற்றி 1844-ஆம் ஆண்டு ரொச்டேல் நகரிலுள்ள தொழிலாளர்கள் ஒரு நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பித்தனர். இவர்களை ரொச்டேல் சமத்துவ முன்னோடிகள் என அழைத்தனர். கூட்டுறவுக் கொள்கைகளை இவர்களே முதன்முதலில் வகுத்தனர். 135 ஆண்டுகள் பழமையடைந்த இக்கொள்கைகள் இன்றும் கூட்டுறவு இயக்கத்துக்கு உதவுந்தன்மை கொண்டவையாகவே இருக்கின்றன. நுகர்ச்சிச் சங்கத்திற்காக அமைக்கப்பட்டனவாயினும் ஏனையவகைச் சங்கங்களின் தேவைகளுக்கும் பொருந்துபவையாகவே பல கொள்கைகள் உள்ளன. காலங்களதும் தேவைகளதும் மாற்றங்களுக்கு ஏற்பச் சிறு மாற்றங்களுடன் அவை தொடர்ந்தும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

## ரொச்டேல் சமத்துவ முன்னோடிகளின் கூட்டுறவுக் கொள்கைகள் எட்டு

1. பொதுவான தடையற்ற அங்கத்துவம்
2. ஜனநாயக முறையில் அமைந்த நிருவாகமும் கட்டுப்பாடும்
3. சந்தை விலைக்கே பண்டங்களையும் சேவைகளையும் விற்பனை செய்தல்
4. உடன் பணத்துக்கே விற்பனை செய்தல்
5. மூலதனத்துக்கு மட்டான வட்டி வழங்குதல்
6. இலாபத்தில் அங்கத்தவர்களின் ஆதரவுக்கேற்பத் தள்ளுபடி வழங்குதல்.
7. அங்கத்தவர் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தல்
8. அரசியல் சமய விடயங்களில் கோஷ்டி சேராது கண்டிப்பான நடுநிலைமையைப் பின்பற்றல்

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கமாக இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு இயக்கம் பின் விரிவடையத் தொடங்கியது. ஜேர்மனியில் கடனுதவு சங்கங்களாக உருவெடுத்தன. வேறு நாடுக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளிலும் வெவ்வேறு தேவைகளை நிறைவேற்றும் முகமாகக் கூட்டுறவுச் சங்கங்கள் தோன்றின. கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியின் சின்னமாக 1895-ம் ஆண்டு அனைத்துலகக் கூட்டுறவு இணைப்பு நிறுவனம் உருவாகியது. பல்வேறு நாடுகளிலுமுள்ள தேசிய மட்டக் கூட்டுறவு நிறுவனங்களின் இணைப்பாக இது திகழ்ந்தது. இதன்முன் பாரிய பொறுப்பும் இருந்தது. உலக ரீதியாகக் கூட்டுறவு இயக்கங்களிடையே ஒரு பொதுத்தன்மையைப் பேணவும், அவற்றின் அரசியல், பொருளாதார, சமூக கலாச்சாரப் பின்னணிகளுக்கேற்ப ஒவ்வொன்றினதும் தனித்தன்மையைப் பேணவும் வேண்டிய பொறுப்பும் கடமையும் அனைத்துலகக் கூட்டுறவு இணைப்பு நிறுவனத்திற்கு இருந்தது. கூட்டுறவு இயக்கங்களின் பொதுத் தன்மை சிறப்புத் தன்மை என்பனவற்றைப் பேணும் வகையில் ஒரு கொள்கைத் திட்டத்தை வகுப்பதற்காக 1934-ஆம் ஆண்டு கொள்கை நிர்ணயத் துணைக்குழு ஒன்றை நியமித்து இக்குழு கொள்கைகளை இரு பகுதிகளாகப் பிரித்தது. ஒன்று தேவையான (அடிப்படைக்) கொள்கைகள் மற்றது விருப்பத் தேர்வுக்குரிய கொள்கைகள். இக்கொள்கைகள் 1937-ம் ஆண்டு அனைத்துலகக் கூட்டுறவு நிறுவனத்தால் பிரகடனப்படுத்தப்பட்டன.

## 1. தேவையான (அடிப்படைக்) கொள்கைகள்

1. எல்லோருக்கும் தடையற்ற அங்கத்துவ அனுமதி
2. குடியாட்சி முறையிலமைந்த நிருவாகம்
3. மூலதனத்துக்கு மட்டான வட்டி
4. அங்கத்தவர்களின் ஆதரவுக்கேற்ப இலாபத்தில் தள்ளுபடி வழங்கல்

## 2. விருப்பத் தேர்வுக்குரிய கொள்கைகள்

1. கூட்டுறவுக் கல்விக்கு வசதியளித்தல்
2. அரசியல் சமயச் சார்பின்மை
3. உடன்பண விற்பனை

இரண்டாவது மகாயுத்தத்துக்கு முன் வெளியிடப்பட்ட கொள்கைகளே இவை. இரண்டாவது மகாயுத்தத்தினால் உலகில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. பல நாடுகள் சுதந்திரமடைந்தமை, உற்பத்தி விநியோகமுறை மாற்றங்கள், பொருளாதார அமைப்பு மாற்றங்கள், புதுத் தேவைகளின் பெருக்கம், வருமான உயர்வு போன்றவை முக்கிய மாற்றங்களாகும். பொருளாதார சமூக, கலாச்சார மாற்றங்கள் கூட்டுறவு அமைப்பிலும் தேவைகளிலும் மாற்றங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தியது. இம்மாற்றங்கள் கூட்டுறவாளர்களைச் சிந்திக்கத் தூண்டின. 1963-ம் ஆண்டு இங்கிலாந்திலுள்ள போர்ணிமவுத் என்னும் நகரில் கூடிய அனைத்துலகக் கூட்டுறவு இணைப்பு நிறுவன மகாநாட்டில் பழைய கூட்டுறவுக் கொள்கைகள் தற்போதைய கூட்டுறவின் போக்குக்கு ஏற்றவையல்ல என்றும் அது மறுசீரமைக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்திற்கிணங்க 1964-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் D. U. கார்வே தலைமையில் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட கூட்டுறவுக் கொள்கைகள் வரையறு குழு அனைத்துலகக் கூட்டுறவு நிறுவனத்தால் நியமிக்கப்பட்டது. இக்குழு ரொச்டேல் சமத்துவ முன்னணியின் கொள்கைகள், 1937-ஆம் ஆண்டு அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனம் பிரகடனஞ் செய்த கொள்கைகள் என்பவற்றை விரிவாக ஆராய்ந்து தேவையானவை விருப்புத் தேர்வுக்குரியவை என்ற பாகுபாட்டை நீக்கி, எவ்வளவு திட்டவட்டமாக அமைக்கமுடியுமோ அவ்வளவு திட்டவட்டமாகவும் வரையறையாகவும் கொள்கைகளை வரையறுத்து அனைத்துலகக் கூட்டுறவு இணைப்பு நிறுவனத்திடம் கொடுத்தது. 1966-ஆம் ஆண்டு அனைத்துலகக் கூட்டுறவு மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டு ஆராய்ந்து தீர்மானிக்கப்பட்ட பின் பிரகடனப்படுத்தப்பட்டது.

## 1966-ஆம் ஆண்டு அனைத்துலகக் கூட்டுறவு இணைப்பு நிறுவனம் பிரகடனப்படுத்திய ஆறு கொள்கைகள்.

1. தன்விருப்பார்ந்த தடையற்ற (திறந்த) உறுப்புரிமை
2. ஜனநாயக முறையில் அமைந்த கட்டுப்பாடும் நிருவாகமும்
3. முதலுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வட்டிவீதம்
4. இலாபம் (மேலதிகம்) அங்கத்தவரிடையே சமத்துவமாகப் பகிரப்படல்
5. கூட்டுறவுக் கல்வி
6. கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே ஒத்துழைப்பு

இந்த ஆறு கொள்கைகளும் சிறந்த சிந்தனையாளர்களால் ஆராய்ந்து வகுக்கப்பட்டு, கூட்டுறவில் நிறைந்த அறிவு, அனுபவம் நிறைந்தவர்கள் மத்தியில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதித்துத் தீர்மானிக்கப்பட்டவை. கூட்டுறவு இயக்கத்தில் உரிமை கொண்டாடும் சகல சங்கங்களும் இந்த ஆறு கொள்கைகளையும் கடைப்பிடிக்க வேண்டும். முதல் இரண்டு கொள்கைகளும் கூட்டுறவு இயக்கத்தின் ஒழுங்கமைப்பையும் மூன்றும் நான்காம் கொள்கைகள் தொழில் முயற்சியின் மேலதிக விளைவுகளைப் பயன்படுத்தலையும் இறுதி இரு ,கொள்கைகளும் இயக்கம் தொடர்ந்து விருத்தியுறுவதற்குரிய வழிகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவையாகும். இந்த ஆறு கொள்கைகளும் சமமான முக்கியத்துவம் வாய்ந்தன. அவை பிரிக்கமுடியாதவாறு ஒழுங்கமைப்புப் பெற்றுள்ளன. ஒன்றையொன்று தழுவி நிற்பதோடு ஒன்றையொன்று வலியுறுத்துந் தன்மை கொண்டன.

கூட்டுறவு இயக்கம் தனிமனித வாதத்திற்கெதிராகத் தோன்றியது. ஆனல் தனிமனித முயற்சியை நசுக்காது செம்மையான வழியில் செல்வதை ஊக்குவிக்கின்றது. முழுச் சமுதாயத்தின் நலன்களையும் தழுவி நிற்பதே கூட்டுறவு. அதன் மூலவேர் ஒருவருக்கொருவர் உதவியுந் தன்னுதவியுமேயாகும். கூட்டுறவுக் கொள்கைகள் வகுக்கும்போது இவற்றைக் கருத்திற்கொண்டே வகுக்கப்பட்டன.

## 1. தன்விருப்பார்ந்த தடையற்ற (திறந்த) உறுப்புரிமை

உறுப்புரிமைக் கொள்கையை அனைத்துலகக் கூட்டுறவு இணைப்பு நிறுவன விதிகள் பின்வருமாறு வரையறுக்கின்றன.

" கூட்டுறவுச் சங்கத்தில் தாமாகச் சேர விரும்பி அதன் சேவைகளால் பயன்பெறக் கூடியவர்களும், உறுப்புரிமையின் பொறுப்புக்களை ஏற்கத் தயாராய் இருப்பவர்களும் செயற்கையான கட்டுப்பாடுகளின்றி சமூக, அரசியல், இன மத பாகுபாடுகளின்றிக் கூட்டுறவுச் சங்க உறுப்புரிமையைப் பெறக் கூடியதாய் இருத்தல் வேண்டும். "

இக்கொள்கை இரு பகுதிகளைக் கொண்டதாய் அமைந்துள்ளதை அவதானிக்கலாம். அவையாவன:

1. தன் விருப்பார்ந்த சேர்க்கை
2. திறந்த உறுப்புரிமை

### தன் விருப்பார்ந்த சேர்க்கை

கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்புரிமை தன் விருப்பார்ந்ததாய் அமைதல் வேண்டும் என்பதன் பொருள் பரந்த முறையில் ஆய்வு செய்யப்பட வேண்டியதாகும். ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகச் சேருபவன் தன் சொந்த விருப்பத்தின் அடிப்படையிலேயே சேர வேண்டும். எவ்வித புற நிர்ப்பந்தங்களுமின்றி உறுப்பினராகச் சேருவதால் ஏற்படும் நன்மைகளையும் பொறுப்புக்களையும் நன்ருகச் சிந்தித்து சுயவிருப்ப அடிப்படையிலேயே அங்கத்தவனுகச் சேர்தல் வேண்டும். உறுப்பினனுகச் சேருபவனுக்குள்ள சுதந்திரத் தன்மைகள் யாவும் கூட்டுறவுச் சங்கத்திற்குமிருத்தல் வேண்டும். உறுப்புரிமையை அங்கீகரிக்குஞ் சங்கமும் ஒருவரை உறுப்பினராக அனுமதிப்பது பற்றித் தன் விருப்பப்படியே முடிவு செய்தல் வேண்டும். உறுப்பினரை அனுமதிப்பதில் புறச்சக்திகளின் தலையீடு இருப்பது விரும்பத்தக்கதல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிப்பட்டவர்களின் சுதந்திரமான இசைவின் அடிப்படையிலேயே கூட்டுறவின் பொதுச் செயற்பாடுகள் தங்கியுள்ளன. கூட்டுறவு இயக்கத் தொழிற்பாடுகள் தனிப்பட்டவர்களின் சுதந்திரமான முயற்சிகளின் இணைப்பிலேயே தங்கியுள்ளன. கூட்டுறவுச் செயற்பாடுகளுக்கும் அதனோடு உறவுள்ள தனிப்பட்டவர்களின் முயற்சிகளுக்கும் சரியான முறையில் தொடர்புகள் இருந்தால்தான், அல்லது சரியான முறையில் இணைக்கப்பட்டால்தான் கூட்டுறவு இயக்கம் சீராகவும் செம்மையாகவும் இயங்க முடியும்.

கூட்டுறவுச் சங்கத்தில் சேருபவர்கள் எல்லோரும் அதற்கு விசுவாசமாக இருத்தல் வேண்டும். சங்கத்தின் நோக்கை அடைததற்கு உறுப்பினர்கள் எல்லோரும் விசுவாசமாக உழைத்தல் அவசியம். இந்த விசுவாசத்திலேதான் சங்கத்தின் வெற்றி தங்கியுள்ளது. உறுப்பினர் புற நிர்ப்பந்தமின்றித் தனது சுய விருப்பத்தின்பேரில் சேர்ந்தால்தான் சங்கத்திற்கு உண்மையாகவும் விசுவாசமாகவும் இருக்க முடியும்: ஏற்கனவே கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்திருப்பவர்கள் விரும்பினுல்தான் உறுப்புரிமை கோரும் ஒருவர் உறுப்பினராக முடியும்: ஒரு புது உறுப்பினரை அனுமதிப்பது பற்றிய கருத்துக்களை வெளியிட்டுத் தீர்மானம் எடுப்பதில் கலந்து கொள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் உரிமையுண்டு. எனவே "புதிய உறுப்பினரை அனுமதித்தல் ஒரு வகைப் பொதுத் தேர்விலே தங்கியுள்ளது." என்று கல்வேர்ட் கூறியுள்ளதையும் நாம் இங்கு கருத்திற் கொள்ளல் வேண்டும்.

பொதுத் தேவையை நிறைவேற்றும் நோக்கோடு ஒன்றுகூடும் மனிதச் சேர்க்கையே ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களாகும். பொதுத் தேவையை நிறைவேற்றும் பொருட்டு ஒவ்வொரு உறுப்பினரும் தம்மால் இயன்ற பங்கைக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அளிக்க வேண்டும். அவ்விதம் தமது பங்கை அளிக்கும் உறுப்பினர்கள் இயங்கும் (உழைக்கும்) உறுப்பினராவர். பொதுத் தேவை நிறைவெய்தி அல்லது பொதுத் தேவையைப் பெற முடியாத சூழ்நிலையில் உள்ள உறுப்பினர்கள் பொதுத் தேவையை நிறைவேற்றத் தமது பங்கை அளிக்காமல் இருப்பார்கள். இவர்கள் உறங்கும் (செயற்படா) உறுப்பினர்களாவர். ஒரு உறுப்பினருக்கு பொதுத் தேவையற்றுச் சங்கத்தில் அக்கறை குன்றும்போது தாமாகவே சங்கத்திலிருந்து விலகுவதற்கு உரிமை வேண்டும். ஒரு உறுப்பினருக்குச் சங்கம் வழங்கக் கூடிய பொதுத் தேவையோ அல்லது அவருக்குச் சங்கத்தில் உண்மையான அக்கறையோ இல்லையென்ருல் அல்லது அவரால் சகசுத்தின் நோக்கங்களை அடைவதில் இடையூறுகள் இருக்குமானுல் அவரது உறுப்புரிமையை முடிவுறச் செய்வதற்குச் சங்கத்திற்கு உரிமை இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியாட்சிமுறையில் ஒருவரின் உறுப்புரிமையை முடிவுறச் செய்யும் போது அவருட்பட எல்லா உறுப்பினர்களும் கருத்துத் தெரிவித்துத் தீர்மானம் எடுக்கச் சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும். ஒரு உறுப்பினரின் தகைமை பற்றி ஏனைய உறுப்பினர்களுக்கு சந்தேகம் ஏற்படும் போது பொதுச்சபையில் அவர்பற்றிய கருத்துக்களை வெளிப்படுத்தி உறுப்புரிமை முடிவு பற்றிய தீர்மானம் எடுக்கச் சந்தர்ப்பமிருத்தல் வேண்டும்.

இத்தகைய ஏற்பாடுகள் இருந்தாற்றான் "ஒருவர் எல்லோருக்காகவும் எல்லோரும் ஒருவருக்காகவும் உழைத்தல்" என்ற கோட்பாடு உண்மையாகச் செயற்பட முடியும் என்று கல்வேட் கூறியுள்ளார். தாம் யார் யாருடன் சேரவேண்டும் என்று தீர்மானிப்பதற்கும் அத் தீர்மானத்தை சந்தர்ப்ப சூழ்நிலைத் தேவைகளையொட்டி மாற்றியமைப்பதற்கும் இரு சாராருக்கும் (சங்கத்திற்கும் உறுப்பினருக்கும்) சுதந்திரமான செயற்பாட்டு உரிமை வேண்டும். சுய விருப்பச் சேர்க்கை தனி மனிதர்களின் சுயாட்சி உரிமையில் தங்கியுள்ளது. ஏனெனில் பொறுப்பு வாய்ந்த சுதந்திரமான மனிதர்கள் தமது சுயாட்சி உரிமையின்பேரில் ஒன்றுசேர்கின்றனர் என்று கருதுகோளில் தான் ஒரு கூட்டுறவு நிறுவனஞ் செயற்படுகின்றது. சுயவிருப்புச் சேர்க்கை என்ற கொள்கையின்படி ஒருவர் சுய விருப்போடு சுயாதீனத்துடன் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து சுய விருப்பப்படியே உறுப்பினராகத் தொடர்ந்துமிருப்பார் எனப் பொருள் கொள்ளல் வேண்டும். உறுப்பினரின் சுயாட்சித் தன்மையும் உரிமையும் எந்த நேரத்திலும் பங்கப்படாதிருக்கின்றது. சுயாட்சித் தன்மையை ஓரளவு கட்டுப்படுத்தும் சங்கத்தின் கட்டுப்பாடுகள் உறுப்பினரால் தனது நலன் கருதியும், ஏனைய உறுப்பினர்களின் நலன் கருதியும் பிறர் நிர்ப்பந்தமின்று ஏற்றுக் கொள்ளப்பட்டவை. இக் கட்டுப்பாடுகளை விமர்சிக்கவோ அவற்றை மாற்றியமைக்கவோ ஜனநாயக மரபுகளைப் பின்பற்றி நடவடிக்கை எடுக்க ஒவ்வொரு உறுப்பினருக்கும் உரிமையுண்டு. சங்கத்தின் ஒழுங்கும் செம்மையும் திகழ்ந்த நிருவாகத்திற்கும், செயற்பாடுகளுக்கும், இவற்றால் ஏற்படும் விளைவுகளுக்கும் தமக்குப் பங்குண்டு என்ற பொறுப்புணர்வும் சுயவிருப்பச் சேர்க்கை என்ற கொள்கையின்பாற்படும்.

சங்கம் சுதந்திரமாகவும் சுயேச்சையாகவும் இயங்குந் தன்மை கொண்டது என்பதிலும் சுயவிருப்புச் சேர்க்கை என்ற எண்ணக்கரு கலந்துள்ளது. உறுப்பினர்களை அனுமதிப்பதிலும் நீக்குவதிலும் சங்கம் தன் விருப்பத்திற்கேற்ப இயங்க முடியும். வெளிச்சக்திகள் (அரசாங்க அதிகாரிகள்) இதில் தலையிடுதல் கூட்டுறவுத் தத்துவத்திற்கு முரணு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னது. சங்கத்தை உறுப்பினர்களே ஜனநாயக அடிப்படையில் கட்டுப்படுத்துகின்றனர். ஜனநாயக முறையில் மேற்கொள்ளப்படும் கட்டுப்பாடுகள் யாவும் சுய விருப்புச் சேர்க்கை என்னும் கோட்பாட்டுக்கு முரணானவையல்ல.

கூட்டுறவு அம்சங்களையும் தத்துவங்களையும் விரும்பித் தமது பொருளாதார நலன் கருதி ஒருவர் உறுப்பினராகச் சேருவது அவரது சுய விருப்பத்தில் தங்கியுள்ள போதிலும் இச் சுதந்திரம் வரயபற்ற தொன்றல்ல என்பதனை அனைத்துலகக் கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தின் கொள்கை வரையறைக் குழு சுட்டிக் காட்டியுள்ளது. இன்றியமையாத சில காரணங்களால் இச் சுதந்திரம் ஓரளவு மட்டுப்படுத்தப்படலாம். உதாரணமாக ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் உள்ள விளைபொருள் உற்பத்தியாளர்களில் 75 சதவீதத்தினராவது கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்திருப்பின் அல்லது கூட்டுறவுச் சங்கத்தினூடாக விளைபொருள்களை விற்பனை செய்யின் அப்பகுதியில் விளைவிக்கப்படும் விளைபொருள் முழுவதும் கூட்டுறவுச் சங்கத்தினூடாகவே விற்பனை செய்யப்படல் வேண்டுமென அரசாங்கம் நிர்ப்பந்திக்கலாம். சங்கத்திலே உறுப்பினர்களாகச் சேராத உறுப்பினர்களைப் பயன்படுத்தி எதிர்ச் சக்திகள் பெரும்பாலான உற்பத்தியாளர்களின் முன்னேற்ற முயற்சிகளுக்கு தடை செய்யாது பாதுகாப்பதே இந் நிர்ப்பந்தத்தின் நோக்காக இருத்தல் வேண்டும்.

இலாபப் போட்டிக்கும், ஆதிக்க வெறிக்கும் பதிலாக முழுச் சமுதாயத்தினதும் நலன் கருதி ஒழுங்கமைப்புக் கொண்ட செம்மையான சேவை செய்வதே கூட்டுறவின் நோக்காகும். இந்நோக்கே ஒரு நல்ல அரசாங்கத்திற்குமுண்டு. சமூக நலன் கருதி கூட்டுறவு இயக்கத்தை முழுமையாக நம்பி அரசு இவ்வித நிர்ப்பந்த நடவடிக்கைகளில் இறங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது இவ்விதநிலை அரசுக்கு தவிர்க்க முடியாததாக அமையலாம். இந்த அதிகாரங்கள் துஷ்பிரயோகஞ் செய்யப்படாமல் இருப்பதைக் கண்காணிக்கக் கூடிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். பொருத்தமற்ற சந்தர்ப்பங்களில் இவ்வதிகாரம் பாவிக்கப்பட்டாலும் அதிகாரம் துஷ்பிரயோகஞ் செய்யப்பட்டாலும் அரசுக்கும் கூட்டுறவு இயக்கத்திற்கும் மாசு ஏற்பட்டுவிடும்.

### தடையற்ற (திறந்த) உறுப்புரிமை

உறுப்புரிமை கோரிய எல்லோருக்கும் ஒரு கூட்டுறவுச் சங்கம உறுப்புரிமை வழங்க வேண்டும் என்பதே தடையற்ற (திறந்த) உறுப்புரிமையின் பொருள் எனப் பிழையான கருத்து பொதுவாகப் பரப்பப்படுத்தப்பட்டுள்ளது. "பொதுத் தேவைகளிலிருந்து அத் தேவை

களைச் சங்கத்தின் சேவைகளால் பூர்த்தி செய்யக் கூடிய நிலையிருப்பவர்கள் உறுப்புரிமையின் பொறுப்புக்களை ஏற்கத் தயாராயிருப்பின், செயற்கையான கட்டுப்பாடுகள் எதுவுமின்றி, சமூக, அரசியல், இன, மத பேதங்களின்றி கூட்டுறவுச் சங்க உறுப்புரிமையைப் பெறக் கூடியதாயிருத்தல் வேண்டும்'' இதுவே அனைத்துலகக் கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தின் கொள்கை வரையறைக் குழுவின் கருத்தாகும். பொதுத்தேவை இல்லாதவர்களும், சங்கத்தின் சேவைகளைப் பயன்படுத்த முடியாதவர்களும் சங்கத்தில் பங்குகளைப் பெறத்தயாராக விருப்பினும் அவர்களைச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்க்க முடியாது என்பதையும் கொள்கை வரையறைக் குழு தெரிவித்துள்ளது.

தடையற்ற (திறந்த) உறுப்புரிமையின் எண்ணக் கருக்கள் மூன்று பகுதியைக் கொண்டதாகும். அவையாவன :

1. உறுப்பினர்களை அனுமதிப்பதில் செயற்கைக் கட்டுப்பாடுகள் எதுவுமிருத்தல் கூடாது.
2. உறுப்பினர்களாகச் சேரவிரும்புகிறவர்களுக்கெதிராக எவ்வித சமூக, அரசியல், இன, மத பாகுபாடுகளும் இருத்தலாகாது.
3. சங்கத்தின் சேவைகள் தேவைப்பட்டு அவற்றைப் பயன் படுத்தக் கூடியவர்கள் உறுப்புரிமையின் பொறுப்புக்களை ஏற்கத் தயாராயிருப்பின் அவர்களுக்கு உறுப்புரிமை கிடைக்கக் கூடியதாயிருத்தல் வேண்டும்.

செயற்கைக் கட்டுப்பாடுகள் என்பது நடைமுறைத் தேவைகள் எதுவுமின்றி உறுப்பினர்களின் தொகையை வரையறுத்தலைக் குறிக்கும். தவிர்க்க முடியாத சில சந்தர்ப்பங்களில் உறுப்பினர் தொகை மட்டுப்படுத்த வேண்டியநிலை ஏற்படும் என்பதையும் ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும். இவ்விதநிலை நடைமுறைத் தேவையின் பொருட்டு ஏற்படுவதாகும். உதாரணமாக தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று தனக்குக் கிடைக்கக்கூடிய வேலை வாய்ப்புக்களைப் பொறுத்து அங்கத்தவர் தொகையை மட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்படும். இதே போன்று வீடமைப்புச் சங்கம் ஒன்று அதற்குச் சொந்தமான காணியின் அளவுக்கேற்ப அங்கத்தவர்கள் தொகையை மட்டுப் படுத்த வேண்டிய நிலை ஏற்படும். இவை நடைமுறைத் தேவை ஆவசியத்தின் பொருட்டு மட்டுப்படுத்தப்படுவதை எவருங் குறை கூறமுடியாது.

கூட்டுறவுச் சங்கம் என்பது மனிதச் சேர்க்கை. அதனுல் அங்கு சமூக, அரசியல், இன, மத வேறுபாடுகள் இருக்கக்கூடாது. இவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபாடுகளைக் கடந்து "மனிதத்துவம்" நிலவுமிடமே கூட்டுறவாகும். கூட்டுறவு இயக்கம் என்பது நடுநிலைக்களம். பல்வேறு சமூக, அரசியல், இன, மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும், மாறுபட்ட பல்வேறு கருத்துடையவர்களுக்கும் பொதுவான பல்வேறு பொருளாதாரத் தேவைகள் உண்டு. அப்பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு மாறுபட்டவர்கள் ஒன்று கூடி சமூக கலாச்சாரத் தொடர்புகளிலும் ஒன்றுபட முடியும் என்பதை நிரூபிப்பதே கூட்டுறவாகும்.

கூட்டுறவுச் சங்க உறுப்புரிமை பெறுபவர்களுக்கு வேண்டிய தகைமைகள் இரண்டு. அவை

1. பொதுத் தேவை இருத்தல்
2. சங்கச் சேவைகளைப் பயன்படுத்தல்

பொதுத்தேவையும் இருந்து அத்தேவையைச் சங்கத்தின் சேவையைக் கொண்டு பூர்த்தி செய்யக் கூடியவர்கள் சங்கத்தில் உறுப்புரிமை பெறலாம். பொதுத்தேவை இருப்பினும் அவர் ஏனைய கூட்டுறவு நோக்கங்களுக்குத் தடையாக அல்லது எதிரித் தன்மையுடையவரா என்பதும் சிந்திக்கற்பாலது. ஒரு சில்லறை வியாபாரிக்குக் கடன் பெறும் பொதுத் தேவை இருக்கும். நுகர்ச்சிப் பொருள்களைப் பெறும் பொதுத் தேவைக் கூட்டுறவுக்கு எதிரானவராக இருப்பார். ஒரு நோக்குக் கூட்டுறவுச் சங்கமாயின் பிரச்சனைகள் தோன்று. பல நோக்குச் சங்கங்களில் இவ்வித நிலையில் உள்ளவர்களின் அங்கத்துவம் பிரச்சனைக்குரியதாகும்.

பொதுத் தேவைகளிருந்தும் சங்கத்தின் சேவையைப் பயன்படுத்தக் கூடியவரையே உறுப்பினராக அனுமதிக்கலாம். பொதுத் தேவை இருந்தும் அவரால் சங்கத்தின் சேவையைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலை இருக்கலாம் அல்லது சங்கம் அவ்வுறுப்புரிமை கோரியவருக்குச் சேவையை அளிக்க முடியாத சூழ்நிலை இருக்கலாம். எவ்வித சூழ்நிலையில் சேவையைப் பயன்படுத்த முடியாதுவிடினும் உறுப்புரிமை அனுமதி மறுக்கப்படலாம்.

பொதுத் தேவையே உறுப்பினர்களை ஒன்றிணைக்கும் சங்கிலி. சங்கத்தின் குறிக்கோள் பொது நலனை அடைதலாகும். பொதுத் தேவை இருந்து பொது ஒப்பந்தத்திற்கமைய விரும்பும் எல்லோரையும் பொதுவாகக் கூட்டுறவுச் சங்கம் உறுப்பினராக அனுமதிக்கத் தயாராக இருத்தல் வேண்டும். போட்டிக்குப் பதிலாக ஒற்றுமை நிலவ வேண்டுமென்பதே கூட்டுறவாளர்களை கலந்திழுக்கும் எண்ணக் கருவாகும். உதவியை நாடி வரும் புதியவர்களைக் கூட்டுறவாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் மனமகிழ்வுடன் வரவேற்பர். ஜனநாயக மரபு முறை நிருவாகமும் கட்டுப்பாடும் நிலவுவதற்கு தடையற்ற அங்கத்துவம் செம்மையாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும். திறந்த உறுப்புரிமை என்ற கொள்கை சீரான முறையில் செம்மையுறக் கடைப்பிடிக்கப் படின் தகைமையுடையவர்களே உறுப்பினராக முடியும்.

தடையற்ற அங்கத்துவம் என்ற கோட்பாட்டின் திறந்த வாயில் வழியாக கூட்டுறவுச் சங்கத்திற்குள் எல்லோரும் நுழைய வாய்ப் புண்டு. பொதுத் தேவையற்றவர்களும், சேவையைப் பெற விரும்பா தவர்களும், சேவையைப் பெற முடியாதவர்களும் ஏன் கூட்டுறவின் எதிரிகளும் இந்தத் திறந்த வாயிலை நன்கு பயன்படுத்தி உள்ளே நுழைந்து கூட்டுறவின் நோக்கை அடையவிடாது முட்டுக்கட்டை போடுவார்கள். புதிய உறுப்பினர்கள் நுழையும் போதும், நுழைந்த பின் அவர்களின் செயற்பாடுகளையும் பழைய உறுப்பினர்கள் நன்கு கண்காணித்தல் வேண்டும். எந்த நிலையில் அவர்கள் கூட்டுறவுக் கொள்கைக்கு முரண்பாடாகக் காணப்படுவரோ அந்த நிலையில் அனுமதி மறுக்கப்படுவதையோ, அங்கத்துவத்தில் இருந்து விலக்கப் படுவதையோ உறுப்பினர்கள் ஜனநாயக முறையில் மேற்கொள்ள வேண்டும்.

கூட்டுறவுச் சங்கத்தில் அரசு உறுப்பினராக இருக்கலாமா என்னும் கருத்து ஆராயப்பட வேண்டியது. ஆரம்பச் சங்கங்கள் தனிமனித சேர்க்கை. இரண்டாம் மூன்றும் மட்ட சங்கங்கள் சங்கங்களின் சேர்க்கை. ஒரு கூட்டுறவு சங்கம் நன்கு இயங்கும் பொருட்டு அரசு அதில் பங்குகளைக் கொள்முதல் செய்யுலாம் என்ற கருத்தை சிலர் கூறுவர். பங்குகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் அரசு அதன் உறுப்பினராகி விடும். உறுப்பினர்களின் பொதுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய கூட்டுறவுச் சங்கம் வழங்கும் சேவைகள் அரசுக்கும் தேவையில்லை. அரசு ஒரு தனி மனித ஆளுமை இல்லாத காரணத் தால் ஆரம்பக் கூட்டுறவுச் சங்கம் வழங்கும் சேவைகளை நேரடியாக நுகர முடியாது. அரசுக்கு பங்குகளை விற்கும் செயல் கொள்கைக்கு முரணான செயலாகும்.

அரசு ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் பங்குகளைக் கொள்முதல் செய் யும்போது அச்சங்கத்தின் உறுப்பினராகி விடுகின்றது. சங்கம் தனது அலுவல்களின் நிருவாகம் குறித்தும், பொதுப்படையான கூட்டுறவுக் கொள்கைகளின் செயற்பாடுகள் குறித்தும் எடுக்குந் தீர்மானங் களுக்கு அரசு கட்டுப்படல் வேண்டும். சங்க உறுப்பினர் என்ற முறை யில் சங்கம் எடுத்த முடிவுகளை அரசு மீறக்கூடாது. கோட்பாட்டின் படி அரசின் உறுப்புரிமை கூட்டுறவு விடயங்களில் சங்கத்திற்கு அரசைக் கீழ்ப்படிய வைக்கின்றது. இது அரசின் ஆளுமையைப் பாதிக்கக் கூடிய விடயமாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு கூட்டுறவில் பங்குகளைக் கொள்முதல் செய்வது அரசுக்கும் நல்லதல்ல. கூட்டுறவுக்கும் நலல்தல்ல, இவ்வாறு சங்கங்களின் பங்கைக் கொள்முதல் செய்வதால் கூட்டுறவுக் கொள்கையே மாறுபட்டுவிடும், கூட்டுறவுச் சங்கங்களின் தன்மையும் மாறுபட்டுவிடும். பொதுத்துறை, அல்லது தனியார்துறை நிறுவனங்கள் போலக் காட்சியளிக்கும்.

திறந்த உறுப்புரிமை என்ற கொள்கை செம்மையாகக் கடைப்பிடிக்கப்படின், பகிரங்கத் தன்மையும் தகுதியுடையவர்கள் உறுப்பினராயிருத்தலும் உறுதிப்படுத்தப்படும். குடியாட்சிப்பாங்கான கட்டுப்பாடு என்ற கொள்கை உறுப்பினர்களே எந்த நிலையிலும் தங்கள் நலன்கள் எவை என்பதைத் தீர்மானிக்கக் கூடிய உரிமையுள்ளவர்கள் என்ற வாதத்தில் தங்கியுள்ளது. தகைமையற்றவர்களும், கூட்டுறவு எதிரிகளும் உறுப்பினர்களாக அனுமதிக்கப்படின் இந்த வாதத்தின் வலு குறைந்துவிடும். ஜனநாயகக் கட்டுப்பாடு என்ற கொள்கை செம்மையாகவும் சீராகவும் செயற்படுவதற்கு திறந்த உறுப்புரிமையின் சரியான தொழிற்பாடே மூலகாரணமாக அமைதல் வேண்டும்.

## 2. ஜனநாயக முறையில் அமைந்த நிருவாகமும் கட்டுப்பாடும்

கூட்டுறவுச் சங்கங்கள் குடியாட்சி முறையில் அமைந்தவை. உறுப்பினர்கள் ஏற்றுக் கொண்ட முறையில் தெரிவு செய்யப்பட்டவர்கள் அல்லது நியமிக்கப்பட்டவர்கள் இச்சங்கங்களின் அலுவல்களை நிருவகிப்பார்கள். நிருவாகத்திற்கு இவ்வுறுப்பினர்கள் பொறுப்பானவர்கள். ஆரம்பச் சங்க உறுப்பினர்களுக்கு, ஓர் உறுப்பினருக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் சமவாக்குரிமை இருப்பதுடன், அவர்களது சங்கங்களைப் பாதிக்கக் கூடிய முடிவுகளில் கலந்து கொள்வதற்கும் அவர்களுக்குச் சமவுரிமை இருத்தல் வேண்டும். ஆரம்பச் சங்கமல்லாத சங்கங்களில் நிருவாகம் பொருத்தமான குடியாட்சியடிப்படையில் அமைய வேண்டும்" என அனைத்துலகக் கூட்டுறவு நிறுவன விதிகள் கூறுகின்றன.

ஜனநாயகக் கட்டுப்பாடு என்பதன் எண்ணக் கருவை ஐந்து அம்சங்களாக வகுக்கலாம். அவையாவன:

1. சங்கத்தின் தீர்மானங்களை எடுக்கும் உயர் அதிகாரம் எல்லா உறுப்பினர்களும் கலந்துகொள்ள உரிமையுள்ள பொதுச் சபைக்கே உண்டு.
2. சங்கத்தினைப் பாதிக்கவல்ல முடிவுகளை எடுக்கும்போது ஆரம்பச் சங்க உறுப்பினர்கள் எல்லோரும் சம உரிமையுடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யவர்கள். ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வாக்குரிமையே உண்டு. உயர்மட்ட சங்க உறுப்பினர்களும் இந்த உரிமையை அனுபவிக்கும் அதே நேரத்தில் வாக்குரிமை விடயத்தில் ஜனநாயகம் தன்மைக்குப் பொருத்தமான வேறு முறைகளும் கையாளப்படலாம்.

3. உறுப்பினர்கள் ஜனநாயக முறையில் எடுத்த தீர்மானங்களுக்கு அமைவாகவே முகாமை (நிருவாகம்) சங்கத்தின் அலுவல்களையும் செயற்பாடுகளையும் நிறைவேற்ற வேண்டும், நிருவகித்தல் வேண்டும்.

4. உறுப்பினர்களுக்கு உடன்பாடான முறையிலேயே முகாமை தெரிவு செய்யப்படல் வேண்டும். அல்லது நியமிக்கப்படல் வேண்டும்.

5. முகாமை உறுப்பினரின் பதிலாட்கள். அதே நேரத்தில் உறுப்பினர்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்புடையவர்கள்.

உறுப்பினர்கள் எல்லோரும் கலந்து கொள்ளக்கூடிய பொதுச் சபைக்கே கூட்டுறவுச் சங்கங்களில் உயர் அதிகாரம் உள்ளது. உறுப்பினர்களின் பொதுத் தேவையைச் சேவைகள் மூலம் நிறைவேற்றுவதே ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் முதல் நோக்கமாகும். அதற்காகவே சங்கத்தால் பொது முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. தேவையும் அதை நிறைவேற்றும் அதிகாரமும் ஒரு இடத்தில் இருந்தே தோன்றுகின்றன. மனிதனே தனது எசமானனாகத் தொடர்ந்திருக்கக் கூட்டுறவு நிறுவனம் அவனது தேவைகளுக்குரிய சேவைகளை அவன் விருப்பப்படி அளிக்கும் சேவகனாகக் கடமையாற்றுகிறது. ஜனநாயகத் தத்துவங்களே கூட்டுறவின் ஜீவநாடி, இக் கருத்து அனைத்துலகக் கூட்டுறவு இணைப்பு நிறுவன மகாநாட்டில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அரசியல் ஜனநாயகத்துக்கும் கூட்டுறவு ஜனநாயகத்திற்குமிடையே மாறுபாடுகள் இருக்கத்தான் செய்யும். அரசியல் ஜனநாயகத்தில் உள்ள அதிகாரப் பரம்பலின் சிக்கல்கள் கூட்டுறவு ஜனநாயகத்தில் கிடையாது. பெரும்பான்மை உறுப்பினர்களின் சிந்தனைகளைத் தீர்மானமாக்கிச் செயல்படுத்தக் கூட்டுறவு ஜனநாயகம் இலகுவான வழி முறைகளைக் கையாளுகின்றது. சங்கத்தின் குறிக்கோளுக்கும் உறுப்பினர்களின் பொதுத் தேவைக்கும் நேரடித் தொடர்பிருப்பதால் உறுப்பினர்கள் என்றும் விழிப்புடன் இருப்பர். கூட்டுறவு ஜனநாயகத்திலும் கருத்து வேறுபாடுகளுக்கிடமுண்டு. கருத்து வேறுபாடுகளை நன்ருக ஆராய்வதற்கும் விவாதிப்பதற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு உறுப்பினருக்கும் போதிய சந்தர்ப்பமளிக்கப்படும். இந்தக் கருத்து வேறுபாடுகள் குறிக்கோளையடையும் வழிகளைப் பற்றியதாக விருக்குமேயன்றிக் குறிக்கோளைப் பற்றியதாக இருக்காது.

ஒவ்வொரு உறுப்பினரும் சுதந்திரமான சுயாட்சித் தன்மையுடையவர்களாக இருந்தாற்றான் உண்மையான ஜனநாயகத் தன்மை நிறைந்த கட்டுப்பாடுகள் நிலவ முடியும். இல்லாதுவிடின் உறுப்பினர் மீது சமூக பொருளாதார ஆதிக்கம் செலுத்துபவர்களின் கட்டுப்பாடே அக் கூட்டுறவுச் சங்கத்தில் நிலவும். எனவேதான் தனியுறுப்பினரின் சுதந்திரமான சுயாட்சித் தன்மை என்ற எண்ணக்கரு ஜனநாயகக் கட்டுப்பாடு என்ற எண்ணக்கருவுடன் இணைந்து நிற்கின்றது.

கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் தீர்மானங்கள் செயற்பாடுகள் கட்டுப்பாடுகள் வெளியுலகத் தொடர்புகளுக்கு ஏற்றதாகவும், வெளியுலகம் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் அமைதல் வேண்டும். பொதுத் தேவைகளைத் தீர்க்குமுகமாக பொதுமுயற்சி பற்றிய தீர்மானங்கள் வெளியுலகம் ஒப்புக்கொள்ளக் கூடியதாக அமைதல் வேண்டும். பொதுசன அபிப்பிராயத்தைத் திரட்டக் கூடியதாய் இருத்தல் வேண்டும். இதற்கு திறந்த அங்கத்துவக் கோட்பாடு உதவியாக அமைகின்றது. உறுப்பினர்களின் தொகை அதிகரிக்க பொதுசன அபிப்பிராயமும் வெளியுலக அங்கீகாரத் தன்மையும் ஏற்படும் சூழ்நிலை உருவாகும்.

கூட்டுறவுச் சங்கத் தீர்மானங்களும் செயற்பாடுகளும் பகிரங்கத் தன்மை கொண்டவையாக அமைதல் வேண்டும். கூட்டுறவுச் சங்கத்தில் இரகசியம், ஒளிவு மறைவு என்பவற்றிற்கே இடமிருத்தல் ஆகாது. பகிரங்கத் தன்மை கூட்டுறவு பற்றிய பொதுசன நல்லபிப்பிராயத்தை ஏற்படுத்துவதற்கு உதவியாக அமையும். சிறந்த விளம்பரமாகவும் அமையும்.

ஜனநாயக மரபுகளையும் கோட்பாடுகளையும் தன்னுள் அடக்கியதே கூட்டுறவு. ஜனநாயக தத்துவங்களையும் மரபுகளையும் கூட்டுறவுச் சங்கம் ஒன்று எந்த நிலையிலும் கடைப்பிடிக்கத் தவறுமாயின் தனது உண்மையான புனித நோக்கிலிருந்து வழுவி விடும். கூட்டுறவுச் சங்கத்தின் பெருநோக்கு உறுப்பினர்களின் நலன்களைப் பேணுதலாகும். தமது நலன்கள் எவை என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்களும் உறுப்பினர்களே. எனவேதான் சங்கம் தனது உயர்நோக்கை எய்த வேண்டுமானால் உறுப்பினர்களின் தீர்மானப்படி செயற்பட வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குரிமையைப் பொறுத்த வரையில் சங்கத்தைப் பாதிக்க வல்ல முடிவுகளை எடுக்கும்போது ஜனநாயக முறைப்படி ஒவ்வொரு உறுப்பினரும் சமநிலையில் தமது வாக்குகளைப் பயன்படுத்த முடியும். கூட்டுறவுச் சங்கம் மூலதனச் சேர்க்கையல்ல மனிதச் சேர்க்கையே. அதுவும் பொதுப் பொருளாதாரத் தேவைகள் மனிதருக்குள் சமநிலையில் இருப்பது போன்று அதை நிறைவேற்றும் சக்தியிலும் அவர்களுக்குச் சம உரிமை இருத்தல் வேண்டும். எனவே கூட்டுறவு சங்கங்களில் மூலதனம் அல்லது பங்குகளுக்கு வாக்குரிமை கிடையாது. உறுப்பினர்களுக்கே வாக்குரிமை உண்டு. றொச்டேல் சமத்துவ முன்னணியினர் "ஒரு உறுப்பினருக்கு ஒரு வாக்குரிமை" என்ற கொள்கையை அன்று கடைப்பிடித்தனர். ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களின் பொதுச்சபைக் கூட்டங்களில் வாக்குரிமை விடயத்தில் றொச்டேல் சமத்துவ முன்னணியினரின் விதியைத்தான் இன்றும் கடைப்பிடித்து வரப்படுகின்றது. சங்க உறுப்பினர்களிடையேயுள்ள சமூக உறவுகள் சமத்துவ அடிப்படையில் அமைந்தனவென்பதையும், அதிகாரப் பரம்பல் உறுப்பினர்களிடையே சமநிலையிலிருந்து எழுகின்றன என்பதையும், பெரும்பாலான உறுப்பினர்களின் விருப்பத்திற்கேற்பவே சங்கம் செயற்படுகிறதென்பதையும் உறுப்பினர்களின் ஜனநாயகக் கட்டுப்பாட்டு அதிகாரத்துக்குள்ளேயே சங்கம் இருக்கின்றதென்பதையும் இவ்வாக்குரிமை விதி தன்னுள்ளடக்கி, ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் ஒரு குடியாட்சி அமைப்பு என்பதை வெளிப்படுத்தும். முடிவுகளை எடுப்பதில் எல்லா உறுப்பினர்களும் சமத்துவமாகப் பங்குபற்றுவதென்றால் அதற்குள்ள ஒரேவழி "ஒரு உறுப்பினருக்கு ஒரு வாக்கு" என்ற விதியைக் கடைப்பிடிப்பதே. இவ்விதிக்கு எவ்வித புறநடையும் ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களில் இருக்க முடியாது.

ஆரம்பக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றின் பொதுச்சபைக் கூட்டத்திற்கு பதிலாள் வைப்பு (பேராளர்) மூலம் வாக்குரிமையைப் பயன்படுத்த முடியுமா என்பது பிரச்சனைக்குரிய விடயம். பொதுத் தேவையும், சங்க அக்கறையில் ஆர்வமும் இல்லாத ஒருவர் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல; சங்கத்தின் எதிர்ச் சக்திகளும் இம்முறையைப் பயன்படுத்தி உள்ளே நுழைந்து சங்கத்தின் குறிக்கோளையே மாற்றியமைத்துவிடச் சந்தர்ப்பம் அளிக்கும். உறுப்பினர் ஒருவர் சங்கத் தீர்மானம் பற்றி முற்கூட்டியே செய்த முடிவு; அவர் கூட்டத்தில் கலந்து பிறரின் கருத்துக்களைக் கேட்பதால் மாற்றியமைக்கும் சூழ்நிலை ஏற்படும், எனவே பதிலாள் வைப்பு மூலம் வாக்களிக்கும் முறை விரும்பத்தக்கதல்ல என்ற வாதம் ஒரு சாராரிடமிருந்து எழுந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு உறுப்பினர் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாவிடின் சங்கத்தைப்பற்றி எடுக்கும் முடிவில் தனது பங்கைச் செலுத்தும் உரிமையை இழக்கின்றார். அந்த இழப்பைத் தவிர்ப்பதற்கு பதிவாள் வைப்பு வாக்குரிமை அவருக்குச் சாதகமாயுள்ளது. சங்கத்தின் உயர்விலும் தாழ்விலும் மற்ற ஏனைய பொறுப்புக்களிலும் ஏனைய அங்கத்தவர்களுக்குள்ள பொறுப்பும் அக்கறையும் போன்றே தனி ஒரு அங்கத்தவருக்கும் இருக்கிறது. பதிலாளை நியமிக்கும்போது பொறுப்புடனும் அக்கறையுடனும் சரியான ஆளையே அவர் நியமிக்க வேண்டும். நியமிக்கும் பதிலாள் தனது சொந்தக் கருத்துக்களைத் தெரிவிக்கும் வாய்ப்புக்களுக்கு இடம் அளியாது உறுப்பினர் முற்கூட்டியே தெரிவித்த முடிவுக்கு வாக்குரிமையை மட்டும் அளிக்கும் வரையறைக்குட்படுத்தலாம் என்பது பதிலாண்மை முறை வாக்குரிமையைப் பயன்படுத்தலாம் என்போரின் வாதம்.

இவ்விரு சாராரின் வாதங்களிலும் ஓரளவு நியாயத் தன்மைகள் புலப்படுகின்றன. எனவே ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் ஜனநாயக முறையில் தமது சங்க உள்ளமைப்புக்கேற்ப இதைப்பற்றி முடிவு செய்வதே சிறந்ததாகும்.

ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்கள் அல்லாத ஏனைய சங்கங்களின் வாக்குரிமை விதி எவ்வாறு அமைதல் வேண்டும் என்பது பற்றிச் சிந்தித்தல் நன்று. ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள் எனக் கருதப்படுவது ஆரம்பச் சங்கங்களால் உருவாக்கப்படும் இரண்டாம் மட்டச் சங்கங்களும், இரண்டாம் மட்டச் சங்கங்களால் உருவாக்கப்படும் மூன்றும் மட்டச் சங்கங்களும் அதற்கும் மேலாக நிறுவப்படும் தேசிய நிறுவனங்களுமாகும். இந்தச் சங்கங்களும் சந்தேகத்திற்கிடமில்லாத கூட்டுறவு நிறுவனங்களேயென அனைத்துலகக் கூட்டுறவு இணைப்பு நிறுவனக் கொள்கை வரையறைக் குழு சுட்டிக்காட்டியுள்ளது. எனவே இவையும் ஜனநாயக அடிப்படையிலேயே நிருவாகத்தை நடத்த வேண்டும். ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களைப் போன்று இவையும் இன்றியமையாத கூட்டுறவுக் கொள்கைகளுக்கும் விதிகளுக்கும் இணங்குதல் வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பு நிறுவனங்களின் உறுப்பினர்களுக்குச் சம உரிமைகளும் ஜனநாயக மரபு முறைப் பாதுகாப்புக்களும் உண்டு. ஜனநாயகக் கட்டுப்பாடு கொண்ட முகாமைக்கு இந்தச் சமத்துவ நிலையே மூலவேராகும். இந்த கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பு நிறுவனங்களிலும் '' ஓர் உறுப்பினருக்கு ஒரு வாக்கு '' என்ற விதியைக் கடைப்பிடிக்கலாம்.

கூட்டுறவுச் சங்க இணைப்பு நிறுவனங்களில் அங்கம் வகிக்கும் சங்கங்களின் பருமனில் (உறுப்பினர் எண்ணிக்கை) அதிக அளவு வேறுபாடு இல்லாவிட்டால் '' ஓர் உறுப்பினருக்கு ஒரு வாக்கு '' என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதி திருப்திகரமாக அமையும். அங்கத்துவ சங்கங்களிடையே அதிக அளவு பருமனளவில் மாறுபாடு இருக்குமாயின் அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அளவிற்கேற்ப வாக்கு பலத்தை அமைக்கலாம். வாக்குப்பல பங்கீடு செய்யும்போது பின்வரும் முறைகள் பின்பற்றப்படலாம்.

மூலதனச் செலுத்தலுக்கேற்ப வாக்குப்பலம் அமைதல். மூலதனச் செலுத்துதல் அங்கத்தவர் எண்ணிக்கைக்கு ஏற்ப அமைதல். இது வொருவகை வாக்குப் பல பங்கீடு. இன்னொருமுறை அங்கத்துவ சங்கம் பொது இணைப்பு நிறுவனத்திடம் காட்டும் அக்கறையைக் கொண்டு வாக்குப்பலத்தைப் பிரித்தலாகும். அக்கறையை அங்கத்துவ சங்கங்கள் அதனிடமிருந்து பெறும் சேவையினளவைக் கொண்டு அறிய முடியும். "ஓர் உறுப்பினருக்கு ஒரு வாக்கு" என்ற விதியில் இருந்து மாறுபட்டதாய் வெளிப்படையாகத் தோன்றினும் உண்மையில் அத் தத்துவத்தின் வளர்ச்சிப்படியே இம் முறைகள் என்பது உற்றுநோக்கினல் புலனுகும். மனிதத்துவத்திற்கு முழுமையாகவும் செம்மையாகவும் மதிப்பளிக்கும் வழி முறைகளே இவை.

"வாக்குப்பலப் பங்கீடு அங்கத்தவர் அடிப்படையிலிருந்து செய்யப்படும் பங்கீட்டிலிருந்து முழுவதும் வேறுபட்டதல்ல. நடைமுறை நோக்கில் இத்தகைய விட்டுக் கொடுப்பு ஒற்றுமைக்கும், சமத்துவத்திற்கும் வினைத்திறனுக்கும் வழிகோலுகின்றது." என அனைத்துலகக் கூட்டுறவு இணைப்பு நிறுவனக் கொள்கை வரையறைக் குழு சுட்டிக் காட்டியுள்ளது.

சமத்துவம் என்ற கொள்கையைச் செம்மையாகக் கடைப்பிடிப்பதென்றல் இரண்டாம் மட்டச் சங்கத்தில் உறுப்புரிமைச் சங்கம் ஒன்றிற்கு ஒரு வாக்குரிமை என்ற விதி செம்மையானது என்று கூறமுடியாது. 50 பேரை உறுப்பினராகக் கொண்ட சங்கத்திற்கும் 5000 பேரை உறுப்பினராகக் கொண்ட சங்கத்துக்கும் ஒரு வாக்கு என்ற விதி மனிதத்துவத்திற்கும் ஜனநாயகக் கோட்பாடுகளுக்கும் மதிப்பளிப்பதாக இருக்க முடியாது. உறுப்பினர்களின் தொகைக்கேற்ப வாக்குகள் அதிகரிப்பதே நியாயமாக இருக்க முடியும்; உறுப்பினருக்கு ஒரு வாக்கு என்ற விதி ஆளுக்கொரு வாக்கு என்பதையே கருதும். ஆரம்பச் சங்கங்கள் உயர்மட்டச் சங்கங்களில் உறுப்புரிமை பெறுவதற்கும், வாக்களிப்பதற்கும் விகிதாசார முறையே ஏற்றதென்ற வாதம் எழுப்புதலுக்கு எதிர்வாதமும் உண்டு.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை எதிர்ப்பவர்கள் சில கருத்துக்களை முன்வைக்கிறுர்கள். ஆரம்பச் சங்கங்களில் உள்ள பல உறுப்பினர்கள் சங்கத்தோடு ஈடுபாடில்லாதவர்களாயும், அக்கறையில்லாதவர்களாயும், பொதுத் தேவையற்றவர்களாயும் இருப்பார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். உறுப்பினர் எண்ணிக்கையில் அவர்களும் அடங்குவதால் இவ் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் கூட்டுறவாளர்களின் சமத்துவத்தைப் பிரதிபலிக்கவில்லை. என்பது ஒன்று.

அதிக அளவு உறுப்பினர்களைக் கொண்ட பெரிய சங்கங்கள் சிற்றளவுச் சங்கங்களைத் தமது வாக்குப் பலத்தைக் கொண்டு அவற்றின் எண்ணங்கள், செயற்பாடுகள் ஆகியவற்றை நசுக்கிவிடும் என்பது மற்றக் கருத்தாகும். இக் கருத்துக்களையும் முற்றாகப் புறக்கணித்துவிட முடியாது. வாக்குப்பலப் பங்கீட்டு முறையில் சங்கங்களின் பிரதிநிதித்துவத்திற்குரிய உயர்வெல்லையையும் தாழ்வெல்லையையும் நிர்ணயிக்கலாம். கூட்டுறவின் உயரிய நோக்கம் 'எந்தவிடயத்திலும் ஒருவருக்குப் பாதகமாகவும், அப்பாதகத்தின் விளைவாக இன்னொருவருக்குச் சாதகமாகவும் செயல் புரியாதிருத்தலாகும். இவற்றைக் கருத்திற் கொண்டு வாக்குப்பலப் பங்கீடு அமைதல் விரும்பத்தக்கது.

முகாமை, நிருவாகம், உட்கட்டுப்பாடு என்பவற்றில் வெளியாரின் தலையீடு இருக்கக் கூடாது என்பதுதான் தூய கூட்டுறவுக் கோட்பாடாகும். உள்துறைக் கட்டுப்பாடுகள் பற்றி அரசாங்கங்கள் அடிக்கடி விதிகள் மூலமும் சுற்றுநிருபங்கள் மூலமும் கட்டுப்படுத்த முயலுகின்றன. கூட்டுறவுக் கொள்கைகளை அனுஷ்டிப்பதற்கும் அதன் புறத்தோற்றத்தைப் பாதுகாப்பதற்கும் சட்ட ஆளுமையை ஏற்படுத்துவதற்கும் சட்டமாக்குதல் ஏற்கக் கூடியது. சங்கத்தின் உள்துறைச் செயற்பாடுகளிலும் நடைமுறைகளிலும் விதிகள், சுற்றுநிருபங்கள் மூலம் தலையீடு செய்தல் விரும்பத்தக்கதல்ல. இத் தலையீட்டினால் எவ்வளவு நன்மை ஏற்படினும் கூட்டுறவு இயக்கத்தை வளர்க்க உதவுமெனக் கருத முடியாது. இவை எவ்வளவு உயர்ந்தவையாகவும் பெறுமதி மிக்கவையாகவுமிருந்தாலும் சர்வாதிகாரத் தன்மை என்ற மேற்பூச்சுக்களாக வேண்டியுள்ளன. இக் கட்டுப்பாடுகளையே உறுப்பினர்கள் தம் சொந்த விருப்பத்தின் பேரில் சுதந்திரமாகப் பிரமாணங்களாக ஆக்கும்போது அவை ஜனநாயகத் தன்மையென்ற மேற்பூச்சுப் பெற்று மக்கள் மனதைக் கவர்கின்றன.

அரசாங்கம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி வழங்கினால் அவ்வுதவி சரியான வழியிலும் செம்மையான முறையிலும் பயன் படுத்தப்படுகின்றனவா என்பதனை உறுதிப்படுத்த தமது பிரதிநிதிகள் முகாமையில் இடம்பெற வேண்டும் என்ற அரசின் கோரிக்கை நியாயத் தன்மை கொண்டதுதான். இந்நியாயக் கோரிக்கையை அனைத்துலகக் கூட்டுறவு இணைப்பு நிறுவனக் கொள்கை வரையறைக் குழு ஒப்புக்கொண்ட போதிலும் இத்தகைய அரசாங்கப் பிரதிநிதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையில்லாது ஒரு நாளாவது பதவி வகிக்கக் கூடாதெனவும் வலியுறுத்தியுள்ளது.

சங்கத்தின் பொதுச்சபைத் தீர்மானங்களே அதிகாரத்தின் உச்ச வரம்பு என்பதை வலியுறுத்திய போதிலும் அரச அதிகாரிகளின் மேல் அங்கீகாரம் பெறவேண்டும். அல்லது அவர்களுக்கு ரத்துச் செய்யும் அதிகாரமிருத்தல் என்பன சுயாட்சித் தன்மைக்கும் ஜன நாயகக் கோட்பாடுகளுக்கும் முரணானது. அரசாங்கம் நிதி வழங்கினா லும் உச்ச அதிகார எல்லை பொதுச்சபையிடமே இருக்கிறது. உறுப் பினர்கள் கருத்துக்களால் உருவாக்கப்படும் தீர்மானங்களே இறுதி அதிகாரத் தன்மையுடையனவாக அமைதல் வேண்டும்.

நிருவாக நிதி விடயங்கள் சம்பந்தமாக இறுதி முடிவு எடுக்கும் அதிகாரங்களும், முகாமையை உருவாக்குவதற்கும், கலைப்பதற்கு முள்ள அதிகாரங்களும் உப விதிகளை அல்லது நடைமுறை விதிகளை உருவாக்குதல், மாற்றுதல், திருத்துதல் சம்பந்தமான அதிகாரங்களும் அரசாங்க அதிகாரிகளிடமிருப்பின் கூட்டுறவுக் கொள்கைகள் வெறுங் கேலிக் கூத்துக்குரியனவாகும். கூட்டுறவு இயக்கத்தை வளர்ப்பவர் கள் வழிகாட்டிகள் எவ்வளவு தூரம் ஜனநாயகக் கோட்பாடுகளைப் புரிந்து எந்த அளவிற்குக் கடைப்பிடிக்கிறார்களோ அந்த அளவுக்கே கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியுமிருக்கும். எனவே கூட்டுறவு இயக்கம் அதற்குரிய தனித்துவத்துடன் வளர்ச்சியடைய வேண்டுமானால் நல்ல ஆலோசகனாகவும், வழிகாட்டுவோனாகவும், உதவுவோனாகவும் அரசு இருக்கவேண்டுமல்லாது நிருவாகத் தலையீடு செய்வோனாக இருத்தலா காது.

### 3. மூலதனத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட வட்டி வீதம்

பங்கு முதலுக்கு ஏதேனும் வட்டி கொடுக்கப்பட்டால் அதன் வீதம் கண்டிப்பாக மட்டுப்படுத்தப்பட்டதாய் இருத்தல் வேண்டும். " ஆதாய நோக்கு ஆதிக்கம் செலுத்தும் வணிக உலகில் வழக்க மாகக் காணப்படுவதை விடச் சமத்துவமான முறையில் பொருளா தார விளைபயன் பங்கிடப்படல் வேண்டுமென்ற திடமான முடிவின் விளைவாகவே வட்டி வீதம் மேலதிகத்தின் பயன்பாடு, பங்கீடு ஆகியவை குறித்துக் கூட்டுறவு விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. " என அனைத் துலகக் கூட்டுறவு இணைப்பு நிறுவனக் கொள்கை வரையறைக் குழு குறிப்பிட்டுள்ளது.

மூலதனத்திற்கு ஏதேனும் வழங்குவதாயின் வட்டி மட்டுமே வழங்கலாம் என்ற கொள்கை உருவாகியது மூலதனத்திற்கு வட்டி யைத் தவிர வேறு ஒன்றும் வழங்க முடியாது. எனவே மூலதனத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்கு வாக்களிக்கும் உரிமையும் நிருவாகத்தில் பங்கு கொள்ளும் உரிமையும் கிடையாது. அத்துடன் வணிக மேலதிகத்தில் பங்கு பெறும் உரிமையும் கிடையாது. வாக்களிக்கும் உரிமை மூலதனத் திற்கு அல்ல உறுப்பினர்களுக்கே உண்டு. ஆனால் பங்கு முதலைக் கொள்முதல் செய்பவர்களே உறுப்பினர்களாக முடியும். பங்குமுதல் உறுப்புரிமை இரண்டும் நெருக்கமான தொடர்பு கொண்டவை. பங்கு முதல் உறுப்பினர்களுக்கே உரியது. ஒவ்வொரு உறுப்பினரின் பங்கு முதல்கள் (மூலதனக் கூறுகள்) வெவ்வேறு தொகையைக் கொண்ட தாக அமைந்திருக்கும். வேறுபட்ட பங்கு முதல்களை (மூலதனக் கூறு களை) கருத்திற் கொள்ளாது உறுப்பினர் ஒருவருக்கு ஒரு வாக்குரி மையே வழங்கப்படும். 10 ரூபா மூலதனம் செலுத்திய உறுப்பின ருக்கும் 1000 ரூபா மூலதனம் செலுத்திய உறுப்பினருக்கும் வித்தி யாசமின்றி ஒவ்வொரு வாக்குரிமையே வழங்கப்படும். இதில் இருந்து நாம் அறியக்கூடியது யாதெனில் உறுப்பினருக்கே வாக்குரிமை. மூல தனத்துக்கு வாக்குரிமை பெறும் அதிகாரமில்லை. ஏனைய வணிக அமைப்புக்கள் இதில் இருந்து மாறுபடுகின்றன. வியாபார மேலதி கத்திலும் பங்கு முதலுக்கு (மூலதனம்) எவ்வித உரிமையுமில்லை. வியாபார மேலதிகத்தைப் பங்கீடு செய்யும்போது மூலதனத்துக்கு எவ்வித முக்கியத்துவமும் அளிக்கப்பட வேண்டியதில்லை. உறுப்பினர் களின் தீர்மானப்படியே மேலதிகம் பங்கீடு செய்யப்படுகின்றது. மேலதிகப் பங்கீட்டுக் கொள்கையில் இது விரிவாக ஆராயப்படும். "மூலதனம் ஆதாயத்தை எடுத்துச் செல்லும் நிலையில் இருந்து வெறு மனே வட்டி உழைக்கும் நிலைக்குத் தாழ்த்தியதன் மூலம் கூட்டுறவு இயக்கம் ஒரு சமுதாயப் புரட்சியை உருவாக்கிவிட்டது என்று கூறினால் மிகையாகாது." என்று அனைத்துலகக் கூட்டுறவு இணைப்பு நிறுவன முன்னாள் தலைவர் பேராசிரியர் ஜீத் கூறியதையும் இவவேளையில் நாம் கருத்திலிருத்த வேண்டும்.

"பங்கு முதலுக்கு ஏதேனும் வட்டி வழங்கப்படுவதாயின்' என்று கூறப்பட்டிருப்பதால் மூலதனத்துக்கு வட்டி நிச்சயமாக வழங்க வேண்டுமென்று கூட்டுறவுக் கொள்கை எதுவுமில்லை. வட்டி வழங்கு வது கட்டாயத்துக்குரியதன்று. விருப்பத்திற்குரியது. அதுவும் உறுப் பினர்களின் விருப்பத்திற்குரியது. பங்கு முதலுக்கு வட்டி வழங்குவ தாயின் வட்டி வீதம் வரையறுக்கப்பட்டதாயும் நியாயமானதாயு மிருத்தல் வேண்டுமெனக் கூட்டுறவுக் கொள்கை கூறுகிறது. வட்டி வீதம் சட்டத்திற்குட்பட்டதாயும் நியாயமானதாயுமிருத்தல் வேண் டும். வட்டி வீதத்தின் வரையறையும் நீதியும் எவ்வாறு கணிக்க முடியும் என்பது ஆய்வுக்குரியது பின்வருவனவற்றைக் கொண்டு வரையறை செய்யலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சட்டம் வட்டி வீதத்தை நிர்ணயித்திருந்தால் அத்தொகை
2. வெளிக் கடன்களுக்குச் சங்கம் வழங்கும் வட்டி வீதம்
3. உறுப்பினர்களின் தீர்மானம்

உறுப்பினர்களைக் கொண்ட பொதுச் சபையின் தீர்மானமே முக்கியமானது. அத்தீர்மானம் சட்டம் வட்டி வீதத்தை நிர்ணயித்திருப்பின் அவ்வீதத்துக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். சட்டம் வட்டி வீதத்தை நிர்ணயிக்காதுவிடின், சங்கம் வெளிக்கடன்களுக்கு வழங்கும் வட்டி வீதத்துக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

கூட்டுறவுக் கொள்கைகள் வட்டி வழங்குவதை விருப்புக்குரிய தாக்கியமையால் வழங்க வேண்டும், வேண்டாம் என்று இரு வகைக் கருத்துக்களும் கூட்டுறவாளர்களிடையே நிலவுகின்றன. கூட்டுறவு மனிதர்களின் சேர்க்கையேயன்றி மூலதனச் சேர்க்கையல்ல. உறுப்புரிமையின் பல அம்சங்களுள் மூலதனக் கூறுகளின் கொள்முதலும் ஒரு அம்சம். உறுப்பினர்கள் தங்கள் பொதுத் தேவைகளைத் திறம்பட நிறைவேற்றும் நோக்கோடுதான் மூலதனக் கூறுகளை (பங்கு முதல்களை) கொள்முதல் செய்கிறார்களேயன்றி மூலதனத்தைக் கொண்டு அதற்கென வேறு ஏதாவது நயங்கள் பெறவேண்டுமென்ற நோக்கிலல்ல. மூலதன நயத்துக்கு முக்கியத்துவமளிக்க முயன்றால் பொதுத் தேவைகளை நிறைவேற்றுந்திறன் குறைவடையக்கூடும். மூலதனத்துக்கு முக்கியத்துவம் அளிக்கும் வணிக அமைப்புக்களில் இருந்து கூட்டுறவு அமைப்பு தனித்தன்மை பொருந்தியது என்ற கோட்பாட்டின் சக்தி குறைவடையக்கூடும். வியாபார மேலதிகங்கள் (இலாபம்) எவ்வாறு உபயோகப்படுத்தப்பட வேண்டுமென்று தீர்மானிக்கும் உரிமை உறுப்பினர்களிடமே இருப்பதால், அவர்களின் விருப்பப்படியே பங்கீடு செய்யும்போது வட்டி வழங்க வேண்டிய அவசியமில்லை. வட்டி முதலாளித்துவத்தின் சுரண்டல் தன்மையின் சின்னம். சுரண்டல் தன்மையை ஒழிக்க முனையும் கூட்டுறவு வட்டி வழங்குவது அதன் கொள்கைகளின் புனிதத் தன்மையைக் கெடுத்துவிடும். இவை போன்ற பல கருத்துக்களைப் பங்கு முதலுக்கு வட்டி வழங்க வேண்டிய அவசியமில்லை என்ற வாதத்தினர் கூறுகின்றனர்.

ஜனநாயகத் தன்மையும் நியாயத் தன்மையும் கூட்டுறவின் அடிப்படை எண்ணக்கருக்களில் முக்கியத்துவம் வாய்ந்தவை. உற்பத்திக் காரணிகளில் மூலதனமும் ஒன்று என்பதை ஜனநாயகக் கோட்பாடுகளை ஏற்றுக்கொள்பவர்கள் மறுக்கமுடியாது. ஏனைய உற்பத்திக் காரணிகளாகிய நிலம், உழைப்பு ஆகிய இரண்டுக்கும் அவற்றுக்குரிய நியாயமான விலை கிடைப்பதைக் கூட்டுறவுக் கொள்கைகள் ஏற்றுக் கொள்கின்றன. அமைப்புக்கும் உரியவிலை இலாபம் அல்லது மேலதிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கக் கூடாது எனக் கூட்டுறவுக் கொள்கைகள் வரையறை செய்யவில்லை. அமைப்புக்குரிய மேலதிகம் எவ்வாறு பங்கிடு செய்யப் படலாம் என்பதையே கூட்டுறவுக் கொள்கைகள் வரையறை செய் கின்றன. எனவே ஏனைய உற்பத்திக் காரணிகள் தாம் அளித்த சேவைக்குரிய நியாயமான விலையைப் பெறும்போது மூலதனம் (பங்குமுதல்) மட்டும் தனக்குரிய நியாயமான விலையைப் பெறு திருத்தல் பொருளியல் நியாயத் தன்மையுடைய செயல் அல்ல.

கூட்டுறவு நிறுவனங்கள் தமது தொழில் முயற்சிகளுக்காகப் பெறும் வெளிக் கடன்களுக்கு வட்டி வழங்குகின்றன. வணிக முயற்சி களில் வெளிக் கடன்களிலும் பார்க்க மூலதனம் கூடிய நயங்கள் பெறுவதையே நோக்காகக் கொண்டு முதலீடு செய்யப்படுகின்றன. கூட்டுறவு நிறுவனங்கள் வெளிக்கடன்களுக்கு வழங்கும் நயத்தை யாவது மூலதனத்துக்கு வழங்குவது நியாயத் தன்மை உடைய தாகும்.

வெளிக்கடன்கள் அதிகமாகவும் உரிமையாளரின் மூலதனம் குறை வாகவும் இருக்கும்நிலை (உயர் வினைப்பு மூலதன அமைப்பு முறை) வணிக நிறுவனங்களைப் பொறுத்த வரை நன்மை அளிப்பதாகும். ஏனெனில் வெளிக் கடன்கள் பெறும் நயங்கள் முற்கூட்டியே வரை யறுக்கப்பட்டவை. மூலதனம் பெறும் நயங்கள் வரையறுக்கப்படா தவை. வெளிக் கடன்கள் பெறும் நயவீதம் குறைவாகவும், மூல தனம் பெறும் நயவீதம் மிக அதிகமாகவும் இருக்கும் நிலை எற்படும். கூட்டுறவு நிறுவனத்தின் மூலதன அமைப்பு இதற்கு நேர்மாறாக இருத்தலே விரும்பத்தக்கது. வெளிக்கடன்கள் குறைவாகவும் உரிமை யாளர் மூலதனம் அதிகமாகவும் இருக்கும். (தாழ் வினைப்பு மூலதன அமைப்பு முறையே) கூட்டுறவு நிறுவனங்களில் விரும்பத்தக்கது. வெளிக்கடன்கள் அதிகமாக இருக்கும்போது தீர்மானங்கள் உள்ளக் கட்டுப்பாடுகள் போன்ற விடயங்களில் அவர்களின் தலையீடு இருக் கும். அவர்கள் தமது முதலைப் பாதுகாப்பதற்காகவும் நயங்களை அதிகரிக்கச் செய்வதற்காகவும் விதிக்கும் நிபந்தனைகள் உறுப்பினர் கள் சுயேச்சையாகச் சுதந்திரத் தன்மையுடன் எடுக்க வேண்டிய தீர்மானங்களையும் நிருவாகக் கட்டுப்பாட்டு முறைகளையும் ஓரளவு பாதிக்கவே செய்யும். இந்நிலையில் வெளியாரின் கருத்துக்கள் தீர் மானங்களிலும் செயற்பாடுகளிலும் புகுந்துவிடுவதைத் தடுக்க முடியாது. இந்நிலை மாற்றப்பட்டு உறுப்பினர்களின் சுதந்திரமான கருத்துக்கள் தீர்மானங்களிலும் செயற்பாடுகளிலும் பூரணமாகச் செறிந்திருக்க வேண்டுமானல் புறக்கட்டுப்பாடுகளின் நிர்ப்பந்தங்களி லிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும். புறக்கட்டுப்பாடு விதிப்பவர்களில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் நிதி அளிப்போர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே சங்கம் நிதித் தேவைகளை வெளியாரிடமிருந்து பெறும் நிலையைத் தவிர்த்துக் கொண்டால்தான் உறுப்பினர்களின் சுயேச்சைத் தன்மையையும் சங்கத்தின் ஜனநாயக அம்சங்களையும் சக்தியும் வலுவும் கொண்டவையாக விளங்கச் செய்ய முடியும்.

வெளியிலிருந்து நிதித்தேவைகளைப் பெறுவதைத் தவிர்க்க வேண்டின் அல்லது கட்டுப்படுத்திக் குறைக்க வேண்டின், நிதி முழுவதையும் அல்லது பெரும்பகுதியை உறுப்பினர்களிடமிருந்தே பெற வேண்டும். உறுப்பினராகச் சேர்வதற்குரிய இழிவெல்லைப் பங்கு முதலிலும் (மூலதனக் கூறுகள்) பார்க்க ஒரு உறுப்பினன் மேலதிகமாகப் பங்கு முதல்களைக் கொள்முதல் செய்வதற்கு ஏதாவது தூண்டுதல்கள் அல்லது நயங்கள் இருத்தல் வேண்டும். கூட்டுறவு மனிதச் சேர்க்கையேயன்றி மூலதனச் சேர்க்கையன்று. எனவே மூலதனத்துக்கு வட்டியைத்தவிர வேறு எவ்வித உரிமைகளும் அதாவது வாக்குரிமை, இலாபப் பங்கு போன்றவைகள் கிடையா. எனவே உறுப்பினர் ஒருவர் தன்னிடமுள்ள நிதியை இழிவெல்லையிலும் பார்க்கக் கூடுதலான பங்கு முதல்களைக் கொள்முதல் செய்ய இரு காரணங்கள்தான் கூற முடியும். ஒன்று கூட்டுறவுச் சங்கத்தில் அவருக்கு இருக்கும் அக்கறை. மற்றது வெளியில் முதலீடு செய்வதால் ஏற்படும் நயத்தை இழக்காதிருக்குந் தன்மை. சங்கத்தில் அக்கறை உள்ளோர் அனைவருக்கும் அதிக அளவு நிதியை முதலீடு செய்யும் வசதி இருக்காது. வசதியுள்ள அங்கத்தவர்கள் வெளியில் முதலீடு செய்து பெறும் நயம் முழுவதையும் இழக்காது இருக்கவும், முதலீடு செய்ய அவர்களைத் தூண்டவும் நியாயமான வட்டி வழங்குதல் வேண்டும். தொழில் சக்தியின் விளைவாக்கத்தைக் கூட்ட மூலதனம் உதவுவதால் மூலதனம் வழங்குபவர்களுக்கு கைம்மாறு வழங்க வேண்டியதன் தேவையை உணர்ந்து றொச்டேல் சமத்துவ முன்னோடிகள் நியாயமான வட்டி வீதம் வழங்குவதை ஏற்றுக் கொண்டனர்.

கூட்டுறவுச் செயற்பாடுகளில் முக்கியமானவொன்று ஒரு அங்கத்தவருக்குப் பாதகமாகவும் இன்னொரு அங்கத்தவருக்குச் சாதகமாகவும் நடக்காதிருத்தலாகும். எனவே 10 ரூபா பங்கு முதல் செலுத்திய உறுப்பினரும் 1000 ரூபா பங்கு முதல் செலுத்திய உறுப்பினரும் மனிதர்கள் என்ற ரீதியில் எல்லா வகையிலும் சமத்துவமாகவும் சம உரிமையுடனும் நடத்தப்படல் வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதே. இவர்களுக்கிடையே முதல் வேறுபாடு இருப்பதை நாம் மறந்துவிட முடியாது. உறுப்பினர்களின் மனித சமத்துவத்திற்குப் பங்கமில்லாத வகையில் முதல் அளிப்பிலும் சமத்துவம் பேண வேண்டுமாயின் எல்லா உறுப்பினர்களும் சமத்துவமாக முதலிட வேண்டும். பொருளாதார நிலைகள் அதற்கு உறுப்பினர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதியளிக்காத நிலையில் மேலதிக முதலீட்டைத் தூண்ட நியாயமான வட்டி வழங்குவதே முதல் சமத்துவத்தைப் பேணும்முறை. இவ்வாறு பல காரணங்களை முதலுக்கு வட்டி வழங்க வேண்டும் என்ற வாதத்தினர் கூறுகின்றனர்.

## 4. மேலதிகத்தை (இலாபம்) சமமாகப் பங்கிடுதல்

இலாபம் எவ்வாறு ஏற்படுகின்றது. ஒரு பொருளின் உண்மைப் பெறுமதியிலும் பார்க்கக் கூடுதலான பெறுமதியைக் கொள்வோனிடமிருந்து அறவிடுவதாலேயே மேலதிகம் (இலாபம்) ஏற்படுகின்றது. "வியாபாரத்தின் பயனாக ஏற்பட்ட மேலதிகம் ஒருவகை மேல் அறவீடு எனவே கருதப்பட வேண்டும். அது எவர்களிடமிருந்து மேலதிகமாக அறவிடப்பட்டதோ அவர்களுக்கு அம்மேலதிகம் உரியது. அவர்களுக்கே அம் மேலதிகம் திருப்பிச் செலுத்தப்படல் வேண்டும்." எனக் கல்வேர்ட் கூறியுள்ளார்.

கூட்டுறவு அமைப்பு வணிக அமைப்பிலிருந்து வேறுபட்டது. ஆதாய நோக்கையும் சுரண்டலையும் நீக்க உருவாக்கப்பட்டது. கூட்டுறவு நிறுவனங்களின் நோக்கு சேவையே. அதுவும் அங்கத்தவர்களின் பொதுத் தேவையை நிறைவேற்றுதலே முக்கிய குறிக்கோளாகும். எனவே இலாபத்தன்மையின்றிக் கூட்டுறவுச் சங்கங்கள் செயற்பட வேண்டும் என்று சிலர் கருதக்கூடும். இலாப நோக்குக்கும் இலாபத் தன்மைக்கும் வேறுபாட்டை முதலில் அறிந்துகொள்ளவேண்டும். இலாபநோக்கு என்பது வரம்பற்றது. கொள்பவனது பலவீனங்களைத் தமக்குச் சாதகமாக்கி எவ்வளவு மேலதிகமாகப் பெற முடியுமோ அவ்வளவு தொகையையும் இலாபமாகப் பெற முயற்சிப்பது. இலாபத்தின் அளவினைக் கருத்திற் கொண்டே செயற்பாடுகளில் ஈடுபட முயல்வது. இலாபத்தன்மை இந்நோக்கங்களின்றியும் ஏற்படலாம். இலாப நோக்கைக் கொண்டு எழுகின்ற இலாபங்கள் மிகை இலாபங்கள் என்று கருதப்படக் கூடியவையாகும். இலாபத் தன்மை சாதாரண இலாபமாகவே இருக்கும். அமைப்பு என்ற உற்பத்திக் காரணியின் சேவைக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான விலையே சாதாரண இலாபம். இந்தச் சாதாரண இலாபத்தன்மை ஒரு கூட்டுறவு நிறுவனத்திற்கு இருக்க வேண்டுமா என்பதுதான் சிந்தனைக்குரியது. இலாப நோக்கோ மிகை இலாபமோ நிச்சயமாக கூட்டுறவு நிறுவனத்திற்கு இருக்கக்கூடாது. ஆனால் இலாபத்தன்மை அதாவது அமைப்பின் சேவைக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான விலையாகிய சாதாரண இலாபங்கூட கூட்டுறவு நிறுவனத்துக்கு இருக்க வேண்டுமா என்பதுதான் பிரச்சனைக்குரியது.

கூட்டுறவு நிறுவனங்கள் சேவைத் தன்மையுடையன. அதே நேரத்தில் இலாபத் தன்மையுடனும் இயங்க வேண்டியவை. தமது செயற்பாடுகளில் உள்ள சேவைத் தன்மையின் அளவையும் இலாபத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மையின் அளவையும் அந்நிறுவனங்களே தமக்குள் நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் நிலைபெறவும், தொடர்ந்து இயங்கவும், சேவைகளை மேலும் அதிகரிக்கவும், சேவைகளின் விளை திறனை அதிகரிக்கவும், ஏனைய அமைப்புக்களின் போட்டியை ஈடு செய்யவும் இலாபத் தன்மையைப் பேண வேண்டிய நிலையிலே கூட்டுறவு நிறுவனங்கள் உள்ளன. சேவைத்தன்மை, இலாபத்தன்மை இரண்டும் மாறுபட்ட நோக்குடையன. காலம், சூழ்நிலை, தேவை இவற்றைக் கருத்திற் கொண்டே உறுப்பினர்கள் இவற்றின் அளவினைத் தீர்மானித்தல் வேண்டும்.

' ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாட்டு விளைவாக எழும் பொருளாதாரப் பயன்கள் சங்க உறுப்பினர்களுக்கே உரித்தானவை. அப் பயன்களைப் பகிர்ந்தளிக்கும் போது ஒருவருக்குச் சாதகமாகவும் இன்னொருவருக்குப் பாதகமாகவும் அமையக்கூடாது. உறுப்பினர்களின் தீர்மானத்திற்கேற்ப இப் பகிர்ந்தளிப்பு பின்வருமாறு செய்யப்படலாம்.

(i) சங்கத்தின் வியாபார விருத்திக்காக ஒதுக்கீடு செய்தல்.

(ii) பொதுச் சேவைகளை வழங்குவதற்கு ஏற்பாடு செய்தல்.

(iii) உறுப்பினர்கள் கூட்டுறவுச் சங்கத்துடன் வைத்துக் கொண்ட தொடர்புக்கு ( கொடுக்கல் - வாங்கல்கள் ) ஏற்ப அவர்களுக்கிடையில் பங்கிடல் ''

என அனைத்துலகக் கூட்டுறவு இணைப்பு நிறுவனக் கொள்கை வரையறைக் குழு விதிகள் கூறுகின்றன. பங்கு முதலுக்கு வரையறுத்த வட்டி வீதம், மேலதிகத்தின் சமத்துவ (கொள்ளல் கொடுத்தலுக் கேற்ப) பங்கீடு ஆகிய எண்ணக்கருக்கள் மனிதன் தனது உழைப்பின் பயன்களை அனுபவிக்க உரிமையுள்ளவன் என்பதை ஏற்றுக் கொள்வதோடு மற்றவனின் உரிமை, உழைப்பு, சொத்து, தேவை என்பவை சுரண்டப்படாது இருக்கவும் வேண்டும் என்பதை உள்ளடக்கியுள்ளன. இம் மூன்று ஒதுக்கீடுகளில் இலாபத்தை எதெதற்கு ஒதுக்க வேண்டும். எவ்வளவு ஒதுக்க வேண்டும், எதெதற்கு ஒதுக்கத் தேவையில்லை என்பவற்றைத் தீர்மானிக்கும் உரிமை உறுப்பினர்களுக்கேயுரியது.

மேலதிகத்தைச் சங்கத்தின் விருத்திக்காக ஒதுக்கீடு செய்தல் அவசியமானது. வணிக நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் நிதித் தேவை மிக முக்கியமானது. நிதித் தேவையை நிறைவேற்றும் மூலங்களில் ஒன்றாக மேலதிகத்தை ஒதுக்கீடு செய்வதைப் பயன் படுத்தலாம். தொடர்ந்தியங்குந் தன்மையை உறுதிப்படுத்தவும் எதிர் கால எதிர்பாராத விளைவுகளைச் சமாளிக்கவும் நிதி அவசியம். இத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைகளுக்காக மேலதிகத்திலிருந்து ஒரு பகுதி ஒதுக்கீடு செய்தல் அவசியம். இதை உறுப்பினர்கள் கருத்திற்கொண்டு மேலதிகத்தில் எவ்வளவு தொகையை ஒதுக்க வேண்டுமெனத் தீர்மானித்தல் வேண் டும். ஆயினும் இலங்கைக் கூட்டுறவுச் சட்டம் இத் தேவைக்காக இலாபத்தில் 25 வீதம் ஒதுக்கிய பின்னரே ஏனைய தேவைகளுக்கு ஒதுக்கீடு செய்யலாம் என விதித்துள்வது.

பொதுச் சேவைகளுக்கு மேலதிகத்தை வழங்குதல். இதுவும் உறுப்பினர்களின் விருப்பப்படியே ஒதுக்கீடு செய்தல் வேண்டும். உறுப் பினர்களுக்குரியதான மேலதிகத்தில் எவ்வளவு தொகையை தமக்கும் உறுப்பினரல்லாத பிறருக்கும் நன்மை பயக்கக்கூடிய பொதுச் சேவை களுக்குப் பயன்படுத்த வேண்டுமென்பதை முடிவு செய்வது உறுப் பினர்களின் சுய விருப்பத்தைப் பொறுத்ததாகும். ஒருவன் தானீட்டும் வருமானத்திலிருந்து பொதுச் சேவைகளுக்குத் தன் விருப்பப்படி கொடுப்பது போலவே கூட்டுறவுச் சங்கமும் பொதுச் சேவைக்கு மேலதிகத்திலிருந்து ஒரு தொகையை வழங்கலாம். இப் பொதுச் சேவையையும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று கூட்டுறவு சம்பந்தமானது. மற்றது ஏனையவரது நலம் சம்பந்தமானவை.

சங்கத்தின் உறுப்பினர்கள், முகாமை, பணியாளர்கள், உறுப் பினரல்லாத பொதுமக்கள் ஆகியோருக்குக் கூட்டுறவுக் கொள்கை, செயற்பாடு ஆகியவை பற்றிய கல்வி புகட்டல் கூட்டுறவு சம்பந்த மான பொதுச் சேவையாகும். உறுப்பினருக்கும் உறுப்பினரல்லாதோ ருக்கும் உதவக்கூடிய வகையில் கல்வி, சுகாதாரம், போக்கு வரத் துப் பாதை, கலாசாரத் தேவைகள் போன்றவற்றில் செலவிடப்படு வது ஏனைய பொதுச் சேவைகளைச் சாரும். ஒரு பிரதேசத்தில் வாழும் மக்கள் அனைவரும் அல்லது மிகப் பெரும்பாலோர் கூட்டுறவுச் சங்கத் தில் உறுப்புரிமை பெற்றிருப்பின் மேலதிகத்தில் பொதுச் சேவைக் கென ஒதுக்குந் தொகை அதிகரிக்க வாய்ப்புண்டு. அப்போது அதிக மாக ஒதுக்குவது நியாயத் தன்மை நிறைந்ததாகவும் இருக்கும்.

உறுப்பினர்களாகப் பெரும்பாலோர் சேராதுவிடினும் கூட்டுறவுச் சங்கம் ஈட்டும் மேலதிகத்தில் தன் விருப்பார்ந்த நிலையிலன்றி. நியாய எண்ணத்துடன் ஒரு பகுதியைப் பொதுச் சேவைக்கென ஒதுக்குவது கூட்டுறவுக் கொள்கைகளுக்கு அமையத் தவிர்க்க முடியாதது. ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் கொடுக்கல் வாங்கல்களில் உறுப்பினரும் உறுப்பினரல்லாதோரும் பங்கு கொள்ளக் கூடும். எனவே உறுப்பின ரல்லாதோரின் கொடுக்கல் வாங்கல்களினாலும் மேலதிகம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. அம் மேலதிகத்தில் உறுப்பினர் உரிமை கொண் டாடுவது கூட்டுறவுத் தர்மமல்ல. எனவே உறுப்பினரல்லாதோருக் குரிய மேலதிகத்தை பொதுச் சேவைகளுக்கே வழங்குவது நியாயமும் அறமுஞ் சார்ந்த செயலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவைப் பற்றி மக்களிடையே நல்லெண்ணத்தை வளர்க்கவும் நன்மதிப்பைப் பெறவும் விளம்பர சாதனமாகவும் பொதுச் சேவைகளுக்கு நிதி ஒதுக்குவது அமையும் எல்லோரிடமுமிருந்து பெற்ற மேலதிகத்தை எல்லோருக்கும் பயன்படு வழிகளில் உபயோகித்தல் என்ற உயர் கொள்கையைக் கூட்டுறவுச் சங்கங்கள் முன்மாதிரியாகப் பின்பற்றி பொதுச் சேவைகளில் பங்குபற்றும் சமுதாய உணர்வை மக்களிடையே எழச் செய்ய வேண்டியதும் கூட்டுறவுச் சங்கங்களின் பெருங்கடமையாகும்.

சங்கத்தின் மேலதிகத்தை (இலாபம்) உறுப்பினர்கள் சங்கத்துடன் வைத்துக்கொண்ட உறவுக் (கொடுக்கல் - வாங்கல்கள்) கேற்ப அவர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கலாம்.

"கூட்டுறவு முயற்சியால் ஏற்படக்கூடிய நட்டங்களுக்கு உறுப்பினர்களே முகங் கொடுப்பதால் ஒரு கூட்டுறவுச் சங்கம் ஈட்டும் சேமிப்பில் (ஆதாயத்தில்) நியாயப்படி பங்கு கொள்வதற்கு உறுப்பினர்களுக்கே - வேறு யாருக்குமல்ல - உரிமையுண்டு. ஆனால் தமது சொந்தக் கொடுக்கல் வாங்கல்களால் உருவாகும் சேமிப்பில் (ஆதாயம்) தான் உறுப்பினருக்குப் பங்குண்டு. சங்கம் ஒழுங்காக வழங்கும் சேவைகளைப் பயன்படுத்தும் உறுப்பினர்களல்லாதோரின் கொடுக்கல் வாங்கல்கள் மூலம் உருவாகும் வருமானம் குறித்துச் சங்கம் கொள்கை தவறாது மிகக் கண்டிப்பாக நடத்தல் வேண்டும். உறுப்புரிமை கோருவதற்கு உறுப்பினரல்லாதோரைத் தூண்டும் வகையில் அவ்வருமானம் ஒதுக்கப்படாதுவிடின், பொதுநன்மை பயக்கக் கூடிய வகையில் அது ஒதுக்கப்படல் வேண்டும்; சங்க உறுப்பினர்களுக்கப்பாலுள்ள பரந்த சமுதாயத்தின் நன்மைக்காக இது ஒதுக்கப்படுதல் விரும்பத்தக்கது. எக் காரணம் கொண்டும் இவ்வருமானம் உறுப்பினர்களிடையே பங்கிடப்படும் சேமிப்போடு சேர்க்கப்படலாகாது.' அவ்வாறு அது சேர்க்கப்படுமாயின் கூட்டுறவு இயக்கம் கண்டிப்பாக ஒதுக்கி வைத்திருக்கும் சுரண்டல் ஆதாயத்தில் உறுப்பினர்கள் பங்கு கொள்வதாக அமையும்." என அனைத்துலகக் கூட்டுறவு இணைப்பு நிறுவனக் கொள்கை வரையறைக் குழு கூறியிருக்கின்றது.

எனவே கூட்டுறவுச் சங்கத்தில் ஏற்படும் மேலதிகம் (இலாபம்) உறுப்பினர் - உறுப்பினரல்லாதார் ஆகிய இரு சாராரின் கொடுக்கல் வாங்கல்களினால் ஏற்படுகிறது. உறுப்பினர் தாம் கொடுத்த மேலதிகத்தைத் திரும்பப் பெறுவது நியாயமும் அறமுமாகும். உறுப்பினரல்லாதோர் கொடுத்த மேலதிகத்தில் அவர்களுக்கு உரிமையில்லை. இதை ஒரு சிறு உதாரணத்தால் விளக்குவோம். ஒரு கூட்டுறவுச் சங்கம் 10 நீரிறைக்கும் இயந்திரங்களை ஒவ்வொன்றும் 3000 ரூபா வீதம் கொள்முதல் செய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 நீர் இறைக்கும் இயந்திரங்களின்

| | |
|---|---|
| கொள்விலை (10 × 3000) | 30,000 |
| கொள்முதல் செலவுகள் | 500 |
| விற்பனை விநியோகச் செலவுகள் | 300 |
| நிருவாக நிலைய நிதிச் செலவுகளின் இதன்பங்கு | 1,300 |
| | 32,000 |

3500 ரூபா வீதம் இயந்திரங்கள் விற்கப்பட்டன. அவற்றில் 7 இயந்திரங்கள் உறுப்பினர்களும் 3 இயந்திரங்கள் உறுப்பினரல்லாதோரும் கொள்முதல் செய்தனர். எனவே

| | |
|---|---|
| மொத்த விற்பனைத் தொகை (10 × 3500) | 35,000 |
| கொள்வனவும் செலவுகளும் | 32,000 |
| மேலதிகம் | 3,000 |
| 10 இயந்திரங்களின் மேலதிகம் | 3,000 |
| உறுப்பினர்களிடமிருந்து அறவிட்ட மேலதிகம் | $\left(\frac{3000 \times 7}{10}\right)$ = 2100 |
| உறுப்பினரல்லாதோரிடமிருந்து ,, | $\left(\frac{3000 \times 3}{10}\right)$ = 900 |

உறுப்பினர்கள் எழுவரும் தம்மிடமிருந்து அறவீடு செய்த மேலதிகத் தொகையை 2100 ரூபாவை ஆளுக்கு 300 ரூபா வீதம் திரும்பப் பெறுதல் நியாயமும் அறமுமாகும். உறுப்பினர்களல்லாதோரின் மேலதிக அறவீட்டில் உறுப்பினர்கள் பங்கு கோர முடியாது. எவரிடமிருந்து மேலதிகம் அறவிடப்பட்டதோ அவர்களுக்கே அம் மேலதிகம் போய்ச் சேர வழி செய்தல் என்ற கோட்பாடே இதுவாகும். இந்த எண்ணக்கருவை நூற்றுக்கு நூறு வீதம் சரியாக அமுல் நடத்துவது சிரமமான செயல். ஒவ்வொரு பொருளின் மேலதிக அறவீடுகள் ஒவ்வொன்றையும் தனித்தனி கணக்கீடு செய்வது கடினமான செயலாகும். எனவே குறித்த கால்ப் பகுதியின் கொள்வனவுத் தொகைகளிலிருந்து ஒரு சராசரி மேலதிக அறவீட்டுத் தொகையைக் கணிப்பதே செயற்படுத்தக் கூடிய முறையாகும்.

உறுப்பினர் அல்லாதவர்களின் மேலதிக அறவீட்டுத் தொகையை உறுப்பினர்கள் தமதாக்கிக் கொள்வது ஒருவகைச் சுரண்டல் தன்மை. இலாப நோக்கற்ற கூட்டுறவு உறுப்பினர்கள் இம் மேலதிகத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமை கோருவது கூட்டுறவாளர்களின் சுயதர்மத்துக்கு மாருனது. உறுப்பினர்கள் அல்லாதாரின் மேலதிகத்தை உறுப்பினர்கள் அல்லாதாருக்கே திருப்பி வழங்குவதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. ஏனெனில் மேலதிகத்தைப் பெறும் அதே நேரத்தில் இழப்புக்கள். நட்டவச்சங்கள் போன்ற பொறுப்புக்களைத் தாங்கும் நிபந்தனைக்குக் கட்டுப்படாதவர்கள். எனவே உறுப்பினராகாமலும் பொறுப்புக்களை ஏற்காமலும் மேலதிக அறவீடுகளைப் பெறும் வாய்ப்பு இருப்பின் பொதுமக்களிடம் உறுப்பினர்களாகச் சேர்ந்து பொறுப்பேற்கும் மனப்பான்மை குறைந்துவிடும். எனவே உறுப்பினரல்லாதோரின் மேலதிக அறவீட்டுத் தொகையை மூன்று வழிகளில் பயன்படுத்தலாம். அவையாவன:

(i) உறுப்பினரல்லாதோர் உறுப்பினராகச் சேருவதை ஊக்குவிக்கும் பொருட்டு ஒதுக்கி வைத்தல்.

(ii) உறுப்பினரல்லாத ஏனையோருக்கும் பயன்படும் பொதுச் சேவைகளுக்குப் பயன்படுத்தல்.

(iii) சங்கத்தின் வளர்ச்சிக்காக ஒதுக்கி வைத்தல்.

உறுப்பினரல்லாதோர் உறுப்பினராகச் சேருவதை ஊக்குவிக்கும் பொருட்டு அவர்களின் மேலதிக அறவீட்டுத் தொகையை ஒதுக்கி வைத்தல் நீதியானதும் செம்மையானதுமாக இருக்கும். உறுப்பினர்களல்லாதோர் உறுப்புரிமைக்கு விண்ணப்பித்து அதற்குரிய இழிவுப் பங்கு முதலைக் கொள்முதல் செய்யின் அவர்களுக்கு மேலதிகப் பங்கு முதல் தொகையாக மேலதிக அறவீட்டுத் தொகையை மாற்றலாம்; அல்லது இழிவுப் பங்குமுதல் கொள்வனவுக்கு ஒரு பகுதியாக வேண்டுமானாலும் மாற்றஞ் செய்யலாம். இவ்வித நடைமுறை சாத்தியப்படாதுவிடின் உறுப்பினரல்லாதோருக்குப் பயன் விளைக்கக்கூடிய பொதுச் சேவைகளுக்குப் பயன்படுத்தக்கூடிய மேலதிகத் தொகையில்லாதுவிடினும் பொதுச் சேவைகளைக் கருத்திற் கொள்ளக்கூடிய அளவுக்கு சங்கம் வளர்ச்சியுருத நிலையிலும் இம் மேலதிக அறவீட்டுத் தொகையை சங்க விருத்திக்காக ஒதுக்கீடு செய்வது தவிர்க்க முடியாததாகின்றது.

## 5. கூட்டுறவுக் கல்வி

கூட்டுறவு இயக்கத்தின் பொருளாதார ஜனநாயகக் கொள்கைகளையும் நடைமுறைகளையும் பற்றித் தமது உறுப்பினர்களுக்கும் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களும் கல்வி புகட்டுவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்" என்று அனைத்துலகக் கூட்டுறவு இணைப்பு நிறுவனக் கொள்கை வரையறைக்குழு கூறியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கை வரையறைக்குழு கூட்டுறவுக் கல்விக் கொள்கைக்கு பெருமளவு முக்கியத்துவம் அளித்துள்ளது. கூட்டுறவின் ஏனைய கொள்கைகள் செம்மையாகவும் சரியாகவும் செயலுருவாக கல்விக் கொள்கை சீரிய முறையில் செயற்படுத்தப்பட வேண்டும். கூட்டுறவின் உயர் இலட்சியங்களை மக்களிடையே பரவச் செய்து அதன் பயன்களை மக்கள் அடைவதற்கு பிரசாரஞ் செய்ய வேண்டிய கடப்பாடு கூட்டுறவு இயக்கங்களையே சார்ந்தது. கூட்டுறவுக் கொள்கைகள் ஏட்டு வேதாந்தமல்ல. வாழ்வில் கடைப்பிடித்து வாழ்வையே உயர்த்தும் புனிதமான செயற்பாட்டுத் தன்மை கொண்ட தத்துவங்கள் வெறும் சூத்திரங்களோ வாய்பாடுகளோ விதிமுறைகள் மட்டுமோ அல்லக் கூட்டுறவுக் கொள்கைகள். கடந்த காலத்தில் ஓரளவு கடைப்பிடிக்கப்பட்டு பயனடைந்த கொள்கைகள். நிகழ் காலத்தில் கடைப்பிடிக்கப்படுவன. எதிர்காலத்தில் வலுமிக்கதாகவும் அதிகப்பயன்பாடு கொண்டதாகவும் கடைப்பிடிக்கப்பட வேண்டியவை. கூட்டுறவின் அமரத்துவமான ஜீவத்தன்மை இக் கொள்கைகளிலேயே தங்கியுள்ளது. ஒவ்வொரு தலைமுறையும் இக் கொள்கைகளை உயிரோட்டமுள்ளதாகக் காலத்திற்கமையப் புதுப்பித்துப் புது வாழ்வு அளிக்க வேண்டும். இவ்வித புது வாழ்வுத் தன்மை அளிப்பது கூட்டுறவுக் கல்வியிலேயே தங்கியுள்ளது. கூட்டுறவுக் கொள்கைகள் மனித சமுதாயத்திற்கு ஒளிமயமான தீபமாக தொடர்ந்து வழிகாட்டிக் கொண்டிருப்பதற்கு நெய் போல உதவிக் கொண்டிருப்பது கூட்டுறவுக் கல்வியே.

அனைத்துலகக் கூட்டுறவு இணைப்பு நிறுவனக் கொள்கை வரையறைக் குழு கல்வி பெற வேண்டியவர்களை நான்கு வகையினராகப் பிரித்துள்ளது. அவர்கள் முறையே

1. உறுப்பினர்கள் 2. பதவி வகிப்போர்
3. பணியாளர் 4. பொதுமக்கள்

என்பவர்களாகும்.

உறுப்பினர் கல்வி மிக முக்கியமானது. சாதாரண பொதுக்கல்வி பெறாத மனிதர்கள் இன்றைய சமுதாய அமைப்பில் பூரண அங்கத்துவம் வகிக்க முடியாத நிலையிலேயே இருப்பார்கள். உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் சாதாரண பொதுக்கல்வி பெற்றிருத்தல் அவசியம். இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து ரொச்டேல் சமத்துவ முன்னோடிகள் அங்கத்தவர்களின் சாதாரண கல்விக்காகப் பெரு முயற்சியும் பணமும் செலவிட்டுப் பொதுக் கல்வியை வளர்த்தனர். கூட்டுறவுக் கொள்கைகள் பற்றியும் அதன் இலட்சியம் பற்றியும் ஐயந்திரிபற்ற தெளிவான அறிவு உறுப்பினர்கள் பெற்றிருத்தல் வேண்டும். உயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரங் கொண்டவர்கள் உறுப்பினர்கள். சங்கத்தைப் பாதிக்கக் கூடிய தீர்மானங்களை எடுப்பதில் கலந்து தமது கருத்துக்களையும் தெரிவித்து வாக்களிப்பில் கலந்து கொள்ள வேண்டியவர்கள். ஒவ்வொரு தீர்மானமும் கூட்டுறவு இலட்சியத்திற்கும் கூட்டுறவுக் கொள்கைகளுக்கும் அமைவாக அல்லது முரண்பாடில்லாமல் இருப்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டிய பொறுப்புள்ளவர்கள். எனவே உறுப்பினர்கள் கூட்டுறவின் இலட்சியம் கொள்கைகள் பற்றிய தெளிவான அறிவு பெற்றிருத்தல் அவசியம். தாம் உறுப்புரிமை பெற்றிருக்கும் சங்கத்தின் நோக்கம், செயற்பாடுகள், பொருளாதார சமூகச் சூழல் பற்றியும் நன்குணர்ந்திருத்தல் அவசியம். பதவி வகிப்போர் காட்டும் வழிகாட்டல்களும் செயன் முறைகளும் கூட்டுறவு இலட்சியம் கொள்கைகள் என்பவற்றிற்கமைவாகவும், சங்கத்திற்கும் உறுப்பினருக்கும் நன்மை பயப்பனவாகவும் இருக்கின்றனவா என்பதை ஆய்ந்து தீர்மானிக்கக் கூடிய வகையில் பொது அறிவும் கூட்டுறவு அறிவும் உறுப்பினர் பெற்றிருத்தல் அவசியம். பணியாளர்களைப் பதவி வகிப்போர் சரியான வழிகாட்டிக் கூட்டுறவு இலட்சியம், கொள்கைகள் என்பவற்றிலிருந்து வழுவாது திறம்படச் சங்கத்தின் செயற்பாடுகள் நிகழச் செய்கின்றார்களா என்பதை அவதானிக்கக் கூடிய அறிவு இருத்தல் அவசியம். எனவே உறுப்பினர்களின் கல்வி அறிவு மிக மிக முக்கியமானதாகும்.

பதவி வகிப்போர் என்பது முகாமையைக் குறிக்கும். உறுப்பினர்களால் தெரிவு செய்யப்படும் அல்லது நியமிக்கப்படும் முகாமைக் குழுவையும், முகாமைக் குழுவால் நியமிக்கப்படும் முகாமைப் பணியாளர்களையும் அல்லது தொழில் நுட்பப் பணியாளர்களையும் உள்ளடக்கும். பதவி வகிப்போர் தமது பதவிக்குரிய செய்கடமைகளை கூட்டுறவு இலட்சியம் கொள்கைகளுக்குகிணங்க ஆற்றுவதற்கு கூட்டுறவுக் கல்வி அவசியம். அத்துடன் சங்கத்தின் விசேட தொழிற்பாடுகள் பற்றிய தொழில் நுட்ப அறிவும், நடைமுறைச் செயல்களின் பிரச்சனைகள் பற்றிய அறிவும், பொருளாதார சமுதாயச் சூழல்கள் பற்றிய அறிவும் இருந்தாற்றான் தீர்மானங்கள் செயற்பாடுகள் பற்றி வழிகாட்டவும், தீர்மானங்களின் செயற்பாடுகளை மதிப்பீடு செய்யவும் முடியும். சமுதாய பொருளாதாரச் சூழல்களினால் கூட்டுறவுச் சங்க முயற்சிகளில் ஏற்படும் பாதிப்புகளை உணர்ந்து அதற்கேற்ப செயற்பட பதவி வகிப்போர் தொடர் கல்விமுறையைப் பின்பற்ற வேண்டும். அப்போதுதான் பதவி வகிப்போர் சிறந்த வழிகாட்டிகளாகவும் நிருவாகிகளாகவும் விளங்க முடியும்.

பணியாளர்கள் முகாமையின் வழிகாட்டலையும் அறிவுறுத்தல்களையும் சரியான முறையில் உணர்ந்து தீர்மானங்களின் செயற்பாடுகளின் அன்றாட நடைமுறை வேலைகளில் ஈடுபட வேண்டியவர்களா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர், நடைமுறை வேலைகளைக் கருத்துணர்வோடு செய்வதற்குக் கூட்டுறவுக் கல்வி அவர்களுக்கு அவசியம். அத்துடன் தமது தொழில் துறையில் வினைத்திறன் பெறவும் கூட்டுறவுக் கொள்கைகளுக்கேற்ற தாக அமையவும், தொழில் நுட்பத் துறையில் காலத்துக்கேற்ற மாற்றங்கள் ஏற்படுவதை அறிந்து அவற்றில் பயிற்சியும் வினைத் திறனுமடையப் பணியாளர்கள் தொடர் கல்வி முறையைப் பின்பற்று தல் அவசியமாகும். ஒரு சங்கத்தின் பொது முயற்சியின் சேவையின் அளவும் வினைத்திறனும் நடைமுறைச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருக் கும் பணியாளர்களின் அறிவு, திறன், ஆர்வம், தொழில் நுட்பப் பயிற்சி என்பவற்றிலேயே பெருமளவு தங்கியிருப்பதால் இவற்றின் விருத்திக்கேற்ற கல்வி பணியாளர்களுக்கிருத்தல் அவசியம்.

ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கங்களும் பொதுமக்களுக்குக் கூட்டுற வுக் கல்வியைப் பிரசார மூலம் அளிக்கக் கடமைப்பட்டுள்ளன பொதுமக்கள் உறுப்பினராகச் சேருவதைத் தூண்டுவதற்காகவும், எதிர்ச் சக்தியின் துர்ப்பிரசாரத்தை முறியடித்து பொதுமக்களிடையே கூட்டுறவு பற்றிய உண்மைக் கருத்துக்களையும் உயர்ந்த இலட்சியத் தையும் கொள்கைகளையும் பரப்பி பொதுமக்களின் நல்லெண்ணம், நன்மதிப்பு, ஒத்துழைப்பு மனப்பான்மை என்பவற்றை ஏற்படுத்து வதற்காகவும், கூட்டுறவுச் செயற்பாடுகளுக்குப் போதிய விளம்பரம் கொடுப்பதற்காகவும் பொதுமக்களுக்குக் கூட்டுறவுக் கல்வி அளித்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் பலவிதத் தடைச் சக்திகளை எதிர்த்து முன்னேற வேண்டியுள்ளது. அந்த முன்னேற்றம் சிறப்பாக உறுப்பினர்களுக்கும் பொதுவாக முழுச் சமுதாயத்திற்கும் நன்மை விளைவிக்கின்றன. பொதுமக்களுக்கு கூட்டுறவு இயக்கத்தின் தடைச் சக்திகள் எவை என்பதைப்பற்றி இனங்கண்டு கொள்ளவும், இவ்வித தடைச்சக்திகளை எதிர்த்து முன்னேறுவதால் ஏற்படக்கூடிய உறுப் பினரின் சிறப்பு நயங்கள் எவை என்பதைப்பற்றி அறிந்து கொள்ள வும், முழுச் சமூதாயத்துக்கும் ஏற்படக் கூடிய நயங்கள் எவை என் பதைத் தெரிந்து கொள்ளவும் பிரசார முறைக் கல்வி அவசியமாகும். பிரசாரக் கல்வியின் அளவுக்கும் சக்திக்குமேற்பவே எதிர்காலத்தில் கூட்டுறவு இயக்கம் வளர்ச்சியும் விருத்தியுமுறும்.

## 6. கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே கூட்டுறவு

" தங்கள் உறுப்பினர்களினதும் சமூகங்களினதும் நலவுரிமைகளை மிகச் சிறந்த முறையில் பேணும் பொருட்டு, சகல கூட்டுறவு நிறு வனங்களும் உள்ளூர், தேசிய, அனைத்துலக அடிப்படையில் நடை முறைக்குகந்த எல்லா வழிகளிலும் ஒன்றுடன் ஒன்று ஒத்துழைத்தல் அவசியம். கூட்டுறவாளர்களின் உலகளாவிய செயல் ஒற்றுமையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைச் சாதனையாக்குவதே இவர்களின் குறிக்கோளாக இருத்தல் வேண்டும்'' என அனைத்துலகக் கூட்டுறவு இணைப்பு நிறுவன விதிகள் கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே கூட்டுறவு என்பது பற்றிக் கூறுகின்றன.

"கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே கூட்டுறவு" என்னும் கொள்கையின் நோக்கம் சங்க உறுப்பினர்களதும், உறுப்பினர்கள் சார்ந்திருக்கும் சமூகங்களினதும் நலன்களை மிகச் சிறந்த முறையில் பேணுதலாகும். இந்த உயர்ந்த நோக்கத்தை அடைவதற்குரிய செயற்பாட்டு முறை சகல கூட்டுறவு நிறுவனங்களும் உள்ளூர், தேசிய, அனைத்துலக அடிப்படையில் நடைமுறைக்குகந்த எல்லா வழிகளிலும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து ஒத்துழைத்தல் வேண்டும். விளைவு கூட்டுறவாளர்களின் உலகளாவிய செயல் ஒற்றுமையை நடைமுறைச் சாதனையாக்குதலாகும்.

கூட்டுறவு இயக்கம் எதிர்ச் சக்திகளுக்கிடையில் இருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்கு ஏற்படுத்திய தற்காப்பு முறையே இக் கொள்கையென விமர்சிக்கப்படக் கூடியதாக இருந்தாலும் இக் கொள்கையின் உண்மையான கருத்துணர்வு இதுவன்று. கூட்டுறவு இயக்கம் போட்டி, பொறாமை, சுரண்டல், ஆதாயம், துவேஷம் போன்ற தீயசக்திகளுக்கிடமளிக்காத அறவழி சார்ந்த புனித இயக்கம். இவ்வியக்கங்களைச் சார்ந்தவர்களிடையே இவ்வித தீயசக்திகளில்லாதிருப்பின் இயல்பாகவே ஒற்றுமை ஏற்படும். இயல்பாக எழக்கூடிய ஒற்றுமையை நிலைப்படுத்துவதே இக் கொள்கையாகும். உயர்ந்த இலட்சியப் பற்றினாலும் புனிதமான கொள்கையினாலும் இயல்பாக எழுகின்ற ஒற்றுமைப் பலம் தீய சக்திகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் கருவியாகவும் சில சந்தர்ப்பங்களில் பயன்படலாம்.

கூட்டுறவு இயக்கத்துக்கு பலம் பொருந்திய எதிர்ச் சக்திகள் உண்டு. கூட்டுறவு இயக்கத்தின் வெளிப்படையான எதிர்ச் சக்திகளும் உண்டு. மறைமுகமான எதிர்ச் சக்திகளும் உண்டு. மறைமுகமான எதிர்ச் சக்தியே கூட்டுறவு இயக்கத்திற்குப் பெருந் தொல்லை தரக் கூடியது. கூட்டுறவுக்கு ஆதரவுபோல் தம்மைக் காட்டி தக்க தருணங்களில் கூட்டுறவு இயக்கத்தை நசுக்கத் தொழிற்படுவன இந்தச் சக்திகள். இந்தச் சக்திகள் மீது மிகக் கவனமாக இருக்கவேண்டியது கூட்டுறவு இயக்கத்தின் பெரும் பொறுப்பாகும். இப் பொறுப்பைத் தனித்துச் சிறு சங்கங்களால் நிறைவேற்றுவது கடினம். சங்கங்களின் ஒன்றுபட்ட பலமே இத்தகைய சூழ்ச்சிகளை முறியடிக்க முடியும்.

இதற்காக உள்ளூர்ச் சங்கங்கள் ஒன்றுகூடி ஒன்றுக்கொன்று உதவல் வேண்டும். உள்ளூர் மட்டத்தில் மட்டுமன்றித் தேசிய மட்டத்திலும் அனைத்துலக ரீதியிலும் இவ்வித உதவிகள் பெற வாய்ப்பிருத்தல் வேண்டும். மக்களுக்குப் பணிபுரிவதற்காக உருவாகிய கூட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றவுச் சங்கங்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று உதவியாகவும் ஒற்றுமையாகவும் இருத்தல் வேண்டும். நிதி வசதிகள் குறைந்தவர்களால் உருவாக்கப்படுவதே பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்கள். நிதித் தேவையின் பொருட்டு வெளியாரின் உதவியைப் பெற்று வெளிக் கட்டுப்பாடுகளினால் சுயாட்சித் தன்மையும் கூட்டுறவுக் கொள்கைகளின் உயர்ந்த இலட்சியத் தன்மையும் சீரழிந்து விடாமல் பாதுகாப்பதற்காக நிதி வசதிமிக்க சங்கங்கள் குறைந்த வசதியுடைய சங்கங்களுக்கு நிதி உதவி (கடனாக) அளிக்கும் நிலை உருவாக வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே எந்த வகையிலும் போட்டி மனப்பான்மை இராமல் எல்லாச் சங்கங்களும் வளரவேண்டும் என்ற பரந்த மனப்பான்மை இருத்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களிடையே "எல்லோருக்குமாக ஒருவரும், ஒருவருக்காக எல்லோரும் ஒன்றுசேர்ந்து உழைத்தல்" என்ற இலட்சிய நோக்குக் கடைப்பிடிக்கப்படுவது போல கூட்டுறவுச் சங்கங்களும் "எல்லாம் ஒவ்வொன்றுக்காகவும் ஒவ்வொன்றும் எல்லாவற்றுக்குமாகவும் ஒன்று சேர்ந்து உழைக்குந் தன்மை"யை உருவாக்குதல் வேண்டும். இவ்வாறு செயற்படின் மறைமுகத் தடைச் சக்திகளின் பலம் குறைந்து விடும்.

முதலாளித்துவத்தைப் பேணும் பத்திரிகைகளும் அரசியல்வாதிகளும் கூட்டுறவு இயக்கத்திற்கு மறைமுகமாகத் தடைச் சக்திகளாக உள்ளன. கூட்டுறவு இயக்கத்தில் ஏற்படும் நல்விளைவுகளுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்திலும் பார்க்க அன்றாடக் கருமங்களில் ஏற்படும் சிறு தவறுகளுக்கே பெரும்பாலான பத்திரிகைகளும் சில அரசியல்வாதிகளும் முக்கியத்துவம் கொடுக்கின்றன. கூட்டுறவு இயக்கம் நிலைபெறும்போது முதலாளித்துவ அம்சங்கள் மறைந்துவிடும் என்ற அச்சத்தினாலேயே முதலாளித்துவ பத்திரிகைகள் எதிர்க்கின்றன. பொதுமக்களை எட்டுவதற்குக் கூட்டுறவு நிறுவனங்கள் சிறந்த சாதனமாக அமைந்திருப்பதால், தமது நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு கூட்டுறவு நிறுவனங்களைத் தமக்குரிய சாதனமாக்கிக் கூட்டுறவுக் கொள்கைகளைச் சிதைக்க முயல்கின்றனர் சிலர். கூட்டுறவுத் தலைவர்கள் தமது எதிர்ச்சக்திகளாக மாறிவிடுவார்களோ என்ற அச்சமும் அரசியல்வாதிகளைக் கூட்டுறவில் தலையிடச் செய்கின்றன. அரசியல்வாதிகள் கூட்டுறவு நோக்கங்களை வளர்க்க உதவுஞ் செயல்களை ஆதரிப்பதும், கூட்டுறவுக் கொள்கைகளை மாற்றித் தமது நோக்கங்களைக் கூட்டுறவில் புகுத்துவதைத் தடுப்பதுவும் கூட்டுறவு இணைப்புக்களின் தலையாய கடமையாகும்.

பெரிய வணிக நிறுவனங்கள் கூட்டுறவு இயக்கத்திற்கு வெளிப்படையான தடைச் சக்தியாகும். இந்நிறுவனங்களின் பலமும் திறனும் தந்திரமுறைத் தேர்ச்சியும் கடும் போட்டியாக அமைந்துள்ளன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றின் எதிர்ப்பை ஈடு செய்யும் சக்தியைப் பெறுவதானால் கூட்டுறவு இயக்கங்களின் ஒன்று சேர்ந்த ஒற்றுமைப் பலத்தினாலேயே முடியும். வணிகப் பலத்திற்கு ஆதாரமாக ஸ்கன்டனேவிய மொத்த வியாபாரக் கூட்டுறவுச் சங்கம், சர்வதேச கூட்டுறவு எரிபொருள் கழகம் போன்ற நிறுவனங்கள் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும். எனவே கூட்டுறவு இணைப்பு நிறுவனங்கள் ஏனைய வணிக நிறுவனங்களோடு தலைநிமிர்ந்து நின்று வணிகத் தொழில் புரியும் ஆற்றல் படைத்தன.

கூட்டுறவு நிறுவனங்கள், இயல்பாகவும், கொள்கை ரீதியாகவும், தற்காப்பு முறைக்காகவும் எதிர்ச் சக்திகளின் ஊடுருவல்களைக் களைவதற்காகவும், பலம் பெறுவதற்காகவும், எதிர்ச் சக்திகளின் போட்டிகளைத் தவிர்ப்பதற்காகவும், விருத்தி வளர்ச்சி என்பவற்றின் பொருட்டும் உள்ளூர், தேசிய, அனைத்துலக அடிப்படையில் சாத்தியமான வழிகளில் எல்லாம் இணைதல் அவசியம். அப்போதுதான் கூட்டுறவின் புனிதமான உயர் இலட்சியங்களை விரைவில் மனித சமுதாயம் அடைய வழிபிறக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. கூட்டுறவுச் சட்டங்கள்

ஜனநாயக நாடுகளிலும் சர்வாதிகார நாடுகளிலும் பொதுவுடமையைப் பேணும் நாடுகளிலும் அரசின் அதிகாரச் சின்னமாக விளங்குவன சட்டங்களே. அச் சட்டங்கள் ஒழுங்கு, நீதி, அறம், கட்டுப்பாடு, சமத்துவம், அமைதி என்பவற்றைப் பேணிக் காக்க எழுந்தனவாயினும் அரசின் இறைமைத் தன்மையை வெளிப்படுத்தும் சின்னமாகவும் விளங்குகின்றன. சட்டங்கள் இறைமையின் உச்சநிலையில் இருந்து உருவாகுவதால்தான் அது உயர் சக்திமிக்க அதிகாரத் தன்மை கொண்டவையாக அமையும். எனவே ஜனநாயக அமைப்புள்ள நாடுகளில் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட தேசிய உயர் சபை (பாராளுமன்றம்) களால் ஆக்கப்படும் சட்டங்களே நாட்டின் உயர் சட்டமாகவும் அதிகாரத் தத்துவம் மிக்கதாகவும் விளங்குகின்றன.

கூட்டுறவு பற்றி அரசு சட்டம் இயற்றினுல் கூட்டுறவை ஒழுங்குபடுத்தல், பாதுகாத்தல், உரிமைகளை அளித்தல் என்பவற்றுடன் மட்டுமல்லாது கட்டுப்படுத்தவும் அதுற்குமப்பாற்பட்ட பிற அதிகாரங்களும் தமக்குண்டு என்பதை அரசு மறைமுகமாக வெளிப்படுத்திக் கொள்கின்றது என்ற கருத்துடையோரும் இருக்கின்றனர். எனவே கூட்டுறவுக்கென விசேட சட்டங்கள் அரசால் இயற்றப்படாமல் நாட்டின் பொதுச் சட்டங்களுக்கமைவாக கூட்டுறவுச் சங்கங்கள் இயங்க வேண்டும். சட்டங்கள் பொதுவாக விவாதத்திற்கும், விமர்சனங்களுக்குமுட்பட்டவை, இவ்விவாதங்கள் நீண்டு செல்லுந்தன்மையுடையன. இதனுல் கால தாமதங்களும், வீண் சிரமங்களும், அவசியமற்ற செலவீடுகளும் விவாதங்களும் ஏற்பட வாய்ப்பை ஏற்படுத்துகின்றன. எனவே சட்டங்களின்றிக் கூட்டுறவுச் சங்கங்கள் செயற்பட்டால் தான் கூட்டுறவின் புனிதத்தன்மையும் உயர்லட்சியமுங் கொண்ட சமுதாய அமைப்பு ஏற்பட வழிதோன்றும். இதற்காதாரமாகச் சில நாடுகளின் கூட்டுறவு இயக்க அமைப்பைக் காட்டுவார்கள்.

டென்மார்க்கில் கூட்டுறவுச் சங்கங்களுக்கென விசேட சட்டம் எதுவுமில்லை. நியூசிலாந்திலும் இவ்வித கூட்டுறவுச் சட்டங்களில்லை. ஆயினும் இவ்விரு நாடுகளிலும் கூட்டுறவு இயக்கம் மேம்பட்டுத்தான் விளங்குகிறது. டென்மார்க்கில் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டங்களால் உருவாக்கப்படவில்லை. கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது அங்கத்தவர்களுக்கிடையே ஏதாவது பிணக்குகள் தோன்றி ஞல் அவை வழக்கமாகச் சட்ட முறைப்படி அமையாத நடுவர் தீர்ப் புக்கே விடப்படுகின்றன. மிக அருமையாக இத்தகைய பிணக்குகள் நீதிமன்றங்களுக்குச் செல்வதுமுண்டு. அவற்றிற்கு வழங்கப்படும் தீர்ப்புக்கள் தீர்ப்பு வழிச் சட்டத் தொகுப்பில் இடம்பெறும். நியூசிலாந் தில் கூட்டுறவுச் சங்கங்கள் கம்பனிச் சட்டத்தின் கீழேயே பதிவு செய்யப்படுகின்றன நெதர்லாண்டு, பிரான்சு, ஸ்பெயின், சுவீடன் போன்ற நாடுகள் அண்மைக்காலம் வரை இம்முறையையே பின்பற் றின. சட்டத்திற்கப்பால் நின்றும் நீதி, அறம், ஒழுங்கு, சமத்துவம் என்பவற்றைப் பேணும் சக்தி கொண்டது. கூட்டுறவு என்பதற்கு மேற் கூறிய நாடுகளின் கூட்டுறவு முறை எடுத்துக்காட்டாகும். இலட்சிய நோக்குடையோர் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ள போதிலும் பெரும்பாலான நாடுகளில் கூட்டுறவுச் சட்டங்கள் ஆக்கப் பட்டுள்ளன. கூட்டுறவின் வளர்ச்சித் தேவைக்கேற்ப அவை காலத் திற்குக் காலம் மாற்றியமைக்கப்பட்டும் வந்துள்ளன.

கூட்டுறவுச் சட்டங்கள் எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பதைப் பற்றிப் பல்வேறு வகையான அபிப்பிராயங்கள் கூட்டுறவாளர்களி டையே இருக்கின்றன.

"கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுவதற்கும், அவை ஏனையவகை முயற்சிகளோடு சமமான முறையில் தொழிற்படும் உரிமையைப் பேணுவதற்கும் குறிப்பாகச் சட்டங்களியற்றப்பட வேண்டும். இத் தகைய சட்டங்கள் சங்கத்தை நிறுவுவதற்கும் பதிவதற்குமான ஏற் பாடுகளைக் கொண்டிருப்பதோடு, உபவிதிகள், உறுப்புரிமை நிபந்தனை கள், நிருவாக நடைமுறைகள், கூட்டுறவு என்னும் பதத்தினைப் பேணுதல், வெளியார் மூலம் கணக்குகளைப் பரிசோதனை செய்தல், சங்கங்களை வழிநடத்தல், சட்டங்களைச் செயற்படுத்தல், சங்கங்களைக் குலைத்தல் என்பவற்றிற்கான ஏற்பாடுகளையும் அடக்கியிருக்க வேண் டும். ஆனல் இவ்வேற்பாடுகள் கூட்டுறவாளரினதும் கூட்டுறவு நிறு வனங்களினதும் சுயாட்சித்தன்மை நிறைந்த சுதந்திரத்தை மறுப் பவையாக அமையக்கூடாது."

— அனைத்துலகக் கூட்டுறவு நிறுவன மகாநாடு

"கூட்டுறவுச் சங்கத்தின் கடமைகள், சலுகைகள், உறுப்பினர் உரிமைகள், பொறுப்புக்கள், சொத்துக்கள், நிதிகள், கணக்குப் பரி சோதனை மேற்பார்வை, கட்டுப்படுத்தல், கலைத்தல் போன்றவற் றிற்கான சட்டங்கள் நல்லெண்ணங் கொண்ட தத்துவ அறிஞர்களின் படைப்புக்களல்ல. கூட்டுறவாளர்கள் நீண்டகாலமாகக் கடினமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைத்து அனுபவ வாயிலாகப்பெற்ற படிப்பினைகளின் விளைவாகும். கூட்டுறவு இயக்கமூலம் பெறக்கூடிய பொருளாதார நன்மைகளைவிட அதன் மூலம் பெறக்கூடிய அறஞ்சார்ந்த நன்மைகள் பொது அக்கறையுடைய மக்கள் ஒன்றுகூடி ஒரே சட்டத்திற்கு (கூட்டுறவுச் சங்கச் சட்டத்திற்கு) க் கீழ்ப்படிவதன் மூலமே பெற முடியும்."

— துசறி, டிக்பி

"மக்களை முன்னேற்ற, வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, சுதந்திரத்தைப் பலப்படுத்த உள்ள ஒரு கருவி கூட்டுறவுச் சங்கங்கள் என்பதை உலகிலுள்ள எல்லா அரசாங்கங்களும் நன்குணர்ந்துள்ளன. எனவே மக்கள் எய்த விரும்பும் உயரிய இலட்சியங்களை அடைவதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உதவும் பொருட்டு அரசாங்கம் காவல் நாயாகவும், நடுவராகவும், ஒத்திசைவை ஏற்படுத்தும் நிறுவனமாகவும் இயைவு ஊக்கியாகவும் செயல்புரிய வேண்டும். வருமானத்தைத் திரட்டுவதல்ல இறுதி இலட்சியம். புறக்கணிக்கப்பட்ட பெரும்பாலான மக்களை ஒன்று திரட்டி நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் உண்மையான வலுவுள்ள சக்தியாக அவர்களை ஆக்குவதே நோக்கமாக இருத்தல் வேண்டும்."

— வால்டர்

"வெவ்வேறு நாடுகளின் கூட்டுறவுச் சட்டங்களிடையே அடிப்படை ஒற்றுமைகள் இருக்க வேண்டும். வெவ்வேறு நாடுகளின் பண்பாடுகளுக்கிடையே முக்கிய வேறுபாடுகளிருப்பது போல கூட்டுறவுச் சட்டங்களிடையேயும் முக்கிய வேறுபாடுகள் இருக்கும்."

— கலாநிதி வல்கோ

"இறுதியில் சட்டமல்ல சட்டத்திற்குப் பின்னால் நிற்பவனே கருத்திற் கொள்ளப்பட வேண்டியவன். கூட்டுறவுச் சட்டம் தேவையற்ற ஒன்றல்ல, பின்வருனவற்றுக்காகத் தேவைப்படுகின்றன:

(i) கூட்டுறவுச் சங்கங்கள் தமது கூட்டுறவுத் தன்மையைப் பேணுவதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய அடிப்படை நிபந்தனைகளை வரையறுத்தல்.

(ii) கம்பனிகளுக்கு வேண்டியது போன்ற நுட்பமான ஏற்பாடுகளின்றி சங்கங்களுக்கு ஒன்றிய சட்டத் தன்மை (சட்ட ஆளுமை) யை வழங்குதல்.

(iii) கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்படுவதனை ஊக்குவிப்பதற்கும், அவற்றின் தொழிற்பாடுகளுக்கு உதவு முகமாகவும், கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சிறப்புரிமைகளையும் வசதிகளையும் வழங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iv) வணிகச் சூதாடிகளும் முதலாளிகளும் இச் சிறப்புரிமைகளை அனுபவிப்பதைத் தடுப்பதற்கு முன்னேற்பாடுகளை எடுத்தல்.

(v) கூட்டுறவுச் சங்கங்கள் பூரணமாகவும் தடையின்றியும் இயங்க வழி வகுத்தல்.

(vi) ஆசியநாடுகள் போன்று கூட்டுறவு அபிவிருத்திக்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்குமிடத்து கூட்டுறவு இயக்கத்தை அரசு ஊக்குவிப்பதற்கும் வழிகாட்டுவதற்கும் ஒத்திசைவு ஏற்படுத்துவதற்கும் நடுவராகவும் காவலனாகவும் கடமையாற்றுவதற்கு வழி வகுத்தல்.

— இந்திய அரசாங்க கூட்டுறவுச் சட்டக்குழு 1957

கூட்டுறவுக் கொள்கைகளைப் பொறுத்த வரையில் அரசின் பங்கைப் பற்றிய சில கருத்துரைகள் மேலே தரப்பட்டன. இவற்றைக் கொண்டு கூட்டுறவுத் துறையில் அரசின் பங்கைப் பின்வரும் வகைகளில் பிரிக்கலாம்.

1. நடுநிலைக் கொள்கை அரசு கூட்டுறவு இயக்கத்திற்கு எதிர்ப்போ அல்லது ஆதரவோ அளிக்காத நிலையில் இருத்தல். கூட்டுறவு இயக்கம் தனது முயற்சியாலும் செயல்களினாலும் தானே இயங்குந் தன்மையைப் பெற்று வளர்ச்சியடைதல். அமெரிக்காவிலும் ஐரோப்பாவில் சில நாடுகளிலும் அரசு இக் கொள்கையைப் பின்பற்றுகின்றது.

2. உதவிக் கொள்கை கூட்டுறவியக்கத்தில் அதன் செயற்பாடுகளில் எவ்விதத்திலும் தலையிடாது அதற்கு சமுதாய நலன் கருதிக் காலத்திற்குக் காலம் அரசின் உதவி தேவைப்படும் போது மட்டும் கூட்டுறவு நிறுவனங்களால் கோரப்படும் உதவிகளைச் செய்தல்.

3. வளர்ச்சிக் கொள்கை தேசியப் பொருளாதார சமுதாய நலன்கள் வளர்ச்சியுற கூட்டுறவு இயக்கத்தின் கொள்கைகளும் செயற்பாடுகளும் சிறந்தன என்பதை உணர்ந்து அவற்றை மக்களிடையே பரப்பவும் வளர்க்கவும் அரசு முயற்சி எடுத்தல்.

4. முகவர் கொள்கை கூட்டுறவு இயக்கத்தின் சிறந்த கொள்கைகளையும் செயற்பாடுகளையும் நிலைக்களனாகக் கொண்டு அரசின் நோக்கங்களைச் செயற்படுத்தக் கூட்டுறவு இயக்கத்தை சிறந்த கருவியாகப் பயன்படுத்தல். அரசின் திட்டங்களைச் செயற்படுத்தும் அரசின் ஒரு கூறாகவே கூட்டுறவு இயக்கம் இவ்வித நிலையில் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த நாட்டிலும் கூட்டுறவு இயக்கம் பொதுச் சட்டத்திலோ அல்லது சிறப்புச் சட்டத்திலோ சில ஒழுங்கு விதிகளுக்குட்பட்டே யிருக்கும். கூட்டுறவுச் சட்டம் என்னும்போது கூட்டுறவு நிறுவனங்கள் மீது அரசின் கட்டுப்பாடு எனச் சுருக்கமாகக் கூறலாம். ஒரு நாட்டின் கூட்டுறவுச் சட்டத்தினால் கூட்டுறவு இயக்கத்திற்கு ஏற்படும் விளைவுகளை ஆராயும் பொழுது சில முக்கிய அம்சங்களைக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும். கூட்டுறவு இயக்கத்தில் அரசுக்கிருக்கும் அக்கறையின் தன்மை, கூட்டுறவு பற்றிய சாதாரண மக்களின் அறிவு, கூட்டுறவு பற்றிய மக்களுணர்வு, அரசின் கட்டுப்பாட்டிற்கான நியாயங்கள், உறுப்பினர்களின் அறிவு, ஆற்றல், தன்மை, உறுப்பினர்களின் கூட்டுறவு மனப்பான்மை, மக்களின் இயல்பான கலாச்சாரப் பண்பாட்டுத் தன்மை போன்றனவே அம் முக்கிய அம்சங்களாகும். எனவே இவற்றின் தன்மைக்கேற்ப நாட்டுக்கு நாடு கூட்டுறவுச் சட்டங்களில் சில மாற்றங்கள் இருப்பது தவிர்க்க முடியாதது. ஆனால் அவற்றின் அடிப்படைக் கொள்கைகளில் மாற்றங்கள் இருக்கமாட்டா. கூட்டுறவுக் கொள்கைகளை உட்செலுத்தும் வழிகளிலே மாற்றங்களல்லாது உட்செலுத்தும் பொருளிலல்ல.

கூட்டுறவு பற்றிய சட்டங்களை இயற்றும் வழிகளைப் பின்வருமாறு வகுக்கலாம். அவையாவன:

(i) வணிகச் சட்டங்களுள் கூட்டுறவுச் சட்டங்களையும் சேர்த்து தேசியசபை (பாராளுமன்றம்) சட்டமியற்றல்.

(ii) வணிக நிறுவனங்களிலிருந்து கூட்டுறவு தனித்தன்மை கொண்டதால் கூட்டுறவு பற்றிச் சிறு (சுருக்கமான) சட்டத்தைத் தேசியசபை (பாராளுமன்றம்) இயற்றல். விபரமான துணைச் சட்டத்தை இயற்றும் அதிகாரத்தைத் தேசியசபை (பாராளுமன்றம்) பொருத்தமான நிறுவனத்திடம் அல்லது நிருவாகியிடம் ஒப்படைத்தல்.

(iii) விரிவானதும் விளக்கமானதுமான நீண்ட கூட்டுறவுச் சட்டத்தையே தேசியசபை (பாராளுமன்றம்) இயற்றுதல்.

கூட்டுறவுச் சங்கங்களும் வணிக முயற்சிகளிலீடுபடுவதால் வணிக முயற்சிகளையடக்கும் பொதுச் சட்டமே போதும் எனச் சிலர் கருதுகின்றனர். அதனை மறுப்பவர்கள் வணிக நிறுவனங்களிலிருந்து கூட்டுறவு மாறுபட்டதென்பதையும் அதன் தனித்தன்மையைத் தெரிவிக்கவும் பேணவும் முதலாளித்துவத்திலிருந்தும், வணிகப் போட்டிகளிலிருந்தும் தம்மைக் காத்துக் கொள்ளவும் அரசின் சலுகைகளைப் பெறவும் கூட்டுறவுக்குத் தனிச் சட்டம் வேண்டுமென்று கூறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய சபையில் (பாராளுமன்றத்தில்) ஒரு சட்டம் நிறைவேறுவது சுலபமானதும் விரைவானதும் எளிதானதுமல்ல. அதற்குக் காலதாமதத்தை ஏற்படுத்தும் விதி முறைகளும், மரபுமுறைகளும் உண்டு. காலதாமதத்தை நீடித்துக்கொண்டு போகக்கூடிய சூழ்நிலைகளும் உண்டு. இயற்றப்பட்ட சட்டங்களில் திருத்தம் செய்வதென்றாலும் இத்தகைய கஷ்டங்கள் இருக்கத்தான் செய்யும். சட்டம் எவ்வளவுதான் நிறைவானதாகவும் குறைபாடற்றதாகவும் இருந்து பாரபட்சமின்றி, செயற்படுத்தப்பட்டாலும் அது செம்மையான கூட்டுறவுச் சங்கங்கள் உருவாதலுக்கு உத்தரவாதமல்ல. சூழ்நிலைக்கேற்ப மாற்றங்களும் திருத்தங்களும் விரைவிலும் இலகுவிலும் செய்யக்கூடிய நெகிழ்ச்சித்தன்மை நிறைந்த துணைச்சட்ட முறையாகிய இரண்டாவது முறையே உகந்தது எனக் கூறுவர் சிலர்,

துணைச் சட்டமுறையை எதிர்ப்போர், நிறுவனங்களதும் அதிகாரிகளதும் மாற்றங்களினால் அவர்களின் நோக்கு, விருப்பு வெறுப்பு என்பவற்றிற்கமைய விரைவில் மாற்றங்களைச் சட்டம் விதிகளில் ஏற்படுத்த முடியும். இதனால் உண்மை நோக்கு, அமைப்பு, செயற்பாடுகளில் அடிக்கடி மாற்றங்கள் ஏற்பட்டு நிலையான தன்மையும் ஒழுங்குத் தன்மையும் சீர்குலைவதற்கு வழிபிறக்குமெனக் கூறுவர்.

நீண்டதும் விரிவானதுமான சட்டங்கள் வரையறைக்கும், மேற்பார்வைக்கும், நிரந்தர ஒழுங்குத் தன்மைக்கும் வழிவகுப்பன வென்று அதனை ஆதரிப்போர் கூறுவர். துணைச் சட்டத்தின் நிறைகள் இதன் குறைகளென இதனை எதிர்ப்போர் கூறுவர்.

## கூட்டுறவுச் சட்டத்தின் அவசியத் தன்மை

கூட்டுறவு நிறுவனங்கள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாக விளங்குதல், ஒன்றிய தன்மை (சட்ட ஆளுமை) யைக் கூட்டுறவுச் சங்கங்கள் பெறல், கூட்டுறவுக் கொள்கைகள் சிதைவுறாது பாதுகாத்தல், அரசுக்கும் கூட்டுறவுக்குமுள்ள தொடர்புகளை வரையறுத்தல், அரசு அளிக்கும் சலுகைகள் உதவிகளை வரையறுத்தல், அரசின் அதிகாரத் தன்மையை வரையறுத்தல், பொதுச் சட்டங்களுடன் உள்ள சில முரண்பாடுகளைத் தவிர்க்க விசேட ஏற்பாடுகளைச் செய்தல், கூட்டுறவு என்னும் பதத்தைப் பேணிப் பாதுகாக்கும் உரிமை பெறல், இடையறு தொடர்ச்சி ஏற்படல், அறிவு குறைந்த சாதாரண உறுப்பினர்களின் நலன்களைப் பேணல், நிதிப் பிரயோகங்களைச் சரியான வழியில் பயன்படுத்துதல், வலுக் குறைந்த அங்கத்தவர்களின் சமத்துவத்தைப் பேணல், வீண் விரயங்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்ப்பிரயோகங்களையும் தவிர்த்தல், மேற்பார்வை எண்பார்வை போன்ற கடமைகளைச் செய்தல் போன்ற செயற்பாடுகளுக்காகக் கூட்டுறவுச் சட்டங்கள் அவசியமாகின்றன.

கூட்டுறவுச் சட்டம் கூட்டுறவு அபிவிருத்திக்கு மூலகாரணம். எனவே சட்டமும் அதன் செயல்முறைகளும் கூட்டுறவின் உண்மை நோக்கங்களையும் கொள்கைகளையும் உறுப்பினருக்களிக்க உதவவேண்டும். உதவிகளும் சலுகைகளும் மட்டும் பெறும் நிறுவனந்தான் கூட்டுறவு என்ற மனப்பான்மையை வளர்க்கும் வகையில் அமையக் கூடாது. அரசு கூட்டுறவு இயக்கத்தை ஆட்டிப் படைப்பவர் என்ற நிலையிலிருந்து மாறி வழிகாட்டியாகவும். நலத்தைப் பேணுபவராகவும் விளங்க வேண்டும். கூட்டுறவு அபிவிருத்தி தமது பொறுப்பு. வேறு யாருமல்ல என்ற நிலைக்கு உறுப்பினர்களின் நிலை உயர உயர கூட்டுறவில் சட்டத்தின் பங்கு அரசின் கட்டுப்பாடு குறைந்து விரைவில் இல்லாது போதல் வேண்டும். இந்த நிலையில் இருந்து மாறுபட்டு அரசின் கட்டுப்பாடுகளும் சட்டத்தின் இறுக்கமும் அதிகரித்துக்கொண்டு வந்தால் கூட்டுறவு வீழ்ச்சியடைந்து விரைவில் மறைந்துவிடும்.

எனவே கூட்டுறவுச் சட்டங்கள், உறுப்பினர்களின் சுயாட்சித் தன்மை நிறைந்த சுதந்திரத்தை நிலைநிறுத்துவனவாகவும் சங்கங்களின் தன்னுதிக்கம் நிறைந்த இறைமையைப் பேணிச் சுதந்திரமும் சுயாட்சித் தன்மையும் நிறைந்த நிறுவனங்களாக வளர்ந்து செயற்படுத்துவதற்குள்ள தடைகளை அகற்றுவனவாகவும், உண்மையான கூட்டுறவு இயக்கமாக வளர்ந்து நாட்டின் அபிவிருத்தியிலும் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதிலும் அரசுடன் சரி சமமான பங்காளியாக விளங்க வழிவகுப்பதாகவும் அமைதல் வேண்டும்.

## கூட்டுறவுச் சட்டத்தின் வரலாற்றுத் தன்மை

எந்தச் சட்டங்களும் அச் சட்டங்கள் தோன்றிய காலத்திலுள்ள அந்நாட்டின் பொருளாதார சமுதாய அரசியல் சூழ்நிலைகளையும் அச் சூழ்நிலைகள் பற்றி அரசு கொண்டிருந்த நோக்கையும் பிரதிபலிப்பனவாக இருக்கும். இவ்விதிக்குக் கூட்டுறவுச் சட்டங்கள் விதிவிலக்கானவையல்ல. 1852-ம் ஆண்டில் இங்கிலாந்தில் கூட்டுறவுச் சட்டம் உருவாக்கப்பட்டது. இச் சட்டம் உருவாக்க முன்பே றொச்டேல் சமத்துவ முன்னோடிகள் 1844-ல் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பித்து நடைமுறையில் இருந்த நட்புறவுச் சங்கச் சட்டத்தின் கீழ் பதிந்தனர். 1844-ம் ஆண்டுக்கு முன்பே றொபேர்ட் ஓவன் கூட்டுறவு சம்பந்தமாக எடுத்த முயற்சிகளுக்கு அரசின் ஆதரவு கிடைக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லே. இதற்கு முக்கிய காரணங்கள் பொருளாதார விடயங்களில் இங்கிலாந்து அரசின் தலையிடாக் கொள்கைச் செல்வர்கள், வணிகர்கள் ஆகியோரின் எதிர்ப்புக்கள், ருேபேர்ட் ஓவனுக்கும் மதவாதிகளுக்குமிருந்த கருத்து வேறுபாடுகளாகும். கிறிஸ்தவ சமதர்மவாதிகளின் முயற்சியினுலே 1852-ம் ஆண்டில் கூட்டுறவுச் சட்டம் உருவாகியது. சட்டத்திலும் பதிவு பெறும் உரிமை போன்ற அத்தியாவசியச் செயல்களைச் சட்டமாக்கியதே தவிர தொடர்ந்தும் கூட்டுறவில் தலையிடாக் கொள்கையையே இங்கிலாந்து பின்பற்றி வந்தது.

டென்மார்க்கில் 1850-ம் ஆண்டு ஒரு சட்டம் இயற்றப்பட்டது. இது பூரணமான கூட்டுறவுச் சட்டமெனக் கூறமுடியாது. இச் சங்கங்கள் பங்கு முதலைப் பெருமலும் அங்கத்தவர்களிடம் வைப்புத் தொகை பெருமலும் விவசாயிகளுக்கு நீண்டகாலக் கடன்களை வழங்கியது. விவசாயிகளுக்கு நிலத்தைக் கொள்வனவு செய்வதற்கும் வேறு நிரந்தரத் தேவைகளுக்கு 30, 40 வருடக் கடன்களைக் கூடக் கொடுத்தன. இச் சங்கங்களை அரசே தோற்றி நடாத்தியது. இச் சங்கங்கள் முழுமையான கூட்டுறவுச் சங்கங்கள் அல்ல. டென்மார்க்கின் விவசாய நிலங்கள் ஒரு சிலரின் கையிலிருந்தன. நிலச் சொந்தக்காரர்கள் பணம் இன்மையால் நிலங்களைப் பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்த முடியாமல் இருந்தார்கள். விவசாயிகள் நிலமின்றித் தவித்தார்கள். இப்பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கோடு விவசாயிகள் நிலங்களைப் பெற்று விவசாயத்தை அதிகரிக்க உதவ வேண்டுமெனவும் நிலச் சொந்தக்காரர்களும் நிலத்தை விவசாயத்திற்குப் பயன்படுத்த வேண்டுமெனவும் இருந்த சூழ்நிலையே இவ்வித சட்டத்தை உருவாக்கியது. அரசின் இத் தூண்டுகோல் டென்மார்க் மக்களை அரசின் உதவியின்றிச் சட்டப் பாதுகாப்பின்றிப் பல கூட்டுறவுச் சங்கங்களை உண்மையான இலட்சியக் கொள்கைகளுக்கமைய உருவாக்கி வளர்க்க உதவியது. இப்போது கூட்டுறவில் அரசின் சட்டப் பங்கு மிகக் குறைவு.

அமெரிக்காவில் 1865-ல் கூட்டுறவுக்கு ஆதரவான சட்டம் அரசால் உருவாக்கப்பட்டது. இந்நாடு ஐரோப்பாவின் பல நாடுகளில் இருந்து குடியேறிய மக்களைக் கொண்டது. குடியேறச் சென்றவர்கள் ஒருவர்க்கொருவர் உதவியாக வாழவேண்டுமென்ற ஒப்பந்த அடிப்படையில் சென்றனர். ஆரம்பத்திலேயே விவசாய முயற்சிகளிலும் கால்நடை வளர்ப்பிலும் கூட்டுறவு முறைகளைப் பின்பற்றி வந்தனர். நாளடைவில் இவற்றுக்கான சங்கங்களையும் ஆரம்பித்தனர். ஏராளமாக மரங்கள் கிடைத்தமையால் மரவீடுகளையே அக்கால மக்கள் அமைத்தனர். இரவில் ஒளிக்காகப் பயன்படுத்திய நெருப்பு வீடு, கடைகள், பண்ணைகளில் அடிக்கடி தீவிபத்தை ஏற்படுத்தியது. இதனுல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமப்புற மக்கள் பெருந் துயரடைந்தனர். இந்நிலையில் அப்போது ஜனதிபதியாக இருந்த பெஞ்சமின் பிராங்கிளின் கூட்டுறவுக் காப்புறுதித் திட்டமொன்றை முன்வைத்தார். ஆரம்பத்தில் இக்கருத்துக்குமக்கள் தயக்கம் காட்டினாலும் நாளடைவில் ஏற்றுக் கொண்டார்கள். இதன்விளைவாக 1865-ல் கூட்டுறவுக் காப்புறுதிச் சங்கங்கள், கால்நடைச் சங்கங்கள், விவசாயச் சங்கங்கள் போன்றவை சட்ட அங்கீகாரம் பெற்றன.

ஜேர்மனியில் 1867-ம் ஆண்டு கூட்டுறவுச் சட்டம் உருவாகியது. 19-ம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் ஜேர்மனியின் கிராமங்களிலுள்ள விவசாயிகளும் நகர்ப்புறங்களிலுள்ள கைத்தொழிலாளர்களும் பசி, பட்டினி, வறுமை, நோய் என்பவற்றால் பீடிக்கப்பட்டுக் கஷ்டப்பட்டனர். தங்கள் பணத் தேவைகளுக்காக யூதர்களிடம் கடன் வாங்கி கடும் வட்டியாலும் கொடுமையான அறவீட்டு முறைகளாலும் பெருந்துன்பத்துக்காளாகி இருந்தனர். இந்து அவல நிலையைப் போக்க சூல்ஸ் என்பவரும் ரபெஸ்சன் என்பவரும் இருவகையான கடனுதவு வங்கிகளை (சங்கங்களை) கூட்டுறவு முறையில் ஆரம்பித்தனர். முதற் கடனுதவு சங்கம் 1850-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இச் சங்கங்களின் வளர்ச்சியும் அங்கத்தவர்கள் பெற்ற நயமும், அரசை ஆதரிக்கச் செய்தது. இக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆதரவளிக்கு முகமாக 1867-ல் ஜேர்மன் அரசு கூட்டுறவுச் சட்டத்தை உருவாக்கியது. கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் வழிகாட்டியாகவும் ஜேர்மன் விளங்கியது.

19-ம் நூற்றுண்டில் அடிக்கடி ஜப்பானுக்கும் சீனுவுக்கும் சண்டைகள் ஏற்பட்டன. இதனுல் பொருள்களின் விலைகள் அதிகரித்து மக்கள் கஷ்டப்பட்டனர். விலைகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் 1879-ல் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பட்டன. பொருளாதார நிலையை உயர்த்த என்ன வழிகளைக் கையாளலாம் என அரசு தீவிரமாகச் சிந்தித்தது. ஜேர்மனியின் கூட்டுறவு இயக்கம் பற்றி ஆராய ஜப்பான் உள்நாட்டமைச்சர் அங்கு சென்று அதன் முறைகளை நன்கு ஆராய்ந்து வந்து 1900-ம் ஆண்டில் அரசு மூலம் கூட்டுறவுச் சட்டம் ஒன்றை உருவாக்கினுர்.

இந்தியாவில் 1904-ம் ஆண்டில் கூட்டுறவுச் சட்டம் உருவாக்கப்பட்டது. இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் ஆரம்பமாவதற்கு மூலகாரணம் விவசாயிகளின் வறுமையே. விவசாயிகள் கடன் தொல்லையால் பெருங் கஷ்டப்பட்டனர். 19-ம் நூற்றுண்டில் ஆங்கில அரசு நாட்டில் ஏற்பட்ட பஞ்சத்தையும் வறுமையையும் போக்க எத்தனையோ நடவடிக்கைகளை எடுத்து அதற்கான சட்டங்களையும் உரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கியது. 1883-ல் ஏற்படுத்தப்பட்ட நில அபிவிருத்திச் சட்டம் 1884-ல் ஏற்படுத்தப்பட்ட விவசாயிகள் சட்டம் என்பன இவற்றுள் முக்கியமான சட்டங்களாகும். இவற்றினுல் ஏழை விவசாயிகளின் வாழ்க்கையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லே. சென்னை அரசாங்கம் விவசாய வங்கிகளை நிறுவி விவசாயிகளுக்குக் கடனுதவி செய்ய விரும்பியது. இத்திட்டத்தினை அமுல் நடாத்த வாய்ப்பான அறிக்கை ஒன்றைத் தயாரிக்க சேர் பிரடெரிக் நிக்கல்சன் என்பவரை ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பியது. கூட்டுறவு இயக்கத்தின் தன்மைகளை ஆராய்ந்த நிக்கல்சன் 1893-ம் ஆண்டு தனது அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்தார். ரபெய்சன் கடனுதவு வங்கி (சங்க) முறையே இந்தியாவுக்கு ஏற்றது என்பது அவர் அபிப்பிராயம். இதனடிப்படையில் 1904-ல் கூட்டுறவுக் கடன் சங்கச் சட்டம் உருவாகியது.

இந்தியாவில் இக்காலத்தில் வறுமையும் ஏழ்மையும் ஒரு புறத்தில் மக்களை வாட்ட மறுபுறத்தில் சுதந்திர எழுச்சியும் இயக்கங்களும் ஏற்பட்டன. இச் சூழ்நிலையில் ஏற்பட்ட கூட்டுறவுச் சட்டங்களில் சுதந்திரம், சுயாட்சித் தன்மை என்பன கட்டுப்படுத்தப்படும் என்பது எதிர்பார்க்கக் கூடியதே. இந்தியாவில் சுதந்திரத்திற்கு முன்னுள்ள கூட்டுறவுச் சட்டங்கள் எல்லாம் இத்தன்மை கொண்டதாகவே அமையும். அதனை அடியொற்றிக் கூட்டுறவுச் சட்டங்கள் இருக்கும் வரை சுயாட்சித் தன்மையும் மட்டுப்படுத்தப்பட்டவையாகவே இருக்கும்.

இலங்கையில் கூட்டுறவுச் சட்டம் 1911-ம் ஆண்டு மே மாதத்தில் சட்டசபையால் நிறைவேற்றப்பட்டது. இலங்கை ஆங்கிலேயர் ஆட்சியின் கீழிருந்த காலம். இக்காலத்தில் இலங்கையில் இரு வகைப் பொருளாதார அமைப்புக்கள் காணப்பட்டன. இலங்கையில் பாரம்பரியமாக இருந்து வந்த கிராமியப் பொருளாதார முறை ஒன்று. பெருந் தோட்டப் பயிர்ச் செய்கையையும் நகரத்தையும் சார்ந்திருந்த நவீன பொருளாதார முறை மற்றது. ஆங்கிலேயர் பெருந்தோட்டங்களை அமைக்க ஆரம்பித்ததும் கிராமப்புற மக்களில் பலர் தமது நிலங்களை இழந்தனர். அவர்களது பொருளாதாரப் பிரச்சனைகள் அதிகரித்தன. அக்கால மக்களிடம் கல்வியறிவும் குறைந்திருந்தது. ஆங்கில எழுத்து வாசனை அறிவு சுமார் 2 வீதத்தினரே பெற்றிருந்தனர். தாய் மொழியில் எழுத்து வாசனை அறிவு சுமார் 30 வீதத்தினரே பெற்றிருந்தனர். இத்தகைய கல்வி அறிவற்ற நிலையையும், பொருளாதாரத்தில் சீர்குலைவுற்ற நிலையையும் பயன்படுத்தி வட்டிக்குப் பணங் கொடுப்போரும் வியாபாரிகளும் கிராமப்புற ஏழைகளைப் படுமோசமாகச் சுரண்டினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19-ம் நூற்றுண்டின் இறுதியில் ஓரளவு கூட்டுறவுக் கொள்கைகளை யுடைய மிகச் சில சங்கங்கள் தோன்றியுள்ள போதிலும் அவை பதிவு செய்யப்படவில்லை. 1904-ல் இலங்கை விவசாயச் சங்கம் என ஒரு நிறுவனம் அமைக்கப்பட்டது. இதன் அங்கமாக விவசாயக் குழு ஒன்று உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக இலங்கை ஆள்பதி (தேசாதிபதி) சேர் ஹென்றி பிளேக் கடமையாற்றினர். விவசாயக் குழுவின் செயலாளராகக் கடமையாற்றிய டென்காம் அவர்கள் கட்டுரை வாயிலாகக் கூட்டுறவுக் கருத்துக்களையும் செய்திகளையும் திரட்டி வெளியிட்டார். இதன் விளைவாகத் தென் மாகாணத்தில் சில இடங்களிலும் வவுனியாவிலும் கால்நடைகள், விவசாயம் போன்றவற்றில் கூட்டுறவுக் கோட்பாட்டைப் பின்பற்றிச் சங்கங்கள் உருவாகின. தும்பறையிலும், தெலியாவில என்னும் இடத்திலும் கடனுதவு சங்கங்கள் நிறுவப்பட்டன.

இந்திய அரசாங்கம் கூட்டுறவு இயக்கத்தை ஊக்குவித்து வந்ததை இலங்கை அரசாங்க அதிகாரிகள் அறிந்தனர். இலங்கையில் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் நிறுவப்பட வேண்டுமென்ற தகவுரை முதன் முதலாக 1908-ல் தான் செய்யப்பட்டது. 1909-ல் சேர் ஹென்றி மக்கலம் ஆள்பதியாக இருந்தபோது விவசாய வங்கிகள் பற்றிய விசாரணைக் குழு ஒன்றை நியமித்து அதற்கொரு மகஜரையும் சமர்ப்பித்தனர். அம் மகஜரில் சேர் பிரெடரிக் நிக்கல்சன் இந்தியாவுக்கு அறிமுகப்படுத்திய கூட்டுறவுக் கடனுதவு சங்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு இங்கு நடைமுறைப்படுத்தக் கூடிய சாத்தியக் கூறுகள் பற்றி ஆராயப்பட வேண்டுமெனக் கோரப்பட்டது. விவசாய வங்கிகள் விசாரணைக்குழு 1910-ல் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. இலங்கைக் கூட்டுறவு இயக்கம் பற்றிய முக்கியத்துவம் வாய்ந்த முதல் அறிக்கை இது. இவ்வறிக்கையின் அடிப்படையில் 1911-ம் ஆண்டு ஏப்பிரல் 12-ந் திகதி கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான ஒரு கட்டளைச் சட்டம் சட்ட சபையில் சமர்ப்பிக்கப்பட்டு மே மாதத்தில் நிறைவேற்றப்பட்டது. கூட்டுறவுச் சட்டம் இந்தியாவிலும் இலங்கையிலும் ஏறக்குறைய ஒரே பின்னணியில் ஆங்கிலேயராட்சிக் காலத்தில் அவர்களின் தாராளமான மனப்போக்கால் ஏற்படுத்தப் பட்டவையாகும். சில நாடுகளில் கூட்டுறவுச் சட்டங்கள் தோற்று வதற்கிருந்த பின்னணிகள் எவை என்பது எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. இலங்கைக் கூட்டுறவுச் சங்கச் சட்டமூலங்கள்

இலங்கையிலுள்ள கூட்டுறவு நிறுவனங்களைக் கூட்டுறவுக் கொள்கைகளுக்கமைய அமைக்கவும் ஒழுங்குபடுத்தவும் கட்டுப்படுத்தவும் இன்னோரன்ன பிற செயல்களுக்கு உதவும் பொருட்டும், அதிகாரமுடையோரால் ஆக்கப்பட்டவை சட்டமூலங்களாகும். இன்று நடைமுறையிலுள்ள சட்டமூலங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. தேசியப் பேரவைக் கூட்டுறவுச் சங்கச் சட்டங்கள்;
2. கூட்டுறவுச் சங்க விதிகள்;
3. கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுக் கட்டளைச் சட்டம்.
4. சுற்றுநிருபங்கள்.
5. கூட்டுறவுச் சங்கத் துணைவிதிகள்.
6. கூட்டுறவுச் சங்க நடைமுறை விதிகள்.
7. நீதிமன்ற தீர்ப்புவழிச் சட்டத் தொகுப்புக்கள்.
8. இயற்கை நீதிக் கோட்பாடுகள்;
9. பொதுச் சட்டங்கள்

என ஒன்பதாக வகைப்படுத்தலாம்.

## தேசிய பேரவைக் கூட்டுறவுச் சங்கச் சட்டங்கள்

இலங்கையில் கூட்டுறவுச் சட்டம் சுமார் 70 ஆண்டுகால வரலாற்றை உடையது. 1911-ம் ஆண்டு தொடக்கம் காலத்துக்குக் காலம் தேவைக்கு ஏற்ப மாற்றங்களையும் திருத்தங்களையும், விசேட ஏற்பாடுகளையும் தன்னகத்தே பெற்று வளர்ச்சி பெற்றுள்ளது. இன்று நடை முறையில் 1972-ம் ஆண்டின் 5-ம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் இருக்கின்றது. அத்துடன் 1970-ம் ஆண்டின் 34, 35-ம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் விசேட சட்டங்கள், 1978-ம் ஆண்டின் 12-ம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் விசேட ஏற்பாடுகளின் சட்டம் ஆகியனவும் நடைமுறையில் இருக்கின்றன. தேசியப் பேரவைக் கூட்டுறவுச் சட்டங்களே அதிகாரத்தின் பிறப்பிடம். அவற்றுக்கமைய அல்லது அச் சட்டங்களில் குறிப்பிடப்படாத விடயங்களின் பொருட்டே ஏனைய சட்டங்களைப் பயன்படுத்தலாம். இதுவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவின் முக்கியமான மூலச் சட்டமாகக் கருதப்படவேண்டியது. ஏனையவை இவற்றின் வழிச் சட்டங்களாகத், துணைச்சட்டங்களாக, ஆதரவுச் சட்டங்களாகக் கருதப்பட வேண்டியவை. எனவே இச் சட்டத்துக்கு முரணான கருத்துக்கள் உடையனவாக ஏனைய சட்டங்கள் அல்லது பிரமாணங்கள் அல்லது விதிகள் அமைய முடியாது.

## தேசியப் பேரவையின் 1972-ம் ஆண்டின் 5-ம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம்

"கூட்டுறவுச் சங்கங்களின் அபிவிருத்திக்கு ஏற்பாடு செய்வதற்கும், கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்புக் கட்டுப்பாடு என்பன தொடர்பான சட்டத்தினை ஒன்று திரட்டுவதற்கும் திருத்துவதற்கும் அவற்றோடு தொடர்புபட்டவையும் அவற்றின் இடைநேர் விளைவானவையுமான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்" என இதற்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இச் சட்டத் தொகுப்பில் 75 சட்டங்களும் ஒவ்வொரு சட்டத்திற்கும் பல உட்பிரிவுகளும் உண்டு. இச் சட்டங்கள் பதினன்கு அத்தியாயங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. முதலாவது சட்டம் பெயரைப் பற்றியதாகும். "இச் சட்டமானது தேசியப் பேரவையின் 1972-ம் ஆண்டின் ஐந்தாம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்" எனக் கூறுகிறது. இச்சட்டம் அத்தியாயங்களுக்குள் அடக்கப்படாது தனியாக வைக்கப்பட்டுள்ளது.

**1-ம் அத்தியாயம்:** பதிவு (2-வது சட்டம் தொடக்கம் 10-வது சட்டம் வரை)

**2-ம் அத்தியாயம்:** பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் உறுப்பினர்களும் அவர்களின் உரிமைகளும் பொறுப்புக்களும். (11-வது சட்டம் தொடக்கம் 17-வது சட்டம் வரை)

**3-ம் அத்தியாயம்:** பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் கடமைகள் (18-வது சட்டம் தொடக்கம் 19-வது சட்டம் வரை)

**4-ம் அத்தியாயம்:** பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் சிறப்புரிமைகள். (20-வது சட்டம் தொடக்கம் 34-வது சட்டம் வரை)

**5-ம் அத்தியாயம்:** முத்திரை வரியிலிருந்தும் சட்டங்களிலிருந்தும் விலக்களித்தல். (35-வது சட்டம்)

**6-ம் அத்தியாயம்:** துணை விதிகள் தொடர்பான பொது ஏற்பாடுகள்- (36-வது சட்டம் தொடக்கம் 38-வது சட்டம் வரை)

**7-ம் அத்தியாயம்:** பதிவு செய்யப்பட்ட ஆதனமும் நிதிகளும் (39-வது சட்டம் தொடக்கம் 43-வது வரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**8-ம் அத்தியாயம் :** கணக்காய்வு, விசாரணை, சோதனையிடல், அல்லது நுண்ணுய்வு. (44-வது சட்டம் தொடக்கம் 47-வது வரை)

**9-ம் அத்தியாயம் :** பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின், குழுவைக் கலைத்தல். (48-வது சட்டம்)

**10-ம் அத்தியாயம் :** பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றைக் கலைத்தல் (49-வது சட்டம் தொடக்கம் 57-வது சட்டம் வரையும்)

**11-ம் அத்தியாயம் :** பிணக்குகள் (58-வது சட்டம் தொடக்கம் 60-வது சட்டம் வரை)

**12-ம் அத்தியாயம் :** விதிகள் (61-வது சட்டம்)

**13-ம் அத்தியாயம் :** அரசாங்கத்திற்குப் போகுமதியான கடன்கள் (62-வது சட்டம்)

**14-ம் அத்தியாயம் :** நானுவிதமானவை. (63-வது சட்டம் தொடக்கம் 75-வது சட்டம் வரை)

## கூட்டுறவுச் சங்கங்களின் விசேட ஏற்பாடுகள் சட்டம் 1978-ம் ஆண்டு 12-ம் இலக்கச் சட்டம்

இச்சட்டம் 1978-ம் ஆண்டு யூலை மாதம் நடைமுறைக்கு வந்தது. இதுவொரு இடைக்காலச் சட்டம். அதாவது 18 மாதங்களுக்கு மட்டுமென்ற பொது நிபந்தனையோடு இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் அதிகாரத்தைக் கொண்டு நியமிக்கப்பட்ட நெறியாளர் குழுவின் காலஎல்லை முழுக்காலம் வரைக்கும் நீடிக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. குறைந்த கால எல்லைக்கும் நியமனங்கள் செய்யப்படலாம். இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களும் உபயோகிக்க வேண்டுமென்ற அவசியமுமில்லை.

நெறியாளர் குழுக்கள் செயலிழந்த சங்கங்கள், நெறியாளர் குழுத்தேர்தல், கிளைக்குழுத் தேர்தல் போன்றவை நடைமுறையில் இல்லாத சங்கங்கள், பொதுச் சபையின் அங்கீகாரத்துடன் நடைமுறைப் படுத்த வேண்டிய விடயங்களுக்காகப் பொதுச் சபையைக் கூட்ட முடியாதிருக்கும் சங்கங்கள், தொழிற்பரப்பை மீண்டும் வரையறை செய்ய வேண்டிய சங்கங்கள் போன்றவற்றிகே சிறப்பாக இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பயன்படுத்தப்படும்.

இச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் நியமிக்கப்படும் நெறியாளர் குழுவில் மூன்று பேருக்குக் குறையாமலும் ஐந்து பேருக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். நெறியாளர் குழுவில் குறைந்தது ஒருவராவது அரச ஊழியராக இருத்தல் வேண்டும். இவ்வாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமிக்கப்படுபவர்கள் சங்க உபவிதியின்படி நெறியாளர் குழுவிற்குத் தகமையுடையவர்களாகவுமிருத்தல் வேண்டும். இந்நெறியாளர்களுக்கு அமைச்சரின் தற்றுணிவின்படி படிகள் வழங்கப்படலாம்.

இச்சட்ட ஏற்பாடுகளின் கீழ் நியமிக்கப்படும் நெறியாளர் குழுவுக்கு பொதுச்சபையின் அதிகாரங்களும் உரிமைகளும் சலுகைகளும் உண்டு. இச்சட்டத்தின்கீழ் நெறியாளர் குழு நியமிக்கப்படுமாயின் அதன் பதவிக் காலத்துக்குள் சங்கத்தின் உபவிதிகளுக்கமையச் சங்க நெறியாளர் குழு அமையும் வகையில் சங்கத்தைப் புனரமைக்க வேண்டிய எல்லா நடவடிக்கைகளும் எடுக்க வேண்டியது ஆணையாளரின் கடமையாகும்.

## கூட்டுறவு விதிகள்

தற்போது நடைமுறையிலுள்ள விதிகள் 1973-ம் ஆண்டின் கூட்டுறவுச் சங்க விதிகளாகும். இவ்விதிகள் 1972-ம் ஆண்டின் 5-ம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 51-ம் பிரிவின் கீழ் உள்நாட்டு வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு 1973-ம் ஆண்டு நவம்பர் 20-ம் திகதிய தேசியப் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.

கூட்டுறவுச் சட்டத்தின் 61-ம் பிரிவின் முதலாம் உபபிரிவு அமைச்சருக்கு விதிகளை ஆக்குந் தத்துவத்தையும் அவ்விதிகளின் பொதுத் தன்மையையும் கூறுகிறது. "இச்சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் அல்லது அவற்றிற்குப் பயன் கொடுக்கும் நோக்கத்துக்காக அவசியமாகக்கூடிய அத்தகைய எல்லா விதிகளையும் அமைச்சர் ஆக்கலாம்" என்பதே அச்சட்டம். இரண்டாம் உட்பிரிவு முதலாம் உட்பிரிவின் தத்துவங்களுக்குப் பங்கமின்றி 25 விடயங்கள் சம்பந்தமாக விதிகளை ஆக்க அதிகாரம் அளிக்கிறது. மூன்றும் உட்பிரிவு விதிகள் தேசியப் பேரவையில் அங்கீகாரம் பெறப்படுமுன் பயனுடையதாகாது எனவும் அத்தகைய அங்கீகாரம் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமெனவும் கூறுகிறது. நான்காம் உட்பிரிவு ஒவ்வொரு விதியும் முற்கூறப்பட்டபடி அரசாங்க வர்த்தமானியில் வெயிடப்பட்டதன் மேல் சட்டமாக்கப்பட்டாற் போன்று செல்லுபடியுள்ளதாயும் பயனுடையதாயுமிருக்கும் என்பதைத் தெரிவிக்கின்றது.

61-ம் பிரிவுச் சட்டத்தின் முதலாம் உட்பிரிவினால் அதிகாரமளிக்கப்பட்ட 25 விடயங்கள் சம்பந்தமாக 55 விதிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது தற்போதைய கூட்டுறவு விதிகள். சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைப் பதிவு செய்தலுக்கு விண்ணப்பிக்கும் முறைமுதற்கொண்டு இவ்விதிகளை மீறுவதற்குமுரிய குற்றம் வரையுள்ள பலவிடயங்கள் சம்பந்தமான விதிகள் இதனகத்தே உண்டு.

## கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுக் கட்டளைச் சட்டப் பிரமாணங்கள்

இப் பிரமாணங்கள், 1972–ஆம் ஆண்டு 12-ம் இலக்கக் கூட்டுறவுக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 32 (1) இன் கீழ் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவிற்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் படி அவ்வாணைகுழுவால் தயாரிக்கப்பட்டு இச்சட்டத்தின் பிரிவு 32 (2) இன் ஏற்பாடுகளுக்கமைய உள்நாட்டு வர்த்தக அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு 1972 ஆம் ஆண்டு மே மாதம் 12-ம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டவையாகும்.

கூட்டுறவுச் சங்கவிதி 28 இப்பிரமாணங்களுக்கு வலுவூட்டுகின்றது. "ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கம் 1972-ஆம் ஆண்டின் 12-ஆம் இலக்கக் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவன்றி, எவரேனும் ஒருவரை அச் சங்கத்தின் பணியாளராக நியமித்தலாகாது." என 28 ஆவது விதி கூறுகிறது.

இப் பிரமாணங்கள் இரு பகுதிகளைக் கொண்டது. முதலாவது பகுதி மூன்று தனிப் பிரமாணங்களையும் எட்டு அத்தியாயங்களாகத் தொகுக்கப்பட்ட 121 பிரமாணங்களையும் அடக்கியது. இரண்டாவது பகுதி 4 தனிப் பிரமாணங்களையும் 5 இணைப்புக்களையும் கொண்டது. முதலாம் பகுதித் தனிப் பிரமாணங்களில் முதலாவது "இப்பிரமாணங்கள் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுப் (பொதுப்) பிரமாணங்கள் என அழைக்கப்படும்" எனக் கூறுகிறது. இரண்டாவது பிரமாணம் விலக்களிக்கப்படாத சகல கூட்டுறவுச் சங்கங்களும் இப் பிரமாணங்களினாலும் ஆணைக்குழுவினால் இயற்றப்படும் விதிகளினாலும் கட்டுப்படுத்தப்பட்டவையாகவே அமைதல் வேண்டுமென்பதையும் மூன்றும் பிரமாணம் வேலையாளருக்கு ஒரு கூட்டுறவுச் சங்கம் தனது நிதியில் இருந்து சம்பளம் அல்லது வேதனம் அளித்து வருமாயின் அத்தகைய வேலையாளரது வேலைகொள்வோனாகச் சங்கம் கருதப்பட வேண்டுமென்பதையும் கூறுகின்றன.

முதலாம் அத்தியாயம் 4–5 வரையுள்ள பல உட்பிரிவுகளைக் கொண்ட பிரமாணங்களை உள்ளடக்கியது. நியமனங்கள் அளித்தல், பதவி உயர்வு, மாற்றங்கள், சம்பளம் மிகையூதியங்கள், ஏனைய படிகள் வழங்கல், ஊக்குவித்தல் கொடுப்பனவுகள், வேலையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகாயநிதி வேலையாளரால் கொடுபட வேண்டிய பிணை, சம்பள ஏற்றங்கள், வினைத்திறமைகாண் தடைகள். வேலையாளர் சம்பந்தப் பட்டவகையில் சங்கம் வைத்திருக்க வேண்டிய இடாப்புக்கள். பதிவேடுகள் ஆகிய விடயங்கள் பற்றி இவ்வதிகாரத்தில் பிரமாணங்கள் ஆக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் அத்தியாயம் 53 — 60 வரையுள்ள பல உட்பிரிவுகளைக் கொண்ட பிரமாணங்களை அடக்கியது. வேலையாளரின் சேவை நிபந்தனைகளைப் பற்றியது. வேலை நேரம், வாராந்த விடுமுறைகள், வருடாந்த விடுமுறைகள். விடுமுறை, பொதுவிடுமுறைகள், பிரசவ உதவிகள் ஆகிய விடயங்கள் பற்றி இவ்வதிகாரத்தில் பிரமாணங்கள் ஆக்கப்பட்டுள்ளன.

மூன்றும் அத்தியாயம் : 61 — 72 வரையுள்ள பல உட்பிரிவுகளைக் கொண்ட பிரமாணங்களை அடக்கியது. கூட்டுறவு வேலையாளர் நடத்தையைக் கட்டுப்படுத்தும் பிரமாணங்களைக் கொண்டது. ஒவ்வொரு வேலையாளரும் கட்டாயமாகச் செய்ய வேண்டிய பணிகள் பற்றியும் செய்யக் கூடாத செயல்கள் பற்றியும் அவரதும், அவரைச் சார்ந்தோரினதும் இருப்புச் சொத்துக்களை வெளியிடுதல் பற்றியும் சங்க நிதியைச் சொந்தத் தேவைக்குப் பயன்படுத்தக் கூடாதென்பது பற்றியும் இவ்வத்தியாயத்தில் பிரமாணங்கள் ஆக்கப்பட்டுள்ளன.

நான்காம் அத்தியாயம் : 73 — 99 வரையிலுள்ள பல உட்பிரிவுகளைக் கொண்ட பிரமாணங்களை அடக்கியது. வேலையாளரின் கெட்ட நடை பற்றிய ஒழுக்காற்று விசாரணை சம்பந்தமான பிரமாணங்களைக் கொண்டது. கெட்ட நடைத்தையுள்ள அல்லது சந்தேகிக்கும் ஊழியர் மீது எடுக்கவேண்டிய நடவடிக்கைகள், சிறு குற்றங்கள் மீது எடுக்க வேண்டிய நடவடிக்கை முறைகள், கடுங் குற்றங்கள் மீது எடுக்க வேண்டிய நடவடிக்கை முறைகள், விசாரணை நடத்தும் ஒழுங்குகள், விசாரணையில் ஆணைக்குழுவுக்குள்ள தொடர்புகள், தண்டனைகள், பொதுத் திறமையின்மைக்காக இளைப்பாற்றுதல், நீதிமன்றக் குற்றத் தீர்ப்புக்குப்பின் நடைமுறை போன்ற விடயங்களில் இவ்வத்தியாயத்தில் பிரமாணங்கள் ஆக்கப்பட்டுள்ளன.

ஐந்தாம் அத்தியாயம் : 100 — 107 வரையுள்ள பிரமாணங்களை அடக்கியது. ஒழுக்காற்று விசாரணை சம்பந்தமான மேன் முறையீடுகள் பற்றிய பிரமாணங்களாகும். ஆணைக்குழுவுக்கு மேன் முறையீடு செய்தல் பற்றியும் மேன் முறையீட்டுக்கு ஆணைக்குழு எடுக்கும் நடவடிக்கைகள் பற்றியும் அதற்கு வழங்கக் கூடிய தீர்ப்புக்கள் பற்றியும் பிரமாணங்கள் ஆக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறும் அத்தியாயம் : 108 — 120 வரையுள்ள பல உட்பிரிவு களைக் கொண்ட பிரமாணங்களை அடக்கியது. இளைப்பாறல், விலகல், சேவை முடிவுறல், ஆட்குறைப்பு ஆகியவை பற்றிய பிரமாணங்கள் இவ்வதிகாரத்துள் தொகுக்கப்பட்டுள்ளன.

ஏழாம் அத்தியாயம் : 121 — 123 வரையுள்ள பிரமாணங்களை அடக்கியது, இடைப் போக்கு ஏற்பாடுகள் பற்றியது.

எட்டாம் அத்தியாயம் : 124-வது பிரமாணத்தை அடக்கியது. சொற்களின் வரைவிலக்கணத்தைக் கூறுகின்றது.

பகுதி 2 கூட்டுறவுச் சங்கங்களில் குறிக்கப்பட்ட பதவிகளுக்காய தகமைகளையும் முதற் சம்பளத்தினையும் கூலி அளவுத் திட்டங்களை யும், விதிக்கின்ற பிரமாணங்களாகும். முதலாவது பிரமாணம் "1972-ம் ஆண்டின் கூட்டுறவு வேலையாள் முதற் கூலி சம்பளப் பிர மாணங்கள்" என அழைக்கப்படலாமெனவும், இரண்டாவது பிரமா ணம் குறிக்கப்பட்ட தகைமைகளைப் பெற்றிராத எவரையேனும் பதவி யொன்றுக்கு அல்லது தரத்துக்கு நியமிக்கக் கூடாது எனவும், குறித்த ஏதேனும் பதவிக்கு நியமனமளிக்கப்படும் வேலையாளர் ஒருவருக்கு அதற்கு நேரொத்ததாய் உள்ள சம்பளத்தினை வழங்குதல் வேண்டு மெனவும் மூன்றும் பிரமாணம் இச் சம்பள அளவுத் திட்டங்கள் 1972-ம் ஆண்டு ஏப்பிரல் 1-ந் திகதியில் இருந்து அமுலுக்கு வர வேண்டுமெனவும் நான்காம் பிரமாணம் கூட்டுறவு வேலையாளர் கட்டளைச் சட்டத்தின் 17-ம் பிரிவுக்குள் அடங்கும் வேலையாளர் களின் பதவிகள் எவையெனவும் கூறுகின்றன.

இணைப்பு (i) சிறு குற்றங்கள் பற்றியது. (12 சிறு குற்றங்கள் தரப்பட்டுள்ளன.)

இணைப்பு (ii) கடுங் குற்றங்கள் பற்றியது. (8 கடுங்குற்றங்கள் தரப்பட்டுள்ளன.)

இணைப்பு (iii) நியமனக் கடிதத்தில் சேர்க்கப்பட வேண்டிய விடயங்கள் (8 விடயங்கள் தரப்பட்டுள்ளன.)

இணைப்பு (iv) வேலையாளர் சம்பந்தப்பட்ட வகையில் சங்கம் வைத்திருக்க வேண்டிய இணைப்புக்கள் பதிவேடுகள்.

1. (அ) படிவம் சேவைப் பதிவேடு
2. (ஆ) படிவம் வரவு ஊதியம் பற்றிய பதிவேடு
3. (இ) படிவம் கழிவுகள் பற்றிய பதிவேடு

இணைப்பு (v) குறித்த பதவிகளுக்காய தகைமைகள் முதற் சம்பளம் - சம்பள அளவுத் திட்டங்கள். பொது முகாமையாளர் உட்பட 26 பதவிகளின் (அளவுத்திறன் பல்வேறு தரங்களுமுட்பட) விபரங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுப் பிரமாணங்கள் வேலை கொள்வோர் என்ற வகையில் கூட்டுறவுச் சங்கங்களையும் வேலை செய்வோர் என்ற வகையில் பணியாளர்களையும் கட்டுப்படுத்தும் பிரமாணங்களாகும். இப்பிரமாணங்கள் சங்கங்களைப் பொறுத்த வரையிலும் பணியாளர்களைப் பொறுத்த வரையிலும் சில விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன.

**கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த வரையில் இவ்விதிகளினால் ஏற்படும் சாதகமான விளைவுகள்.**

(1) ஒத்த சங்கங்களுக்கிடையே பதவி, அவற்றின் தகமைகள், சம்பளங்கள், படிகள், உயர்வுகள் ஒரே சீராக இருத்தல்.

(2) ஊழியர்கள் சங்க முகாமையுடன் சம்பளங்கள் படிகள் உயர்வுகள் சம்பந்தமாக முரண்பாடு கொள்ளாதிருக்க வழி செய்தமை.

(3) பதவி உயர்வு, நியமனம் போன்ற விடயங்களில் குறைந்த தகைமையுடைய ஊழியர்கள் முகாமையுடன் அதிருப்தி அடையாதிருக்க வழி செய்தமை.

(4) ஊழியருக்குள்ள பல சலுகைகள் எல்லாச் சங்க ஊழியர்களுக்கும் பொதுவாக அமைந்துள்ளமை.

(5) ஊழியர்களைக் கட்டுப்படுத்தும் பொதுவிதிகள் விதிக்கப் பட்டமை.

(6) இளைப்பாற வேண்டிய கட்டாயப் பொது வயதெல்லை விதிக் கப்பட்டமை.

**ஆணைக்குழு பிரமாணங்களினால் சங்கத்திற்கேற்பட்ட பாதக மான விளைவுகள்.**

(1) கோட்பாட்டு ரீதியில் சங்கம் சுயாதீனமும் சுதந்திரமும் கொண்டது. அதன் தத்துவங்களில் வேறு நிறுவனங்களின் அதிகாரத் தலையீடு கோட்பாட்டுக்கு முரணானது.

(2) ஊழியர்களின் தனித்திறன்கள், வேலைச் சுமையை ஏற்குந் தன்மை, ஒழுங்கு போன்றவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை.

(3) சங்கத்தின் நிதிநிலைக்கு ஏற்பவும், சங்கத்தின் செயற் பாடுகளின் அளவுக்கேற்பவும் சம்பளத் திட்டங்களை வகுக்க முகாமைக்கே முடியும். அதற்குரிய சந்தர்ப்பங்கள் வழங் கப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) பருமனளவிலும், செயற்பாடுகளிலும் வளர்ச்சியுற்ற சங்கங்கள் அவ்வத் துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களின் சேவையைப் பெறக் கூடிய வகையில் சம்பளத்திட்டங்கள் அமையவில்லை.

(5) ஒவ்வொரு பதவிக்குமுரிய கல்வித் தகைமைகளை வகுக்கும் போது எல்லா வகையான கல்வித்தகைமைகளையும் கருத்திற் கொள்ளவில்லை.

(6) வேலையாளர் நடத்தையைக் கட்டுப்படுத்தும் பிரமாணங்கள், கெட்டநடை போன்றவற்றுக்காக விதிக்கப்பட்ட பிரமாணங்கள் முழுமையாகவும் விபரமாகவும் அமையவில்லை.

**ஆணைக்குழுப் பிரமாணங்களினல் கூட்டுறவு ஊழியர்களுக்குள்ள சாதகமான விளைவுகள்.**

(1) எல்லா கூட்டுறவுச் சங்கங்களிலுமுள்ள எந்த பதவி வகிப்போருக்கும் ஒரே வித சம்பள அளவுத் திட்டம் ஏற்படுத்தியமை.

(2) பதவி உயர்வுகளுக்கு முறையான திட்டம் ஏற்படுத்தியமை.

(3) வேலை நேரம், விடுமுறை, பொதுவிடுமுறை போன்றவற்றுக்கு எல்லாச் சங்கங்களுக்கும் பொதுவான ஒழுங்கு முறை ஏற்படுத்தியமை.

(4) விசாரணை நடத்தல், தண்டனை விதித்தல், இளைப்பாற்றல் போன்ற கருமங்களுக்கு ஒழுங்குமுறை ஏற்படுத்தியமை.

(5) மேலதிக நேரச் சம்பளக் கணிப்பீட்டு முறை ஏற்படுத்தியமை.

(6) ஊக்குவித்தற் கொடுப்பனவுக்கு வழி வகுத்தமை.

(7) ஆளணியைத் திரட்டுதல், நிருவகித்தல் சம்பந்தமாக முகாமை விடுந்தவறுகளை மேற்பார்வை செய்து நீதி வழங்கும் நிலையை ஏற்படுத்தியமை.

(8) ஆளணியைத் திரட்டுதல் நிருவகித்தல் போன்ற விடயங்களில் முகாமை ஒழுங்காகவும் ஊழியர்களிடையே பாரபட்சம் காட்டாமலும் கவனத்துடன் முகாமையை இயங்கச் செய்தமை.

(9) விசாரணை, தண்டனை போன்றவற்றில் ஊழியர் அதிருப்தியுறின் மேன்முறையீடு செய்வதற்கு வசதியளித்தமை.

**சுற்று நிருபங்கள்**

இவை சட்ட ஏற்பாடுகளைச் சங்கம் நடைமுறைப்படுத்தும்போது எழும்சிக்கல்களைத் தவிர்ப்பதற்காகக் காலத்துக்குக் காலம் அதிகாரத் தத்துவம் கொண்டவர்களால் பிறப்பிக்கப்படுபவைகளாகும். சட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டங்களுக்கும் விதிகளுக்குமவைவாகவே இச் சுற்று நிருபங்கள் பிறப்பிக்கப்படுகின்றன. பெரும்பாலும் இவை சட்டப் பொருள் விளக்கமாகவோ, அல்லது குறிப்பிட்ட சில விடயங்கள் சம்பந்தமாக கூட்டுறவுச் சங்கங்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் பற்றியோ அமைந்தனவாக இருக்கும். கூட்டுறவு ஆணையாளர், கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு என்பனவற்ருலேயே பெரும்பாலும் இச்சுற்று நிருபங்கள் அனுப்பப்படுகின்றன; இவையும் கூட்டுறவுச் சங்கங்களைக் கட்டுப்படுத்தும் தத்துவத்தைக் கொண்டவையாகும்.

## துணை (உப) விதிகள்

கூட்டுறவுச் சட்டம் (5) (3) இல்) பதிவு விண்ணப்பத்துடன் சங்கத்தின் உத்தேசிக்கப்பட்ட துணை விதிகளின் இரு படிகளையும் கொண்டிருப்பதாய் இருத்தல் வேண்டும் எனக் கூறுகின்றது. கூட்டுறவுச் சட்டம் எட்டாம் பிரிவு (1—6) உட்பிரிவுகளிலும் துணை விதி திருத்தங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. சட்டம் துணைவிதிகளைப் பற்றி விபரமாகக் குறிப்பிடாது விடினும் துணை விதியின் தேவையை உணர்த்தியுள்ளது.

கூட்டுறவுச் சங்கவிதி 29-வது கட்டாய துணைவிதிகளைப் பற்றியது. ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கம் பின்வருவனவற்றைக் குறித்து துணை விதிகள் வகுத்தல் வேண்டும் என இவ்விதி கூறுகிறது. (1) சங்கத்தின் பெயர் (2) சங்கத்தின் பதிவு பெற்ற முகவரி (3) சங்கம் நிறுவப்பட்ட நோக்கங்கள் (4) சங்கப் பணம் உபயோகிக்கக் கூடிய நோக்கங்கள் (5) உறுப்பினருக்காய தகுதியுடமை, உறுப்பினரைச் சேர்ப்பதற்குரிய நிபந்தனைகளும் அவர்களைத் தெரிவு செய்யும் முறையும், (6) உறுப்பினரது உத்தரவாதத்தின் தன்மையும் அளவும் (7) உறுப்பினர் சங்கத்தை விட்டு விலகுதலும், தள்ளப்படுதலும், அன்னூருக்குக் கொடுக்க வேண்டிய தொகையேதுமிருப்பின் அது கொடுக்கப்படும் முறையும் (8) சங்கத்தின் உறுப்பினரது பங்கை அல்லது வேறு அக்கறைகளை மாற்றுதல் (9) நிதிகள் திரட்டும் முறையும் வைப்புப் பணம் மீது கொடுக்கப்படக்கூடிய ஆகக் கூடிய வட்டி வீதமும் (10) சங்கப் பொதுக் கூட்டங்கள், அவற்றைக் கூட்டும் முறையும் அவற்றின் தத்துவங்களும் (11) நிருவாக சபை உறுப்பினரையும் சங்கத்தின் ஏனைய அலுவலரையும் நியமித்தல், இடை விலக்கல், அகற்றுதல், நிருவாக சபையினதும் ஏனைய அலுவலரினதும் தத்துவங்களும் கடமைகளும் (12) சங்க அலுவலரில் ஒருவருக்குச் சங்கத்தின் பேரில் ஆவணங்களுக்குக் கையொப்பமிட அதிகாரமளித்தல்.

நிதிகளைத் திரட்டி உறுப்பினருக்குக் கடன் கொடுப்பதை ஒரு நோக்கமாகக் கொண்ட ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கம் பின்வரும் விடயங்களைக் குறிக்கும் துணைவிதிகள் வகுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(13) உறுப்பினரின் தொழிலும் இருப்பிடமும் (14) பின்வருவன உட்பட உறுப்பினருக்குக் கடன் கொடுப்பதைப் பற்றிய நிபந்தனைகள் (அ) வட்டி வீதம் (ஆ) ஒரு உறுப்பினருக்குக் கடனுகக் கொடுக்கக் கூடிய ஆகக் கூடிய தொகை (இ) கடன் தவணையை நீடித்தலும் புதுப்பித்தலும் (ஈ) கடனின் நோக்கங்கள் (உ) கடனுக்குப் பிணை (15) பங்குகளின் அல்லது கடனின் கணக்கில் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுக்கத் தவறுதலின் விளைவுகள் (16) இலாபப் பங்கீடு செய்தல்

துணை (உப) விதிகள் இன்றி கூட்டுறவுச் சங்கம் ஒன்று பதிவு செய்யப்படமாட்டாது. இத் துணை விதிகள் ஆரம்ப அங்கத்தவர்கள் (தோற்றுவிக்கும் போது உறுப்பினர்களாகச் சேர்ந்தவர்கள்) ஆக்கி அங்கீகரித்து பதிவு விண்ணப்பத்துடன் இரு பிரதிகள் அனுப்பப்பட வேண்டும். சங்கத்தைப் பதிவு செய்யும் போது துணை விதிகளை அங்கீகரித்த பின்னரே பதிவு செய்யப்படும். கூட்டுறவு ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்டதற்கு அத்தாட்சியாக அவரது ஒப்பமிட்ட துணை விதிப் பிரதியொன்று சங்கத்திற்கனுப்பப்படும். இத்துணை விதிகள் கூட்டுறவுச் சட்டம் கூட்டுறவு விதிகளுக்கமைவாக அவற்றோடு முரண்படாது ஆக்குதல் வேண்டும். ஆரம்பத்தில் ஆக்கப்பட்ட துணைவிதிகளில் காலத்துக்குக் காலம் தேவைக்கேற்பத் திருத்தங்கள் செய்யச் சட்டம் விதிகள் வகை செய்துள்ளன.

உறுப்பினரைப் பொறுத்த வரை துணை (உப) விதிகள் மிக முக்கியமானவை. சங்கத்திற்கும் உறுப்பினர்களுக்குமுள்ள தொடர்பை விளக்குவது. உறுப்பினரின் உரிமைகள் கடமைகள் அதிகாரங்கள் அவற்றைப் பயன்படுத்தும் முறைகள் போன்றன இதில் அடங்கியிருக்கின்றது. அதே போன்று உறுப்பினர்கள் சங்கத்திற்கு எவ்விடயங்களில் எவ்வாறு கட்டுப்பாடுடையவர்களாக இருத்தல் வேண்டும். சங்க நலத்துக்காகச் செய்ய வேண்டிய கருமங்கள் எவை, அவர்களின் பொறுப்பின் தன்மையும் அளவும் எத்தகையது என்பன போன்ற விடயங்களும் அடங்கியிருக்கின்றன.

எனவே துணை விதிகள் ஒவ்வொரு உறுப்பினரையும் கட்டுப்படுத்தும் ஒப்பந்தம் போன்றது. ஒவ்வொரு உறுப்பினரும் அவ்விதிகளைக் கைச்சாத்திட்டு ஏற்றுக் கொண்டாற் போன்ற சட்ட வலுவுடையது. இவ்விதிகள் தமக்குத் தெரியாதென்றோ விளக்கமில்லையென்றோ எவ்வுறுப்பினரும் கூற முடியாதபடி சட்டத் தத்துவமுடையது. எனவே ஒவ்வொரு உறுப்பினரும் துணை விதிகள் முழுவதையும் நன்ருக அறிந்திருத்தல் அவசியமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டம் விதிகளிலிருந்து துணை விதிகள் மாறுபட்டவை. கூட்டுறவுச் சட்டங்களும் கூட்டுறவு விதிகளும் தேசியப் பேரவையினால் நாடு முழுவதிலுமுள்ள பல்வேறு வகையான கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பொருந்தக் கூடிய வகையில் பொதுவாக ஆக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டவை. தேசியப் பேரவை அங்கீகரித்தவுடன் இவை பயனுள்ளவையாகக் கருதப்பட வேண்டியவை. ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் தமக்கெனத் தனித் தன்மை கொண்ட துணை விதிகளை ஆக்கி அக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச் சபையில் அங்கீகாரம் பெறல் வேண்டும். அவ்வாறு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு ஆணையாளரின் அங்கீகாரம் பெற்று பின்னரே அத்துணைவிதிகள் பயனுடைய தன்மையை அடையும்.

எனவே கூட்டுறவுச் சட்டம், கூட்டுறவு விதிகள் எல்லாச் சங்கங்களுக்கும் பொதுவானவை. துணை விதிகள் ஒவ்வொரு சங்கத்திற்கும் சிறப்பானவை. ஒருவகைச் சங்கத்தைச் சேர்ந்த இரு சங்கங்களின் துணை விதிகள் ஒரேமாதிரி இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. ஆயினும் சங்கங்களின் துணை விதிகளில் பல பொதுத் தன்மைகள் இருப்பதைக் காணமுடியும். ஒரேவகையைச் சேர்ந்த சங்கங்களின் துணைவிதிகளில் பொதுத் தன்மைகள் காணப்படுவது இயல்பு. ஏனெனில் துணைவிதிகள் சட்டம், விதிகளுக்கமைய ஆக்கப்படுவதால் அவற்றின் பொதுத் தன்மை துணைவிதிகளில் தோன்றுவது இயல்பு.

## மாதிரி துணை (உப) விதிகள்

துணை விதிகளை உருவாக்கும் அதிகாரமும் பொறுப்பும் உறுப்பினர்களுடையது. சங்கம் பதிவு செய்யப்படும் போது துணைவிதிகள் இருத்தல் வேண்டும். துணைவிதிகளை ஆக்குவதற்கு சட்ட அறிவும் விசேடமாக கூட்டுறவுச் சட்டம் - விதிகள் பற்றிய அறிவும் அனுபவமும் வேண்டும் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேரவுள்ள சாதாரண மக்களிடம் இவற்றை எதிர்பார்க்க முடியாது. இவற்றில் தேர்ச்சியும் அறிவும் பெற்றவர்களின் உதவியை நாடினாலும் சங்கத்திற்குப் பெரும் பணச் செலவு ஏற்படும். தயாரிப்பதற்கு நியாயமான காலதாமதமும் ஏற்படும். இவற்றைப் பொருட்படுத்தாது துணை விதிகள் தயாரிக்கப்பட்டாலும் இத்துணைவிதிகள் கூட்டுறவுச் சட்டம் விதிகளுக்கு முரணாகாமல் இருக்கின்றனவா என்பதைக் கூட்டுறவு ஆணையாளர் நுணுக்கமாகப் பரிசீலனை செய்ய நீண்டகாலம் எடுக்கும். எனவே காலதாமதத்தையும், பணச் செலவையும் ஏனைய கஷ்டங்களையும் நீக்கக் கூட்டுறவுத் திணைக்களம் ஒவ்வொரு வகைச் சங்கத்துக்கும் ஒவ்வொரு மாதிரி துணை (உப) விதிகளை ஆக்கி வைத்துள்ளது. இம்மாதிரி துணை (உப) விதிகளை அங்கத்தவர்கள் பொதுக் கூட்டத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் (ஆரம்பக் கூட்டம்) வாசித்து விளங்கி, அவசியமான சில திருத்தங்களை மட்டும் சேர்த்து ஆணையாளருக்கு அனுப்புவதால் சிரமங்களும் தாமதங்களும் பெருமளவு குறையும்.

## நடைமுறை விதிகள்

"ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கம் துணை விதிகளுக்கமைவாக அவசியமெனக் கருதும் அத்தகைய நடைமுறை விதிகளைக் காலத்துக்குக் காலம் செய்யலாம். அத்தகைய நடைமுறை விதிகள் நிருவாக சபையினையும் சங்கத்தின் ஒவ்வொரு அலுவலரையும், பணியாளரையும் கட்டுப்படுத்துவதாயிருத்தல் வேண்டும்." என 30-வது கூட்டுறவு விதி கூறுகின்றது. இந்நடைமுறை விதிகளை ஒவ்வொரு சங்கமும் தனது தேவைக்கேற்பத் தனித்தனியாக ஆக்குதல் வேண்டும். இவை நிருவாக சபை (இயக்குனர் குழு) க்கும் அலுவலர் பணியாளர்களுக்குமிடையேயுள்ள நிருவாகத் தொடர்புகளைத் தெளிவாக்குவதாகவும், வரையறுப்பதாகவும் அமைதல் வேண்டும். சங்கத்தின் நாளாந்தச் செயல்கள் சுமுகமாகவும் செம்மையாகவும் நடைபெற உதவ வேண்டும். இந்நடைமுறை விதிகள் பொதுச் சபையின் அங்கீகாரம் பெற்றதும் பயனுடையதாகுந் தன்மையைப் பெறும்.

## நீதிமன்ற தீர்ப்பு வழித் தொகுப்புச் சட்டங்கள்

கூட்டுறவுச் சங்கப் பிரச்சனைகள் பெரும்பாலானவை நீதிமன்றத்திற்குச் செல்லாமல் தீர்க்கப்படுவதற்குக் கூட்டுறவுச் சட்டங்களும் விதிகளும் வகை செய்கின்றன. சட்டங்களுக்குப் பொருள் கொள்ளும் வகையில் சில தீர்ப்புக்கள் உள்ளன. மத்தியஸ்த தீர்ப்பு சம்பந்தமான வழக்குத் தீர்ப்புகளும் உண்டு. சட்டம் விதிகள் மூலம் தீர்க்க முடியாத விடயங்களுக்கு தீர்ப்பு வழித் தொகுப்புச் சட்டம் பயன்படுத்தப்படலாம்.

## இயற்கை நீதிக் கோட்பாடுகள்

இயற்கை நீதிக் கோட்பாடுகள் கூட்டுறவுத்துறையில் பின்பற்றப்பட வேண்டிய சந்தர்ப்பங்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. பல விடயங்கள் சட்டங்களில் இடம் பெற்றிருப்பதே இதற்குக் காரணம். ஆயினும் சில சந்தர்ப்பங்களில் அவற்றைக் கடைப் பிடிப்பது அவசியமாகும். மத்தியஸ்த தீர்ப்பு, ஒழுக்காற்று விசாரணை போன்றவற்றில் சட்டத்தால் வரையறுக்கப்படாத புதுச் சூழ்நிலைகள் உருவாகக் கூடும். இவை நீதி சம்பந்தமான விடயங்கள். எனவே இவற்றில் இயற்கை நீதிக் கோட்பாடுகள் இடம் பெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொதுச் சட்டங்கள்**

ஒரு நாட்டின் பொதுச் சட்டங்கள் அந்நாட்டிலுள்ள சகலரும் சகல நிறுவனங்களும் பின்பற்ற வேண்டியவை. ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்கென தயாரிக்கப்பட்ட சட்டத்தில் விசேட ஏற்பாடுகள் செய்யப்படாத விடயங்களில் எல்லாம் அச் சங்கங்கள் நாட்டின் பொதுச் சட்டங்களையே பின்பற்ற வேண்டும். ஒவ்வொரு சங்கமும் ஈடுபடுந் தொழில் முயற்சிகளோடு தொடர்புடைய சட்டங்களைப் பின்பற்ற வேண்டும். விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம், நிறுத்தல் அளவைகள் சட்டம், உணவு - மருந்துப் பொருள்கள் சட்டம், உள்ளூராட்சி மன்றச் சட்டங்கள், ஒப்பந்தச் சட்டங்கள் போன்றவை தொழில் முயற்சி சம்பந்தமானவை. அதனைவிட குடியியல், குற்றவியல் சட்டங்களுக்கும் உட்பட்டே கூட்டுறவுச் சங்கங்களும் இயங்குதல் வேண்டும்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொதுவான செயற்பாடுகள்

**பதிவு**

கூட்டுறவுச் சங்கம் ஒன்று உருவாகி இயங்குகிறது என்பதற்குரிய சட்ட அங்கீகாரம் அதன் பதிவாகும். பதிவாளர் ஒருவரையும் சிரேட்ட உதவிப் பதிவாளர்களையும் நியமிப்பதற்குக் கூட்டுறவுச் சட்டத்தின் 2 [1] ம் பிரிவு வகை செய்துள்ளது. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராக நியமிக்கப்படுபவரே பதிவாளருக்குரிய அதிகாரங்களையும் தத்துவங்களையும் பிரயோகிக்கலாமென கூட்டுறவுச் சட்டத்தின் 2 (3) ஆம் பிரிவு கூறுகிறது.

**பதிவு செய்யக்கூடிய கூட்டுறவுச் சங்கங்கள்**

1. தனிப்பட்டவர்களின் பொருளாதார, சமூக அல்லது கலாச்சார அக்கறைகளைக் கூட்டுறவுக் கொள்கைகளுக்கிணங்க மேம்படுத்தலைக் குறிக்கோளாகக் கொண்ட சங்கங்கள்.

2. மேற்கூறப்பட்ட சங்கமொன்றின் தொழிற்பாட்டு முறைகளுக்கு வசதியளிக்கும் நோக்குடன் தாபிக்கப்பட்ட சங்கம்.

3. கூட்டுறவுக் கல்வியும் பயிற்சியும் ஏற்பாடு செய்வதற்காகவும் இலங்கையிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கான ஆலோசனைச் சேவைகள் ஏற்பாடு செய்வதற்காகவும், கூட்டுறவு இயக்கத்தை மேம்படுத்தலுக்கான வேறு சேவைகளை ஏற்பாடு செய்வதற்காகவும் தாபிக்கப்பட்டதும். பதிவு செய்யப்பட்ட சங்கங்களை உறுப்பினராகக் கொண்டதுமான ஒரு சங்கம்.

4. பதிவு செய்யப்பட்ட சங்கங்களை உறுப்பினராகக் கொண்டதும், இலங்கையில் அல்லது அதன் ஏதேனும் பாகத்தில் சந்தைப்படுத்தல், கைத்தொழில் கமத்தொழில், கடற்றொழில் அல்லது பதிவாளரினால் அங்கீகரிக்கப்படக் கூடிய அத்தகைய வேறு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனவான அத்தகைய கூட்டுறவுச் சங்கங்களின் முயற்சிகளைத் திட்டமிட்டு ஒருமுகப்படுத்தி வசதி செய்யும் நோக்கத்துக்காகத் தாபிக்கப்பட்டதுமான ஒரு சங்கம்.

பொறுப்பு வரையறையுடன் அல்லது பொறுப்பு வரையறையின்றிப் பதிவு செய்யப்படலாம். ஆயினும் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கமொன்றை உறுப்பினராகவுடைய சங்கமொன்றின் பொறுப்பானது வரையறுக்கப்பட்டிருத்தல் வேண்டும். (கூட்டுறவுச் சட்டம் 3) (1),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது வகைச் சங்கங்கள் ஆரம்பநிலை (முதனிலை)ச் சங்கங்களைக் குறிக்கும். இவ்வகையில் கடனுதவு சங்கங்கள், கூட்டுறவுப் பண்டகசாலைகள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற பல்வேறு வகைப்பட்ட சங்கங்கள் அடங்கும். இரண்டாவது வகை மாவட்ட ரீதியில் அல்லது வேறு ரீதியில் இணைக்கப்பட்ட இரண்டாம் நிலைச் சங்கங்களை (சமாசங்கள்)க் குறிக்கும்; கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் போன்றவை இப்பிரிவைச் சேர்ந்தவையாகும். மூன்றாவது வகையைச் சேர்ந்த சங்கம் இலங்கையில் உள்ள எல்லாக் கூட்டுறவு நிறுவனங்களையும் அங்கத்துவமாகக் கொண்ட தேசிய சங்கமாகும். இலங்கையில் ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையே இத்தகைய கூட்டுறவுச் சங்கமாகும். நான்காவது வகைச் சங்கங்கள் மாவட்ட சமாசங்களாகவோ அல்லது தேசிய ரீதியிலமைந்த தலைமைச் சங்கங்களாகவோ இருக்கலாம். வரையறுக்கப்பட்ட இலங்கை கூட்டுறவு சந்தைப்படுத்தல் சங்கம் (மாக்பெட்) வரையறுக்கப்பட்ட இலங்கைக் கைத்தொழிற் கூட்டுறவுச் சங்கம். வரையறுக்கப்பட்ட இலங்கை கூட்டுறவு மீன் விற்பனவுச் சங்கம் போன்றவை இப்பிரிவில் அடங்குபவையாகும்.

## பொறுப்பு

சங்கத்தில் உறுப்பினரின் பொறுப்பு இருவகைப்படும். அவை:

1. வரையறையற்ற பொறுப்பு.
2. வரையறுத்த பொறுப்பு.

## வரையறையற்ற பொறுப்பு

சங்கத்தின் கடன்களுக்குக் சங்கச் சொத்துகளிடமிருந்து தீர்வு செய்த பின்பும் கடன்கள் தீராது இருந்தால் சங்க உறுப்பினர்கள் தமது சொந்தச் சொத்துக்களிலிருந்து அக் கடன்களைத் தீர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் தன்மையே வரையறையற்ற பொறுப்பாகும்.

## வரையறுத்த பொறுப்பு

சங்கத்தின் கடன்களுக்கு ஒவ்வொரு உறுப்பினரும் எந்த அளவுக்குப் பொறுப்பு என்பதை உறுப்பினராகச் சேரும்போதே நிர்ணயித்துக் கொள்வதே வரையறுத்த பொறுப்பாகும். வரையறுத்த பொறுப்பு மூவகைப்படும். அவையாவன:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பங்கின் அளவுக்கு வரையறுக்கப்பட்ட பொறுப்பு.
2. பங்கின் மதிப்பைப் போல் பன்மடங்கு வரையறுக்கப்பட்ட பொறுப்பு.
3. உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட பொறுப்பு.

பங்கின் அளவுக்கு வரையறுக்கப்பட்ட பொறுப்பென்பது ஒரு உறுப்பினர் கொள்முதல் செய்த பங்கின் பெறுமதிக்கு மேல் சங்கத்தின் கடன்களுக்குப் பொறுப்பாக இருக்காத நிலையைக் குறிக்கும். ஒரு உறுப்பினர் தான் கொள்முதல் செய்யும் பங்கின் எத்தனை மடங்குக்குக் கடன்களுக்குப் பொறுப்பு எனத் துணை விதிகளில் குறிப்பிடப்பட்டிருப்பின் சங்கம் கலைக்கப்படும்போது அதன் கடன்களை இறுக்க பங்கைவிட குறிக்கப்பட்ட மேலதிகத் தொகையைத் தமது சொந்தப் பணத்திலிருந்து ஈடுசெய்தல் வேண்டும். இதுவே பங்கின் மதிப்பைப்போல் பன்மடங்கு வரையறுக்கப்பட்ட பொறுப்பாகும். சங்கம் கலைக்கப்படும்போது அதன் கடன்களைத் தீர்க்கச் சங்கப் பணம் போதாதுவிடின் ஒவ்வொரு உறுப்பினரும் ஆகக் கூடுதலாக எவ்வளவு பணம் தமது சொந்தப் பணத்தில் இருந்து கொண்டுவர வேண்டுமெனத் துணைவிதிகள் குறிப்பிடின் அது உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட பொறுப்பாகும்.

## பதிவுக்கு விண்ணப்பித்தல்

கூட்டுறவுச் சங்கமொன்றைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் பற்றிக் கூட்டுறவுச் சட்டம் (5)ம் விதி (2-)ம் கூறுகின்றன. ஒரு சங்கத்தைப் பதிவு செய்வதற்காக பதிவாளரால் விதிக்கப்படும் படிவத்தில் விண்ணப்பஞ் செய்யப்படுதல் வேண்டும். சங்கத்தின் ஆதி உறுப்பினர்கள் எல்லோராலும் அப்படிவத்தில் கையொப்பமிடல் வேண்டும்.

**விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்பட வேண்டியன:**

1. சங்கம் பதிவு செய்யப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்ட ஆரம்பக் கூட்டத்தின் அறிக்கைப் பிரதி;
2. ஆரம்பக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சங்கத் துணை விதிகளின் இரு பிரதிகள்.
3. துணைவிதிகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதி.
4. சங்கத்தின் தொழிற் பரப்பைக்காட்டும் படம்.
5. சங்கத்தின் இயலுந் தன்மைபற்றிய பொருளாதாரக் கூற்று.
6. பங்குப்பணம், பிரவேசப் பணம் என்பன பெறப்பட்டிருப்பின் அதன் வரவு செலவு அறிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணப்பத்துடன் இவற்றையும் அப்பகுதிக் கூட்டுறவு அபி விருத்தி உத்தியோகத்தரின் அறிக்கையையும் பதிவாளருக்கு அனுப்புதல் வேண்டும். தனியாட்களை மட்டும் உறுப்பினராகக் கொண்ட கூட்டுறவுச் சங்கத்தின் பதிவு விண்ணப்பத்தில் பத்துப் பேருக்குக் குறையாதவர்கள் கையொப்பமிடல் வேண்டும். இத்தொகையே ஆட்களை மட்டும் உறுப்பினராகக் கொண்ட கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பிப்பதற்கும் குறைந்தளவு (இழிவெல்லை) உறுப்பினர் தொகையாகும். சட்டம், விதி சங்க உறுப்பினரின் மேலெல்லையைக் கட்டுப்படுத்தவில்லை. பதிவு செய்யப்பட்ட சங்கங்களை உறுப்பினர்களாகக் கொண்ட சங்கமாயின் உறுப்புரிமைச் சங்கங்கள் ஒவ்வொன்றினாலும் அதிகாரமளிக்கப்பட்ட ஒவ்வொரு ஆளும் பதிவு விண்ணப்பப் படிவத்தில் கையொப்பமிடல் வேண்டும். பதிவு செய்யப்பட்ட சங்கங்களை உறுப்பினராகக் கொண்ட சங்கங்களைப் பதிவு செய்யும் விண்ணப்பப் படிவத்தில் கையெழுத்திட வேண்டியவர்களின் குறைந்தளவு உறுப்பினர் (இழிவெல்லை) தொகை சட்டம் விதிகளில் குறிப்பிடப்படவில்லை. தனியாட்களையும் பதிவு செய்யப்பட்ட சங்கங்களையும் உறுப்பினர்களாகக் கொண்ட சங்கமாயின் உறுப்புரிமைச் சங்கங்களினால் அதிகாரமளிக்கப்பட்ட ஒவ்வொரு ஆளும் தனியாள் உறுப்பினரில் பத்துப் பேரும், தனியாள் உறுப்பினர் பத்து பேருக்குக் குறைவாயின் எல்லா உறுப்பினராலும் பதிவு விண்ணப்பத்தில் கையொப்பமிடல் வேண்டும். பதிவு விண்ணப்பத்தில் கையொப்பமிடுபவர்களையே ஆதி உறுப்பினர் என அழைப்பர்.

## பதிவு செய்தலின் அத்தாட்சி

பதிவாளர் கூட்டுறவுச் சங்கத்தைப் பதிவு செய்தலைப் பற்றி சட்டம் (6)ம் விதி (4)ம் கூறுகின்றன. பதிவாளர் சட்டம், விதி பொருளாதார இயலுந்தன்மை ஆகியவற்றில் அச்சங்கம் சம்பந்தப்பட்ட வரையில் திருப்தியுறின் சங்கத்தையும் துணைவிதிகளையும் பதிவு செய்வார். பதிவு செய்தலுக்கு முடிவான அத்தாட்சி பதிவாளரினால் கையொப்பமிட்டு வழங்கப்படும் பதிவுச் சான்றிதழாகும். பதிவுச் சான்றிதழும் பதிவாளரினால் கையொப்பமிடப்பட்ட துணைவிதிகளின் பிரதியொன்றும் பதிவுக்கு அத்தாட்சியாகச் சங்கத்துக்கு அனுப்பப்படல் வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்வதற்கு எவ்வித கட்டணமும் அறவிடப் படுவதில்லை.

சட்டம் விதிகளுக்கு முரண்பட்டதெனவும், பொருளாதார இயலுந் தன்மையற்றதெனவும் பதிவாளர் கருதினால் அமைச்சருக்கு எழுத்து மூலம் மேன்முறையீடு செய்யலாம் என்ற நிபந்தனையுடன் ஒரு சங்கத்தின் பதிவை மறுக்கலாம். அவ்விதம் மறுக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது பதிவு கோரி விண்ணப்பித்தவருள் எவரேனும் ஒருவர், பதிவு மறுப்பு அறிவித்தல் கிடைத்த ஒரு மாதத்துக்குள் எழுத்து மூலம் அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யலாம். அமைச்சரின் முடிவே இறுதி முடிவாக இருத்தல் வேண்டும். உறுப்புரிமை மேன் முறையீடுபற்றி விதி *(3)* கூறுகிறது.

சங்கத்தின் உறுப்பினர்களை இருவகையாகப் பிரிக்கலாம். அவை யாவன:

1. ஆதி அங்கத்தவர்கள் (பதிவு கோரும் விண்ணப்பத்தில் கையொப்பமிட்டவர்கள்)
2. பதிவு செய்தபின் சேர்க்கப்படும் அங்கத்தவர்கள்

இன்னொரு வகையாகவும் பிரிக்கலாம். அவையாவன:

1. பதிவு செய்யப்பட்ட சங்கங்கள்
2. தனியாட்கள்

பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் துணைவிதிகள் விதிக்கலாகும் நிபந்தனைகளுக்கமைவாகவே அச்சங்கத்தில் உறுப்பினர்கள் சேர்க்கப்படல் வேண்டுமென விதி (5) கூறுகிறது. ஆயினும் கூட்டுறவுச் சட்டம் (4) உறுப்பினருக்கு இருக்க வேண்டிய இரு தகமைகள் பற்றிக் கூறுகின்றன. சட்டம் விதித்த உறுப்புரிமைத் தகமைகள் எல்லா வகைக் கூட்டுறவுச் சங்கத்துக்கும் பொதுவானவை. அவற்றோடு ஒவ்வொரு வகைச் சங்கமும் தமக்குத் தேவையானதும் பொருத்தமுமான நிபந்தனைகளைத் துணை விதிகளில் சேர்த்துக் கொள்ளலாம். கூட்டுறவுச் சட்டம் விதித்த உறுப்புரிமைத் தகமைகளை இருவகையாகப் பிரிக்கலாம். அவையாவன:

1. வயதுத் தன்மை  2. வதிவிடத் தகமை

**வயதுத் தகமை:** ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகச் சேருபவருக்குப் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டிருத்தல் வேண்டும்.

**வதிவிடத் தகமை:** சங்கத் தொழிற்பாட்டு இடப் பரப்பினுள் வதிபவராக அல்லது தொழில் புரிபவராக அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருப்பவராக இருத்தல் வேண்டும்.

வயதுத் தகமை, வதிவிடத் தகமை பற்றி ஏதேனும் பிரச்சினை எழுமிடத்து பதிவாளரினால் தீர்மானிக்கப்படும் முடிவே இறுதியானது; சங்கங்கள், உறுப்பினராகச் சேருவதற்கு பதிவு செய்யப்பட்டிருத்தலும் தொழிற் பரப்பினுள் இருப்பதும் முக்கியமான நிபந்தனைகளாகக் கருதப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று வேறு ஏதேனும் பதிவு செய்யப்பட்ட சங்கத்தினை துணைவிதிகள் விதிக்கலாகும். நிபந்தனைகளுக்கமைவாக உறுப்பினராக அனுமதிக்கலாம் என விதி (6) கூறுகின்றது.

## உறுப்புரிமை முடிவு

உறுப்புரிமை முடிவை இரு அம்சங்களாகப் பிரிக்கலாம். அவை யாவன: 1. விலகல் 2. விலக்கல்

விலகல் பற்றி கூட்டுறவு விதிகள் (7) கூறுகிறது. ''பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் உறுப்பினர் எவரேனும் அச்சங்கத்துக்குக் கடனாளியாய் அல்லது தீர்க்கப்படாத கடனுக்குப் பிணையாயிராவிடின் காரியதரிசிக்கு எழுத்தில் ஒருமாத அறிவித்தல் கொடுத்துச் சங்கத்தினின்றும் விலகலாம்'' என இவ்விதி கூறுகிறது.

விலக்கல் பற்றி கூட்டுறவு விதிகள் (8) (9) கூறுகின்றன. ''பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் துணைவிதிகள் விதிக்கலாகும் நியாயத்துக்கும் அதில் கொடுக்கப்பட்டுள்ள முறைப்படியும் எவரேனும் உறுப்பினர் சங்கத்தினின்றும் அகற்றப்படலாம்.'' எனக் கூட்டுறவு விதி (8)ம் ''சங்கத்தின் துணைவிதியால் விதிக்கப்பட்ட தகுதியுடைமையை இழந்த, பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் உறுப்பினர் எவரேனும் அச்சங்கத்தின் உறுப்பினராகத் தொடர்ந்திருக்க முடியாது. சங்கத்தின் நிருவாக சபை அவருடைய பெயரை உறுப்பினர் இடாப்பில் இருந்து உடனே நீக்குவதற்கு ஏற்ற நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.'' எனக் கூட்டுறவு விதி (9)ம் கூறுகின்றன. எனவே உறுப்பினரை விலக்கல் பற்றி துணைவிதிகளே விபரமாக ஆக்கப்பட்டிருத்தல் வேணடும். எனவே உறுப்பினர்களை விலக்கலுக்குரிய காரணங்கள், விலக்கும் முறைகள், விலக்கலுக்கு எதிரான முறையீடுகள், முறையீடுகளை முடிவு செய்தல் போன்ற விடயங்கள் பற்றித் தெளிவாகவும் விபரமாகவும் விதிகளுக்கு முரண்பாடில்லாமலும் துணைவிதிகள் ஆக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

உறுப்பினர் விலக்கல் பற்றிய காரணங்கள் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பொருந்தக் கூடிய பொதுக் காரணங்களும் ஒவ்வொரு வகைக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மட்டும் பொருந்தக் கூடிய சிறப்புக் காரணங்களும் இருக்கும். சித்த சுயாதீனமற்றவராயிருத்தல், வதிவிடத் தகமை இழத்தல், கடனிறுக்கத் தகுதியற்றவரெனத் தீர்ப்புப் பெறல், மரணம் போன்றவை பொதுக் காரணங்களாக அமையும், உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் குறிப்பிட்ட உற்பத்தித் தொழிலைச் செய்யாதுவிடல், தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களில் வேலை செய்

Digitized by Noolaham Foundation:
noolaham.org | aavanaham.org

யக்கூடிய இயலுந் தன்மையை இழத்தல் போன்றவை சிறப்புக் காரணங்களாக அமையலாம். விலக்கும் முறைகளில் எழுத்து மூலம் காரணங்கள் கேட்டல், அல்லது விசாரணை நடத்தல் போன்றவையும், உறுப்பினர் தாம் விலக்கப்பட்டதை ஆட்சேபித்து முறையீடு செய்வதற்குரிய முறை, இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகார உரிமை எவருக்கு, தீர்மானம் எடுக்கும்போது விலக்கப்பட்ட உறுப்பினர் கலந்து கொண்டு தனது நியாயங்களை எடுத்துக் கூறச் சந்தர்ப்பம் அளித்தல், அல்லது எழுத்து மூலமாக அவர் கொடுத்த விளக்கங்களை வைத்துத் தீர்மானித்தல் போன்ற விடயங்கள் துணைவிதிகளில் தெளிவாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

## பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் சிறப்புரிமைகள்

1. "சங்கத்தைப் பதிவு செய்தலானது இடையறு வழியுரிமையுடனும் பொது இலச்சினை ஒன்றுடனும் கூடியதாகவும், ஆதனம் வைத்திருக்க, ஒப்பந்தங்கள் செய்து கொள்ள, வழக்குகள் வேறு சட்ட நடவடிக்கைகள் என்பன தொடரவும், எதிர்வாதிடவுமான தத்துவத்துடன் கூடியதாகவும், அத்துடன் அதன் அமைப்பு நோக்கத்துக்காக அவசியமான எல்லா விடயங்களையும் செய்வதற்கான தத்துவம் கொண்டதாகவும், அது பதிவு செய்யப்பட்ட பெயரில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாக அதனை ஆக்குவதாதல் வேண்டும்" என (20) ஆம் கூட்டுறவுச் சட்டம் கூறுகிறது. எனவே சட்டம் தனி மனிதனுக்குள்ள உரிமை, சுதந்திரம், கடமை ஆகியவற்றை அளிக்கின்றது.

2. "கூட்டுறவு" என்னும் பதத்தைப் பாவிக்கும் உரிமை பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கே தனிச் சிறப்புரிமையாகும். கூட்டுறவுச் சட்டத்தின் 65ன் (1) ஆம், (2) ஆம் பிரிவுகள் இதைப் பற்றிக் கூறுகின்றன. Co-operative என்னும் ஆங்கிலப் பதத்தையோ "சமுபகார," "எக்சத் சஹகார" என்னும் சிங்களப் பதங்களையோ அல்லது "ஐக்கிய", "கூட்டுறவு" என்னும் தமிழ்ப்பதங்களையோ பாகமாயமைத்த மகுடப் பெயரின் கீழ் வியாபாரம் அல்லது தொழில் கொண்டு நடத்தலாகாது. 1921-ம் ஆண்டு செப்டம்பர் 21-ம் திகதிக்கு முன் இச் சொற்களைப் பயன்படுத்தி வந்த நிறுவனங்களுக்கு விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது. இச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக நடக்கும் எவருக்கும் நீதிமன்றமொன்றின் சுருக்க விசாரணையின் பின் 500 ரூபா வரை குற்றப்பணம் விதிக்கலாம். குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் தவறு தொடர்ந்து புரியப்படுமிடத்து ஒவ்வொரு நாளுக்கும் 50 ரூபா கொண்ட மேலுமொரு குற்றப் பணத்திற்கு ஆளாதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கூட்டுறவுச் சங்கங்கள் முத்திரை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி கூட்டுறவுச் சட்டம் 35-ஆம் பிரிவு கூறுகிறது.

4. கம்பனிகள் கட்டளைச் சட்டமும் தொழிற் சங்கங்களின் கட்டளைச் சட்டமும் அதன் திருத்தங்களினதும் ஏற்பாடுகள் கூட்டுறவுச் சட்டத்தின் கீழ்ப்பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்கு ஏற்புடையதாகாது என்பதை கூட்டுறவுச் சட்டத்தின் 69-ம் பிரிவு கூறுகிறது.

5 முறையாகச் சேர்க்கப்பட்ட உறுப்பினரொருவர் பராயமடையாமை அல்லது வயதுக் குறைவு என்பதைக் காட்டிச் சங்கத்தின் மீது தமக்குள்ள பொறுப்புகளிலிருந்து நீங்கிக் கொள்ளமுடியாது. முதன்மையாளராகவோ பிணைகாரராகவோ சங்கத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களைத் தவிர்த்துக் கொள்ளமுடியாது. இதுபற்றிக் கூட்டுறவுச் சட்டம் (13) கூறுகிறது.

6. சங்க உறுப்பினர், கடந்தகால உறுப்பினர், இறந்த உறுப்பினர் ஆகியோரின் பங்குகள் அல்லது வேறு அக்கறைகளை அச் சங்கத்தின், அவரின் வருமதிகளுக்கு அல்லது வேறு சங்கங்களுக்கு அவ்வுறுப்பினர் செலுத்த வேண்டிய தொகைக்கு அல்லது ஒரு சங்கத்தின் ஒழிப்போனுக்குச் செலுத்தவேண்டிய தொகைக்குப் பதிலீடு செய்யலாம் அல்லது செலுத்தலாம். இது பற்றிக் கூட்டுறவுச் சட்டம் (25) கூறுகிறது.

7. பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்க உறுப்பினரொருவரின் பங்குகள், உதவு தொகைகள், வேறு அக்கறைகள் அவ்வுறுப்பினர் வெளியில் பெற்ற கடன்களுக்காக அல்லது வேறு பொறுப்புக்களுக்காக நீதிமன்ற மூலம் நடுக்கட்டலுக்கோ விற்பனைக்கோ இலக்காகாது இருக்கக் கூட்டுறவுச் சட்டம் வகை செய்கின்றது. கூட்டுறவுச் சட்டம் (26) இதுபற்றிக் கூறுகின்றது.

8. பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கமொன்று பராயமடையாதவர்களிடமிருந்து அவர்களின் நன்மைக்காக வைப்புக்களைப் பெறவும் அதன் வட்டியை அல்லது திரண்ட வைப்புத் தொகையை பராயமடையாதவர்களுக்கு அல்லது அவரின் பாதுகாவலருக்கு வழங்க, பராயமடையாதவரால் அல்லது பாதுகாவலரினுல் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு அப்பொறுப்பினை அகற்றுஞ் சாதனமாக அமைய கூட்டுறவுச் சட்டத்தின் 28 (1), (2) ஆம் பிரிவுகள் வழி செய்கின்றன.

9. கடந்த கால உறுப்பினர் ஒருவர் உறுப்பினராக விளங்கிய திகதியில் இருந்து இரண்டு ஆண்டுகளுக்கு அவரின் சொத்துக்கள் சங்கக் கடன்களுக்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டும். இறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினரின் சொத்துக்களும் இறந்த திகதியில் இருந்து இரு ஆண்டு களுக்குச் சங்கக் கடன்களுக்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டும். கூட்டுறவுச் சட்டம் 29 (1), (2) என்பன இது பற்றிக் கூறுகின்றது.

10. சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான காணி, கட்டிடங்களை காணி கொள்ளற் சட்டத்தின் கீழ் கொள்வ னவு செய்விக்கலாம். இது பற்றி கூட்டுறவுச் சட்டம் 34 (1), (2) கூறுகின்றது.

11. துணைவிதிகள் ஆக்கப்படவேண்டுமென்று ஏதேனும் விதியி னுல் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் ஆக்கப் பட்ட துணைவிதியெதுவும், வியாபாரக் கட்டுப்பாட்டை உள்ளடக் கும் ஒப்பந்தம் ஒன்ருக அத்தகைய துணைவிதி இருக்கின்றதென்ற காரணத்தால் மட்டும் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தலாகாது. இதுபற்றிக் கூட்டுறவுச் சட்டம் (37) கூறுகிறது.

12. உறுப்பினர் எவரேனும் துணைவிதிகளை மீறுவதற்காக அவர் கள் மீது குற்றப்பணம் விதிப்பதற்குரிய தத்துவம். இதுபற்றிக் கூட்டுறவுச் சட்டம் 38 (அ) (ஆ) கூறுகின்றது.

13. கூட்டுறவுச் சங்கத்தின் நிதிகளைத் தகுந்தவர்களிடம் முத லீடு செய்வதற்குரிய தத்துவம். இதுபற்றிக் கூட்டுறவுச் சட்டம் 42 (1) (2) கூறுகின்றது. கூட்டுறவு விதி 36-ம் இதுபற்றிக் கூறு கிறது.

14. கூட்டுறவுச் சங்கங்களுக்காக சங்க அலுவலர்களினுல் செய்யப் படும் ஒப்பந்தங்கள், அவ்வலுவலரின் நியமனத்திலுள்ள ஏதேனும் குறைபாடு அல்லது தகுதியின்மை காரணமாக செல்லுபடியற்ற தாக்குவதற்கு அல்லது தவிர்ப்பதற்கு முடியாது. இதுபற்றிக் கூட் டுறவுச் சட்டம் (13) கூறுகிறது.

15. கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர் இடாப்பு, உறுப்பின ரின் சேர்வுத் தேதி, இல்லாதொழிந்த தேதி ஆகிய விபரங்கள் எதற் கும் முதற்ருேற்றச் சான்ருக அமையும். இதுபற்றிக் கூட்டுறவுச் சட்டம் (30) கூறுகிறது.

16. கூட்டுறவுச் சங்கப் புத்தகங்களிலுள்ள ஏதேனும் பதிவு, விதிகளினுல் விதிக்கப்படக் கூடிய முறையில் அப்பதிவின் பிரதி யொன்று சட்டமுறை நடவடிக்கையில் முன்னேற்றச் சான்ருக அமையும். சங்கம் திறத்தவராயிராத சட்டமுறை நடவடிக்கையில் நீதிமன்றம் சிறப்பான காரணங்களுக்காகப் பணித்தாலன்றி, சங் கத்தின் புத்தகங்கள் ஏதேனும் உள்ளீடுகளைக் கொணரும்படியோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்பிப்பதற்காகச் சாட்சி ஒருவராகத் தோன்றும்படியோ கட்டாயப்படுத்தலாகாது. இதுபற்றிக் கூட்டுறவுச் சட்டம் 31 (1) (2) கூறுகிறது.

17. கூட்டுறவுச் சங்கம் ஒன்று அதன் நோக்கங்களுக்காக அசைவுள்ள அசைவற்ற சொத்துக்களைக் கொள்வனவு செய்ய, நன்கொடையாகப் பெற அல்லது வேறு வகையில் பெறவும், விற்க, ஈடு வைக்க அல்லது குத்தகைக்கு விடவும் உரிமையுண்டு. இதுபற்றிக் கூட்டுறவுச் சட்டம் (33) கூறுகிறது. பொதுச் சபையின் அங்கீகாரமின்றியும் பதிவாளரிடமிருந்து முன்னர் எழுத்தில் பெறப்பட்ட அங்கீகாரமின்றியும் வியாபாரப் பொருள் இருப்புத் தவிர ரூபா 5000 அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதியுடைய அசைவுள்ள அசைவற்ற சொத்தினைக் கொள்முதல் செய்தல்' விற்பனை செய்தல் ஆகாது எனக் கூட்டுறவு விதிகள் 48 (1) (2) கூறுகின்றன.

18. கூட்டுறவுச் சங்கத் தொழிற்பாடுகள் சம்பந்தமாக ஏதாவது பிணக்குகள் ஏற்பட்டால் அதுபற்றிப் பதிவாளருக்கு மனுச் செய்தல் வேண்டும். அதை அவர் தீர்க்கலாம். அல்லது நடுத்தீர்ப்பாளர்களுக்கு ஆற்றுப்படுத்தலாம். இதுபற்றிக் கூட்டுறவுச் சட்டம் 58 (1) (2) (3) (4) (5) (6) (7) (8) (9) கூறுகிறது.

19. கூட்டுறவுச் சங்கத்திற்கு அல்லது சங்கத்திற்கூடாக விளைபொருள்களை அதன் உறுப்பினர்கள் விற்பனை செய்தல் வேண்டும் என்று கட்டாயப் படுத்தும் அல்லது துணைவிதிகளை மீறியமைக்காக பொருந்திய அல்லது மதிப்பிடப்பட்ட நட்டவீட்டுத் தொகையொன்றைச் செலுத்தும்படி, துணைவிதி மூலம் ஏற்பாடு செய்து அறவிடலாம். இதுபற்றிக் கூட்டுறவுச் சட்டம் 21 (1) (2) (3) (4) (5) கூறுகிறது.

20. குறிப்பிட்ட கூட்டுறவுச் சங்கத்துக்குக் குறிப்பிட்ட தொழிற் பரப்பில் வசிக்கும் உறுப்பினரல்லாதோரைக் கூடக் குறிப்பிட்ட கூட்டுறவுச் சங்கத்துக்கே கட்டாயமாக விற்பனை செய்யவேண்டுமென அமைச்சர் கட்டளையிடலாம். அதுபற்றிக் கூட்டுறவுச் சட்டம் 22 (1) (2) (3) (4) (5) (6) (7) (8) (9) (10) (11) விரிவாகக் கூறுகிறது.

21. கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர் ஒருவர் இறந்தால் விதிகளுக்கிணங்கப் பெயர் குறிக்கப்பட்டு நியமிக்கப்பட்ட ஆளுக்கு அல்லது பின் உரித்தாளருக்கு அல்லது சட்டமுறைப் பிரதிநிதிக்கு அவரின் பங்கை அல்லது வேறு அக்கறையை மாற்றலாம், அல்லது விதிகள் துணைவிதிகளுக்கிணங்க அவற்றின் பெறுமதிக்குச் சமமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகையொன்றைக் கொடுக்கலாம். இது பற்றிக் கூட்டுறவுச் சட்டம் 27 (1) (2) (3)ம், விதி 13-ம் கூறுகின்றன.

**பங்குகள்**

ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் மூலதனக் கூறுகளே பங்குகள். சங்க உறுப்பினராவதற்கு ஒருவர் துணைவிதி குறித்த பெறுமதிப் பங்கை அவ்விதி கூறும் முறையில் கொள்முதல் செய்யப்பட வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களின் பங்குகளின் பெறுமதிக்கு சட்டம், விதிகள் மேலெல்லை விதிக்கவில்லை. ஆனால் உறுப்பினர் கொள்முதல் செய்யும் பங்கின் தொகைக்கு மேலெல்லை விதிக்கப்பட்டுள்ளது. சங்கத்தின் பங்குமுதலில் $\frac{1}{5}$ பாகத்திற்கு மேற்பட்ட தொகையை ஒரு உறுப்பினர் வைத்திருத்தலாகாது என விதி (14) வரையறை செய்கிறது.

பொறுப்பு வரையறுக்கப்பட்ட சங்கமொன்றின் உறுப்பினர் ஒருவர் வேறு ஒரு உறுப்பினருக்கு தனது பங்குகள் முழுவதையுமோ அல்லது பகுதியையோ மாற்றஞ் செய்யலாம். ஆனால் அவ்வுறுப்பினரின் பங்குகளின் மொத்தப் பெறுமதி கூட்டுறவு விதிகளினால் விதிக்கப்படக் கூடிய மேலெல்லைக்கு அமைவாக மாற்றுதல் வேண்டும். இறந்த உறுப்பினர் ஒருவரின் பின்னுரித்தாளரின் பங்குகள் விடயத்திலும் இவ்விதி கடைப்பிடிக்கப்படல் வேண்டும். மாற்றப்படும் பங்கின் பெறுமதி துணைவிதிகள் வேறுவிதம் விதித்தாலன்றி அவ்வுறுப்பினர் குறித்த பங்குக்குக் கொடுத்த தொகையாக இருத்தல் வேண்டும்.

வரையறுக்கப்படாத சங்கமாயின் உறுப்பினர் ஒருவர் ஒரு வருட காலத்துக்குக் குறையாது வைத்திருந்த பங்கினைச் சங்கத்திற்கு அல்லது சங்க உறுப்பினருக்கு அல்லது உறுப்பாண்மைக்கான விண்ணப்பம் நிருவாகக் குழுவினால் ஏற்கப்பட்ட ஒருவருக்கு மட்டுமே மாற்றஞ் செய்ய முடியும். சட்டம் 17 விதி 13 (5) 14 என்பன இவைபற்றி விரிவாகக் கூறுகின்றன. கூட்டுறவுச் சங்கம் பங்குகளைக் கொள்முதல் செய்வதாயின் தமது இலாபத்தில் இருந்து பங்குமாற்று நிதியொன்றை ஏற்படுத்தி அந்நிதி மூலம் கொள்முதல் செய்தல் வேண்டும்.

**கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்றிணைதல், பிரிதல் சொத்துக்கள் பொறுப்புக்களை மாற்றுதல்.**

(1) ஒரு பதிவுபெற்ற கூட்டுறவுச் சங்கம் தனது சொத்துக்களையும் பொறுப்புக்களையும் இன்னொரு கூட்டுறவுச் சங்கத்திற்கு முழுதாகவோ அல்லது பகுதியாகவோ மாற்றுவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) ஒரு பதிவு பெற்ற கூட்டுறவுச் சங்கம் தன்னைத்தானே இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சங்கங்களாகப் பிரித்துக் கொள்வதற்கு

(3) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பதிவுபெற்ற கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்ருக இணைவதற்கு

குறித்த விடயம் சம்பந்தமாக ஆணையாளரின் முன் அனுமதி பெறப்பட்ட பொதுக் கூட்டத்தில் சமூகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள அங்கத்தவர்களில் ⅔ பகுதியினரின் வாக்குகள் பெற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்படல் வேண்டும்.

கூட்டுறவுச் சங்கப் பொதுக் கூட்டத்தில் தீர்மானங்கள் பற்றிய முழு விபரங்களையும் தெளிவாக வரையறுத்து ⅔ பெரும்பான்மையால் நிறைவேற்றப்படல் வேண்டும். தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் சங்க அங்கத்தவர்கள் அனைவருக்கும் சங்கத்துக்குக் கடன் கொடுத்தோர் இருந்தால் அவர்களுக்கும் தீர்மானத்தை எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும். எழுத்து மூலம் அறிவித்தல் பெற்ற உறுப்பினர், கடன் கொடுத்தோர் தமது பங்கை அல்லது கடன்களை அல்லது வைப்புக்களை மீளப்பெறும் விருப்பத்தை ஒரு மாத காலத்துக்குள் தெரிவித்தல் வேண்டும். எவ்வித அறிவித்தலும் கொடுக்காதுவிடின் தீர்மானம் பற்றிய சகல நிபந்தனைகளையும் ஏற்றுக் கொண்டதாகவே கருதப்படல் வேண்டும். இவை பற்றிக் கூட்டுறவுச் சட்டம் 9 (1) (2) (3) (4) (5) (6) கூறுகின்றது.

பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கமொன்றின் சொத்துக்கள் பொறுப்புக்கள் முழுவதும் இன்னெரு கூட்டுறவுச் சங்கத்திற்கு மாற்றப்படுமிடத்து முன்னைய சங்கத்தின் பதிவானது நீக்கஞ்செய்யப்படுவதுடன் அச்சங்கம் கலைக்கப்பட்டதாகவும் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்ருக இல்லாததாகவும் ஆக்கப்படுதல் வேண்டும்.

பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டு அல்லது அதற்கு அதிகமான சங்கங்கள் ஒரு புதிய சங்கமாக ஒன்றிணையும் போது ஒன்றிணைக்கப்பட்ட சங்கங்களின் பதிவானது புதிய சங்கம் பதிவுசெய்யப்பட்டவுடன் பதிவழிக்கப்பட்டதாகவும், கலைக்கப்பட்டதாகவும் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்ருக இல்லாதொழிக்கப்பட்டதாகவும் வேண்டும்.

பதிவுபெற்ற கூட்டுறவுச் சங்கம் இரண்டு அல்வது அதற்கு அதிகமாகப் பிரியுமிடத்து சங்கத்தின் பதிவானது புதிய சங்கங்கள் பதிவு பெற்றதும் பதிவழிக்கப்பட்டதாகவும் கலைக்கப்பட்டதாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்றாக இல்லாதொழிக்கப்பட்டதாகவும் வேண்டும். இவைபற்றி கூட்டுறவுச் சட்டம் 10 (1) (2) (3) கூறுகின்றது.

**கணக்காய்வு**

ஒவ்வோராண்டிலும் ஆகக் குறைந்தது ஒருமுறையாவது பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு சங்கத்தினதும் கணக்குகளைப் பதிவாளர் அல்லது அதற்கென அவரால் எழுத்தில் பொதுவாக அல்லது சிறப்பான கட்டளையினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு ஆளால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமெனக் கூட்டுறவுச் சட்டம் 44 (1) கூறுகிறது.

**கணக்காய்வு செய்ய அதிகாரமுள்ளவர்கள்**

1. பதிவாளர்
2. பதிவாளரால் அதிகாரமளிக்கப்பட்ட கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் அலுவலர்
3. பதிவாளரினால் நியமிக்கப்பட்ட, உறுதிப்படுத்தப்பட்ட கணக்காய்வாளர்

**உறுதிப்படுத்தப்பட்ட கணக்காய்வாளர் என்பது**

1. பட்டயம் பெற்ற கணக்காளர் அல்லது பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவனம்
2. பதிவாளரால் பேணி வரப்படும் கணக்காய்வாளர் குழு அட்டவணையில் பெயர் உள்ளடக்கப்பட்டுள்ள ஒருவர் அல்லது சபை என விதி 41 (1) கூறுகிறது.

**கணக்காய்வு முறை**

முன்னைய கணக்காய்வின் இறுதித் திகதியில் ஆரம்பித்துக் கணக்காய்வுக்கு உடனடி முன்னதாகவுள்ள நிதியாண்டின் கடைசித் திகதி வரை செய்யப்படல் வேண்டும். அல்லது பதிவாளர் பணிப்பதற்கமைய அவரால் குறிக்கப்படும் அத்தகைய மற்றைய திகதி வரை செய்யப்படல் வேண்டுமென விதி 41 (2) கூறுகிறது.

கணக்காய்வானது காலந்தப்பிய கடன்களினதும் (எவையேனுமிருப்பின்) சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் பெறுமதியை மதித்தலையும் சரி பிழை பார்த்தலையும் உள்ளடக்குதல் வேண்டுமெனச் சட்டம் 44 (2) கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்காய்வாளர் பதிவாளரால் குறிப்பிடப்படும் முறையில் கணக்காய்வு அறிக்கையொன்றினை இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அறிக்கையானது ஏனையவற்றுடன் பின்வரும் தகவல்கள் அடங்கிய கூற்றினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) அவரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டபடி சகல தகவல்களையும் பெற்றுள்ளாரா

(ஆ) கணக்குப் புத்தகங்கள் சரியாக வைக்கப்பட்டு வந்துள்ளனவா

(இ) கணக்குப் புத்தகங்களுடன் ஐந்தொகையும் இலாபநட்டக் கணக்கும் ஒத்துள்ளதா என விதி 41 (4)ம் பதிவாளரினால் விதிக்கலாகும் அத்தகைய சகல அட்டவணைகளையும் கணக்காய்வாளர் தனது கணக்காய்வு அறிக்கையுடன் இணைத்தல் வேண்டுமென விதி 41 (5) ம் சங்கத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையுடன் கணக்காய்வுச் சான்றிதழ் ஒன்றினையுஞ் சமர்ப்பித்தல் வேண்டுமென விதி 41 (6)ம் கூறுகின்றன.

## பதிவாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட கணக்காய்வாளருக்குள்ள அதிகாரங்கள்:

1. சங்கத்தின் கொடுக்கல் வாங்கல் பற்றி அல்லது அலுவல்களின் முகாமை பற்றி தகவல்கள் கொடுக்கக்கூடிய சங்கத்தின் கடந்த கால அல்லது தற்கால அலுவலரை, முகவரை, சேவையாளரை அல்லது உறுப்பினரை அல்லது வேலையாளைக் கட்டளையிட்டழைத்தல்.

2. கணக்காய்வு சம்பந்தமான புத்தகங்கள், பத்திரங்கள், ஆவணங்கள் அல்லது சங்கத்துக்குச் சொந்தமான பணம், பிணைகள், ஆதனங்கள் என்பவற்றை வைத்திருக்கும் கடந்தகால அல்லது நிகழ்கால அலுவலரை, உறுப்பினரை, முகவரை அல்லது வேறு எவரேனும் ஆளை அவற்றைக் காண்பிக்குமாறு கேட்கும் அதிகாரம்,

3. கணக்காய்வின் போது மோசடி ஒன்று கண்டுபிடிக்கப்படின் அது சம்பந்தமான கணக்குப் புத்தகங்கள் ஆவணங்களைத் தனது பாதுகாப்பில் எடுக்குந் தத்துவம்.

4. கணக்காய்வு செய்யப்படும் பொழுது புத்தகங்கள், கணக்குகள், பத்திரங்கள் பிணைகள் ஆகிய எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் பார்க்கும் அதிகாரம்.

5. சங்கத்தின் கையிருப்பைப் பரிசோதிக்கும் அதிகாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. உறுப்பினர் அலுவலர் அல்லது வேறு எவரேனும் ஆள் கொடுக்கல் வாங்கல் தொடர்பாகவும், தொழிற்பாடுகள் தொடர் பாகவும் தேவைப்படும் தகவல்களைக் கொடுத்துதவுமாறு தேவைப் படுத்துமதிகாரம்.

7. தண்டனைச் சட்டக் கோவைக் கருத்துப்படி கணக்காய்வா ளர் ஒரு பகிரங்க சேவையாளராகக் கருதப்படும் அதிகாரம்.

8. கணக்காய்வு செய்யப்படும்போது சட்டம், விதி, துணைவிதி கள் என்பவற்றுக்கு முரணுகக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந் தால் அல்லது நிதிகள் பயன்படுத்தப்பட்டிருந்தால் அவற்றை அனு மதியாது விடுவதுடன் அத்தகைய ஆளிடமிருந்து அல்லது அதற்கு அதிகாரமளித்தவரிடமிருந்து அறவிடும் அதிகாரம்.

9. எவரேனும் ஆளின் கவலையீனத்தால் அல்லது கெட்ட நடத் தையினுல் ஏற்பட்ட குறைவை அல்லது இழப்பை அவரிடமிருந்து அறவிடுதல் வேண்டுமென்பதுடன் அவரின் வருமதியைச் சான்று படுத்தி தனது முடிவை அவருக்கு அறிவிக்கும் அதிகாரம்.

இவை பற்றிக் கூட்டுறவுச் சட்டம் 44 (3) (4) (5) (6) என்பன கூறுகின்றன.

குற்றவியல் நடவடிக்கையின் நிமித்தம் தேவைப்படுமிடத்து 12 மாதங்களுக்கு மேற்படாத கால எல்லைக்குள் ஒரு விசேட கணக் காய்வினைத் தயாரிக்குமாறு கணக்காய்வாளரைப் பதிவாளர் வேண் டலாம்.

### கணக்காய்வின் குறைபாடுகள் பற்றிய நடவடிக்கை

கணக்காய்வினுல் சங்கத் தொழிற்பாடுகள் சம்பந்தமாக எவை யேனும் குறைபாடுகள் வெளிப்படுமாயின் பதிவாளர் அக்குறைபாடு களைச் சங்கத்திற்கும், அச் சங்கம் வேறு ஒரு சங்கத்தின் உறுப்பின ராயின் அச் சங்கத்திற்கும் அறிவிக்கலாம்.

வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காகப் பதிவாளர் கட்டளையொன்றில் குறிப்பிட்ட காலத்திற்குள் அதில் விதிக்கப்படக்கூடிய அத்தகைய நடவடிக்கையை எடுக்குமாறு அக் கட்டளையினுல் சங்கத்தை அல்லது அதன் அலுவலரைப் பணிக்கலா மெனச் சட்டம் 45 (1) (2) கூறுகின்றது.

### கூட்டுறவு நிதி

ஒவ்வொரு சங்கமும் பதிவாளரால் கேட்டுக்கொள்ளப்படுமிடத் தும் அவர் தீர்மானிப்பதற்கமையவும் ஐந்து ரூபாவுக்குக் குறையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ததும் வருடாந்த தேறிய இலாபத்தில் பத்து வீதத்திற்கு மேற்படாத துமான தொகையை வருடாந்தம் உதவு தொகையாகக் கூட்டுறவு நிதிக்குச் செலுத்துதல் வேண்டும். பதிவாளர் அந்நிதியில் வரவு வைக்கப்பட்ட தொகையைப் பின்வரும் நோக்கங்களுக்காகப் பயன் படுத்தலாம்.

1. கூட்டுறவுக் கல்வி விசாலிப்பும் பிரசித்தப்படுத்தலும்
2. கூட்டுறவுச் சங்கங்களின் முகாமைத் திறமைகளை மேல் விருத்தி செய்தல்,
3. இயங்குகின்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவி அளித்தல்

இவை பற்றி விதி 43 (1) (2) கூறுகின்றது,

**விசாரணை**

சங்கத்தின் அமைப்பு, தொழிற்பாடு, நிதிநிலைமை ஆகியன பற்றிப் பதிவாளரோ அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு ஆளோ விசாரணை செய்வதற்குக் கூட்டுறவுச் சட்டம் 46 (1) அதிகாரமளிக்கிறது.

**விசாரணைக்குரிய காரணங்கள்**

1. பதிவாளரின் சொந்தப் பிரேரணை
2. நிருவாகக் குழுவின் பெரும்பான்மையினரின் விண்ணப்பம்
3. உறுப்பினர்களின் மூன்றிலொரு பங்குக்குக் குறையாதவர்களின் விண்ணப்பம்

**விசாரணை உத்தியோகத்தருக்குள்ள அதிகாரங்கள்**

1. சங்கத்தின் எவையேனும் கொடுக்கல் வாங்கல்கள் பற்றி அல்லது அதன் அலுவல்களின் முகாமை பற்றி தகவல்கள் கொடுக்கக் கூடிய கடந்தகால அல்லது தற்கால அலுவலரை, முகவரை, சேவையாளரை, உறுப்பினரை அல்லது வேறு ஆளைக் கட்டளை விட்டழைக்கும் அதிகாரம்.

2. சங்கத்துக்குச் சொந்தமான புத்தகம், ஆவணம், பணம் பிணை, ஆதனம் என்பவற்றைத் தமது உடமையில் அல்லது பாதுகாப்பில் வைத்திருக்கும், கடந்தகால அல்லது தற்கால அலுவலரை முகவரை சேவையாளரை உறுப்பினரை அல்லது வேறு ஆளை அவற்றைக் காண்பிக்குமாறு வேண்டும் அதிகாரம்.

3. அவரால் பணிக்கப்படக் கூடியவாருன கருமங்களைத் தீர்மானித்தற் பொருட்டு அவரால் குறிப்பிடக் கூடிய நேரத்திலும் இடத்திலும் உறுப்பினர்களின் பொதுக் கூட்டத்தைக் கூட்டும் அதிகாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பொதுக் கூட்டத்திற்கு விசாரணை உத்தியோகத்தரே தலைமை தாங்க வேண்டும். அவருக்கு வாக்குரிமையில்லை. ஆயினும் சமமான வாக்குகள் இடம்பெறின் அறுதியிடும் வாக்குரிமையுண்டு. இத்தகைய கூட்டத்திற்கு துணைவிதிகளில் விதிக்கப்பட்ட கூட்ட நடப்பெண், அறிவித்தலுக்கான காலம் ஆகிய ஏற்பாடுகள் ஏற்புடையன அல்ல.

4. விசாரணையின் போது மோசடி ஒன்றைக் கண்டுபிடிக்குமிடத்து சங்கத்தின் கணக்குப் புத்தகங்களை ஆவணங்களைத் தனது பாதுகாப்பில் எடுக்கும் அதிகாரம்.

## விசாரணை முடிவு

பதிவாளர் விசாரணையின் முடிவைச் சங்கத்திற்கும் அச் சங்கம் உறுப்பினராகவுள்ள ஏதேனும் சங்கம் இருப்பின் அச்சங்கத்திற்கும், கடன் கொடுக்க வேண்டியுள்ள வங்கிக்கும் அறிவித்தல் வேண்டும்.

பதிவாளர் அல்லது அவரால் விசாரணை செய்வதற்காக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தண்டனைக் கோவைச் சட்டக் கருத்துக்குட்படப் பகிரங்க சேவையாளராகக் கருதப்படல் வேண்டும்.

இவை பற்றிக் கூட்டுறவுச் சட்டம் 46 (1) (2) (3) (4) (5) கூறுகின்றது.

## சோதனை செய்தல் (நுண்ணாய்வு செய்தல்)

பதிவாளரினால் அல்லது அவரது எழுத்திலான அதிகாரம் பெற்ற ஒருவரினால் சங்கப் புத்தகங்களைப் பரிசோதனை செய்யவும் அலுவல்களை நுண்ணாய்வு செய்யவும் கூட்டுறவுச் சட்டம் 47 (1) வகை செய்கிறது.

**காரணங்கள்**

1. பதிவாளரின் சொந்தப் பிரேரணை
2. சங்கத்துக்குக் கடன் கொடுத்தவரின் விண்ணப்பம்

கடன் கொடுத்தவரின் விண்ணப்பத்தின் பேரில் நுண்ணாய்வு அல்லது பரிசோதனை செய்யப்படுமிடத்துப் பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும், அவையாவன:

1. கடன் கொடுத்த ஒருவர் தமக்குக் குறிப்பிட்ட தொகைப் பணத்தைச் சங்கம் தரவேண்டுமென்றும், அத்தொகையைத் திருப்பித் தரும்படி சங்கத்திடம் கோரியதாகவும், நியாயமான கால எல்லைக்குள் சங்கம் திருப்பித் தரவில்லையெனவும் பதிவாளருக்கு நிரூபித்தல் வேண்டும்.

2. பரிசோதனை அல்லது நுண்ணாய்வு சம்பந்தமாக ஏற்படக்கூடிய பதிவாளரினால் நிர்ணயிக்கப்பட்ட தொகையைக் கடன் கொடுத்தவர் கட்டுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரிசோதனை அல்லது நுண்ணாய்வு செய்பவருக்குள்ள அதிகாரங்கள்**

1. சங்கத்தின் கணக்குப் புத்தகங்கள், பத்திரங்கள், ஆவணங்களை எந்நேரத்திலும் பார்வையிடல்.
2. கையிருப்பிலுள்ள பணத்தைச் சோதித்தல்.
3. சங்கத்தின் ஒவ்வொரு அலுவலரும் அல்லது உறுப்பினரும் சங்கக் கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக, தொழிற்பாடு சம்பந்தமாக தேவைப்படும் தகவல்களைக் கொடுத்துதவக் கேட்டல்.
4. மோசடி ஒன்று கண்டுபிடிக்கப்படுமிடத்து சங்கத்தின் கணக்குப் புத்தகங்களை அல்லது ஆவணங்களைத் தனது கட்டுக் காப்பில் எடுத்தல்.

**முடிவு**

இச் சோதனை பதிவாளரின் சொந்தப் பிரேரணையின் மீது நடைபெற்றதாயின் அம்முடிவுகள் சங்கத்திற்கும், சங்கத்திற்குக் கடன் கொடுத்த வங்கிக்கும் பதிவாளரால் அறிவிக்கப்படலாம். கடன் கொடுத்தவரின் வீண்ணப்பத்தின் பேரில் நடைபெறின் கடன் கொடுத்தவருக்கும் சங்கத்திற்கும் அறிவிக்கப்படல் வேண்டும்.

கடன் கொடுத்த ஒருவரின் விண்ணப்பத்தின் பேரில் சோதனை செய்யப்படுவதால் ஏற்படும் செலவுகளை பதிவாளர்தான் தகுதியென நினைக்கும் வகையில் சங்கத்திற்கும் கடன் கொடுத்தவருக்குமிடையில் பங்கிடலாம்.

சங்கத்திற்கு அல்லது கடன் கொடுத்தவருக்கெதிராகத் தீர்க்கப்பட்ட செலவு தொகையானது சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அமைந்துள்ள அல்லது கடன் கொடுத்தோர் வதிகின்ற இடத்தில் நியாயாதிக்கமுடைய நீதவான் நீதிமன்றத்திற்குச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட குற்றப் பணம் போன்று அறவிடப்படலாம்.

பதிவாளரும் சோதனை செய்ய அல்லது நுண்ணாய்வு செய்ய பதிவாளரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒவ்வொரு ஆளும் தண்டனைச் சட்டக் கோவையின் கருத்துக்குட்படப் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படல் வேண்டும்.

இவை பற்றி கூட்டுறவுச் சட்டம் 47 (1) (2) (3) (4) (5) (6) (7) கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிணக்குகள்

உறுப்பினர்கள், நிருவாகக் குழுவினர், பணியாளர்கள் ஆகியோர்களுக்கிடையிலோ அல்லது இவர்கள் இறப்பினுல் உரிமையடையும் பின்னுரித்தாளர்களுக்கிடையிலோ அல்லது இவர்களின் சட்டப் பிரதிநிதிகளுக்கிடையிலோ அல்லது வேறு கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையிலோ கருத்து வேற்றுமைகள், அபிப்பிராய பேதங்கள், கொடுக்கல் வாங்கல் தகராறுகள் ஏற்படின் இவை சம்பந்தமாக நீதிமன்றங்களுக்குச் செல்வதால் பெரும் பொருட் செலவும் காலவிரயமும் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டுக் கூட்டுறவுச் சட்டம் 58 சில ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

கூட்டுறவுச் சங்க அலுவல் சம்பந்தமாக ஏதேனும் தகராறுகள் பிணக்குகள் ஏற்படின் பதிவாளரின் முடிவுக்காக ஆற்றுப்படுத்தல் வேண்டும். ஏதாவது தகராறுகள் சங்கத் தொடர்புடையனவா எனப் பிரச்சினை எழுமிடத்து அப்பிரச்சினையைப் பதிவாளரே முடிவு செய்வார். அவரின் முடிவே இறுதியானது. இதை நீதிமன்றத்தின் கேள்விக்கு உட்படுத்தலாகாது. பதிவாளர் பிணக்கைத் தாமே முடிவு செய்யலாம் அல்லது நடுத்தீர்ப்பாளருக்கு ஆற்றுப்படுத்தலாம்.

நடுத்தீர்ப்பாளர்களாக ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் நியமிக்கப்படின் இரு திறத்தாராலும் ஒவ்வொருவரும் அக்குழுவின் தலைவராக ஒருவரைப் பதிவாளரும் நியமிக்கலாம். நடுத்தீர்ப்பாளராக ஒரு சட்டத்தரணியை நியமித்தலாகாது.

**பதிவாளருக்கு ஆற்றுப்படுத்தும் தகராறுகளில் பதிவாளரினுல் முடிவு செய்யப்பட வேண்டியவை:**

1. துணைவிதிகள் பற்றிய விளக்கம் அல்லது வியாக்கியானம் பற்றிய கருத்து முரண்பாடு
2. உறுப்புரிமை மனு மறுத்தமைக்கான முறையீடு
3. நிருவாகக் குழுவின் தெரிவு செல்லுபடியாகுந் தன்மை பற்றிய கருத்து முரண்பாடு
4. பொதுச் சபைக் கூட்டத்தின் செல்லுபடியாகுந் தன்மை பற்றிய கருத்து முரண்பாடு.
5. பொதுச் சபைத் தீர்மானத்தின் செல்லுபடியாகுந் தன்மை பற்றிய கருத்து முரண்பாடு.
6. உத்தியோகத்தர் தெரிவின் செல்லுபடியாகுந் தன்மை பற்றிய கருத்து முரண்பாடு போன்றவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுத்தீர்ப்புக்காக பதிவாளருக்கு மனுச் செய்யக் கூடிய விடயங்கள்**

1. உறுப்பினர்கள், அலுவலர் நிருவாகிகள், அல்லது இவர்கள் இறப்பின் இவர்களின் பின்னுரித்தாளர் அல்லது சட்டப் பிரதிநிதிகளால் சங்கத்திற்கு வருமதியான தொகைகள் பற்றிய தகராறுகள்.
2. மேற் குறிப்பிட்டவர்களுக்குச் சங்கத்தால் கொடுக்க வேண்டிய தொகைகள் பற்றிய தகராறுகள்.
3. சங்கத்திடமிருந்து உறுப்பினர்கள் பெற்ற கடன்களை உரிய தவணைத் திகதியில் செலுத்தாமையால் ஏற்படும் தகராறு.
4. ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்கும் இன்னொரு கூட்டுறவு சங்கத்திற்கும் கொடுக்கல் வாங்கல்கள் பற்றியோ தொழில் முறை சம்பந்தமாகவோ ஏற்படும் தகராறுகள் போன்றவையாகும்.

**கூட்டுறவுச் சங்கம் நடுத்தீர்ப்புக்கு (மத்தியஸ்த தீர்ப்புக்கு) விண்ணப்பிக்கும் முறை**

ஒரு தனியாள் மீது அல்லது ஒரு குழு மீது அல்லது 'இன்னொரு கூட்டுறவுச் சங்கம் மீதுள்ள பிணக்கொன்றைத் தீர்ப்பதற்காக ஒரு கூட்டுறவுச் சங்கம் நடுத்தீர்ப்புக்காகப் பதிவாளருக்கு விண்ணப்பிக்க முடியும். அப் பிணக்கு கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாயின் முதலில் அதனை அறவிடப் போதிய அவகாசம் கொடுத்து அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். அதாவது கேள்விப் பத்திரம் அனுப்புதல் வேண்டும். இதன் மூலம் தீர்வுகாண முடியாதவிடத்து நடுத் தீர்ப்புக்கு விண்ணப்பஞ் செய்யலாம்.

ஒரு பிணக்கைப்பற்றி நடுத்தீர்ப்புக்கு விடுவதை அச் சங்கத்தின் நிருவாக சபை அல்லது பொதுச் சபை தீர்மானித்தல் வேண்டும். தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடன் பின்வரும் விபரங்களுடன் பதிவாளருக்கு விண்ணப்பஞ் செய்தல் வேண்டும்.

விபரங்கள்

1. பிணக்கைப் பற்றிய சுருக்கமான குறிப்பு
2. கட்சிக்காரரின் பெயரும் விலாசமும்
3. கடன்காரருக்கு அனுப்பப்பட்ட கேள்விப் பத்திரத்தின் பிரதியும் அனுப்பிய பதிவுத் தபாலின் பற்றுச் சீட்டும்
4. நிருவாக சபை அல்லது பொதுச் சபைத் தீர்மானத்தின் பிரதி
5. சங்கத் தரப்பு பிரதிநிதியின் பெயரும் அவரது சம்மதக் கடிதமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவாளர் விண்ணப்பத்தைப் பெற்றதும் நடுத்தீர்ப்புச் செலவை ஈடு செய்ய குறித்தவொரு தொகையை வைப்பாக இடுமாறு கேட்பார். இத் தொகை கட்டப்பட்டதும் பதிவாளர் நடுத்தீர்ப்பாளர் ஒருவரை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒரு குழுவை நியமிப்பார்.

**விசாரணை**

நடுத்தீர்ப்பாளர்கள் விசாரணையை நடாத்தித் தீர்ப்பு வழங்கும் காலம் மூன்றுமாத கால எல்லைக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும். ஆயினும் குறித்த கால எல்லைக்குள் விசாரணையை முடிக்க முடியாது என நடுத்தீர்ப்பாளர் கருதின் அதற்குரிய காரணங்களுடன் கால நீடிப்புக்குப் பதிவாளருக்கு விண்ணப்பித்தல் வேண்டும். அத்தகைய காரணங்கள் நியாயமெனப் பதிவாளர் கருதின் கால நீடிப்பை வழங்கலாம். நடுத்தீர்ப்பாளர்களை இடை நிறுத்தவோ, நீக்கவோ புதிய நடுத்தீர்ப்பாளர்களை நியமிக்கவோ பதிவாளருக்கு அதிகாரம் உண்டு.

நடுத்தீர்ப்பாளர் பிணக்குச் சம்பந்தப்பட்ட இரு திறத்தாரையும் கட்டளை மூலம் அழைத்து இரு திறத்தாரின் சாட்சியங்களைப் பதிவு செய்து, பத்திரங்கள் ஆவணங்கள் போன்ற சாதன அத்தாட்சிகளை யும் பார்வையிட்டு நீதிக்கும் நியாயத்திற்கும் மனச்சாட்சிக்கும் ஏற்பத் தீர்ப்பை வழங்குதல் வேண்டும். நடுத்தீர்ப்பு விசாரணையின்போது தமக்காக வாதாடுவதற்காக எப்பகுதியினராவது ஒரு நியாயவாதியைக் கொண்டு செல்ல முடியாது.

ஒரு பிணக்கினை விசாரிப்பதற்காகக் கட்டளையிட்டு அழைக்கப்படும் எத்திறத்தினராவது விசாரணைக்குப் போதிய காரணமின்றிச் சமுகமளிக்காதுவிடின் சமுகம் கொடுத்த திறத்தவரின் சாட்சியங்களைக் கொண்டு தீர்ப்பை வழங்க நடுத்தீர்ப்பாளருக்கு அதிகாரம் உண்டு. ஆயினும் முதல் அழைப்பிலேயே இவ்விதம் செய்தல் கூடாது.

தீர்ப்பைச் சம்பந்தப்பட்ட இரு பகுதியினருக்கும் பதிவாளருக்கு அல்லது அவரால் குறிப்பிடப்படும் அவரின் கீழுள்ள அலுவலகத்திற்கும் நடுத்தீர்ப்பாளர் அனுப்பி வைத்தல் வேண்டும். நடுத்தீர்ப்பு விசாரணைக்கு ஏற்பட்ட செலவை இரு பகுதியினரையும் அல்லது ஒரு பகுதியினரை ஏற்குமாறு கட்டளையிடலாம்.

விசாரணையின் போது நடுத்தீர்ப்பாளரினால் இன்னலுறும் ஒரு திறத்தவர் பதிவாளருக்கு முறையீடு செய்ய உரிமையுண்டு. நடுத்தீர்ப்பாளரால் வழங்கப்படும் தீர்ப்பு தமக்கு மாறானது நியாயமற்றது எனக் கருதும் எத்திறத்தவரும் தீர்ப்பு வழங்கப்பட்ட திகதியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து 30 நாட்களுள், தீர்ப்புத் தொகையின் பத்து வீதம் அல்லது 50 ரூபா எது கூடவோ அத்தொகையைப் பிணையாகக் கொடுத்துப் பதிவாளருக்கு மேன்முறையீடு செய்ய உரிமையுண்டு.

## தீர்ப்பை நிறைவேற்றல்

நடுத்தீர்ப்பு வழங்கப்பட்டு, அத்தீர்ப்பின் பொருட்டு ஒரு திறத்தவரிடமிருந்து இன்னொரு திறத்தவருக்குச் செல்மதியான தொகையை உரிய காலத்தில் செலுத்தாது விடின் தவணை தவறியவர் என்ற தொடர்பில் பதிவாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி பின்வரும் மூன்று வழிகளில் ஒன்றின் மூலம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கலாம். அவையாவன:

1. செலவுகளுடனும் வட்டியுடனும் அத்தகைய தொகையின் விபரங்களையும் தவறு புரிந்தவரின் பெயரையும் கொண்ட சான்றிதழ் ஒன்றை அரசாங்க முகவர், உதவி அரசாங்க முகவர், பிசுக்கால் அல்லது பிரதிப் பிசுக்கால் ஒருவருக்கு வழங்கலாம்.

2. செலவுகளுடன் சேர்த்து வருமதியாகவுள்ள தொகை பற்றிய விபரங்களையும், எவையேனுமிருப்பின் வட்டியையும், தவணை தப்பியவரின் பெயரையும் கொண்ட சான்றிதழொன்றைத் தவணை தப்பியவர் வதியும் அல்லது அவருக்குச் சொந்தமான அசைவுள்ள அசைவற்ற சொத்துள்ள மாவட்டத்தில் நியாயாதிக்கமுள்ள மாவட்ட நீதிமன்ற மொன்றிற்கு வழங்கலாம்.

3. வருமதியாகவுள்ள தொகை பற்றிய விபரங்களையும், தவணை தவறியவரின் பெயரையும் கடைசியாக அறியப்பட்ட தொழிலிடத்தையும் அல்லது வதிவிடத்தையும் கொண்டுள்ள சான்றிதழொன்றை அத்தகைய இடம் அமைந்துள்ள பிரிவில் நியாயாதிக்கமுள்ள நீதவானொருவருக்கு வழங்கலாம்.

முதலாவதாகக் குறிப்பிட்டுள்ளபடி சான்றிதழ் பதிவாளர் அல்லது அவரது அதிகாரப் பிரதிநிதி வழங்கின் குறிப்பிட்ட அலுவலர் தவணை தவறியவரின் அசைவுள்ள ஆதனத்தைக் கைப்பற்றி விற்பனை செய்வதன் மூலம் அறவிடப்படுவதனைச் செய்வதற்கு அதிகாரமுடையவராகின்றார் கைப்பற்றலானது அலுவலர் உசிதமான முறை எனக் கருதும் முறையில் செய்யப்படலாம். கைப்பற்றப்பட்ட ஆதனமொவ்வொன்றும் தவணை தவறியவரின் செலவிலும் அவரினால் செலுத்தப்படும் கட்டணத்துடனும் ஐந்து நாட்கள் வைத்திருக்கப்படுதல் வேண்டும். சொல்லப்பட்ட ஐந்து நாட்களுள் தவணை தவறியவர் வருமதியாகவுள்ள தொகையையும் வட்டியையும் செலவையும் ஆதனத்தைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப்பற்றி வைத்திருப்பதற்கான செலவையும் கட்டணத்தையும் செலுத்தாதுவிடின் குறிப்பிட்ட அலுவலர் சொல்லப்பட்ட ஆதனத்தைப் பகிரங்க ஏலத்தில் விற்பித்தல் வேண்டும்.

விற்பனையால் பெறப்பட்ட தொகை பின்வரும் வழக்கு முறைப்படி செலுத்தப்படல் வேண்டும். முதலாவதாக ஆதனத்தைக் கைப்பற்றுவதில் வைத்திருப்பதில் விற்பனை செய்வதில் ஏற்பட்ட செலவுகளையும் கட்டணங்களையும் கொடுத்தும் தீர்த்தல் வேண்டும். பின் இரண்டாவதாக வட்டியுடனும் செலவுகளுடனும் வருமதித் தொகைகளைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தல் வேண்டும். மூன்ருவதாக ஏதேனும் மீதியாயிருப்பின் கைப்பற்றப்பட்ட ஆதனத்தின் சொந்தக்காரனுக்குத் திருப்பிக் கொடுத்தல் வேண்டும்.

பதிவாளரால் மாவட்ட நீதிமன்றமொன்றுக்குச் சான்றிதழ் வழங்கப்படின் தவணை தவறியவரின் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தைக் கைப்பற்றி விற்பனை செய்வதற்கு அதிகாரமளித்து அவரைத் தேவைப்படுத்தும் நிறைவேற்றெழுத்தாணை ஒன்று பிசுக்காலுக்கு வழங்குமாறு நீதிமன்றம் அதன்மேல் பணித்தல் வேண்டும்.

நீதவானொருவருக்குப் பதிவாளரால் சான்றிதழ் வழங்கப்படின், நீதவான் அதன்மேல் அத்தொகையை அறவிடுவதற்காக மேலும் நடவடிக்கைகள் ஏன் எடுக்கக் கூடாதெனக் காரணங் காட்டுவதற்கு தவணை தவறியவரை அவருக்கு முன் தோன்றும்படி கட்டளை விட்டழைத்தல் வேண்டும். போதிய காரணங்காட்டத் தவறுமிடத்து தவறொன்றுக்காக நீதவானுல் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்ருகக் கருதப்படும். இவ்வாறு அறவிடப்படும் பணம் மாவட்ட நீதிமன்றத்தால் அல்லது நீதவானுல் பதிவாளருக்கு அனுப்பி வைக்கப்படும். அவரின் முடிவு அல்லது தீர்ப்புக்கிணங்க அத்தொகை கையாளப்படுதல் வேண்டும்.

தவணை தவறியவருக்குப் பதிவாளர் சான்றிதழ் ஒன்றை நேரடியாக அல்லது பதிவஞ்சல் அல்லது தந்தி மூலம் அதுபற்றிய அறிவிப்பொன்றை வழங்குதல் வேண்டும். தவணை தவறியவருக்கு அவ்வறிவித்தல் கிடையாதுவிடல் நடவடிக்கைகளைச் செல்லுபடியற்றதாகாது.

பதிவாளரின் சான்றிதழில் உள்ள ஏதேனும் கூற்றின் சரி பிழையைக் கருத்திற்கொள்வதற்கு பரிசோதனை செய்வதற்கு அல்லது முடிவு செய்வதற்கு ம வட்ட நீதிமன்றமொன்றிற்கு அல்லது நீதவானொருவருக்கு அதிகாரமளித்தலோ தேவைப்படுத்தலோ ஆகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைபற்றி 58 (1) (2) (3) (4) (5) (6) (7) (8) (9) 59 (1) (2) (3) (4) (5) (6) (7) கூட்டுறவுச் சட்டங்களும் 49 (1) (2) (3) (4) (5) (6) (7) (8) (9) (10) (11) (12) (13) கூட்டுறவு விதிகளும் கூறுகின்றன.

## கூட்டுறவுச் சங்கமொன்றின் குழுவைக் கலைத்தல்

குழு என்பது நிருவாக சபை, இயக்குனர் சபை, நெறியாளர்குழு என்னும் பதங்களாலும் அழைக்கப்படும். இக் குழுவைக் கலைப்பதற்கு முன் பதிவாளரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய கருமங்கள் பின் வருவனவாகும்.

1. குழு தனது கடமைகளை முறையாகப் புரியவில்லை என்று கருதினால் கூட்டுறவுச் சட்டம் 46-ம் பிரிவின் கீழ் ஒரு விசாரணையை மேற்கொள்ளல்.
2. கடன் கொடுத்த ஒருவரின் விண்ணப்பத்தின் பேரில் கூட்டுறவுச் சட்டம் 47-ஆம் பிரிவின் கீழ் சோதனையொன்றைச் செய்தல்.

இவற்றின் அறிக்கைகளைக் கொண்டு குழுவைக் கலைப்பதுதான் உசிதமெனப் பதிவாளர் கருதினால் கலைப்பதற்கெதிரான அதன் ஆட்சேபனைகளைக் கூறக் குழுவிற்குச் சந்தர்ப்பமளித்தல். அதன் ஆட்சேபனைகளிலும் பதிவாளர் திருப்தியுறுதுவிடின் அவரால் கூட்டப்பட்ட சங்கத்தின் பொதுக் கூட்டத்தின் கருத்துக்களையும் கவனத்திற்கு எடுத்த பின்னர் அவர் உசிதமெனக் கருதின் குழுவைக் கலைக்கலாம்.

சங்கத்தினை முகாமை செய்யப் பதிவாளரால் பொருத்தமான ஆளொருவர் ஆட்களை நியமிக்கலாம். இத்தகைய கலைப்புக் கட்டளை இரண்டு ஆண்டு காலத்திற்கு மேற்படாததாயிருத்தல் வேண்டும். ஆயினும் காலத்திற்குக் காலம் பதிவாளர் தனது தற்றுணிவின்படி கட்டளையை நீடிக்கலாமெனினும் கூட்டு மொத்தக்காலம் நான்காண்டுகளுக்கு மேற்படலாகாது. முகாமை செய்வதற்காகவும் நிருவகிப்பதற்காகவும் பதிவாளரால் நியமிக்கப்பட்டவர்களைக் காலத்திற்குக் காலம் அகற்ற, பதிலீடு செய்ய, மேலதிக ஆட்களை நியமிக்க அதிகாரமுண்டு.

பதிவாளரினால் நியமிக்கப்பட்டவர்கள், பதிவாளரின் பொதுவான பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கமைய, முறையாக அமைக்கப்பட்ட குழுவொன்றின் தத்துவங்கள் உரிமைகள் சிறப்புரிமைகள் எல்லாவற்றையும் உபயோகிக்கலாம். இவர்கள் சட்டத்திற்கு அல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லது துணைவிதிகளுக்கு முரணாக அவர்களால் புரியப்பட்ட செயல்களால் ஏற்படும் நட்டத்துக்குக் கூட்டாகவும் தனித்தும் பொறுப்புடையவர்கள். பதிவாளரால் நியமிக்கப்பட்ட ஆட்களுக்கு செலுத்தப்பட வேண்டிய ஊதியத்தொகையைப் பதிவாளர் நிர்ணயிக்கலாம். ஊதியத்தொகையும் சங்கத்தின் முகாமையில் ஏற்பட்ட வேறு செலவுகள் இருப்பின் அவையும் சங்க நிதிகளிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

பதிவாளரின் பணிப்பு பயனில்லாதொழியும் காலத்துக்குமுன் துணைவிதிகளுக்கிணங்க முறையான குழுவொன்றை ஏற்படுத்த ஒழுங்கு செய்தல் இவர்களின் கடமையாகும்.

இவ்வாறு குழுவைக் கலைக்குமுன், அச்சங்கம் ஏதாயினும் வங்கிக்கு கடன் கொடுக்க வேண்டியிருப்பின் அவ்வங்கியின் முன்னாலோசனையின் பின்னரன்றிக் கலைத்தலாகாது. அச்சங்கம் ஒரு கூட்டுறவு வங்கியாயின் மக்கள் வங்கியின் முன் அங்கீகாரத்துடனன்றிக் கலைத்தலாகாது.

இவை பற்றிக் கூட்டுறவுச் சட்டம் 48 (1) (2) (3) (4) (5 (6) (7) (8) (9) கூறுகின்றது.

## கூட்டுறவுச் சங்கத்தைக் கலைத்தல்

ஒரு கூட்டுறவுச் சங்கத்தைக் கலைப்பதற்கும் பதிவினை நீக்குவதற்கும் பதிவாளருக்கு அதிகாரமும் தத்துவமும் உண்டு. பின்வரும் காரணங்களுக்காகப் பதிவாளர் ஒரு கூட்டுறவுச் சங்கத்தினை எழுத்திலான கட்டளை மூலம் பதிவினை நீக்க அல்லது கலைக்க முடியும். அவையாவன:

1. 46-ம் பிரிவின் கீழான விசாரணை ஒன்றன்பின்
2. 47-ம் பிரிவின் கீழான கடன் கொடுத்தோர் ஒருவரின் விண்ணப்பத்தின் மீது நடாத்திய சோதனையின் பின்
3. சங்க உறுப்பினரின் முக்கால் பங்கு உறுப்பினரால் செய்யப்பட்ட கலைப்பு விண்ணப்பத்தைப் பெற்றதன்பின்
4. கூட்டுறவுச் சங்கமொன்று பதிவு செய்வதற்கு ஆகக் குறைந்தது பத்து உறுப்பினரையாவது கொண்டிருக்க வேண்டுமென்னும் நிபந்தனைக்குட்பட்ட சங்கமாயின் அச்சங்கத்தில் பத்து உறுப்பினருக்குக் குறைந்திருப்பின்
6. கூட்டுறவுச் சங்கமொன்று பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டு காலத்துக்குள் தொழிலை ஆரம்பிக்காதிருப்பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பதிவை நீக்கப்படும் தேதிக்கு முன்னர் ஈராண்டு காலத்திற்குத் தொழிலை நடத்தாதிருப்பின்

சங்கமும் அச் சங்கத்திற்குக் கடன் கொடுத்தவர்களும் ஆட்சேபனைகளைக் கூறச் சந்தர்ப்பமளித்த பின்னரே கலைத்தல் வேண்டும். பதிவு நீக்கஞ் செய்தல் வேண்டுமெனப் பதிவாளர் கருதுவாராஞல் தமது கைப்பட ஆக்கப்பட்ட கட்டளை மூலம் பதிவினை நீக்கலாம்.

பதிவாளரின் பதிவு நீக்கல் கட்டளை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதகால எல்லைக்குள் சங்கம் அல்லது அதற்குக் கடன் கொடுத்தோர் பதிவு நீக்கல் கட்டளைக்கெதிராக அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யலாம். பதிவு நீக்கல் கட்டளை பிறப்பிக்கப்பட்டு இரு மாதங்களுக்குள் மேன்முறையீடு செய்யப்படவில்லையாஞல் அக்கட்டளை பயனுடையதாகும். மேன்முறையீடு செய்யப்படின் உறுதிப்படுத்தப்படும் வரை அக்கட்டளை பயனுடையதாகாது.

பதிவாளரிஞல் ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் மீது பதிவு நீக்கல் கட்டளை பிறப்பிக்கப்படுமிடத்து, அக்கட்டளை பயனுடையதாகும் வரை அல்லது மேன்முறையீட்டிஞல் அமைச்சரால் எதிர்மாருக்கப்படும் வரை சங்கத்தின் புத்தகங்கள் ஆவணங்கள் வேறு சொத்துக்களுக்குப் பொறுப்பாக இருப்பதற்கும் சங்கத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்கும் பதிவாளர் ஓராளை அல்லது ஆட்களை நியமிக்கலாம். அவ்விதம் நியமிக்கப்பட்டதும் சங்க நிருவாகக் குழு சங்கத்தின் புத்தகங்கள், ஆவணங்கள், சொத்துக்களைப் பதிவாளரால் நியமிக்கப்பட்டவர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்பதுடன் அக் குழு பணிபுரியாதிருத்தலும் வேண்டும்.

## ஒழிப்போர் நியமனமும் அவரின் அதிகாரங்களும்

பதிவாளரின் பதிவு நீக்கல் கட்டளை பயனுடையதாகுமிடத்து அவர் ஒழிப்போன் ஒருவனை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களை நியமிக்கலாம். சங்கத்திற்களிக்கப்பட்ட சிறப்புரிமைகள் ஒழிப்போருக்கு உரித்தாக்கப்பட்டவையாகக் கருதப்பட வேண்டும். சங்கத்தின் சொத்துக்கள் யாவும் ஒழிப்போருக்கு உரித்தாதல் வேண்டும். பதிவாளரின் கட்டுப்பாடுகளுக்கும் வழிகாட்டுதல்களுக்கும் பதிவாளரிஞல் சுமத்தப்படும் எல்லைப்பாடுகளுக்கும் அமையக் கடமையாற்றுதல் வேண்டும். ஒழிப்போருக்குப் பின்வரும் அதிகாரங்களும் கடமைகளும் உண்டு. அவையாவன:

1. சங்கத்தின் உறுப்பினர்களாலும், கடந்தகால உறுப்பினர்களாலும் அல்லது இறந்த உறுப்பினர்களின் மரணச் சொத்துக்களிலிருந்தும் அதன் இருப்புச் சொத்துக்களுக்குக் கொடுபட வேண்டிய உதவு தொகைகளைத் தீர்மானித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சங்கப் புத்தகங்களில் பதியப்படாத கடன் கொடுத்தோரின் கோரிக்கைகளைப் பதிவதற்கு முறையீடு செய்வதற்கும், பகிர்தலிலிருந்து தவிர்க்கப் படுவதற்காக முறையிடு செய்வதற்குமான நாளைப் பிரகடன மூலம் அல்லது அறிவித்தல் மூலம் நியமித்தல்.

3. கடன் கொடுத்தவர்களுக்கிடையேயுள்ள முன்னுரிமைப் பிரச்சினைகளுக்கு முடிவு காணல்.

4. பிணக்குகள் எதனையும் நடுத் தீர்ப்புக்காக ஆற்றுப்படுத்தல்.

5. அவரது அல்லது பதவிப் பெயரால் சங்கத்தின் சார்பில் வழக்குத் தொடர்தல் அல்லது வேறு சட்ட நடவடிக்கைகளை எடுத்தல்

6. ஒழித்துக் கட்டல் செலவுகளை யார் யார் என்ன வீதத்தில் செலுத்த வேண்டும் என்பதைத் தீர்மானித்தல்.

7. கலைத்தற்காக சங்கச் சொத்துக்கள் முழுவதையும் திரட்டல்.

8. சங்கச் சொத்துக்களை கலைப்பின் பொருட்டு பகிர்ந்து கொடுக்கும் பணிப்பினைச் செய்தல்.

9. பதிவாளரின் முன் அங்கீகாரத்துடன் சங்கத்திற்குரிய அல்லது அதற்கெதிரான ஏதேனும் கோரிக்கைகளை இணங்குதல்.

10. கலைத்தலுக்கு அவசியமாகக் கூடிய சங்க உறுப்பினர்களின் பொதுக் கூட்டங்களைக் கூட்டல்.

11. சங்கத்தின் புத்தகங்கள், ஆவணங்கள், சொத்துக்கள் என்பவற்றை உடமையில் எடுத்தல்.

12. சங்கத்தின் சொத்துக்களை விற்பனை செய்தல்.

13. நன்மை தரக்கூடிய வகையில் கலைத்தலுக்கு அவசியமாகக் கூடிய எல்லாச் செயல்களையும் செய்தல்.

14. பகிர்தல் திட்டமொன்று பதிவாளரினால் அங்கீகரிக்கப்படுமிடத்து வசதியானதொரு முறையில் சங்கத்தின் சொத்துக்களைப் பகிருந் திட்டமொன்றை ஒழுங்கு செய்தல்.

15. கலைக்கப்படும் சங்கத்தின் உறுப்பினர் அல்லது கடந்தகால உறுப்பினர் ஒருவர் கலைக்கப்படும் சங்கத்திற்குச் செலுத்த வேண்டிய தொகையை, அவர் வேறு ஒரு கூட்டுறவுச் சங்க உறுப்பினராக இருந்து அச்சங்கத்தால் அவருக்குக் கொடுக்க வேண்டிய தொகைகள் இருப்பின் அத்தொகையிலிருந்து கலைக்கப்படும் சங்கத்திற்கு அவரால் வருமதியான தொகைக்கு மேற்படாத தொகையை அறவிட்டு அனுப்புமாறு அச்சங்கத்தைத் தேவைப்படுத்தல்.

16. ஒழித்தல் சம்பந்தமாக எத்திறத்தவரையும் சாட்சிகளையும் கட்டளைவிட்டழைப்பதற்கும், அவர்கள் வருகை தருவதை வலியுறுத்

துவதற்கும், அவர்களிடமுள்ள ஆவணங்களைக் காண்பிக்குமாறு கட்டாயப் படுத்தலுக்கும் தத்துவமுடையவராயிருத்தல்.

## கலைத்தலைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிவாளருக்குள்ள அதிகாரங்கள்

ஒரு கூட்டுறவுச் சங்கத்தைக், கலைப்பதற்காக ஏற்படும் ஒழிப்போன் பதிவாளரின் பிரதிநிதி. பதிவாளரினாலேயே ஒழிப்போன் நியமிக்கப்படுகின்றான். பதிவாளருக்காகவே கலைத்தல் கடமைகளைச் செய்கின்றான். பதிவாளரின் பணிப்புரைக்கும் கட்டுப்பாட்டிற்கும் அமையவே அவரது தத்துவங்களை ஒழிப்போன் உபயோகிக்க வேண்டும். ஒழிப்போன் சம்பந்தமாகப் பின்வரும் செயல்களைச் செய்யப் பதிவாளர் அதிகாரமுடையவர். அவையாவன:

1. ஒழிப்போனால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அழித்தல்
2. ஒழிப்போனால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை வேறுக்கல்
3. ஒழிப்போனால் ஆக்கப்படாத புதுக் கட்டளைகளை ஆக்குதல்
4. ஒழிப்போனைப் பதவியிலிருந்து அகற்றுதல்
5. சங்கத்தின் எல்லாப் புத்தகங்களையும், சொத்துக்களையும் காண்பிக்குமாறு அழைத்தல்
6. கணக்குகளைச் சமர்ப்பிக்குமாறு வேண்டல்
7. கணக்குகளைக் கணக்காய்வு செய்வித்தல்
8. சங்கத்தின் சொத்துக்களைப் பகிர்வதற்கு அதிகாரமளித்தல்
9. ஒழிப்போனின் ஊதியத்திற்கான கட்டளையை ஆக்கல்
10. ஒழிப்போனுக்கும் மூன்றாந் திறத்தவருக்குமான ஒரு பிணக்கினை, அத்திறத்தவர் நடுத்தீர்ப்பின் முடிவுக்குக் கட்டுப்படுவதாக எழுத்தில் கொடுப்பின், நடுத் தீர்ப்புக்கென ஆற்றுப் படுத்தலாம்.

நடுத் தீர்ப்பாளரின் முடிவு இரு திறத்தவரையும் கட்டுப்படுத்தும். அத்துடன் பதிவாளரின் கட்டளை போன்று வலியுறுத்தப்படக் கூடியதுமாகும். கலைத்தல் சம்பந்தமாக ஒழிப்போன் அல்லது பதிவாளரால் ஆக்கப்பட்ட கட்டளையெதனையும் நீதிமன்றத்தின் கேள்விக்குட்படுத்தலாகாது. இக்கட்டளையானது அக் கூட்டுறவுச் சங்கம் அமைந்த இடத்திலுள்ள நீதிமன்றமொன்றின் தீர்ப்பைப் போன்று வலியுறுத்தப்படக் கூடியதுமாகும்.

கலைக்கப்பட்ட சங்கமொன்றிற்குக் கடன் கொடுத்த வங்கியானது ஒழிப்போன் அல்லது பதிவாளரால் இடப்பட்ட கட்டளைக்கெதிராகக் கட்டளையிட்ட தேதியிலிருந்து இரு மாதங்களுக்குள் அமைச்சருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்முறையீடு செய்ய உரிமையுண்டு. கட்டளையிட்டு இரு மாதங்களுக்குள் அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யப்படாவிடின் இரு மாதங்கள் முடிந்ததும் பயனுடையதாகும். அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யப்பட்டிருப்பின் அமைச்சரால் அக்கட்டளை வலியுறுத்தப்படும் வரை பயனுடையதாகாது.

## கலைத்தல் முடிவடைதல்

ஒரு பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் கலைத்தல் முடிவடைதல் என்பது அச் சங்கத்தின் பதிவினை நீக்கி சொத்துக்களைப் பணமாக்கி உரிய முறையில் அதன் பொறுப்புக்களைத் தீர்த்தலாகும். ஒதுக்கு நிதியுட்பட சங்கத்தின் சகல நிதிகளும் பொறுப்புக்களைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும். சொத்துக்களால் தேறிய பணத்தை பின்வரும் வரிசை ஒழுங்குப்படி சங்கத்தின் பொறுப்புக்களைத் தீர்க்கப் பயன்படுத்தப்படல் வேண்டும்.

1. கலைத்தல் செலவுகள்
2. அரசாங்கக் கடன்கள்
3. அரசாங்க உத்தரவாதம் பெற்ற கடன்கள்
4. ஏனைய பொறுப்புக்கள்
5. பங்கு மூலதனம்
6. பங்கு மூலதனத்துக்கு கலைத்தற்கு முன்னுள்ள காலத்துக்கு ஏதாவது வட்டி வழங்கப்படாதிருப்பின் சட்டம்விதி வரையறுத்த வட்டி வீதத்தை வழங்கல்.
7. கலைத்தலுக்கு முன்னுள்ள காலத்துக்கு உறுப்பினர்களுக்குத் தள்ளுபடி வழங்க வேண்டியிருப்பின் அக் காலத்துக்குரிய தள்ளுபடி வழங்கல்

கூட்டுறவுச் சங்கமொன்று கலைத்தல் முடிவடைந்தபோதும் அச் சங்கத்தின் கடன் கொடுத்தவர் எவரேனும் தமக்கு வருமதியாகவுள்ள தொகையைக் கோராதிருக்கும் பொழுது அல்லது பெறுதிருக்கும் பொழுது கலைத்தல் முடிவடைந்தமை பற்றி அரசாங்க வர்த்தமானியில் (கசற்) வெளியிடப்படுதல் வேண்டும். சங்கத்தின் நிதிகளுக்செதிரான ஏதேனும் கோரிக்கை சம்பந்தமான வழக்கெதுவும் கலைத்தல் பற்றிய அறிவித்தல் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்றுமாத காலத்திற்குள் தொடரப்பட்டாலன்றி பின்தொடர்ந்து நடத்த முடியாது.

முன்னுரிமை வரிசைப்படி பொறுப்புக்களைத் தீர்த்தபின்னரும், கலைத்தல் அறிவித்தலின்பின் கடன் கொடுத்தோரால் தொடரப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கின் கோரிக்கைகளைத் தீர்த்தபின்னரும் எஞ்சியிருக்கும் மிகைத் தொகையை பதிவாளரின் அங்கீகாரத்திற்கமைய சங்கமானது கலைக் கப்பட்ட தேதியில் அதன் அலுவலர்களாக இருந்தவர்களினால் தேர்ந் தெடுக்கப்பட்ட பொதுமக்களின் பயன்பாட்டு நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படலாம்.

கலைப்பு முடிவடைந்த தேதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் பதி வாளரினால் அங்கீகரிக்கப்பட்ட பொதுக் குறிக்கோள் ஒன்றைத் தெரிந்தெடுக்கத் தவறினால் பதிவாளர் அத்தொகையை ஒரு வங்கி யிலோ அல்லது ஒரு கூட்டுறவுச் சங்கத்திலோ வைப்பிலிடலாம். வைப்பிலிட்ட தொகையை கூட்டுறவுச் சட்டத்தின் நோக்கங்களுக் காக அமைக்கப்பட்ட மேல் மிகை நிதிக்குச் செலுத்தலாம். விதிகளில் கூறப்பட்ட நோக்கங்களுக்காக பதிவாளரின் தற்றுணிவின்படி இந் நிதி செலவு செய்யப்படலாம். மிகை நிதிக்குச் சேரும் வட்டியை கூட்டுறவு நிதிக்குச் செலுத்தலாம். மேல் மிகை நிதிக் கணக்கிலுள்ள பணம் பதிவாளரால் பின்வரும் கருமங்களுக்காகப் பயன்படுத்தப் படலாம். அவையாவன:

1. ஆரம்ப நிலைச் சங்கம் ஒன்றின் பங்குகளைக் கொள்முதல் செய்தல் மூலம் அல்லது பதிவாளர் தீர்மானிக்கும் வகையில் அச் சங்கத்துக்கு உதவல்.

2. மாவட்டத்தில் சேர்ந்துள்ள மிகைநிதியை அம் மாவட்டத் திலுள்ள கூட்டுறவுச் சங்கம் ஏதேனும் ஒன்று நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்வதன் பொருட்டு அதற்கு உதவல்.

3. ஒரு ஒழிப்போனுக்கு எதிரான குடியியல் நடவடிக்கையின் (வழக்கு) போது அவர் எதிராக வாதஞ் செய்வதற்காக உதவல்.

4. கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆலோசனைச் சேவைகளை வழங்கு வதற்கும் கூட்டுறவுச் சங்கங்களை மேம்படுத்துவதற்காக வேறு சேவைகளை வழங்குவதற்காகவும் தாபிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களை உறுப்பினர்க ளாகக் கொண்ட ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்கு அல்லது பதிவு செய்யப்பட்ட சங்கங்களை உறுப்பினர்களாகக் கொண்டதும் சந்தைப்படுத்தல், கைத்தொழில், கமத்தொழில், கடற் றொழில் போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ள சங்கங்களின் முயற்சிகளைத் திட்டமிட்டு ஒருமுகப்படுத்தி வசதி செய்வ தற்காக அமைக்கப்பட்ட ஒரு சங்கத்திற்கு உதவி அளித்தல்.

இவை பற்றிக் கூட்டுறவுச் சட்டம் 49 (1) (2) (3) (4), 50, 51, 52, 53 (1) (2) (3), 54, 55 (1) (2) (3), 56, 57 (1) (2) (3) என்பனவும் கூட்டுறவு விதி 44-ம் விரிவாகக் கூறுகின்றன;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசாங்கத்திற்குச் செல்மதியான கடன்கள்

ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் அரசாங்கக் கடன்களும், அரசாங்க உத்தரவாதக் கடன்களும் அரசாங்கத்துக்குத் தீர்க்கப்பட்ட எவை யேனும் செலவுகளும், வேறு ஆட்களுக்குச் செல்மதியான கடன்கள் செலுத்தப்படுவதற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டிய முன்னுரிமை யுடையன.

கூட்டுறவுச் சங்கமொன்றிடமிருந்து அரசாங்கத்திற்குச் செல் மதியான தொகையும் அறவிடக் கூடியதுமான தொகைகள் முதலில் சங்கச் சொத்துக்களிலிருந்து அறவிடப்படல் வேண்டும். சங்கச் சொத்துக்கள் போதாதுவிடின் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கூட்டு றவுச் சங்க விடயத்தில் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ள அளவுக் கமைய அதன் உறுப்பினர்களிடமிருந்து அறவிடப்படலாம். பொறுப்பு வரையறுக்கப்படாத கூட்டுறவுச் சங்க விடயத்தில் அதன் உறுப்பினர் களிடமிருந்து முழுத் தொகையும் அறவிடப்படலாம். இவை பற்றிக் கூட்டுறவுச் சட்டம் 62 (1) (2) கூறுகின்றது.

## பொதுச் சபை

ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் அதிகாரமிக்க அமைப்பு பொதுச் சபையாகும். பொதுச்சபையின் தீர்மானத்திற்கிணங்கவே கூட்டுறவுச் சங்கம் நடைபெறும். கூட்டுறவுச் சட்டம், கூட்டுறவு விதிகள், துணை விதிகள் என்பவற்றிற்கு முரண்பாடில்லாமல் எடுக்கப்படும் தீர்மானங் கள் யாவும் பயனுடையதாக இருக்கும்.

கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்களே பொதுச் சபைக் கூட்டத் தில் கலந்து தீர்மானங்கள் எடுப்பதற்கு வாக்களிக்கும் உரிமையுடை யவர்கள். உறுப்புரிமைக்குரிய பங்குகளைக் கொள்முதல் செய்யாத வர்கள், பங்கு முதலின் தடவைப் பணம் நிலுவையில் இருப்போர், உறுப்புரிமை கோரி விண்ணப்பித்து உரிய பங்குகளைக் கொள்முதல் செய்திருப்பினும் நிருவாகக் குழு அல்லது பொதுச் சபையால் உறுப் புரிமை அனுமதிக்கப்படாதவர்கள் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாது.

## பொதுச் சபைக் கூட்டத்தின் கடமைகளும் அதிகாரங்களும்

1. வெளிக்கடன் எல்லையைத் தீர்மானித்தல். உறுப்பினரல்லா தவர்களிடமிருந்து பெறக் கூடிய கடனின் மேல் எல்லையைத் தீர்மானித்தல்.
2. உறுப்பினர்களுக்குக் கடன் வழங்குவதை நோக்கமாகக் கொண்ட கடனுதவு சங்கமாயின் ஒவ்வொரு உறுப்பினருக் கும் அனுமதிக்கக் கூடிய கடன் தொகையை நிச்சயித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. நிருவாக சபையின் உறுப்பினர்களைத் தெரிவு செய்தல்

4. பதிவாளரின் அறிக்கை ஏதேனும் இருப்பின் அவ்வறிக்கையினையும், பதிவாளரினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளரின் கணக்குக் கூற்றினையும் அறிக்கையினையும் ஆலோசித்தல்.

இவை கூட்டுறவு விதி 17-ல் கூறப்பட்டவையாகும். ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்தின் துணை விதிகளிலும் அச் சங்கப் பொதுச் சபையின் உரிமைகள் - கடமைகள் - அதிகாரங்கள் என்பன விரிவாக விதிக்கப்பட்டிருக்கும். அவை அவ்வக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்புடையதாக அமையும். "ஒவ்வொரு சங்கமும் துணைவிதிகளில் விதிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் பொதுக் கூட்டங்களைக் காலத்துக்குக் காலம் கூட்டலாம்" எனக் கூட்டுறவு விதி 17-ல் கூறப்பட்டுள்ளது.

எனவே பொதுக் கூட்டத்தைப்பற்றிய விபரங்கள் கட்டுப்பாடுகள் நிபந்தனைகள் பற்றி விபரமாகத் துணைவிதிகள் ஆக்கப்பட்டிருத்தல் வேண்டும். பின்வரும் விடயங்கள் பற்றி துணைவிதிகள் ஆக்கப்பட்டிருத்தல் அவசியம். அவையாவன:

1. பொதுக் கூட்டத்தைக் கூட்டும் அதிகாரம்
2. பொதுக் கூட்டத்தின் நிறைவெண் (கோரம்)
3. பொதுக் கூட்ட அறிவித்தல் கொடுக்கப்பட வேண்டிய முறை
4. பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய விடயங்கள்
5. பொதுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்குதல்
6. பொதுக் கூட்டத்தில் தீர்மானங்கள் எடுக்கும் முறை
7. இவைபோன்ற ஏனைய முக்கிய விடயங்கள்

## பொதுக் கூட்டத்தைக் கூட்டும் அதிகாரம்

1. கூட்டுறவு விதிகளில் பதிவாளர் (ஆணையாளர்) அல்லது அவரின் பிரதிநிதி கூட்டுறவுச் சங்கமொன்றின் பொதுக் கூட்டத்தைக் கூட்ட அதிகாரமுள்ளவர் எனக் கூறப்பட்டுள்ளது. பதிவாளரால் கூட்டப்படும் பொதுக் கூட்டங்களுக்கு ஏனைய பொதுக் கூட்டங்களுக்கிருக்க வேண்டிய நிறைவெண்ணோ அல்லது கூட்ட அறிவித்தல் வழங்கப்பட வேண்டிய கால அவகாசமோ தேவையில்லை. பதிவாளர் அல்லது அவரின் பிரதிநிதியால் கூட்டப்படும் பொதுக் கூட்டங்களுக்கு அவர் தலைமை தாங்கவேண்டும். ஆயினும் அவருக்கு வாக்களிக்கும் உரிமை கிடையாது. ஆயின் வாக்குகள் சமபலம் பெற்றிருக்கும் போது அறுதியிடும் வாக்கைப் பயன்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவாளர் அல்லது அவரின் பிரதிநிதியால் கூட்டப்படாத ஏனைய பொதுக் கூட்டங்களிலும் பதிவாளர் அல்லது அவரின் பிரதிநிதி கலந்துகொள்ளவும், கருத்துக்களைத் தெரிவிக்கவும் உரிமையுண்டு. ஆனால் அவருக்கு வாக்களிக்கும் உரிமை கிடையாது.

2. ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்தின் துணைவிதிகளும் விதிக்கும் அதிகாரமுள்ளவர் துணைவிதிகளில் கூறப்பட்ட காரணங்களுக்காக துணைவிதிகளில் கூறப்பட்ட முறைப்படி பொதுக் கூட்டங்களைக் கூட்டலாம். பெரும்பாலான கூட்டுறவுச் சங்கத் துணைவிதிகளில் பொதுக் கூட்டத்தைக் கூட்டும் அதிகாரம் காரியதரிசிக்கே வழங்கப்பட்டிருக்கின்றது. பெரும்பாலான கூட்டுறவுச் சங்கத் துணைவிதிகளில் பின்வரும் காரணங்களுக்காகக் காரியதரிசி பொதுக் கூட்டத்தைக் கூட்ட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளன. அவையாவன:

1. நிர்வாகக் குழுவின் தீர்மானம்
2. நிருவாகக் குழுவின் பெரும்பான்மையோர் எழுத்து மூலம் கேட்டல்
3. தலைவரின் கட்டளை
4. உறுப்பினர்களில் துணைவிதிகளில் குறிப்பிட்ட அளவு தொகையினர் எழுத்து மூலம் கேட்டல் போன்றவையாகும்.

## நிறைவெண்

பொதுவாக ஒரு சங்கத்தின் உறுப்பினர் தொகையில் ஐம்பது வீதத்திற்கு மேற்பட்டவர்கள் இருந்தால்தான் நிறைவெண்ணாகக் கருதமுடியும். பெருந்தொகையான உறுப்பினர்களைக் கொண்ட சங்கங்கள் இவ்விதியைக் கடைப்பிடிக்குமானால் நடைமுறையில் பொதுக் கூட்டங்களை நடாத்த முடியாத நிலையேற்படும். இதைத் தவிர்க்கும் நோக்கமாகப் பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்கள் நிறைவெண் பற்றி "25 உறுப்பினர் அல்லது மொத்த உறுப்பினர் தொகையில் நாலிலொரு பகுதியினர் இரண்டில் எது குறைவோ அதுவே பொதுக் கூட்டத்தின் நிறைவு எண்" எனத் துணைவிதி ஆக்கியுள்ளன. ஆனால் பதிவாளர் அல்லது அவரின் பிரதிநிதியால் கூட்டப்படும் பொதுக் கூட்டங்களுக்கு மூன்றுபேர் நிறைவெண்ணாகக் கருதப்படுவர்.

## தலைமை தாங்குதல்

"சங்கத்தின் தலைவரே பொதுவாகப் பொதுக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதல் வேண்டும். அவர் சமுகமளிக்காதவிடத்து உப தலைவர் தலைமை தாங்குதல் வேண்டும். இருவரும் சமுகமளிக்காதவிடத்து சமுகமளித்த உறுப்பினர்களில் ஒருவர் பெரும்பான்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோரின் தீர்மானத்தின் மூலம் தலைமை தாங்குதல் வேண்டும்" எனப் பெரும்பாலான கூட்டுறவுச் சங்கத் துணைவிதிகளில் குறிப்பிடப் பட்டுள்ளன.

ஏனைய விடயங்கள் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் தனது துணைவிதிகளில் குறிப்பிட்டது போல நடாத்தல் வேண்டும்.

## பொதுக் கூட்ட வகைகள்

பொதுக்கூட்டங்களை இருவகையாகப் பிரிக்கலாம். அவையாவன:

1. வருடாந்தப் பொதுக் கூட்டம்
2. விசேட பொதுக் கூட்டம்

### வருடாந்தப் பொதுக் கூட்டம்

இக் கூட்டம் ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் அல்லது வருடத் திற்கொருமுறை கூட்டப்படவேண்டியது. ஒரு வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கும் அடுத்த வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்குமிடை யிலுள்ள காலத்தின் மேலெல்லையைத் துணைவிதிகள் வரையறுத் திருக்கும். இக்கால எல்லை பொதுவாக 15 அல்லது 18 மாதங்க ளாக இருக்கும். இக்கால எல்லைக்குள் வருடாந்தப் பொதுக் கூட் டத்தை நடாத்த நிருவாகக் குழு கடமைப்பட்டுள்ளது.

ஒரு வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் அக் கூட்டுறவுச் சங்கத் தின் துணைவிதிகளில் குறிப்பிட்ட விடயங்கள் பெரும்பாலும் எடுத் தாளப்படும். ஆயினும் சில சிறப்புக் காரணங்களால் அவ்விடயங்க ளில் ஏதாவது எடுத்தாளப்படாதிருப்பின் விசேட பொதுக் கூட்ட மொன்றின் மூலம் அவ்விடயம் எடுத்தாளப்படலாம். பின்வரும் விடயங்கள் பெரும்பாலும் ஒருவருடாந்தப் பொதுக் கூட்டத்தில் எடுத்தாளப்படலாம். அவையாவன:

1. எண்பார்வை செய்யப்பட்ட கணக்கறிக்கையையும் எண் பார்வையாளரின் அறிக்கையையும் ஆராய்தல்.
2. நிருவாகக் குழுவின் வருடாந்த அறிக்கையை ஆராய்தல்.
3. துணைவிதிகளுக்கு அமைவாக இலாபத்தைப் பங்கீடு செய்தல்.
4. நிருவாகக் குழுவுக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்தல்
5. உறுப்பினர்களின் பிரேரணைகள் போன்றனவையாகும்.

இவற்றைவிட பொதுச் சபை ஒன்று கவனிக்கவேண்டிய ஏனைய விடயங்களையும் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கவனிக்கலாம்: வெளிக்கடன் எல்லை, உறுப்பினர் கடன் எல்லை, நிலையான சொத்துக் களின் கொள்முதல் விற்பனை மாற்றம் போன்ற விடயங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கூட்டுறவுச் சங்கம் ஒழுங்காகவும் முறையாகவும் இயங்குகின்றதை எடுத்துக் காட்டுகின்ற முக்கிய அம்சங்களில் ஒன்று உரிய முறைப்படி வருடாந்தப் பொதுக் கூட்டத்தினை நடாத்தலாகும்.

**விசேட பொதுக் கூட்டம்**

வருடாந்தப் பொதுக் கூட்டமில்லாத ஏனைய பொதுச் சபைக் கூட்டங்கள் எல்லாம் விசேட பொதுக் கூட்டங்களாகும். விசேட பொதுக் கூட்டங்கள் பொதுவாகப் பின்வரும் காரணங்களுக்காகக் கூட்டப்படலாம். அவையாவன:

1. பதிவாளர் அல்லது அவரின் பிரதிநிதி எழுத்து மூலம் கேட்டல்.
2. நிருவாகக் குழுவின் தீர்மானம்
3. தலைவரின் எழுத்து மூலமான கட்டளை
4. துணைவிதிகளில் குறிப்பிட்டுள்ள உறுப்பினர்களின் தொகைக்கு மேற்பட்டவர்கள் எழுத்து மூலம் வேண்டுதல்.

விசேட பொதுக் கூட்டத்தில் எடுத்தாளப்படவிருக்கும் தீர்மானங்கள் பற்றிக் கூட்ட அறிவித்தலில் வரையறுத்துக் கூறப்பட்டிருத்தல் வேண்டும். இக் கூட்ட அறிவித்தல்கள் பொதுவாக 7 நாட்களுக்கு முன் உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட வேண்டுமெனப் பெரும்பாலான கூட்டுறவுச் சங்கத் துணைவிதிகள் குறிப்பிடுகின்றன. ஆனல் பதிவாளர் அல்லது அவரின் பிரதிநிதி கூட்டும் கூட்டங்களுக்கு 48 மணித்தியால அறிவித்தல் போதுமானது.

## இலாபப் பங்கீடு

ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கமும் கூட்டுறவுச் சட்டம் 44 க்கிணங்க ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் கணக்காய்வு ஒன்றினைச் செய்து அக் கணக்கறிக்கையில் உறுதிப்படுத்தப்பட்ட தேறிய இலாபத்தைப் பகிர்வு செய்யலாம். தேறிய இலாபத்திலிருந்து இரு ஒதுக்கீடுகள் கட்டாயமாகக் கூட்டுறவுச் சட்டப்படி செய்யப்பட வேண்டியன. அவை: 1. ஒதுக்கு நிதி 2. கூட்டுறவு நிதி

ஒதுக்கு நிதி : (சட்டப்படி அடக்கப் பணம்) தேறிய இலாபத்தின் 25 வீதத்திற்குக் குறையாத தொகையொன்றை இந் நிதிக்கு மாற்றுதல் வேண்டும்.

கூட்டுறவு நிதி : விதிகளினுல் விதிக்கப்படக் கூடியவாறு தேறிய இலாபங்களின் அத்தகைய பகுதியை விதிகளின் கீழ்த் தாபிக்கப்பட்ட கூட்டுறவு நிதிக்கு உதவல் வேண்டும். இந்நிதிக்கு ஒவ்வொரு சங்கமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 ரூபாவுக்குக் குறையாததும் தேறிய இலாபத்தில் 10 வீதத்திற்கு மேற்படாததுமான ஒரு தொகை செலுத்துதல் வேண்டும்.

இவை இரண்டுக்கும் ஒதுக்கீடு செய்தபின் எஞ்சியிருக்கும் இலாபத்தை பின்வரும் எல்லா அல்லது எவையேனும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தலாம், அவையாவன:

1. உறுப்பினர்களின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்திற்கு விதிகளில் விதிக்கப்பட்ட வீதத்திற்கு மேற்படாத (12%) பங்கு இலாபம் (வட்டி) வழங்கல்.

2. சங்கத்துடன் உறுப்பினர்களால் செய்யப்பட்ட அலுவல்களின் பெறுமதிமீது, துணைவிதிகளில் விதிக்கப்பட்ட அளவுக்கும், விதித்த முறையிலும் அவர்களுக்குத் தள்ளுபடி வழங்கல்.

3. துணைவிதிகளில் விதிக்கப்படக் கூடிய நிதிகளுக்கு உதவு தொகை வழங்கல்.

4. சங்கத்தின் ஊழியர்களுக்கு மிகையூதியம் வழங்கல்.

5. துணைவிதிகளில் குறிப்பிடக் கூடிய வேறு கணக்கின் மீதான செலுத்துதல்.

6. பொதுநல நிதிக்கு ஒதுக்கீடு செய்தல், சமூக, கலாச்சார, பொழுது போக்கு அல்லது உள்ளூர்ப் பயனுள்ள அல்லது பொதுப் பயனுள்ள ஏதேனும் குறிக்கோளை முன்னேற்றும் செயல்களுக்கு இந்நிதி பயன்படுத்தப்படலாம். தேறிய இலாபத்தில் 10 வீதத்திற்கு மேற்படாத தொகையொன்றை இந்நிதிக்கு உதவு தொகையாகச் செலுத்தலாம்.

## துணைவிதிகளில் விதிக்கப்படக் கூடிய நிதிகள்

பங்கு மாற்றுநிதி, கட்டிடநிதி, எதிர்பாராச் செலவு நிதி, பொதுச் சபையின் அங்கீகாரத்துடன் உருவாக்கப்படும் வேறு ஏதாவது நிதி எனப் பெரும்பாலான கூட்டுறவுச் சங்கத் துணைவிதிகளில் கூறப் பட்டிருக்கின்றது.

வரையறுக்கப்படாத கூட்டுறவுச் சங்கமொன்றின் இலாபம் பதிவாளரின் பொதுவான அல்லது சிறப்பான கட்டளையின்றிப் பகிர்வு செய்யக் கூடாது.

## இலாபப் பங்கீட்டுக்குரிய கட்டுப்பாடுகள்

1. பங்கு முதலில்லாத கூட்டுறவுச் சங்கமொன்று பணத்தின் எப் பாகத்தையேனும் உறுப்பினருக்குப் பங்கிலாபமாக அல்லது வேறு வழியில் பகிர்வு செய்ய முடியாது. இவ்விதி சிக்கன சங்கத்தைப் பாதிக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. தேறிய இலாபம் கணக்கிடப்படுமுன் சங்கத்தின் முழு வருடச் செலவும் இலாப நட்டக் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்.

3. இலாபப் பகிர்வுக்குப் பதிவாளரின் முன் அனுமதி பெறப் படல் வேண்டும்.

4. கடன் கொடுத்தவருக்கு அல்லது வைப்புப் பணமிட்டவருக்குக் கொடுக்குமதியிருக்கும் வரை கூட்டுறவுச் சங்கமொன்று பங்கிலாபமாவது கொள்வனவு இலாபமாவது கொடுத்தலாகாது.

5. வங்கி ஒழிந்த ஏனைய உறுப்பினரல்லாதவர்களிடமிருந்து கடன் வசதிகள் ஏற்கும் வரை ஒரு கூட்டுறவுச் சங்கம் பங்கு இலாபம் (வட்டி) கொடுக்கக் கூடாதென்று அல்லது விதித்த குறைந்த வீதத்தில் கொடுக்க வேண்டுமென்று பதிவாளர் பொது அல்லது சிறப்புக் கட்டளையிடலாம்.

## இலாபப் பங்கிடு செய்யும் அதிகாரம்

துணைவிதிகள் மூலம் இவ்வதிகாரம் பொதுச் சபைக்கே வழங்கப் கப்பட்டுள்ளது. பொதுச் சபை கூடித் திட்டத்தைத் தயாரிப்பது காலதாமதமும் சிரமமுமான செயலாகும். எனவே நிருவாக சபை இலாபப் பகிர்வு திட்டமொன்றைத் தயாரித்துப் பொதுச் சபைக் குச் சமர்ப்பிக்கின்றது. பொதுச் சபை அதனை ஏற்கலாம், திருத்த லாம்; நிராகரிக்கலாம். புதுத் திட்டமொன்றைக் கொண்டு வந்து ஏற்கலாம். பொதுவாக நிருவாகக் குழுவின் திட்டத்தை ஏற்பதோ அல்லது திருத்தங்களுடன் ஏற்பதோதான் பெரும்பாலும் நடைமுறை யிலிருந்து வருகிறது. பொதுச் சபையால் ஏற்கப்பட்ட இலாபப் பகிர் வுத் திட்டம் பதிவாளரின் அனுமதியைப் பெற்றதும் பயனுடைய தாகும்.

## ஊழியர் மிகையூதியம்

தேறிய இலாபத்தில் 20 வீதம் அல்லது அவர்களின் ஒரு மாதச் சம்பளம் இரண்டில் எது குறைவோ அத்தொகையே மிகையூதியமாக வழங்கப்பட வேண்டும் எனக் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுக் கட்டளைச் சட்டத்தின் முதலாம் பகுதியின் 35-வது பிரமாணம் கூறுகிறது.

## கூட்டுறவு நிதி

அமைச்சரின் பொது அல்லது சிறப்பான பணிப்புரைகளுக்கு அமைவாகப் பதிவாளரால் ஆட்சி செய்யப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் நோக்கங்களுக்காக இந் நிதியைப் பயன்படுத்தலாம். அவையாவன:

1. கூட்டுறவுச் சங்க விசாலிப்பும் பிரசித்தப்படுத்தலும்.
2. கூட்டுறவுச் சங்க முகாமைத் திறமைகளை மேல் விருத்தி செய்தல்
3. இயங்குகின்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவியளித்தல்

இவைபற்றி கூட்டுறவுச் சட்டம் 43, கூட்டுறவு விதிகள் 15, 43 என்பன கூறுகின்றன.

## துணைவிதி திருத்தம்

ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் துணைவிதிகளை ஆக்கும் அங்கீகரிக்கும் அதிகாரம் அதன் பொதுச்சபைக்கு உண்டு. அவ்வாறு பொதுச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள் பதிளாளரால் பதிவு செய்யப்பட்டதன் பின்பே பயனுடையதாகும். அது போன்று துணை விதிகளின் திருத்தங்களையும் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபை அங்கீகரித்து பதிவாளரினால் பதிவு செய்யப்பட்ட பின்பே பயனுடையதாகும். சங்கத்தின் பெயருட்பட சகல துணை விதிகளிலும் திருத்தங்கள் செய்யப்படலாம். துணைவிதிகளில் திருத்தம் கொண்டுவருஞ் சூழ்நிலைகள் பின்வருமாறு ஏற்படலாம். அவை யாவன:

1. சங்க உறுப்பினர்களின் கோரிக்கை
2. நிருவாக சபையின் தீர்மானம்
3. பதிவாளரின் விதந்துரைப்பு

கூட்டுறவுச் சங்கப் பொதுச் சபைக்குச் சமர்ப்பிக்கப்படும் துணை விதி திருத்தம் பதிவாளரின் முன் அங்கீகாரம் பெற்றதாகவோ அன்றிப் பெறுததாகவோ இருக்கலாம்.

துணைவிதி திருத்தம் என்பதனுள் புதுத் துணைவிதிகளைச் சேர்த்தல், துணைவிதி ஒன்றினை இல்லாதொழித்தல், துணைவிதி ஒன்றினை வேறுபடுத்தல் என்பன அடங்கும்.

## துணைவிதி திருத்தம் பொதுச் சபையில் நிறைவேற்றப்பட வேண்டிய முறை:

பதிவாளரின் முன்னனுமதி பெறப்படாத அல்லது விதந்துரைப்புடனில்லாத துணைவிதி திருத்தம்

1. வரையறுக்கப்படாத கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த வரையில் துணைவிதித் திருத்தப் பொதுச்சபைக்கு, உறுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பினர்களின் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் சமுகமளித் திருத்தல் வேண்டும். சமுகமளித்தவர்களில் நாலில் மூன்று பங்கு வாக்குகளைப் பெறல் வேண்டும்.

2. வரையறுக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கமாயின் துணைவிதித் திருத்தத் தீர்மானம், சங்கத்தின் பொதுக் கூட்டத்திற்குச் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ளவர்களின் பெரும் பான்மை வாக்குகளைப் பெற்றிருத்தல் வேண்டும். இவ் வாக்குகளை எழுத்து மூலமும் பெறலாம். எழுத்து மூலம் வாக்களிப்பதாயின் அத்தகைய உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் அனுப்பப்பட்டு துணைவிதிகளின்படி நிறைவெண்ணுள்ள பொதுக் கூட்டத்தில் பரிசோதிக்கப்பட்டு எண்ணப்படல் வேண்டும்.

## பதிவாளரின் முன்னனுமதி பெற்ற அல்லது விதந்துரைப்புடன் கூடிய துணைவிதி திருத்தம்

துணைவிதி திருத்தம் பற்றி ஆலோசிப்பதற்காக முறையான அறிவித்தல் கொடுக்கப்பட்ட, துணைவிதிகளின்படி நிறைவெண்ணுள்ள ஒரு பொதுச்சபைக் கூட்டத்துக்குச் சமுகமளித்தவர்களில் நாலில் மூன்று பங்கினரின் வாக்குகளைப் பெற்று நிறைவேற்றப்படல் வேண்டும்.

துணைவிதி திருத்தம் பொதுச்சபையில் முறையாக நிறைவேற்றப்பட்டபின் அதன் இரு பிரதிகளையும் அது சட்டத்துக்கும் விதிகளுக்கும் அமைவாக நிறைவேற்றப்பட்டதென்பதைத் தலைவராலும் காரியதரிசியாலும் அத்தாட்சிப் படுத்திக் கையொப்பமிட்ட பத்திரத்துடன் பதிவாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கூட்டுறவுச் சட்டத்துக்கும் விதிகளுக்கும் அமைவாக இருப்பதாகப் பதிவாளர் திருப்தியுறின் துணைவிதித் திருத்தத்தைப் பதிவு செய்து அதன் பிரதியில் கையொப்பமிட்டுப் பதிவு செய்தமைக்கு அத்தாட்சியாகச் சங்கத்துக்கு அனுப்பி வைப்பார். பதிவு செய்த பின்னரே துணைவிதி திருத்தம் பயனுடையதாகும். பதிவாளர் திருப்தியுறாவிடின் அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யலாம் என்ற நிபந்தனையுடன் துணைவிதித் திருத்தத்தைப் பதிவு செய்ய மறுக்கலாம்.

## சங்கப் பெயரை மாற்றும் திருத்தம் பற்றிய கட்டுப்பாடுகள்

1. கூட்டுறவுச் சங்கமொன்றின் பெயர் மாற்றம் பற்றிய திருத்தமானது அச்சங்கத்தின் அல்லது அதன் உறுப்பினர்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளின் அல்லது கடந்தகால உறுப்பினர்களின் ஏதேனும் உரிமையை அல்லது கடப்பாடுகளைப் பதிப்பதாக இருத்த லாகாது.

2. அச் சங்கத்தின் தீர்க்கப்படாத சட்ட நடவடிக்கையெது வும் அதன் புதிய பெயரின் கீழ் சங்கத்தால் அதற்கு எதி ராகத் தொடர்ந்தவர்களால் தொடர்ந்து நடத்தப்பட லாம். இவைபற்றிக் கூட்டுறவுச் சட்டம் 8 விதி 33 என் பன கூறுகின்றன.

## நிருவாக சபை

நிருவாக சபையை பணிப்பாளர் சபை, இயக்குனர் சபை, நெறியாளர் குழு, நிருவாகக் குழு எனப் பல பெயரால் அழைப் பர். உறுப்பினர்களுக்கு உச்சப்பயன் கிடைக்கக் கூடிய வகையில் சேவைகள் கிடைக்கக் கூடிய வகையிலும்; உறுப்பினர்களின் பொது நலன்களைப் பேணும் வகையிலும் உறுப்பினர்களின் பதிலாளர்க ளாகச் சங்கச் செயற்பாடுகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தி மேற் பார்வை செய்வதே இதன் முக்கிய கடமையாகும். நிருவாக சபைக் குப் பொதுச்சபை தனது அதிகாரங்களில் சிலவற்றை அளிக்கிறது. பதிவாளரால் நியமிக்கப்படும் நிருவாக சபைக்குப் பதிவாளர் அதி காரங்களை அளிக்கிறார். எனவே நிருவாக சபை பொதுச்சபைக் கும் பதிவாளருக்கும் பொறுப்பானது. நிருவாக சபை தனது செயற்பாடுகளையும் அதிகாரங்களையும் கூட்டுறவுச் சட்டம், விதி, துணைவிதிகளுக்கிணங்கவும், பொதுச் சபைத் தீர்மானங்கள், பதி வாளர், கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு என்பனவற்றின் பணிப் புரைகள் என்பவற்றிற்கிணங்கவும் மேற்கொள்ள வேண்டும்.

நிருவாக சபையைப் பற்றி கூட்டுறவுச் சட்டம் விபரமாகக் கூறவில்லை. கூட்டுறவு விதிகள், துணைவிதிகள் என்பனவற்றிலேயே விபரமாகக் காண முடியும்.

"ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட சங்கமும் ஒரு நிர்வாக சபையினையுடையதாயிருத்தல் வேண்டும். சங்கத்தின் துணை விதிகளின்படி நிருவாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய் யப்படவோ, இடைநிறுத்தப்படவோ அகற்றப்படவோ இயலும். ஒரு பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் துணைவிதிகள் பிராந்திய அல்லது கிளை நிருவாக சபைக்கான ஏற்பாடுகளையுடை யதாக இருக்குமாயின், அத்தகைய பிராந்திய அல்லது கிளை நிருவாகசபை உறுப்பினர் ஒருவர் துணைவிதிகளில் விதிக்கப்பட்ட முறைக்கமையத் தெரிவு செய்யப்படவோ இடைநிறுத்தப்படவோ அகற்றப்படவோ இயலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறப்பட்ட ஏற்பாடுகள் எங்ஙனமாயினும் ஒரு புதிய கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்யப்படும் பொழுது பதிவாளர் அத்தகைய சங்கத்தின் தற்காலிக பணிப்பாளர் சபைக்கு நியமனம் செய்வதற்கும், அத்தகைய தற்காலிக பணிப்பாளர் சபையிலிருந்து அத்தகையோரை அகற்றுவதற்கும் தத்துவமுடையவராவர் பதிவாளரினால் நியமனம் செய்யப்பட்ட தற்காலிகப் பணிப்பாளர் சபை, பொதுக்கூட்டமொன்றினதும் நிருவாகசபையொன்றினதும் தத்துவங்களையுடையதாயிருத்தல் வேண்டும். ஆயினும் பதிவாளரால் இவ்வண்ணம் நியமிக்கப்பெற்ற ஒரு சபை 12 மாதங்களுக்கு மேற்பட்ட காலத்துக்கு இயங்க முடியாது" எனக் கூட்டுறவு விதி (19) கூறுகிறது.

நிருவாகசபை உறுப்பினர்களை அல்லது பிராந்திய அல்லது கிளை நிருவாக சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்யப்படும் முறை இடைநிறுத்தம் செய்யப்படும் முறை, அகற்றப்படும் முறை என்பன பற்றி ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் துணைவிதிகளைத் தெரிவாகவும் விபரமாகவும் சந்தேகத்திற்கிடமில்லாமலும் ஆக்குதல் வேண்டும். துணைவிதிகள் விதித்தபடியே இச்செயல்கள் நடைபெற வேண்டும். ஆயினும் துணைவிதிகள் மாறாகவிருப்பினும் பதிவாளர் நிருவாக சபைக்கு ஒரு உறுப்பினரையோ ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினரையோ நியமிப்பதற்கு அதிகாரமுந் தத்துவமும் உடையவராவர். அவ்வாறு நியமிக்கப்படுபவர்களிடையேயிருந்து தலைவரை அல்லது உபதலைவரை அல்லது இருவரையும் நியமிப்பதற்குப் பதிவாளர் தத்துவமுடையவராவார். பதிவாளர் இவ்வண்ணம் நியமிப்பாராயின் தெரிவுசெய்யப்பட்ட தலைவர், உபதலைவர் என்போர் தம்பதவியை இழப்பர் எனக் கூட்டுறவு விதி (20) கூறுகிறது.

## நிருவாக சபையின் அதிகாரம்

பொதுச் சபைக்கென துணைவிதிகளால் ஒதுக்கப்படாத சங்கச் செயற்பாடுகள் சம்பந்தமான சகல கருமங்களையும் செய்வதற்கு நிருவாக சபைக்கு அதிகாரமும் தத்துவமும் உண்டு. நிருவாகசபையின் அதிகாரங்களைப் பொதுச் சபையில் உருவாக்கப்பட்ட துணைவிதிகளே வழங்குகின்றன. இவ்வதிகாரங்கள் நிருவாகசபைக்கு வழங்கப்படுகின்றதேயல்லாது எந்தவொரு தனியுறுப்பினருக்கும் வழங்கவில்லை. எனவே எந்தவொரு தனிப்பட்ட நிருவாக உறுப்பினருக்கும் தனிப்பட்ட முறையில் அதிகாரமில்லை. குழுவாகக் கூடும்போது மட்டுந்தான் அதிகாரம் உண்டு. சங்கச் செயற்பாடுகள் முழுவதையும் குழு ஒன்று சேர்ந்து கட்டுப்படுத்துவதோ அல்லது மேற்பார்வை செய்வதோ இயலாத காரியமாகும். எனவே தனது அதிகாரங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானத்தின் மூலம் ஒருவருக்கோ ஒன்றுக்கு மேற்பட்டவர்களுக்கோ வழங்கலாம். சில பதவி வழி உறுப்பினர்களுக்கு (தலைவர், காரிய தரிசி, உபதலைவர் போன்றவர்களுக்கு) பொதுச் சபையால் உருவாக்கப்பட்ட துணைவிதிகள் மூலம் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## நிருவாக சபை உறுப்பு நிலைக்காய தகுதியீனங்கள்

1. 21 வயதுக்குட்பட்டவராய் இருத்தல்
2. கடனிறுக்கும் இயலுந் தன்மையின்மை கோரி விண்ணப்பஞ் செய்தவர் அல்லது அவ்வாறு தீர்ப்புப் பெற்றவர்.
3. சித்த சுயாதீனமற்றவர்
4. கடந்த முன் மூன்றுண்டுகளுக்குள் ஒழுக்கச் சீர்கேடு காரணமாகக் குற்றவாளியாகக் காணப்பட்டவர் அல்லது மூன்று மாதத்திற்கு மேற்பட்ட சிறைத் தண்டனை பெற்றவர்.
5. அச்சங்கத்திற்கு அல்லது பதிவு செய்யப்பட்ட வேறு கூட்டுறவுச் சங்கத்திற்கு அல்லது ஒரு ஒழிப்போனுக்கு மூன்று மாத காலத்துக்குள் கடனைத் திருப்பிக் கொடுக்கத்தவறியவர் அல்லது மேற்கூறியவருக்கு எவ்வகையிலேயும் செலுத்த வேண்டியதைச் செலுத்தத் தவறியவர்.
6. உறுப்பினர் அல்லது பணியாளர் என்ற கோதாவிலன்றி நேர்முகமாகவோ மறைமுகமாகவோ சங்கத்துடன் செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் அல்லது சங்கம் செய்த விற்பனையில் அல்லது கொள்வனவில் அல்லது நடைமுறையிலிருக்கும் அல்லது பேச்சிலிருக்கும் ஒப்பந்தத்தில் அல்லது கொடுக்கல் வாங்கலில் கரிசனையுடையவர்கள்.
7. கடந்த முன் மூன்றுண்டுகளாக நிருவாக சபையில் கடமையாற்றுவதற்கெனத் தொடர்ச்சியாகத் தெரிவு செய்யப்பட்டவர்.
8. சங்கப் பொதுக் கூட்டம் சங்கத்துக் கெதிரிடையானதென்று எண்ணும் முயற்சியில் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ ஈடுபட்டவர்.
9. துணைவிதிகளின் பிரகாரம் நிருவாக சபையில் அல்லது பிராந்திய அல்லது கிளை நிருவாகசபையில் தொடர்ந்திருப்பதற்கு வேறு வகையில் தகுதியற்றவராதல்.

இவை கூட்டுறவு விதி (21)ல் கூறப்பட்டவையாகும். இவற்றை விட ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் தனது தேவைக்கும் விருப்பத்திற்குமேற்பச் சில நிபந்தனைகளைச் சேர்த்துக் கொள்ளலாம். வட்டிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப் பணம் கொடுப்பவர், தொழில் ஒப்பந்தகாரர் இச் சங்கத்தில் அல்லது இச்சங்கம் அங்கம் வகிக்கும் வேறு சங்கத்தில் பணிபுரிபவர், தனது பதவியை அல்லது வேலையைக் கடந்த முன் 5 ஆண்டுகளுக் குள் விட்டகல வேண்டிய நிலைக்குள்ளானவர் போன்ற நிபந்தனை களை துணைவிதிகளில் சேர்த்துக்கொள்ளலாம்.

நெசவுத் தொழிலாளரை அல்லது பாடசாலை மாணவர்களை உறுப்பினராகக் கொண்ட ஒரு பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தைப் பொறுத்தவரையில், அச்சங்கத்தின் உறுப்பினர் ஒருவர் 21 வயதுக்கு உட்பட்டவராயினும் அச்சங்க நிருவாக சபைக்கு உறுப் பினராகத் தெரிவு செய்யப்படத் தகுதியுடையவராவார்.

நிருவாக சபைக்கு அல்லது பிராந்திய அல்லது கிளை நிருவாக சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் தான் தெரிவு செய்யப் படுவதற்குத் தகுதியற்றவரல்லவென அச்சங்கத்தின் துணைவிதிக ளில் குறிப்பிட்டுள்ள முறைக்கமைய உறுதியுரை செய்தல் வேண் டும். இவ்வுறுதியுரை பொய்யானதெனக் காணப்படின், பொய் யான உறுதியுரை காணப்பெற்ற திகதியிலிருந்து இரண்டு ஆண்டுக ளுக்கு ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்தில் பதவி வகிக்கத் தகுதியற் றவராவர்.

நிருவாகசபை உறுப்பினர் ஒருவர் பொதுச்சபையின்முன் அங் கீகாரம் பெறப்பட்டதும் பதிவாளரால் அங்கீகரிக்கப்பட்டதுமான வீதப்படி மாத்திரமே சம்பளமாவது தகைமைக் கொடையாவது வேதனமாவது பெற்றுக் கொள்ளலாம். தான்பெற உரிமையில்லாத பணத்தைப் பெறும் நிருவாகசபை உறுப்பினர் அல்லது அலுவல ரைப் பெற்ற முழுப்பணத்தையும் சங்கத்துக்குத் திருப்பிச் செலுத் துமாறு கோரப்படலாம்.

**தெரிவு செய்யப்பட்ட நிருவாக சபை அல்லது பிராந்திய அல் லது கிளை உறுப்பினர் தம்பதவியை இழக்குங் காரணங்கள்**

1. சங்கத்தின் உறுப்பினராயில்லாதொழிதல்
2, கடனிறுக்கும் இயலுந் தன்மையின்மை கோரி விண்ணப் பஞ் செய்தவர் அல்லது அவ்வாறு தீர்ப்புப் பெற்றவர்
3. ஒழுக்கச் சீர்கேடு சம்பந்தமான குற்றச்சாட்டில் குற்றப் பட்டவர் அல்லது மூன்று மாதத்துக்கு மேற்பட்ட சிறைத் தண்டனை பெற்றவர்
4. சித்த சுயாதீனமற்றவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. சங்கத்தின் நலத்துக்கு முரண்பாடானதெனச் சங்கப் பொதுக் கூட்டம் கருதும் வியாபாரத்தை அல்லது வேறு முயற்சியை ஆரம்பித்தல் அல்லது தொடர்பு வைத்தல்
6. சங்கத்தின் துணைவிதிகளின் பிரகாரம் அச்சங்கத்தின் நிருவாக சபையில் அல்லது பிராந்திய அல்லது கிளை நிருவாக சபையில் உறுப்பினராகத் தொடர்ந்திருப்பதற்கு வேறு வகையில் தகுதியற்றவராதல்

## துணைவிதிகள் விதிக்கும் காரணங்களின் மாதிரிகள்

1. பொதுச்சபைக் கூட்டம் ஒன்றினால் முறையாக நிறைவேற்றப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம்
2. செயலாளருக்கு ஒருமாத அறிவித்தல் கொடுத்து எழுத்து மூலம் கொடுக்கப்பட்ட விலகல் கடிதம்
3. போதிய நியாயமின்றித் தொடர்ந்து மூன்று கூட்டங்களுக்குச் சமூகமளிக்காமையால் பதவியிலிருந்து விலகிவிட்டாரென நிருவாகசபை தீர்மானஞ் செய்தல்

பதிவாளரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினராயின் நியமன கால எல்லை முடிவுற்றதும், பதிவாளரின் விலக்கல் கட்டளை பெற்றதும் பதவியை இழப்பர்.

## நிருவாகசபையின் பணிகளைப் பற்றி கூட்டுறவு விதிகளில் குறிப்பிடப்பட்டவை.

1. கூட்டுறவுச் சட்டத்தையும், கூட்டுறவு விதிகளையும், சங்கத்தின் துணைவிதிகளையும் நடைமுறைவிதிகளையும் சங்கத்தின் கருமங்கள் சம்பந்தமாகப் பதிவாளரால் வழங்கப்படும் ஏதேனும் பொதுப் பணிப்புரைகளைப் பின்பற்றல்.
2. உண்மையானதும் சரியானதுமான கணக்குகளை வைத்தல்.
3. சொத்துக்கள் - பொறுப்புக்கள் பற்றிய உண்மையான கணக்குகளை வைத்தல்.
4. சங்கத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பில் வைத்தற்கு ஒழுங்கு செய்தல்.
5. உறுப்பினர் பதிவேட்டினைச் சரியாக வைத்து வருதல்.
6. சங்கத்தின் பொதுக் கூட்டத்தில், கணக்காய்வு செய்யப்பட்ட இலாபநட்டக் கணக்கினையும், ஐந்தொகையினையும் பதிவாளரிடமிருந்து இத்தகைய அறிக்கையினைப் பெற்றுக் கொண்ட திகதியிலிருந்து இரண்டு மாத காலத்திற்கிடையில் சமர்ப்பித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. புத்தகங்களைப் பரிசீலனை செய்ய அதிகாரமுள்ளவர்களுக்கு அவற்றைப் பரிசீலனை செய்வதில் உதவி செய்தல்.

8. சங்கம் உறுப்பினர்களுக்குக் கடன் வழங்குவதாயின், கொடுக்கப்பட்ட நோக்கத்திற்குக் கடன்கள் பயன்படுத்தப்படுவதை மேற்பார்வை செய்தல்.

9. கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் பிரிவு 45க்கு (கணக்குப் பரிசோதனை மூலம் கண்டுபிடிக்கப்பட்ட குறைபாடுகள்) பதிவாளரால் அறிவிக்கப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்.

இவற்றைவிட ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் தனது துணை விதிகள் மூலம் நிருவாகசபையின் பணிகளையும் கடமைகளையும் விதிக்கலாம். பெரும்பாலான கூட்டுறவுச் சங்கத் துணைவிதிகளில் காணப்படும் நிருவாக சபையின் பணிகள் கீழே தரப்படுகின்றன. அவை யாவன:

1. தமக்குள்ளிருந்து சங்கத்தின் தலைவர் ஒருவரையும், உபதலைவர் ஒருவரையுந் தெரிவு செய்தல்.

2. நிருவாக சபையில் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு ஆட்களை ஒத்துத் தேர்ந்தெடுத்தல். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் பொதுச்சபையின் அடுத்த கூட்டம் வரை பதவி வகிப்பார்.

3. பொதுச் சபை நிர்ணயித்த மேலெல்லைக்குக் கீழ்ப்படிய சங்கத்தின் தொழிற்பாடுகளுக்குத் தேவைப்படும் வளஆதாரங்களை எங்கிருந்து பெறுவது என்பதனையும் அவை எந்த நிபந்தனைக்கமையப் பெறவேண்டுமென்பதனையும் நிர்ணயித்தல்.

4. ஆணையாளரால் (பதிவாளர்) அங்கீகரித்த திட்டத்தின்படியும் அத்திட்டம் வரையறுக்கும் சம்பள விகிதம் ஒழுங்குமுறை வேலை நீக்கம் என்பவற்றிற்கமையவும் ஒரு முகாமையாளரினதும் வேறு பணியாளர்களினதும் சேவைகளைப் பெறுதல்.

5. பொதுச் சபையின் முன் அனுமதியுடன் சங்கத்திற்குத் தேவைப்படும் நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் மூலமோ அல்லது வேறு வழியிலோ சொந்தமாக்கல்.

6. பொதுச் சபையின் முன் அனுமதியுடன் சங்கத்தின் எந்த நிலையான சொத்துக்களையும் விற்பனை செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பங்குகளை ஒதுக்கிக் கொடுத்தல், பங்கு மாற்றத்திற்கு அதிகாரம் வழங்கல். சங்கத்தின் சார்பாக வேறு நிறுவனங்களில் பங்குகளை வாங்குதல்.

8. சங்கத்தின் எந்த உத்தியோகத்தர் மூலமோ அல்லது பணியாள் மூலமோ சட்ட நடவடிக்கைகளைத் தாக்கல் செய்தல், நடாத்துதல், எதிர்த்தல், சமரச இணக்கத்திற்கு வருதல், அல்லது கைவிடுதல்.

9. கடன்களை வழங்குந் திட்டங்களை வகுத்தல்.

10. சங்கத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு வேண்டிய உப குழுக்களை நியமித்தல் இவை போன்றவையாகும்.

பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்களின் துணைவிதிகளில் காணப்படும் நிருவாக சபையின் கடமைகள் கீழே தரப்படுகின்றன. அவை யாவன:

1. பொதுச் சபையின் வருடாந்தக் கூட்டத்தினையும் தேவையானபோது அச்சபையின் விசேட கூட்டங்களையும் அழைத்தல்.

2. நிதியாண்டு தொடங்குவதற்கு இருமாதங்களுக்கு முன்பாவது சங்கத்தின் எதிராண்டு வரவு செலவுத் திட்டத்தினைப் பொதுச் சபைக் கூட்டத்தில் சமர்ப்பித்தல்.

3. புதிய முயற்சியெதையும் ஆரம்பிக்க முன் அதுபற்றிய சாத்தியக் கூற்று அறிக்கையினைப் பெற்று மதிப்பீடு செய்தல்.

4. சங்க வளர்ச்சி பற்றி முகாமையாளரிடமிருந்தும் ஏனைய பணியாளரிடமிருந்தும் அறிக்கைகளைப் பெற்று ஆராய்ந்து முகாமையாளருக்குத் தகுந்த ஆணையைப் பிறப்பித்தல்.

5. முதலையும் நிதியையும் திரட்டும் நிதிக்கொள்கையைத் தீர்மானித்தல்.

6. விற்பனைப் பொருள்களின் கொள்வனவுக் கொள்கையைத் தீர்மானித்தல்.

7. ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திற்கமைய ஆள் பணிக் கொள்கையைத் தீர்மானித்தல்.

8. விற்பனைப் பொருள்களின் விநியோகக் கொள்கைகளைத் தீர்மானித்தல்.

9. உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்தும் கொள்கையைத் தீர்மானித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. கல்வி, கலாச்சார, பொழுதுபோக்கு, சமூக சேவை முயற்சி களுக்கு ஒழுங்கு செய்தல்.

11. பொதுச் சபைக்கோ அல்லது முகாமையாளருக்கோ குறிப் பாக ஒதுக்கப்படாத சங்க நோக்கத்தை எய்துவதற்கு அவ சியமான அல்லது அனுகூலமான இதர கருமங்கள் யாவற் றையுஞ் செய்தல்.

இவை போன்றவை சங்கத்துணைவிதிகளில் இடம்பெற்றிருக்கும்.

ஒரு பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம் அரசாங்கத்தின் அல்லது கூட்டுத்தாபனத்தின் முகவராகச் செயலாற்றுவதாயின் அதன் அதிகாரிகளினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கு அமை வாக அத்தகைய சேவைகளை ஆற்றுதல் நிருவாக சபையினதும் ஒவ்வொரு பணியாளரதும் கடமை.

ஒரு பதிவு செய்யப்பட்ட கடனுதவுச் சங்கத்தின் விடயத்தில் நிருவாக சபை உறுப்பினர்கள் சங்கத்துக்குக் கட்டவேண்டிய மொத் தக் கடன் தொகை சங்கத் தொழிற்படு முதலின் 25 வீதத்திற்கு மேற்படலாகாது. ஆயினும் சங்க உறுப்பினர்களது கடன் தேவை யைப் பூர்த்தி செய்யப் போதுமான நிதிகளை அச் சங்கம் கொண் டிருப்பதாகப் பதிவாளர் கருதினால் அச்சங்கத்துக்கு இவ் விதி பொருந்தாது.

## நிருவாக சபையின் பொறுப்பு

ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் நிருவாக சபையானது உரிய ஊக் கங் காட்டத் தவறியதன் விளைவாக அல்லது கூட்டுறவுச் சட்டம் கூட்டுறவு விதி, சங்கத்தின் துணைவிதி, சங்க நடைமுறை விதி, ஆணையாளரின் ஏதேனும் பொதுப் பணிப்புரைகள் என்பனவற்றைப் பின்பற்றத் தவறியதன் விளைவாக ஏற்பட்ட ஏதேனும் நட்டம் அல்லது தண்டத்துக்கு நிர்வாக சபையின் ஒவ்வொரு உறுப்பின ரும் தனித்தும் ஒருமித்தும் பொறுப்பாளியாக வேண்டும். இவை பற்றிக் கூட்டுறவு விதிகள் 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27 என்பன கூறுகின்றன.

## நிருவாகசபைக் கூட்டம்

இக்கூட்டம் தேவையேற்படும் போதெல்லாம் கூடப்படுமாயினும் ஆகக் குறைந்தது மாதம் ஒரு தடவையாவது கூடுதல் வேண்டும். தலைவர், நிருவாகசபை, நிருவாகசபை உறுப்பினர்களில் பெரும் பான்மையோர். ஆணையாளர் (பதிவாளர்) என்போரின் கோரிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைக்கிணங்க அல்லது நிருவாகசபை உறுப்பினரில் பெரும்பான்மையோர் எழுத்து மூலம் கோரியதற்கிணங்கச் செயலாளரால் நிருவாகசபைக் கூட்டம் கூட்டப்படும். இக்கூட்டத்துக்குத் தலைவர் அவர் சமூகமளிக்காதவிடத்து உபதலைவர் இருவருஞ் சமூகமளிக்காதவிடத்து சமூகமளித்த உறுப்பினர்களில் அவர்களால் தெரிந்தெடுக்கப்படும் ஒருவர் தலைமை வகிக்கலாம்.

ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒவ்வொரு வாக்குரிமையே உண்டு. வாக்குகள் சமனுக இருக்குமிடத்து தலைவருக்கு அறுதியிடும் வாக்கொன்று மேலதிகமாக உண்டு.

நிருவாக சபைக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் அல்லது தீர்மானிக்கப்படும் எல்லா விடயங்களும் நிருவாகசபைக் கூட்ட அறிக்கைப் புத்தகத்தில் செயலாளரால் பதியப்படல் வேண்டும். கூட்ட முடிவில் தலைவரும் சமூகமளித்த நிருவாகசபை உறுப்பினர்களும் கூட்ட அறிக்கையின் கீழ்க் கையொப்பமிடல் வேண்டும். நிருவாக சபை உறுப்பினர் தொகையில் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் சமூகமளித்தாலே கூட்டத்தை நடத்தலாம்.

நிருவாகசபை உறுப்பினர்களிடையே வெற்றிடங்கள் இருப்பதாலோ எந்த நிருவாகசபை உறுப்பினரின் நியமனத்திலோ அல்லது தெரிவிலோ ஏதேனும் குறைபாடுகளிருப்பதனுல் நிருவாக சபையின் எந்தச் செயலோ நடவடிக்கையோ செல்லுபடியற்றதாகிவிடாது.

## தலைவர்

நிருவாகசபை உறுப்பினர்களால் தெரிவு செய்யப்படுவதன் மூலம் அல்லது பதிவாளரின் (ஆணையாளர்) நியமன மூலம் ஒருவர் தலைவர் ஆகலாம். இவரே சங்கத்தின் உயர் அதிகாரி. இவர் நிருவாக சபையின் பதிவாள். இவர் நிருவாக சபைக்காக நிருவாக சபையின் தீர்மானங்களுக்கிணங்கச் சங்கச் செயற்பாடுகளைக் கொண்டு நடாத்தும் பொறுப்புடையவர். சங்கச் செயற்பாடுகளிலும் நிருவாகத்திலும் எழும் அன்ருடப் பிரச்சனைகளுக்கு உடன் தீர்வு காணவேண்டில் அதற்குரிய பொறுப்பும் உரிமையும் உடையவர்.

சங்கத்தின் தலைவர், புதிய தலைவர் ஒருவரைத் தெரிவுசெய்யும் வரை பதவி வகித்தல் வேண்டும். ஆயினும் எழுத்து மூலம் ஒரு மாத முன்னறிவித்தல் கொடுத்து பதவியிலிருந்து விலகிக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலைவரின் பணிகளும் கடமைகளும்**

1. சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டத்துக்கும் நிருவாகசபைக் கூட்டத்துக்கும் தலைமை தாங்குதல்
2. சங்கக் காசோலைகளில் கையெழுத்திடல்.
3. சங்கம் கையொப்பமிட வேண்டிய ஆவணங்களில் சங்கத்துக்காகக் கையொப்பமிடல்.
4. சங்கத்தின் விபரங்களை அறிய உரிமையுள்ளவர்கள் அவ்விடயங்களைக் கேட்கும்போது அறிவித்தல்-
5. பொதுச் சபையினதும் நிருவாக சபையினதும் தீர்மானங்களைத் திறமையாகச் செற்படுத்தலை ஒழுங்கு செய்தல்.
6. சங்க முகாமையாளரதும் ஏனைய பணியாளர்களதும் வேலைகளை மேற்பார்வை செய்தல்.
7. சட்டம், விதி, துணைவிதி, பொதுச்சபை நிருவாக சபைத் தீர்மானங்களுக்கிணங்கவும், அவசியமேற்படின் தனது தற்றுணிவின்படியும் முகாமையாளருக்கும் ஏனைய பணியாளர்களுக்கும் வேண்டிய அறிவுறுத்தல்களை வழங்குதல்.
8. இவைபோன்ற ஏனைய கடமைகள்

**உபதலைவர்**

தலைவர் பதவி போன்று நிருவாக சபையின் தெரிவிலோ அல்லது பதிவாளரின் (ஆணையாளர்) நியமனத்திலோ ஒருவர் உப தலைவர் ஆகலாம். பதவி விலகலுக்குத் தலைவருக்குக் கூறப்பட்ட காரணங்களே இவருக்குமுரியனவாகும்.

தலைவர் இல்லாதபோது பொதுச் சபை, நிருவாகசபைக் கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பதும், தலைவர் இலங்கையில் இல்லாத காரணத்தினுல் அல்லது சுகயீனங்காரணமாகத் தனது செய்கடமைகளை ஆற்ற முடியாத போது அவரின் கடமைகளை ஆற்றுவதும் இவரின் பணிகளாகும்.

**செயலாளர்**

செயலாளர் ஒரு நிருவாகசபை உறுப்பினராகவோ அல்லது பணியாளராகவோ இருக்கலாம். செயலாளர் ஒரு நிருவாகசபை உறுப்பினராக இருப்பின் நிருவாக சபையின் இரகசியங்கள் பாதுகாக்கப்படும் ஆனல் அவர் ஒரு கௌரவ சேவையாளராக இருப்பதால் அவரின் கடமைகளை ஒழுங்காகச் செய்வித்தலில் காலதாமதங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளும் சிரமங்களும் தலைவருக்கும் நிருவாக சபைக்கும் ஏற்படலாம். பணியாளர் ஒருவர் செயலாளராகவிருப்பதால் நிருவாக சபையின் இரகசியங்களைப் பாதுகாப்பதில் கஷ்டங்களிருப்பினும் அவரின் கடமைகளை ஒழுங்காகவும், விரைவாகச் செய்விப்பதற்கும் கடமைகள் ஒழுங்காக நிறைவேற்றப்படுகின்றனவா என்பதை மேற்பார்வை செய்வதற்கும், செய்யாதுவிடின் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கும் நிருவாக சபைக்கும், தலைவருக்கும் இலகுவாக இருக்கும்.

### செயலாளரின் கடமைகள்

1. கூட்டங்களை அழைப்பதற்கு அதிகாரமுள்ள ஒருவர் அல்லது பலர் கோருமிடத்து பொதுச்சபைக் கூட்டங்களையும் நிருவாகசபைக் கூட்டங்களையும் அழைத்தல்.
2. பொதுச்சபை, நிருவாகசபைக் கூட்டங்களில் சமூகமளித்துக் கூட்ட அறிக்கையினைப் பதிவு செய்தல்.
3. இக்கூட்டத் தீர்மானங்களின் பிரதிகளை அவற்றை நிறைவேற்றும் பொறுப்புள்ளவர்களிடம் ஒப்படைத்தல்.
4. உறுப்புரிமை பெற்ற திகதி, உறுப்புரிமை இழந்த திகதி வேறும் வேண்டிய தகவல்களைக் காட்டக்கூடிய முறையில் உறுப்பினர் இடாப்பு வைத்திருத்தல்.
5. நிருவாகசபை உறுப்பினர் பெயர், எவ்வகை உறுப்பினர் (தெரிவு, நியமனம்) பதவியேற்ற திகதி, பதவி முடிவுற்ற திகதி போன்ற விபரங்களைக் கொண்ட நிருவாகசபை உறுப்பினர் இடாப்பு வைத்திருத்தல்.
6. வருடாந்தப் பொதுக்கூட்டம் முடிவுற்ற 14 நாட்களுள் பதிவாளருக்கு (ஆணையாளர்) 5-ல் கூறப்பட்ட விபரங்களடங்கிய நிருவாகசபை உறுப்பினர் பட்டியலொன்றை அனுப்புதல்.
7. நிருவாகசபையில் ஏற்படும் மாற்றங்கள் பற்றிப் பதிவாளருக்கு (ஆணையாளர்) அறிவித்தல்
8. துணைவிதி, நடைமுறைவிதி, நிருவாகசபைத் தீர்மானங்கள் சுமத்தும் ஏனைய கடமைகளைச் செய்தல்.

### முகாமையாளர்

பகுதி முகாமையாளர்களையும், கிளை முகாமையாளர்களையும் கொண்டியங்கும் பேரளவு சங்கங்களில் பொதுமுகாமையாளர் பதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருக்கும் சிற்றளவு சங்கங்களில் முகாமையாளர் பதவியே இருக்கும். இவரே சங்கத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி, நிருவாக சபைக்குப் பொறுப்பானவர். சட்டம், விதி, துணைவிதிகளுக்கும் நிருவாகசபை விதிக்கும் கொள்கைக்கும் இணங்க சங்கத்தின் நோக்கங்களை எய்தற் பொருட்டுத் தளரா ஊக்கத்துடன் கடமையாற்ற வேண்டியவர். தொழில் முயற்சிகள் திறம்பட இயங்குவதை உறுதிப்படுத்த வேண்டியவர். சங்கச் சொத்துக்களின் பாதுகாப்புக்கு வேண்டிய ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டியவர். சங்கக் காசோலைக்கும் சங்கத்தின் ஏனைய ஆவணங்களுக்கும் சங்கத்துக்காகத் தலைவருடன் சேர்ந்து ஒப்பமிட வேண்டிய தத்துவம் கொண்டவர். துணை விதிகள், நடைமுறை விதிகள், பதிவாளரின் (ஆணையாளரின்) பணிப்புரைகள், நிவாகசபைத் தீர்மானங்கள் என்பன விதிக்கும் கடமைகளை ஆற்ற வேண்டிய பொறுப்புடையவர்.

**உறுப்பினர் பார்வைக்காக வைத்திருக்கப்பட வேண்டியவை**

1. உறுப்பினர் பதிவேடு
2. கூட்டுறவுச் சட்டம்
3. கூட்டுறவு விதிகள்
4. துணைவிதிகள்

என்பனவற்றை எவ்வுறுப்பினரும் கட்டணமின்றி நியானமான நேரங்களில் பதிவு செய்யப்பட்ட விலாசத்தில் பார்வையிடுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. கூட்டுறவுத் தொழிலமைப்பு

தொழிலுக்குத் தகுந்த திட்டங்களையமைத்துப் பல்வேறிடங்களிலுள்ள உற்பத்திக் காரணிகளாகிய நிலம், உழைப்பு, மூலதனம் ஆகியவற்றை ஒன்றுதிரட்டி அவற்றைத் தொழிலிலீடுபடுத்தி அதன் விளைவால் ஏற்படக் கூடிய எதிர்பாரா நட்டவச்சப் பொறுப்பை ஏற்பதே அமைப்பாகும். ஆதிகாலப் பொருளியலறிஞர்கள் நிலம், உழைப்பு, மூலதனம் ஆகிய மூன்றையுமே உற்பத்திக் காரணிக்குள் அடக்கினர். உழைப்பு என்ற காரணிக்குள்ளேயே அமைப்பையும் சேர்த்துக் கொண்டனர். பொருளியற்றுறையின் வளர்ச்சி காரணமாக உழைப்பிலிருந்து அமைப்பு வேறுபடுத்தப்பட்டது. அமைப்பின் பணிகளை நான்காக வகுக்கலாம். அவையாவன:

1. திட்டமிடல்
2. காரணிகளை ஒன்றிணைத்தல்
3. திட்டத்தைச் செயற்படுத்தல்
4. விளைவுகளை ஏற்றல்

திட்டமிடல் என்பது பல்வேறு தொழில் முயற்சிகளுள் ஒன்றைத் தெரிவு செய்து, அதற்குரிய காரணிகளின் சேர்க்கைத் தன்மையின் அளவுகளைக் கணித்து, உற்பத்தி முறைகளையும், உற்பத்தியின் அளவுகளையும் நிர்ணயித்து, விநியோக முறைகளையும் வகுத்து செயலாக்கத்திற்கு உதவும் வழிகாட்டியாகும். திட்டமிடும்போது அமைப்பின் இயலுந்திறன் சூழலின் பாதிப்பு எதிர்பாரா விளைவுகள் என்பவற்றுக்குரிய முக்கியத்துவமளித்தாலே நிறைவுறக் கூடிய திட்டமாக அமையும். எனவே திட்டமிடலின் முக்கிய அம்சங்கள் பின்வருவனவாகும்:

1. எதை உற்பத்தி செய்தல் (தெரிவு)
2. எப்படி உற்பத்தி செய்தல் (முறைகள்)
3. எவ்வளவு உற்பத்தி செய்தல்
4. விநியோக வழிகள்

பொருளியலமைப்புக்களைச் சுயேச்சை (முதலாண்மை) பொருளாதார அமைப்பு, கலப்பு பொருளாதார அமைப்பு திட்டமிட்ட (பொதுவுடமைப்) பொருளாதார அமைப்பு என மூன்று வகையாகப் பிரிவு செய்யலாம். கூட்டுறவு அமைப்பு எனத் தனித்துப் பொருளியலறிஞர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் வகைப்படுத்தாதுவிடினும் கூட்டுறவு அமைப்பின் இயல்புகள் விளைவுகள் ஆகியவற்றையும் அதன் தனித்தன்மையையும் உணராமல் இல்லை. இன்று மூவகைப் பொருளியலமைப்புக்குள்ளும் கூட்டுறவுத் தொழிலமைப்புக்கள் உருவாகித் தனித்தன்மையுடன் இயங்குகின்றன. ஒரு நாட்டின் பொருளியலமைப்பு முழுவதையும் தன்னுள்ளடக்கும் பூரண நிலையைக் கூட்டுறவு அமைப்பு இன்றுவரை அடையவில்லை. ஆயினும் எந்தப் பொருளியலமைப்பைச் சேர்ந்த நாடும் கூட்டுறவு அமைப்பின் சிறப்புத் தன்மைகளையும் நலன்களையும் ஏற்றுக் கொள்கின்றது.

முதலாண்மைப் பொருளியலமைப்பு இலாப நோக்கை அடிப்படையாகக் கொண்டது. இதுவொரு விலைப்பொறிமுறையமைப்புப் பொருளாதாரம். உற்பத்தியாளரின் நிரம்பல் அளவைக் கொண்டும் நுகர்வோனின் கேள்வி அளவைக் கொண்டும் சந்தைவிலை தீர்மானிக்கப்படுகின்றது. உற்பத்திச் சக்திக்கும் வாங்குஞ் சக்திக்குமிடையேயுள்ள போட்டித் தன்மையினால் விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. விற்போனுக்கும் வாங்குவோனுக்கும் சந்தையில் விலைகளை நிர்ணயிக்கச் சுதந்திரமான உரிமையுண்டு. இவ்வித பூரண போட்டி நிலையில் விற்போனுக்கும் கொள்வோனுக்கும் அதிக சாதகமோ பாதகமோ இல்லாத நியாயமான (சமநிலை விலை) சந்தைவிலை நிலவும். இவ்விலையிலேயே பண்டங்கள் பரிமாற்றம் செய்யப்படும் இப்பொருளியல் கோட்பாடு தத்துவரீதியில் நியாயமாகக் காணப்படினும் செயல் முறையில் பல குறைபாடுகளைக் கொண்டுள்ளது.

பல்வேறு உற்பத்தி விநியோக நிறுவனங்களிடையே போட்டித் தன்மை கொண்ட அமைப்பு இது. பலங்கொண்ட தொழில் நிறுவனங்கள் பலங் குறைந்த நிறுவனங்களை விரைவில் அழித்துவிடுந் தன்மை கொண்டது. நுகர்வோரின் விருப்பு வெறுப்புக்களை மாற்றியமைக்கத் தொழில் நிறுவனங்கள் பல்வேறு வியாபார தந்திரங்களைக் காலத்துக்குக் காலம் கையாளுந் தன்மை கொண்டது. நுகர்வோரின் பலவீனங்களைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி இலாப அளவினை அதிகரிப்பதற்குத் தொழில் நிறுவனங்களுக்குச் சந்தர்ப்பம் அளிப்பது. நுகர்வோர் நலன்கள், சமூக நலன்கள், தேசிய நலன்களிலும் பார்க்க இலாப நோக்கையே முக்கியமாகக் கொண்டது. உற்பத்தித் தெரிவு, உற்பத்தி முறை, உற்பத்தி அளவு, விலைக் கொள்கை, விநியோக வழிகள் இவற்றைத் தீர்மானிக்கும் போதும் இலாப நோக்கே முக்கிய இடம் வகிக்கின்றது.

எதை உற்பத்தி செய்வது (உற்பத்தித் தெரிவு) என்பதிலும் இலாப நோக்கே முக்கிய இடம் வகிக்கின்றது. A, B என்ற இரு பொருள்களை உற்பத்தி செய்வதற்குரிய வசதிகள் ஒரு நிறுவனத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கு இருக்கும்போது அந்நிறுவனம் பின்வரும் விடயங்களைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளும். அவையாவன: மூலதனத் தேவையின் அளவு, இலாப அளவு, நட்டவச்சப் பொறுப்பின் தன்மை என்பனவாகும். தேவையின் தன்மை, நுகர்வோன் நலன், சமூக நலன், தேசிய நலன் என்பனவற்றுக்கு அதிக முக்கியத்துவமளிக்கப்படமாட்டாது. இந்நலன்களுக்கு அதிக முக்கியத்துவமளிப்பது போலக் காட்டி இலாபத்தை அதிகரிக்க முயற்சிக்கும். A என்ற பொருள் அத்தியாவசிய தேவைத் தன்மையும் நுகர்வோனுக்கும் சமூகத்துக்கும் தேசத்திற்கும் நலன் விளைக்குந் தன்மையும் கொண்டதாக இருந்தும் இலாபம் குறைவாகவும் மூலதனத் தேவை, நட்டவச்சப் பொறுப்பு ஆகியவை அதிகமாகவும் காணப்படின் A பொருள் தெரிவு செய்யப்படமாட்டாது. நுகர்வோர் சமூக, தேசிய நலன்களுக்குக் கேடு விளைப்பதாயினும் இலாபத தன்மை அதிகமாகவும், மூலதனத்தேவை, நட்டவச்சப் பொறுப்புத் தன்மை குறைவாகவும் B என்ற பொருளுக்கிருப்பின் அப்பொருளையே தெரிவு செய்வர்.

இதேபோன்று உற்பத்திமுறைகளைத் தீர்மானிப்பதிலும் இலாப நோக்கே முக்கியமாக கவனத்திற்கெடுக்கப்படும். சிற்றளவு முறை, பேரளவு முறை, உழைப்பு மூலதனம் போன்ற காரணிகளின் சேர்க்கை அளவு வீதம் போன்றவற்றை நிர்ணயஞ் செய்தல் வேண்டும். மனித சக்திக்கு முக்கியத்துவம் அளித்தல், இயந்திர உபயோகத்திற்கு முக்கியத்துவம் அளித்தல் போன்ற விடயங்களையும் உற்பத்தி முறையில் தீர்மானித்தல் வேண்டும். இவற்றைத் தீர்மானிக்கும்போது இலாபத்தை முக்கிய நோக்காகக் கொண்டே தீர்மானிப்பார்கள்.

உற்பத்தியின் அளவைத் தீர்மானிப்பதில் பல அம்சங்களைக் கருத்திற் கொள்ளவேண்டும். ஏனைய அம்சங்களிலும் பார்க்க இலாபத்திற்கே முக்கியம் அளிக்கப்படும். எந்த அளவு உற்பத்தி செய்வது உச்ச இலாபத்தைக் கொடுக்குமோ அந்த அளவில் உற்பத்தி நிறுத்தப்பட்டுவிடும். அந்த அளவுக்கு மேல் உற்பத்தி செய்வது நுகர்வோர், சமூக தேசிய நலன்களை அதிகரிக்குமாயினும் உற்பத்தியாளர் உற்பத்தியிலீடுபடமாட்டார்கள். உதாரணம் :

| உற்பத்திப் பொருள் | உற்பத்திச் செலவு | விற்கும் விலை | இலாபம் |
|---|---|---|---|
| 1000 | 45000 | (1000×75) 75000 | 30000 |
| 2000 | 75000 | (2000×75) 1,50 000 | 75000 |
| 3000 | 135000 | (3000×50) 1,50,000 | 45000 |
| 4000 | 135000 | (4000×40) 1,60 000 | 25000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணத்தில் தரப்பட்ட அட்டவணையின்படி 2000 பொருள்களை உற்பத்தி செய்வதே உற்பத்தியாளனுக்கு உச்ச இலாபத்தைக் கொடுக்கும். எனவே 2000 பொருளை உற்பத்தி செய்வதோடு நிறுத்திக் கொள்வான். நுகர்வோர் சமூக தேசிய நலன்களுக்கு 4000 பொருள்கள் உற்பத்தி செய்வது உகந்ததாயினும் அத் தொகையை உற்பத்தி செய்யமாட்டான். இதேபோன்று விநியோக வழிகளை நிர்ணயிப்பதிலும் இலாப நோக்கே முக்கியமாகத் தொழிற்படும்.

முதலாண்மைப் பொருளாதார அமைப்பிலுள்ள நேர்மையற்ற பொருளாதார நடவடிக்கைகளையும் தவறுகளையும் அகற்றி சமூக தேசிய நலன்களுடன் உறுப்பினர் நலன்களும் பேணப்படுவதற்கு உரிய வழியே கூட்டுறவு. பொருளாதார அமைப்புக்களிடையே இருக்கின்ற முக்கிய வேறுபாடுகளுள் ஒன்று உற்பத்தி செய்யப்பட்ட செல்வம் பங்கீடு செய்யும் முறையாகும். உற்பத்திக் காரணிகளின் பயன்பாட்டுக்கமைய நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு என்ற காரணிகளுக்கிடையில் முறையே வாடகை, கூலி, வட்டி இலாபம் என்ற அடிப்படையில் சமத்துவமும் நீதியும் செறிந்த முறையில் பகிர்வு செய்யப்படின் பிரச்சினைகள் தோன்ரு. முதலாண்மைப் பொருளாதார அமைப்பில் வலிமையும் செல்வாக்கும் நிறைந்த உற்பத்திக் காரணி உரிமையாளர் ஏனைய காரணிகளின் உரிய வருமானத்தைத் தமதாக்கிக்கொள்ள முயல்கின்றனர். இதனுலேயே பிரச்சினைகள் தோன்றுகின்றன.

உற்பத்திக் காரணிகள் யாவின் உரிமையும் ஒன்ருக இருந்தால் செல்வப் பகிர்வுப் பிரச்சனையில் சிக்கல்களே இராது. நீதியும் சமத்துவமும் பகிர்வில் இயல்பாகவே தோன்றும். மூலதனத்தையிட்டு நிலத்தைப் பெற்று நிருவாகப் பொறுப்பையுமேற்று உற்பத்திக்காக உழைப்பவர்கள் ஒரே ஆட்களாக இருந்தால் அங்கே முதலாளி தொழிலாளி என்ற பிரச்சனை எழ நியாயமில்லை. தொழிலாளிகளே முதலாளிகளாகவும், முதலாளிகளே தொழிலாளிகளாகவும் இருப்பர்: இலாபமோ நட்டமோ அவர்களுக்கே உரியது. உற்பத்தியில் மட்டுமன்றிச் சேவைகளிலும் இந்நிலையை உருவாக்கலாம். விநியோகம் செய்பவர்களும் நுகர்வோரும் ஒரே ஆட்களாகவும் கடன் கொடுப்போரும் கடன் பெறுவோரும் ஒரே ஆட்களாகவும் இருந்து அவர்களே அவற்றை நிருவகித்து அதன் விளைவுகளை ஏற்கும் நிலையாகும். இதுவே கூட்டுறவின் இலட்சியமாகும். ஆயினும் நடைமுறையில் உற்பத்திக் காரணிகளின் சேர்க்கைக்கு வெளியிலிருந்தும் சில காரணிகளைப் பெறவேண்டிய சூழ்நிலை ஏற்படும். அப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது சுரண்டப்படாமலும் சுரண்டாமலும் பயன்பாட்டிற்குரிய நீதி யான விலையை அக்காரணிகளுக்கு அளிப்பதே கூட்டுறவுத் தரும மாகும்.

முதலாண்மையின் குறைபாடுகளையும் தவறுகளையும் திருத்துவ தற்காகப் போராட்டமோ பலாத்காரச் செயல்களோ மேற்கொள்ள வேண்டுமெனக் கூட்டுறவு வழிகாட்டவில்லை. முதலாளித்துவப் பிடி யிலிருந்து விலகிக்கொள்ளவே வழிகாட்டுகிறது. போட்டிப் பொருளாதார அமைப்பிலிருந்து கொண்டே போட்டியைத் தவிர்க்க வழிவகுக்கின்றது. ஏழை - பணக்காரன், தொழிலாளி - முதலாளி என்ற எதிர்நிலைகளை நீக்கவும், சமத்துவம், சகோதரத்துவம், சுய உதவி, பரஸ்பர உதவி ஆகிய பண்புகளை வளர்க்கவும், விரும்பும் அனைவரையும் ஒன்றுதிரட்டி அவர்களுக்கு உதவுவதே கூட்டுறவு அமைப்பாகும்.

முதலாண்மைப் பொருளாதார அமைப்பிலுள்ள கூட்டுறவும் தொழில்துறைகள் இரு முக்கிய பணிகளைச் செய்து கொண்டிருக்கின் றன. ஒன்று முதலாண்மைப் பொருளாதார அமைப்பிலுள்ள குறை பாடுகளையும் தவறுகளை நீக்கிப் புதிய பொருளாதார அமைப்பொன்றை உருவாக்க மக்களுக்கு வழிகாட்டிச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. மக்கள் கூட்டுறவு முறையில் புதிய தொழில் நிறுவனங்களை உருவாக்க வும், உருவாக்கிய நிறுவனங்களுள் சேரவும் வழிவகை செய்கின்றன. இரண்டாவது முதலாண்மை அமைப்பிலுள்ள குறைபாடுகளும் தவறு களும் பெருகாமல் ஓரளவுக்குக் கட்டுப்படுத்துகின்றன. கூட்டுறவு நிறு வனங்களின் நடவடிக்கைகளுக்கேற்ப தனியார் நிறுவனங்களும் முக் கிய சில செயற்பாடுகளில் தம்மை மாற்றியமைத்துக் கொள்வதற்கு ரிய நிர்ப்பந்தங்களை சூழலின் தாக்கங்களின் மூலம் கூட்டுறவு ஏற் படுத்துகின்றது.

பொதுவுடமைப் பொருளாதாரச் சிந்தனைகளை வெளியிட்டவர் மாபெரும் புரட்சிச் சிந்தனையாளர் கார்ல் மார்க்ஸ். உற்பத்தியில் மூலதனத்துக்கு முக்கியத்துவம் அளிக்காது முதலாளித்துவ அமைப் பில் மூலதனத்தால் ஏற்படும் கேடுகளைத் தர்க்க ரீதியில் விளக்கிய வர். உற்பத்தியில் உழைப்புச் சக்திக்கு அதிக மதிப்புக் கொடுத்தவர். சுரண்டல் தன்மையை அகற்ற அரிய சிந்தனைகளை வெளியிட்டவர். முதலாளித்துவ அமைப்பை அழிப்பதே அதன் கேடுகளை அகற்றும் வழியெனக் கூறியவர். அவரது பொருளாதாரச் சிந்தனைகளைத் திட் டங்களாகச் செயற்படுத்தும் நாடுகளே பொதுவுடமைப் பொருளா தார அமைப்பு நாடுகளாகும்.

உற்பத்திக் காரணிகளில் தனியாருக்குள்ள ஆதிக்கச் சக்தியை ஒழித்து அவற்றைப் பொதுத்துறை ஆதிக்கமாக்கல், மனித உழைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புச் சக்திக்கு உரிய மதிப்பளித்து உரிய கூலி வழங்கல். மனித தேசிய நலத்தேவையை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி செய்தல், இவற்றின் அடிப்படையில் நிபுணர் குழு தந்த ஆலோசனைத் திட்டத்தைக் கொண்டு எதையெதை எவ்வளவு உற்பத்தி செய்தல் என்பவற்றைத் தீர்மானித்தல். வளங்களின் உச்சப் பயன்பாட்டிற்கு உத்தரவாதமளித்தல், முதலாளித்துவ அமைப்பிலுள்ள விலைப்பொறிமுறை போட்டித் தன்மை என்பன உற்பத்தியில் சக்தி வாய்ந்தவையாக இருக்காது தடுத்தல் போன்ற தன்மைகளை அடிப்படையாகக்கொண்டு உற்பத்தி நிகழும் முறையாகும். திறமை தேவை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கூலி பகிர்ந்தளிக்கப்படும்.

இத்திட்டத்தில், பொருளியல் அம்சங்களுக்கு அளித்த முக்கியத்துவம் அறவழி சார்ந்த குடியாட்சிப் பண்புகளுக்கும் மனிதத்துவத்திற்கும் அளிக்கப்படவில்லை. சுயமுயற்சி, விருப்பத் தேர்வு; முதலாக்க ஊக்குவிப்புப் போன்ற அம்சங்களுக்கு முக்கியத்துவம் தரப்படவில்லை. செல்வப் பங்கீடு அரசின் கையிலேயே அமைந்துள்ளது போன்ற குறைகளைப் பொதுவுடைமைப் பொருளாதார அமைப்பின் எதிர்ப்பாளர்கள் கூறுவார்கள். பொதுவுடமைப் பொருளாதார அமைப்பு நாடுகளிலும் கூட்டுறவுத் தொழில் அமைப்புக்கள் நன்கு வளர்ச்சி அடைந்துள்ளன.

சோவியத் ரஷ்யாவில் 3,70,000 கூட்டுறவு நுகர்வோர் கடைகள் உண்டு. இதைவிடக் கூட்டுறவு விவசாய சங்கங்கள், கூட்டுறவுப் பண்ணைகள், கூட்டுறவு உண்டிச்சாலைகள் போன்றவை கூட்டுறவுத் தொழில் அமைப்பில் இடம்பெற்றுள்ளன. இச்சங்கங்களின் நிருவாகப் பொறுப்பு, தீர்மானங்களை எடுக்கும் உரிமை போன்ற யாவும் உறுப்பினர்களைக் கொண்ட பொதுச் சபைக்கே உண்டு. அத்துடன் இலாபத்தில் ஒருபகுதி ஆதார நிதிக் கணக்கிற்கு ஒதுக்கியபின் உறுப்பினர்களுக்கு இலாபமாக ஒருபகுதி ஒதுக்கிய பின்பே ஏனைய நிதிகளுக்கு ஒதுக்கப்படுகிறது. சில ஆரம்பச் சங்கங்களின் தலைவர் தேர்தலுக்குத் தலைமைச் சங்கங்கள் தகுதியுள்ள சிலரைத் தேர்ந்தெடுத்து அனுப்புகின்றன. பொதுச் சபையில் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் அவர்களுள் ஒருவரைத் தெரிவு செய்கின்றனர். ஏனைய நிருவாக உறுப்பினரை பொதுச் சபையே தெரிவு செய்கின்றது. சீனாவிலும் ஏனைய பொதுவுடமை நாடுகளிலும் கூட்டுறவுச் சங்கங்கள் வளர்ச்சி பெற்றுள்ளன. சீனாவில் அரசின் கட்டுப்பாடுகள் அதிகம்.

பொதுவுடமை நாடுகளில் கூட்டுறவுத் தொழில் அமைப்புக்கள் பொருளியல் நன்மைகளை அதிகம் அளித்திருப்பதில் வியப்பில்லை. கருத்துக்களை வெளியிடும் உரிமை, சங்கத் தொழிற்பாடு பற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவெடுக்கும் உரிமை, நிருவாகப் பொறுப்பு, விளைவுகளைப் பொறுப்பேற்குந் தன்மை, சுயேச்சையான அங்கத்துவம், இலாபத்தில் உறுப்பினர்களுக்குப் பங்களித்தல் ஆகிய குடியாட்சிப் பண்புகளையும் ஜனநாயக மரபுகளையும் பாதுகாக்கும் அமைப்புக்களாகவும் மனிதத்துவத்தையும் ஒழுக்க நெறிகளையும் தன்னகத்தே அடக்கிய அமைப்பாகவும் விளங்குவதே கூட்டுறவு பொதுவுடமை நாடுகளில் அளித்து வரும் பெருஞ் சேவை எனக் கூறலாம்.

பொருளியல் நடவடிக்கைகளில் அரசின் தலையீடாக் கொள்கை மறைந்து விட்டது. முதலாண்மை நாடுகளிலும் பொருளியல் நடவடிக்கைகள் பலவற்றில் அரசு தலையிட வேண்டிய சூழ்நிலைகள் உருவாகியுள்ளன. அரசு பொருளியல் கொள்கைகளை வரையறுத்து நாட்டின் பொருளியல் முயற்சிகளை ஒழுங்குபடுத்துங் கொள்கையிலிருந்து மாறித் தொழில் முயற்சிகளில் நேரடியாகவே ஈடுபடுகின்ற நிறுவனமாகவும் முதலாண்மைக் கொள்கையுடைய நாடுகள் மாற்றமடைந்து விட்டன. முதலாண்மைப் பொருளாதார அமைப்பிலிருந்த பல நாடுகள் இன்று கலப்புப் பொருளாதார அமைப்பு நாடுகளாக மாற்றமடைந்துவிட்டன. கலப்புப் பொருளாதார அமைப்பு நாடுகளில் உள்ள தொழில் முயற்சிகளை உரிமைத் தன்மையைக் கொண்டு மூன்று பெரும் பிரிவாகப் பிரிக்கலாம். அவையாவன:

1. அரசுத்துறை
2. தனியார்துறை
3. கூட்டுறவுத்துறை

**அரசு தொழில் முயற்சியில் ஈடுபடுவதற்குரிய காரணங்கள்:**

1. நாட்டின் பாதுகாப்பு
2. மக்களுக்கு வேண்டிய அத்தியாவசிய சேவைகளை அளித்தல்
3. தனியார் துறையால் முதலீடு செய்யமுடியாத பேரளவு மூலதனம் வேண்டிய தொழில்கள்
4. நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையானதும் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருந் தொழில்கள்
5. தனியார் துறையின் பேரளவு இலாபத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய தொழில்கள்
6. அரசுக்கு வருமானம் தரக்கூடிய தொழில்கள்

அரசு தொழில் முயற்சிகளை மூன்று வகையாக நிருவகிக்கலாம். அவையாவன:

1. இலாகா வழி நிருவாகம்
2. ஒப்பந்த மூல நிருவாகம்
3. கூட்டுத்தாபன நிருவாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமானத்தை நோக்காகக் கொண்டு ஈடுபடும் முயற்சிகளில் பெரும்பாலானவை கூட்டுத்தாபன அமைப்புக்குள்ளேயே அடங்கும்.

தனியார் துறைத் தொழில் அமைப்புக்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவையாவன:

1. சொந்த (தனியாள்) முயற்சி
2. பங்குடமை முயற்சி
3. கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனி முயற்சி

சொந்த முயற்சி, பங்குடமை முயற்சி என்பன பெரும்பாலும் சிற்றளவு அமைப்புக்களாக இருக்கும். சொந்த முயற்சித் தொழில்கள் சில கூட்டுறவுத் தொழில் முயற்சிகளுக்கெதிரற்றவையாகவும் சுரண்டல் தன்மையற்றதாகவும் இருப்பின் அவற்றை வளர்க்கவும் விருத்தியாக்கவும் அதன் உரிமையாளர்களை உறுப்பினராக ஏற்றுக் கூட்டுறவு இயக்கம் உதவி அளிக்கும். விவசாயம், மீன்பிடி, குடிசைத் தொழில்கள், மிருகப் பண்ணைகள் போன்ற தொழில்களை உதாரணத்துக்குக் கூறலாம். பங்குடமை முயற்சிகளும் மேற்கூறப்பட்ட தொழில் முயற்சிகளில் ஈடுபடுமாயின் அவற்றில் சுரண்டல் தன்மையும் இல்லையாயின் அவை கூட்டுறவு அமைப்புக்கு எதிரானவையல்ல. கூட்டுப் பங்குத் தொகுதிக் கம்பனிகள் இவற்றில் இருந்து வேறுபட்டவை. அரசின் முயற்சியிலுள்ள கூட்டுத்தாபன அமைப்பு தனியார் துறையிலுள்ள கூட்டுப் பங்குத் தொகுதிக் கம்பனி அமைப்பு, கூட்டுறவுத்துறை அமைப்பு ஆகியவற்றுக்கிடையே சில ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் காணப்படுகின்றன. அவற்றின் ஒற்றுமைத் தன்மைகள் அவை ஒன்று என்ற அபிப்பிராயத்தை சாதாரண மக்களிடம் ஏற்படுத்தக் கூடும். எனவே அவற்றின் ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் பகுத்தறிதல் முக்கியமானது.

## கூட்டுறவு-கூட்டுத்தாபனம் – கூட்டுப் பங்குத் தொகுதிக் கம்பனி என்பனவற்றுக்கிடையேயுள்ள ஒற்றுமைகள்

1. மூன்றும் சட்டத்தினால் உருவாக்கப்படுபவை.
2. மூன்றும் சட்ட ஆளுமை உடைய நிறுவனமாக அமைதல்.
3. மூன்றும் இடையறா வழியுரிமையுடன் (நீடித்த வாழ்வுடன்) இயங்குதல்
4. மூன்றும் பொது இலச்சினையுடன் இயங்குதல்.
5. மூன்றும் பணிப்பாளர் (இயக்குனர்) குழுவால் இயக்கப்படல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. மூன்றினது இயக்குனர்களும் தமக்கு அதிகாரமளித்தவர்களுக்காக (மந்திரி–பொதுச்சபை) நிறுவனத்தின் கருமங்களைச் செய்தல், அவர்களுக்குப் பொறுப்பாக இருத்தல்.

7. மூன்றினது இயக்குனர்களும் தமக்கு அதிகாரமளித்தவர்களின் தீர்மானத்துக்கும் கட்டுப்பாடுகளுக்கும் அமைவாகக் கருமங்களை ஆற்றல்.

8, மூன்றினது இயக்குனர் குழுவும் தெரிவுசெய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட தலைவருக்கு நிறுவனத்தின் நாளாந்தக் கடமைகளை நடாத்தவும் மேற்பார்வை செய்யவும் அதிகாரமளித்தல்.

9. மூன்றினது இயக்குனர் குழுவும் நிரந்தரத் தன்மையுடையதல்ல. காலத்துக்குக் காலம் மாற்றத்துக்குட்பட்டவை.

10. மூன்றினது இயக்குனர் குழுவிலும் இடம்பெற முடியாதவர்களின் தகுதியீனங்கள் வரையறை செய்யப்பட்டுள்ளன.

11. மூன்றினது இயக்குனர் குழுவும் பொதுவாகப் பணியாளர்களை நியமித்தல், மேற்பார்வை செய்தல், தண்டனை அளித்தல், விலக்கல் ஆகியவற்றைச் செய்யும் அதிகாரங்களைக் கொண்டது.

12. மூன்று நிறுவனங்களும் குறிப்பிட்ட காலமுடிவில் எண்பார்வை செய்யப்பட வேண்டுமெனச் சட்டத்தால் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

13. மூன்றினது கணக்குக்களையும் எண்பார்வை செய்பவர்களுக்குரிய தகுதிகளைச் சட்டம் வரையறுத்துள்ளது.

14. மூன்றினது எண்பார்வை அறிக்கையும் இயக்குனர் குழுவுக்கப்பால் வெளியிடப்பட்டு ஆராயப்படவேண்டியது.

15. மூன்று அமைப்புக்களும் சட்டம் விதித்த கணக்கேடுகளை வைத்திருத்தல் வேண்டும்.

16. மூன்று அமைப்புக்களிலும் பொதுவாக தனிமனிதனொருவனின் (உறுப்பினர்) நட்டச்சப் பொறுப்புக் குறைவானது வரையறுக்கப்பட்டது.

17. மூன்று அமைப்புக்களும் பேரளவு தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் உடையன.

18. மூன்றினது இயக்குனர் குழுவும் சட்டமும் தமக்கு அதிகாரமளித்தவர்களும் விதித்த நிபந்தனைகளுக்கமைவாகவே நிதியைத் திரட்டவும் பிரயோகிக்கவும் முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. மூன்றினது இயக்குனர் குழுவும் எண்பார்வை அறிக்கையுடன் தமது நிருவாக ஆண்டறிக்கையைத் தமக்கு அதிகாரமளித்தவர்களுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

20. மூன்று அமைப்பிலுள்ள நிறுவனங்களும் அவற்றுக்குரிய சட்டங்களில் குறிப்பிட்ட நிகழ்வுகளின்போது கூறப்பட்ட முறையில் கலைத்து; கலைப்பில் கைக்கிட்டும் பணத்தைச் சட்டத்தில் கூறப்பட்ட ஒழுங்குமுறையை அனுசரித்தே பொறுப்புக்களைத் தீர்க்கப் பயன்படுத்த வேண்டும்.

**கூட்டுறவு – கூட்டுத்தாபனம் என்பவற்றுக்கிடையேயுள்ள ஒற்றுமைகள்**

1. இரு அமைப்புக்களும் இலாப நோக்கின்றி இயங்குபவை.
2. இரு அமைப்புக்களும் சேவைத் தன்மைக்கும் மக்கள். சமூகம், தேசம் ஆகியவற்றின் நலன்களுக்கும் முக்கியத்துவம் அளிப்பவை.
3. இரு அமைப்புக்களும் சுரண்டல் தன்மைக்கு எதிரானவை.
4. இரு அமைப்புக்களும் தனியார் துறையின் பேரளவு இலாப தன்மையை மட்டுப்படுத்தும் நோக்குடையன.
5. இரு அமைப்புக்களுக்கும் அரசின் உதவி, சலுகை என்பன கிடைக்கின்றன.
6. இரு அமைப்புக்களிலும் ஏற்படும் பிரச்சனைகள், பிணக்குகள் ஆகியவற்றுக்கு இறுதித் தீர்வு வழங்கும் அதிகாரம் சம்பந்தப்பட்ட மந்திரிக்கு உண்டு.
7. இரு அமைப்புக்களுக்கும் சட்டத்தின் மூலம் சில சிறப்புரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.
8. இரு அமைப்புக்களும் பதிவு செய்தவுடன் தொழிலை ஆரம்பிக்கலாம்.
9. இரு அமைப்புக்களும் திரட்டும் வருமானத்தில் பெரும்பகுதி சேவைத் தன்மையை அதிகரிக்கவும் பொதுச் சேவைக்கும் பயன்படுத்தப்படுகின்றன.
10. இரு அமைப்புக்களும் முதல் பெறக்கூடிய நலன்களை வரையறுத்துள்ளன. முதலுக்கு அதிக அளவு முக்கியத்துவம் கொடுக்கவில்லை.
11. இரு அமைப்புக்களின் உருவாக்கத்திற்குச் சட்ட முத்திரைச் செலவுகளில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கூட்டுறவு – கூட்டுறவுப் பங்குத் தொகுதிக் கம்பனி என்பவற்றுக்கிடையேயுள்ள ஒற்றுமைகள்**

1. இரு அமைப்புக்களும் பங்குகளைக் கொள்முதல் செய்வதன் மூலமே உரிமைத் தன்மையை அடையும் இயல்புடையன.

2. சட்டம் விதித்த கால எல்லைக்குள் ஆண்டுப் பொதுக்கூட்டத்தைக் கூட்ட வேண்டிய கடப்பாடு இயக்குனர் குழுவுக்கு உண்டு.

3. பொதுச்சபையால் (பங்குதாரர்) ஏற்றுக் கொள்ளப்பட்ட வகையில் தெரிவு செய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட இயக்குனர் குழுவிடம் நிருவாகப் பொறுப்பு ஒப்படைக்கப்படுகின்றது.

4. பொதுச் சபையால் தெரிவு செய்யப்பட்ட இயக்குனர் குழுவை அல்லது குறிப்பிட்ட இயக்குனரை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் நீக்கப் பொதுச் சபைக்கு உரிமையுண்டு.

5. பொதுச் சபைக்கே எண்பார்வை அறிக்கை, வருடாந்த நிருவாக அறிக்கை என்பவற்றைப் பரிசீலனை செய்து அங்கீகரிக்கும் உரிமையுண்டு.

6. இலாபத்தைப் பங்கீடு செய்யும் உரிமை பொதுச்சபைக்கே உண்டு.

7. கூட்டத்தைக் கூட்டும் முறை, கூட்டத்தைக் கூட்டும் அதிகாரம் கூட்டத்தைக் கூட்டுவதற்குள்ள உறுப்பினரின் இழிவு (குறை வெல்லை)த் தொகை என்பன துணைவிதி அல்லது அகவிதியில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

8. தீர்மானங்கள் யாவும் வாக்கெடுப்பு மூலமே நிறைவேற்றப்படும்.

9. பொதுச்சபைக்கென விசேடமாக ஒதுக்கப்பட்ட அதிகாரங்களைத் தவிர ஏனைய விடயங்களில் எல்லாம் இயக்குனர் குழுவுக்கு அதிகாரம் உண்டு.

10. துணைவிதி — அகவிதி என்பவற்றில் திருத்தம் செய்வதற்கு சட்டமூல ஒழுங்குகள் உண்டு.

11. மூலதனத்தில் இருந்தோ மூலதன ஒதுக்கங்களிலிருந்தோ இலாபப் பகிர்வு செய்ய முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேற்றுமைகள்

| | கூட்டுறவுச் சங்கம் | கூட்டுத்தாபனம் | கூட்டுப் பங்குத் தொகுதிக் கம்பனி |
|---|---|---|---|
| 1. | அங்கத்தவர்களின் பொருளாதார நலன்களைப் பேணும் நோக்கம். | அரசின் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் நோக்கம். | பங்குதாரர்களுக்கு இலாபத்தை ஈட்டும் நோக்கம். |
| 2. | பொது நலன், சமுதாய நலன் என்பவற்றையும் கருத்திற் கொண்டு தமது நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. | சமுதாய பொது நலன்களையே மையமாகக் கொண்டு செயலாற்ற வேண்டியன. | இலாப நோக்கை மையமாகக் கொண்டு சமுதாய பொது நலன்களுக்கு முக்கியத்துவம் அளிக்காமை. |
| 3. | கூட்டுறவுச் சட்டத்தால் உருவாக்கப்பட்டவை. | கூட்டுத்தாபனச் சட்டங்களுள் ஒன்றினால் உருவாக்கப்பட்டவை. | கம்பனிச் சட்டத்தால் உருவாக்கப்பட்டவை. |
| 4. | தங்கள் பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றுவதில் கஷ்டப்படும் வறியவர்களும் பலவீனமானவர்களும் உறுப்பினர்களாகப் பெரும்பாலும் சேருகின்றனர். | அரசே பெரும்பாலும் உரிமையாளராக இருக்கிறது. மிகச் சில கூட்டுத்தாபனங்களில் மட்டும் சிலருக்குப் பங்குகள் வழங்கப்பட்டுள்ளது. | முதலீட்டின் மூலம் வருமானந் திரட்டும் விருப்புள்ள செல்வந்தர்களே பெரும்பாலும் பங்குதாரராக உள்ளனர். |
| 5. | பதிவு செய்தவுடன் தொழிலை ஆரம்பிக்கலாம். | கூட்டிணைத்தற் கட்டளை வெளியிடப் பட்டதும் தொழிலை ஆரம்பிக்கலாம். | பதிவு செய்து உருவாக்கற் பத்திரம் பெற்றாலும், வியாபாரப் பத்திரம் பெறமுன் தொழிலை ஆரம்பிக்க முடியாது. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 6. பங்கு மூலதனத்தின் மேலெல்லை வரையறுக்கப்படவில்லை. | மூலதனத்தின் மேல் எல்லை அரசால் வரையறுக்கப்படுகின்றது. | அமைப்பு புறவிதி மூலம் பதிவாளரால் பதிவு செய்து மூலதனத்தின் மேல் எல்லை வரையறுக்கப்படுகிறது. |
| 7. பங்குகள் சமவிலையிலே கொடுக்கப்படுகின்றன. மீட்கப்படுகின்றன. | பெரும்பாலான கூட்டுத்தாபனங்கள் பங்குகளைக் கொடுப்பதில்லை. | வட்டத்துடனும் கழிவுடனும் பங்குகள் வழங்கப்படுகின்றன. மீட்கப்படுகின்றன. |
| 8. பங்குகளை விற்பனை செய்வதற்கு ஒப்புறுதி செய்யும் முறையில்லை. | பங்குகள் வழங்காதபடியால் இதற்கு அவசியமில்லை. | பங்கு விற்பனைக்கு ஒப்புறுதி செய்யும் ஏற்பாடுகள் உண்டு. |
| 9. பங்கு முதல் சந்தைக்கும் கூட்டுறவுச் சங்கப் பங்குகளுக்கும் எவ்வித தொடர்புமில்லை. | பங்குமுதல்கள் இருப்பின் பங்கு முதல் சந்தையுடன் தொடர்பு ஏற்படும். | பங்கு முதல் சந்தையில் இவற்றின் பங்குகள் பெரும்பாலும் விற்பனைக்கும் கொள்முதலுக்கும் வந்து கொண்டிருக்கும். |
| 10. உறுப்புரிமையை அடையும் நோக்கத்திற்காகவே பங்குகள் உறுப்பினரால் கொள்முதல் செய்யப்படுகின்றன. | முதலீட்டின் பாதுகாப்பும் தன்மையையும் இலாபப் பங்கையும் கருத்திற் கொண்டு பங்குகள் கொள்முதல் செய்யப்படுகின்றன. | வருமானத்தை ஈட்டும் நோக்குடனேயே பங்குகள் கொள்முதல் செய்யப்படுகின்றன. |
| 11. பங்கு முதலின் நயங்கள் வரையறுக்கப்பட்டது. | பங்கு முதலின் நயங்கள் அரசின் கொள்கைக்கேற்பக் காலத்துக் காலம் தீர்மானிக்கப்பட வேண்டியது. | பங்கு முதலின் நயங்கள் வரையறுக்கப்படாதவை. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 12. இலாபப் பங்கீடு சட்டம், விதி, துணைவிதிகளின் நிபந்தனைக் கமைவாகப் பொதுச் சபையால் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டியவை. | இலாபப் பங்கீடு அரசின் கொள்கைக்கும் மந்திரியின் கட்டளைக்கும் இணங்க இயக்குனர் குழுவால் செய்யப்படவேண்டியது. | பங்குதாரர்களின் ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கே இலாபப் பங்கீட்டின் முழு அதிகாரமும் உண்டு. |
| 13. தடையற்ற திறந்த அங்கத்துவக் கொள்கையும் உறுப்பினர் எண்ணிக்கை வரையறுக்கப் படாததும். | உறுப்பினர் என்ற தன்மையே பெரும்பாலும் இல்லாத அமைப்பு. | பங்குகளால் உறுப்பினர் தொகை வரையறுக்கப்பட்டது. திறந்த உறுப்புரிமைக்கு இடமில்லாதது. |
| 14. கூட்டுறவு மனிதர்களது சேர்க்கை. | இது அரசின் அமைப்பு | பங்கு முதலின் சேர்க்கை. |
| 15. ஒரு உறுப்பினருக்கு எத்தனை பங்குகள் இருந்தாலும் ஒரு வாக்குரிமையேயுண்டு. | உறுப்பினருக்கு வாக்குரிமையைப் பயன்படுத்துஞ் சந்தர்ப்பங்கள் குறைவு இல்லையென்றே கூறலாம். | பங்குகளுக்கே வாக்கு. ஒரு உறுப்பினருக்கு எத்தனை பங்குகள் உண்டோ அத்தனை வாக்குரிமை அளிக்கப்படும். |
| 16. சேவையை அளிக்கும் பொறுப்புடையோரும் சேவையைப் பெறுவோரும் ஒருவராக இருத்தல். | சேவையை அளிப்போரும் பெறுவோரும் வேறுக இருத்தல். | சேவையைப் பெறுவோரும் அளிப்போரும் வேறுக இருத்தல். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 17. உறுப்பினர்களிடம் இருந்து பெற்ற மேலதிகத்தை (இலாபம்) அவர்களுக்கே அவர்களின் கொடுக்கல் வாங்கல்களின் தன்மைக்கு ஏற்ப சமத்துவமாகப் பகிர்ந்தளிக்கும் ஒழுங்கு இருத்தல். | அரசுக்கே மேலதிகங்கள் உரிமையாகி நாட்டின் பொது நலனுக்குப் பாவித்தல். | உறுப்பினர்களின் கொடுக்கல் வாங்கல்களுக்கு முக்கியத்துவமளிக்காது அவர்களின் பங்குகளுக்கே மேலதிகத்தைப் பங்கிடுவதில் முக்கியத்துவம் அளித்தல். |
| 18. உறுப்பினரல்லாதவரின் மேலதிகங்களை உறுப்பினர் தமதாக்கிக் கொள்ளாது வேறாக வைத்திருந்து அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தல்; | உறுப்பினரல்லாதார் என்ற பாகுபாட்டுக்கே இடமில்லாது இலாபம் ஒன்றாகவே வைத்திருந்து பயன்படுத்தல். | உறுப்பினரல்லாதவரின் கொடுக்கல் வாங்கல்களினால் ஏற்படும் மேலதிகத்தையும் பங்குதாரர் தமதாக்கிக் கொள்ளல்; |
| 19. உறுப்பினர்கள் கூட்டங்களுக்கு நேரில் சென்றே வாக்களிக்க வேண்டும். துணை விதிகளில் விசேடமாகக் குறிப்பிட்டிருப்பின் மட்டும் பதிலாள் வைப்பு முறை பயன்படுத்தப்படலாம். | பொதுச் சபைக் கூட்டங்கள் பெரும்பாலும் நடைபெறாமையால் இப்பிரச்சனைக்கு இடமில்லை. | பதிலாள் வைப்பு முறையில் வாக்களிக்கலாம். ஒருவனுக்கு எத்தனை பங்குகள் இருக்கின்றதோ அப் பங்குத் தொகைக்குள் எத்தனை பதிலாட்களையும் நியமிக்கலாம். |
| 20. சங்கத்தின் தொழில் செய்யும் இடம் வரையறுக்கப்பட வேண்டும் (தொழிற் பரப்பு) | தொழிற்பரப்பு வரையறுக்கப்பட வேண்டியதில்லை. | தொழிற்பரப்பு வரையறுக்கப்பட வேண்டியதில்லை. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 21. பதிவு செய்வதற்குக் குறைந்தது 10 உறுப்பினர்கள் கையொப்பமிடல் வேண்டும். | உறுப்பினர் எவரும் கையொப்பமிட வேண்டியதில்லை. | ஏழு உறுப்பினர்கள் பதிவு விண்ணப்பத்தில் கையொப்பமிடல் வேண்டும். |
| 22. பொதுச் சபையின் தீர்மானத்துக்கு இணங்க ஒரு உறுப்பினரை விலக்க கூட்டுறவுச் சங்க நிருவாகத்துக்கு உரிமையுண்டு. | உறுப்பினரின் பங்குகளைக் கட்டாயமாகக் கொள்முதல் செய்ய உரிமையுண்டு. | உறுப்பினரை விலக்குவதற்கு உரிமையில்லை. |
| 23. உறுப்பினர் ஒருவர் காரியதரிசிக்கு எழுத்து மூலம் ஒரு மாத அறிவித்தல் கொடுத்து விலகலாம். | உறுப்பினர்கள் தமது பங்கு முதல்களை மாற்றஞ் செய்தே விலக முடியும். | உறுப்பினர்கள் தமது பங்கு முதலை மாற்றஞ் செய்தே விலக முடியும். |
| 24. சங்கத்துக்கு எதிராக சங்கம் மேற்கொண்டிருக்குந் தொழில் முயற்சிகளை உறுப்பினர்கள் செய்யக் கூடாது எனக் கட்டுப்படுத்தலாம். | உறுப்பினர்களைத் தனித்துக் கட்டுப்படுத்தாது பொதுவாக எல்லோரையும் கட்டுப்படுத்தலாம். | உறுப்பினர்களைக் கட்டுப்படுத்த முடியாது. இயக்குனராவதற்கு இது தடையாக இருக்கலாம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. கூட்டுறவுச் சங்கங்களின் வகைகள்

நுகர்ச்சிச் சேவைகளை அளிப்பதற்காகப் பண்டகசாலைச் சங்கங்களாக ஆரம்பித்த கூட்டுறவு இன்று மக்களின் பல்வேறு தேவைகளையும் பூர்த்தி செய்யும் நிலைக்கு விரிவடைந்துள்ளது. காப்புறுதி, வைத்தியத் தொழில், சினிமாத் தொழில், ஏற்றுமதி இறக்குமதித் தொழில், ஆலைத் தொழில் போன்ற பல்வேறு தொழில் முயற்சிகளில் கூட்டுறவு முறை புகுந்து விட்டதை இன்று நாம் காணக் கூடியதாகவுள்ளது. இவ்வாறு பல்வேறு முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களை அறிவதற்குச் சுலபமான வழி சில அடிப்படைகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு பிரித்தலாகும். அவ்வாறு பிரிக்கும்போது அப்பிரிவினுள் அடங்கும் சங்கங்களிடையே பல பொதுத் தன்மைகள் காணப்படும். சங்கங்களை வகைப்பிரிவு செய்யும் ஒவ்வொருவரும் தமது தேவைக்கும் நோக்கத்துக்கும் ஏற்ப வகைப்பிரிவு செய்வர். பல்வேறு வகையில் சங்கங்களை வகைப்பிரிவு செய்யலாம். அவற்றுட் சில:

## 1. அமைப்பு ரீதியான வகைப் பிரிவு

1. முதனிலைச் சங்கங்கள்.
2. இரண்டாம் நிலைச் சங்கங்கள் (சமாசங்கள்)
3. மூன்றும் நிலைச் சங்கங்கள் (தலைமைச் சங்கங்கள்)
4. தேசிய நிறுவனம்
5. சர்வதேச நிறுவனங்கள்

## 2. சட்ட ரீதியான வகைப் பிரிவு

1. தனியாட்களின் பொருளாதார, சமூக அல்லது கலாச்சார அக்கறைகளைக் கூட்டுறவுக் கொள்கைகளுக்கிணங்க மேம்படுத்தலைக் குறிக்கோளாகக் கொண்ட சங்கங்கள்.

2. மேற்கூறப்பட்ட சங்கமொன்றின் தொழிற்பாட்டு முறைகளுக்கு வசதியளிக்கும் நோக்குடன் தாபிக்கப்பட்ட சங்கங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கூட்டுறவுக் கல்வி பயிற்சிகளுக்கு ஏற்பாடு செய்தல், சங்கங்களுக்கு வேண்டிய ஆலோசனைச் சேவைகளுக்கு ஏற்பாடு செய்தல், கூட்டுறவை மேம்படுத்தலுக்குத் தேவையான வேறு சேவைகளைச் செய்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டதும், கூட்டுறவுச் சங்கங்களை உறுப்பினர்களாகக் கொண்டதுமான சங்கம்.

4. கூட்டுறவுச் சங்கங்களை உறுப்பினராகக் கொண்டதும், அச்சங்கங்களின் தொழில் முயற்சிகளைத் திட்டமிட்டு ஒருமுகப்படுத்தி வசதியளிக்கும் நோக்குடன் தாபிக்கப்பட்டதுமான சங்கங்கள்.

## 3. பொறுப்பின் தன்மை ரீதியான வகைப்பிரிவு

1. வரையறையற்ற பொறுப்புள்ள சங்கங்கள்
2. வரையறுத்த பொறுப்புடன் கூடிய சங்கங்கள்
   (அ) பங்குகளால் வரையறுத்த சங்கங்கள்
   (ஆ) பங்குகளின் பன்மடங்கு வரையறுத்த சங்கங்கள்
   (இ) உத்தரவாதத்தால் வரையறுத்த சங்கங்கள்

## 4. உறுப்புரிமைத் தன்மை ரீதியான வகைப்பிரிவு

1. தனியாட்களை உறுப்பினராகக் கொண்ட சங்கங்கள்
2. சங்கங்களை உறுப்பினராகக் கொண்ட சங்கங்கள்
3. தனியாட்களையும் சங்கங்களையும் உறுப்புரிமையாகக் கொண்ட சங்கங்கள்

## 5. நோக்கத்தின் எண்ணிக்கையைக் கொண்ட வகைப்பிரிவு

1. ஒரு நோக்கச் சங்கங்கள்
2. பலநோக்கச் சங்கங்கள்

## 6. வரலாற்று ரீதியான வகைப்பிரிவு

1. கடனுதவு சங்கங்களின் காலம்
2. நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளின் காலம்
3. விளைபொருள் உற்பத்தி விற்பனைச் சங்கங்களின் காலம்
4. பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் காலம்
5. மறுசீரமைப்புக் காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. **தொழிற் பிரதேச ரீதியான வகைப்பிரிவு**

1. கிராமப்புறச் சங்கங்கள்
2. நகர்ப்புறச் சங்கங்கள் அல்லது
    1. உள்ளூர்ச் சங்கங்கள்
    2. மாவட்டச் சங்கங்கள்
    3. தேசிய சங்கங்கள்
    4. சர்வதேசச் சங்கங்கள்

8. **பணி ரீதியான வகைப்பிரிவு**

1. கடனுதவல்
2. நுகர்ச்சிப் பொருள் விநியோகம்
3. சந்தைப்படுத்தல்
4. மூலப்பொருள் விநியோகம்
5. தொழில் வசதி அளித்தல்
6. ஏனைய சேவைகளை வழங்குதல்
   (அ) சுகாதாரம் (ஆ) போக்குவரத்து (இ) வீடுகட்டல் (ஈ) காப்புறுதி (உ) ஆலோசனை போன்றவை

9. **தொழில் ரீதியான வகைப்பிரிவு**

1. விநியோகத் தொழில்
2. சந்தைப்படுத்துந் தொழில்
3. கடன் வழங்குந் தொழில் (வங்கித் தொழில்)
4. சிறுகைத்தொழில் உற்பத்தி
5. ஆலைத்தொழில் உற்பத்தி
6. பண்ணைத் தொழில் (அ) விவசாயம் (ஆ) மிருக வளர்ப்பு
7. சேவைத் தொழில்
8. ஆலோசனைச் சேவைகள் வழங்குந் தாபனம்
9 ஏற்றுமதி இறக்குமதித் தொழில்

இன்னும் தேவைக்கேற்ப வகைப்பிரிவு செய்யலாம். சில தொழில் முயற்சிகளில் கூட்டுறவுச் சங்கங்கள் ஈடுபட இப்போது தான் முயற்சிகள் இலங்கையில் எடுக்கப்படுகின்றன. காப்புறுதித் தொழில் புரியும் சங்கங்கள் இன்றுவரை இலங்கையில் ஆரம்பிக்கப் படவில்லை. காப்புறுதிச் சங்கம் ஒன்றை அமைக்க ஸ்ரீலங்கா தேசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யப் பேரவை முயற்சி எடுக்கின்றது. ஏற்றுமதி இறக்குமதித் தொழிலுக்கென தனிச்சங்கங்கள் இன்றுவரை அமைக்கப்படவில்லை. சில சங்கங்கள் தமது ஏனைய தொழில் முயற்சிகளோடு மிகச்சிறு அளவில் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளன.

## முதனிலைச் சங்கங்கள்

இது ஆரம்பநிலைச் சங்கம், தொடக்கநிலைச் சங்கம், முதலாம் படிச் சங்கம் எனப் பல பெயரால் அழைக்கப்படும். உறுப்பினரின் பொருளாதார சமூக அல்லது கலாச்சாரத் தொடர்புகளை மேம்படுத்தலைக் குறிக்கோளாகக் கொண்டவை. ஏனைய வகைச் சங்கங்கள் (இரண்டாம் படி, மூன்றும்படி, தேசிய சங்கம்) அமைக்கப்படுவதற்கு மூலாதாரமானவை. கூட்டுறவு இயக்கத் தொடக்ககாலத்தில் ஆரம்பிக்கப்பட்டவை. இவற்றின் வளர்ச்சியும் விருத்தியுமே ஏனைய வகைச் சங்கங்கள் உருவாதலுக்குக் காரணமாக அமைந்தன. முதனிலைச் சங்கங்களை இருவகையாகப் பிரிக்கலாம். அவையாவன:

(1) சிற்றளவு முதனிலைச் சங்கங்கள்

(2) பேரளவு முதனிலைச் சங்கங்கள்

## சிற்றளவு முதனிலைச் சங்கங்கள்

இவை பெரும்பாலும் சிறிய தொழிற்பரப்பைக் கொண்டவை. அங்கத்தவர் தொகை, தொழில் முயற்சிகளின் அளவு, பருமன் என்பன சிறிய அளவிலேயே அமைந்திருக்கும். அங்கத்தவர்களுக்கும் சங்க நிருவாகத்துக்குமிடையே அதிக அளவில் நேரடித் தொடர்புகள் இருக்கும். அங்கத்தவர்களில் பெரும்பாலோர் சங்கத் தொழிற்பாடுகளுடன் நேரடித் தொடர்பு கொள்வர்.

இச் சங்கங்களின் தொழிற்பரப்பு ஒரு கிராமத்தை அல்லது கிராமத்தின் ஒரு பகுதியைப் பெரும்பாலும் கொண்டிருக்கும். ஆயினும் சிலவகைக் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்குப் போதியளவு உறுப்பினர்கள் இல்லாதவிடத்து சிற்றளவு கூட்டுறவுச் சங்கங்களின் தொழிற்பரப்புச் சில சமயங்களில் உள்ளூராட்சிமன்ற எல்லைகளையோ அல்லது தேர்தல் தொகுதிகளையோ அல்லது மாவட்டங்களையோ கொண்டதாக அமையலாம்.

கடனுதவு சங்கங்கள், நுகர்வோர் பண்டகசாலைச் சங்கங்கள் விளைபொருள் உற்பத்தி விற்பனைச் சங்கங்கள், சிறுகைத்தொழில் சங்கங்கள் போன்றவை இச் சிற்றளவு சங்கங்களுக்கு உதாரணங்களாகும். தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கம். ஆஸ்பத்திரி சங்கம் என்பன தேர்தல் தொகுதி ரீதியில் அமைந்த சிற்றளவுச் சங்கத்துக்கும், பிரசுரக் கூட்டுறவுச் சங்கம் மாவட்ட ரீதியில் அமைந்த சிற்றளவுச் சங்கத்துக்கும் உதாரணங்களாகும்.

## பேரளவு முதனிலைச் சங்கங்கள்

இவை பெரும்பாலும் பெரிய தொழிற்பரப்பைக் கொண்டவை. அங்கத்தவர் தொகை கணிசமான அளவு அதிகமாக இருக்கும். தொழில் முயற்சிகளின் எண்ணிக்கை, அளவு, பருமன் என்பன அதிகமாக இருக்கும், இவை ஒரு உள்ளூராட்சி மன்றத்தையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளூராட்சி மன்றங்களையோ தொழிற் பரப்பாகக் கொண்டிருக்கும்.

அதிக அளவு மூலதனத்தைத் திரட்டவும், அங்கத்தவர்களுக்கு அதிக அளவு சேவைகளை அளிப்பதற்கும், தொழில் நிபுணத்துவ சேவைகளைப் பெறுவதற்கும், நிருவாகச் சிக்கனங்களைப் பெறுவதற்கும், பொருளாதார இயலுந்தன்மையைப் பெறுவதற்கும், தொழில் முயற்சிகளை விரிவு படுத்தலுக்கும், நிறுவனத்தை வலுவுள்ள சக்தியாக விளங்கச் செய்வதற்கும். இவை போன்ற ஏனைய நலன்களைப் பெறுவதற்கும் பேரளவு முதனிலைச் சங்க அமைப்பு வகை செய்யும். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் என்பன இதற்கு உதாரணங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7:1 சிற்றளவு முதனிலைச் சங்கங்கள் சிலவற்றின் விளக்கம்

## 1. கடனுதவு சங்கம்

கடனுதவு சங்கங்கள் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது ஜேர்மனியிலாகும். இலங்கையிலும் முதலில் ஆரம்பிக்கப்பட்ட சங்கம் கடனுதவு சங்கமேயாகும். இலங்கையிலுள்ள விவசாயிகள் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் தொழில் முயற்சிகளுக்கு வேண்டிய முதலைப் பெறவும் வழி செய்யுமுகமாகவே அரசாங்கம் 1911-ஆம் ஆண்டில் 7-ம் இலக்கத்தில் கூட்டுறவுச் சட்டம் ஒன்றை உருவாக்கியது. இச் சட்டத்தின் கீழ் 1912-ம் ஆண்டு நவம்பர் மாதம் 13-ம் திகதி மாத்தறைப் பகுதியிலுள்ள வெல்லபடப்பத்த என்னும் கிராமத்தில் முதன் முதலாக ஒரு கடனுதவு கூட்டுறவுச் சங்கம் உருவாகிப் பதிவு செய்யப்பட்டது. இதன் பின் இலங்கையின் பல பாகங்களிலும் பல கடனுதவு சங்கங்கள் உருவாகின.

கடனுதவு சங்கங்கள் ஆரம்பமாவதற்கு முன் விவசாயிகள் சிறு கைத்தொழில் புரியும் தொழிலாளர்கள் தங்களுக்கு வேண்டிய முதலை நிலச் சொந்தக்காரரர், வட்டிக்குப் பணம் கொடுப்போர் வியாபாரிகளிடமே பெற்றுவந்தனர். கடன் பெறும் ஏழை மக்கள் இவர்களிடம் கடன் பெறுவதில் பல சிக்கல்களுக்கும் இன்னல்களுக்குமுட்பட்டனர். இவற்றுள் முக்கியமானவை:

1. இவர்கள் தகுந்த பிணைப்பொருளின்றி (பொருள்கள், நகை, ஆதனம் போன்ற பிணைகள்) கடன் வழங்கமாட்டார்கள்.
2. கல்வி அறிவில்லாத சாதாரண மக்களிடமிருந்து கடும் வட்டி அறவிட்டனர்.
3. கடன் பணத்தை தவணை முறையில் செலுத்துவதை ஏற்க மறுத்தனர். இதனுல் ஏழை மக்கள் தமக்குச் சிறு தொகைப் பணம் வருமானத்தில் மிஞ்சிய காலங்களில் கடன் பழுவைக் குறைக்க முடியாது அத்தொகைகளையும் செலவு செய்தனர்.
4. கடன் வழங்குவோர் சிறு தொகைகளைக் கடனுக வழங்கிக் கடன் பெறுபவர்களிடமிருந்து பெற்ற பெறுமதி கூடிய பிணைப் பொருள்களைத் தமதுடமையாக்கப் பல்வேறு வகையான சூழ்ச்சி முறைகளைக் கையாண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வித சிக்கல்களிலிருந்து கடன் பெறும் சாதாரண மக்களை விடுவிக்க ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவன ரீதியான கடன் வழங்கும் அமைப்புத் தேவைப்பட்டது. அத் தேவையைப் பூர்த்தி செய்ய முதலில் உருவாக்கப்பட்டது. கூட்டுறவுக் கடனுதவு சங்கங்களேயாகும். இக்கடனுதவு சங்கங்களை இரு வகையாகப் பிரிக்கலாம். அவையாவன:

1. பொறுப்பு வரையறுக்கப்படாத கடனுதவு சங்கம்
2. பொறுப்பு வரையறுக்கப்பட்ட கடனுதவு சங்கம்

**பொறுப்பு வரையறுக்கப்படாத கடனுதவு சங்கம்**

ஜேர்மனியில் ரபெய்சனால் ஆரம்பிக்கப்பட்ட கடன் வங்கிகளை ஒத்தது. " எல்லோருக்குமாக ஒருவரும் ஒருவருக்காக எல்லோரும்" என்ற உயர் கூட்டுறவுத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டது.

**நோக்கங்கள்:**

1. உறுப்பினர்கள் பொருளாட்சி வகையில் நயமடைதலும் விருத்தியுறலும்
2. உறுப்பினர்களின் அவசிய தேவைகளுக்கு வேண்டிய பணத்தைக் கடனாக வழங்கி உதவ, வேண்டிய நிதிகளைத் திரட்டல்.
3. அங்கத்தவர்களிடையே சிக்கனத்தையும் சேமிக்கும் பழக்கத்தையும் ஏற்படுத்தல்.
4. அங்கத்தவர்களிடையே சுயமுயற்சி, பரஸ்பர உதவி, ஒத்துழைப்புப் போன்ற கூட்டுறவுப் பண்புகளை வளர்க்கப் பயிற்சியளித்தல்.
5. இவற்றை விருத்தி செய்யவேண்டிய ஏனைய நடவடிக்கைகளை எடுத்தல்.

அவசியத் தேவை என்பது பெரும்பாலும் அங்கத்தவர்களின் பொருளாதாரப் பயன்தரு தேவைகளையே குறிக்கும். ஆயினும் பொருளாதாரப் பயன் தராத சில அவசியத் தேவைகளும் இருக்கலாம்.

உறுப்பினர் தகைமையில் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொதுவான தகமைகள் இருத்தல் வேண்டும். அத்துடன் நேர்மையும் ஒழுக்கமும் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். வரையறுக்கப்படாத வேறு கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தவராயிருக்கக் கூடாது. பிரவேசப் பணம் சிறு தொகை செலுத்த வேண்டும். இத்தொகை சங்கத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைச் செலவுகளுக்குப் பயன்படுத்தப்படும் இத்தொகை 50 சதம் தொடக்கம் 2 ரூபா வரை இருக்கும் ஒரு பங்கையாவது கொள் முதல் செய்தல் வேண்டும். பங்கின் பெறுமதி 20 ரூபா தொடக்கம் 100 ரூபா வரை துணைவிதிகள் மூலம் வரையறுக்கப்படும்.

அங்கத்தவர்களின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. சங்கத்தின் வெளிக் கடன்களுக்கு அங்கத்தவர்கள் தனித்தும் ஒருமித்தும் பொறுப் பானவர்கள். எனவே ஒவ்வொரு உறுப்பினரும் சங்கச் செயற்பாடு கள் பற்றி மிகவும் கரிசனையோடு இருப்பார்கள். ஒவ்வொரு உறுப் பினரைப் பற்றியும் மற்றவர்கள் நன்கு அறிந்திருத்தல் வேண்டும். இதனால் இவ்வகைச் சங்கத்தின் தொழிற்பரப்பு சிறிதாக இருக்கும்.

## சங்கத்துக்கு வேண்டிய நிதிகள் பெறப்படும் வழிகள்

1. உறுப்பினரின் பங்குமுதல்
2. உறுப்பினரின் சேமம், வைப்புக்கள்
3. சங்கம் திரட்டிய வருமானம்
4. உறுப்பினர்கள் அல்லாதவர்களின் சேமம், வைப்புக்கள்
5. வங்கிக் கடன்

## பொதுச்சபை:—

கூட்டுறவுச் சங்கங்களின் பொதுச் செயற்பாடுகளில் கூறப்பட் டதை விட விசேடமாகவுள்ளவை பின்வருமாறு:

1. தலைவர். உபதலைவர். தனாதிகாரி, காரியதரிசி ஆகிய பதவி வகிப்போரைத் தெரிவு செய்தல்
2. உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வதை உறுதிப்படுத்தல்
3. ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் வழங்கக் கூடிய உச்சக் கடனெல்லையைத் தீர்மானித்தல்.

இவற்றை விட ஏனைய சங்கங்களுக்குரிய பொதுக் கடமைகளும் உண்டு.

நிருவாகசபை உறுப்பினர்கள் பதவி வகிப்போர் உட்பட ஐந்து பேருக்குக் குறையாது இருத்தல் வேண்டும். பொதுச்சபையே அதி காரம் கொண்டது. பொதுச்சபை தனது அதிகாரங்களில் சில வற்றை நிருவாக சபைக்கு அளிக்கலாம். சங்கத்தின் கருமங்கள் சுமுகமாகச் செயற்படுவதற்கு வேண்டிய கருமங்களை மேற்கொள் ளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடன்வழங்கல்**

ஒவ்வொரு உறுப்பினருக்கும் பொதுச்சபை விதித்த உச்சக்கடன் எல்லைக்கு ஏற்பவும், சங்கத்தின் நிதிவசதிக்கு ஏற்பவும், உறுப்பினர் களின் தேவையைக் கருத்திற் கொண்டு கடன் வழங்கப்படும். கடனுக்குப் பிணையாகப் பொருட்களோ சொத்துக்களோ பெறுவ தில்லை. இரு உறுப்பினர்களின் பிணை மட்டுமே பெறப்படுகிறது. கடனுதவு சங்கங்களுக்கு ஆரம்பத்தில் வழங்கப்பட்ட பெயர் நாணய சங்கங்களாகும். இது மிகப் பொருத்தமான பெயராகும். ஏனெனில் பொருட்களையோ சொத்துக்களையோ பிணையாகப் பெறாது உறுப்பினரின் நாணயத் தன்மையை மட்டும் நம்பிக் கடன் வழங் கப்படுகின்றது. ஒரு உறுப்பினர் பெற்ற கடன் பணம் கடன் விண் ணப்பத்தில் குறிக்கப்பட்ட தேவைக்காகப் பயன்படுத்தப்படுகின் றதா என்பதை மேற்பார்வை செய்ய வேண்டிய கடமை சங்கத் துக்கு உண்டு. இவ் விடயத்தில் ஒவ்வொரு உறுப்பினரும் மிகக் கவனமாக மேற்பார்வை செய்வர். ஏனெனில் ஒரு உறுப்பினர் கடன் பணத்தைத் தவறான வழியில் செலவிட்டுத் திருப்பிச் செலுத்த முடியாத நிலைக்கு உட்பட்டால் அவ்விழப்பு ஏனைய உறுப்பினர்களைப் பாதிக்கச் செய்யும்.

உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் பொருள் அல்லது சொத் துப் பிணையின்றிக் கடன் பெறுவதோடு நியாயமான வட்டியிலும் கடன்பெறக் கூடியதாகவுள்ளது. கடன் பெறுபவர்களின் பலவீனங் களைச் சாதகமாக்கி பல சூழ்ச்சிகளையும் தந்திரங்களையும் கையாண்டு நீதியற்ற முறையில் சுரண்டப்படுவதிலிருந்து மீட்கப்படுகின்றனர். கடன் பெறுபவன் தனக்கு வருமானம் கிட்டும் போதெல்லாம் அது எவ்வளவு சிறிய தொகையாக இருந்தாலும் கடனின் வட் டிக்காகவோ அல்லது கடனின் பகுதிப் பணத்துக்காகவோ செலுத் துவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. எதிர்பாராத காரணங்க ளால் குறித்த தவணையில் கடன் பணத்தைச் செலுத்த வசதியற் றவர்கள் அதற்குரிய காரணங்களுடன் தவணை நீடிப்புக்கு விண்ணப் பஞ் செய்யுமிடத்து சங்க நிருவாகம் அக்காரணங்களை ஆராய்ந்து நியாயமெனக் காணப்படின் தவணை நீடிப்பு வழங்க வசதிசெய்யப் பட்டுள்ளது.

**இலாபப் பங்கிடு**

வரையறுக்கப்படாத கடனுதவு சங்கங்களின் இலாபம் பகிர்வு செய்து கொடுத்தலாகாது. ஆணையாளர் விதித்த பிரகாரம் கூட் டுறவு நிதிக்குச் செலுத்த வேண்டிய தொகையை ஒதுக்கியபின் மீதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலாபம் முழுவதும் சங்க ஒதுக்கு நிதியில் சேர்க்கப்பட வேண்டும். இதனால் சங்க ஒதுக்குநிதி (அடக்கப் பணம்) அதிகரிக்கும். ஒதுக்கு நிதி சங்கத் தொழிற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படலாம். சங்க ஒதுக்குநிதி அதிகரிக்க வெளிக்கடன் எல்லைத்தொகை குறைவடையும். இதனால் இருவித நன்மைகள் உறுப்பினர்களுக்கு ஏற்படுகின்றன. அவையாவன:

1. உறுப்பினர்களின் பொறுப்பின் எல்லை குறைவடையும்.
2. சங்கம் வெளியாரிடம் கடன் பெறவேண்டிய அவசியமில்லையாயின் வட்டி கொடுக்க வேண்டிய அவசியமில்லை. எனவே உறுப்பினர்களுக்குக் குறைந்த வீத வட்டியில் கடன் வழங்க முடியும்.

ஒரு கடனுதவு கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்யப்பட்டுப் பத்து வருடங்கள் தொழில் நடத்திய பின் வரும் வருடங்களின் இலாபத்தில் 25 வீதத்துக்குக் குறையாத தொகையொன்றை ஒதுக்கு நிதியுடன் சேர்த்தபின் ஆணையாளரின் அனுமதியுடன் 7½ வீதத்திற்கு மேற்படாத ஒரு தொகையை பொதுநல நிதிக்கு மாற்றமுடியும். இப் பொதுநல நிதித் தொகையை ஆணையாளரின் (பதிவுக் காரியஸ்தர்) அனுமதியுடன் ஏழைகளுக்கு உதவி செய்தல், கல்வி விருத்தி, சுகாதார (வைத்திய) உதவிகள், மதசம்பந்தமற்ற வேறு பொது நன்மை பயக்கும் விடயங்களுக்குப் பயன்படுத்தப்படலாம்.

ஒதுக்குநிதி உறுப்பினரிடையே பகிர்வு செய்யப்பட முடியாதது மன்றி உறுப்பினர் எவரும் எக்காலத்திலும் அதன் எப்பாகத்திலும் உரிமை கோர முடியாதது. சங்கம் கலைக்கப்படும் காலத்தில் வெளிக் கடன்களைத் தீர்க்கச் சங்கநிதி போதாதுவிடின் ஒதுக்குநிதியைப் பயன்படுத்தலாம். கலைப்பின் பின் வெளிப் பொறுப்புக்களும் பங்கு முதலும் வழங்கிய பின்னும் ஒதுக்குநிதி மீதியிருப்பின் அத் தொகை அவ்வூர்ப் பொதுமக்களுக்கு நன்மை தரக்கூடியதும் நிருவாக உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்டு ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்டதுமான ஒரு காரியத்துக்குச் செலவிடப்படல் வேண்டும்.

சில சங்கங்கள் 10 ஆண்டுகள் கழிந்த பின்னர் ஒரு உறுப்பினர் தமது பங்கு முதலைத் திருப்பி எடுத்து மீண்டும் தவணைப் பணமாகச் செலுத்துவதற்கு வசதி செய்துள்ளன. அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் மாதாந்தம் குறிப்பிட்ட ஒரு தொகையைக் கட்டாயமாகச் சேமிக்க வேண்டுமென உபவிதி கட்டுப்படுத்துகின்றது. இவ்விதம் சேமிக்கும் பணத்தை அங்கத்தவர் தமது அவசிய தேவைகளுக்கு சங்கம் விதிக்கும் வட்டியுடன் திருப்பிப்பெற உரிமையுண்டு. ஆனால் அவர் மீண்டுஞ் சேமித்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையறுக்கப்படாத பொறுப்புடைய கடனுதவு சங்கத்தில் ஒவ்வொரு உறுப்பினரையும் பொறுப்பு அபாயம் சூழ்ந்துள்ளது. இவ்வபாயத்துக்கு எதிராக உறுப்பினர் தம்மைக் காத்துக்கொள்ள முன்னெச்சரிக்கையுடன் சில பாதுகாப்புக்களைச் செய்யவேண்டியுள்ளன. அவையாவன:

1. உறுப்பினர்களைச் சேர்க்கும்போது அவரின் நடத்தையை நன்ருக ஆராய்ந்து நேர்மை, ஒழுக்கம், தொழிலில் விடா முயற்சி, ஒத்துழைப்பு மனப்பான்மை உள்ளவர்களைச் சேர்த்துக் கொள்ளல்.

2 தகுதியற்ற கெட்ட நடத்தையுள்ள அங்கத்தவரை துணை விதியில் விதிக்கப்பட்டுள்ள முறைப்படி நீக்கல்

3. சங்கத்தின் வெளிக் கடனெல்லையைத் தீர்மானிக்கும்போது சங்கத்தின் நிதிவளவலு, உறுப்பினர்கள் பொறுப்புக்களை ஏற்கக்கூடிய சக்தி, உறுப்பினர்களால் திருப்பிச் செலுத்தக் கூடிய சக்தி, உறுப்பினர்களின் பயன்தரு தேவை என்பனவற்றைக் கருத்திற் கொண்டு குறைந்தளவு தொகையைத் தீர்மானித்தல்.

4. உறுப்பினர்களின் உரிமை நிதி வளங்களைச் சங்கத்தில் அதிகரிக்க வகை செய்தல்.

5. சட்டப்படி அடக்கப்பணத்தை அதிகரித்தல்.

6. பணநிதிகளை உபயோகிப்பது சம்பந்தமான பொதுக்கூட்டங்களில் தவருது கலந்து தகுந்த கட்டுப்பாடுகளை விதித்தல்

7. ஒவ்வொரு உறுப்பினரும் பெற்ற கடன்களை விண்ணப்பத்தில் குறிப்பிட்ட பயன்தரு தொழில்களுக்குப் பயன்படுத்துகின்ருர்களா என்பதை ஒவ்வொரு உறுப்பினர்களும் தமது கடமைபோல மேற்பார்வை செய்து பிழையாக உபயோகிப்பவர்களிடமிருந்து சங்கம் உடனே அறவிடுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கத் தூண்டல்.

8. கடன் தவணை தப்பிய உறுப்பினர்களிடமிருந்து விளக்கம் கேட்கப்பட்டு அவர்கள் தரும் விளக்கம் ஏற்றுக்கொள்ள முடியாததாயின் மத்தியஸ்தத் தீர்ப்பு மூலம் அறவிட சங்கத்தைத் தூண்டல்.

9. மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளை ஒரு உறுப்பினர் எடுக்கும்போது ஏனைய உறுப்பினர்கள் ஒத்துழைப்புத் தராதுவிடின், அவ்வுறுப்பினர் தனது பொறுப்பு அபாயத்தைத் தவிர்க்கும் பொருட்டுச் சங்கத்தில் இருந்து விலகல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10.** சங்கத்தின் பொருளாதார இயலுந்தன்மை குன்றி வருவதாகப் பெரும்பாலான உறுப்பினர்கள் கருதுவார்களானால் சங்கத்தைக் கலைக்குமாறு ஆணையாளருக்கு விண்ணப்பித்தல்.

பொறுப்பு வரையறுக்கப்படாத கடனுதவு சங்கங்களே இலங்கையின் கூட்டுறவு வளர்ச்சிக்கு அடிப்படை. அச்சங்கத்தில் உறுப்புரிமை பெற்று இயங்கி வந்தவர்களில் பெரும்பாலோர் கூட்டுறவின் உயர் இலட்சியக் கொள்கைகளைக் கடைப்பிடித்தார்கள். கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பிக்கும்போது கூட்டுறவுக் கொள்கைகள் பற்றிய கல்வியைப் பெற்றூர்கள். துணை விதிகளை வாசித்து அல்லது கேட்டு நன்கு அறிந்திருந்தார்கள். ஒருவருக்காக அனைவரும்; அனைவருக்காக ஒருவரும் வாழவேண்டும் என்ற உயர் கொள்கையின் உரு அமைப்பு, பதவி வகிப்போர் சம்பளம்பெருது கௌரவ சேவை ஆற்றி பொதுநல மனப்பான்மையை விருத்தி செய்த அமைப்பு இச்சங்கங்களேயாகும். இதன் பின் தோன்றிய பல கூட்டுறவு அமைப்புச் சங்கங்கள் இவ்வுயர் கொள்கையிலிருந்து விலகிக் கொண்டு செல்கின்றன. வரையறுக்கப்பட்ட கூட்டுறவுச் சங்க அமைப்புக்கள் உறுப்பினரின் பொருளாதார நலன்களுக்களித்த அளவு முக்கியத்துவம், கூட்டுறவுப் பண்புகள் வளர்வதற்கு அளிக்கவில்லை.

## 2. பொறுப்பு வரையறுத்த கடனுதவு சங்கம்

இவ்வகைச் சங்கங்களுக்கும் உறுப்பினர்களுக்குக் கடன் வழங்கும் நோக்கத்துடனேயே அமைக்கப்பட்டது. இச்சங்கத்தின் பிறப்பிடமும் ஜேர்மனியாகும். இதன் ஆரம்பகர்த்தா சூல்டெலிஸ் என்பவராகும். இவர் நகர்ப்புறங்களிலுள்ள தொழிலாளர் நலன்கருதி வரையறுக்கப்படாத கடனுதவி வங்கிகளையே ஆரம்பித்தார். நகர்ப்புறங்களிலுள்ள மக்கள் வரையறுக்காத பொறுப்பை ஏற்க முன்வரவில்லை. இதனுல் சூல்ஸ்டெலிஸ் ஆரம்பித்த கடனுதவு வங்கிகளில் சேருபவர்களின் தொகை குறைவாக இருந்தது. 1889-ம் ஆண்டுச் சட்டத்தின் மூலம் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கடனுதவு வங்கியாக மாற்றமடைந்தது.

இதன்பின் நகர்ப்புறத்தில் உள்ள சிறு கைத்தொழிலாளர்கள் ஏனையோர் அதிக அளவில் இக்கடனுதவு வங்கியில் அங்கத்துவம் பெற்றனர். இவ்வங்கிகளை நகர வங்கிகள் என்றும் அழைத்தனர். தொழிற் பரப்பு விரிவானதாயும், உறுப்பினர் எண்ணிக்கை அதிகமாகவும் இருந்தமையால் உறுப்பினர்களுக்கிடையே நெருங்கிய தொடர்பு இல்லாமல் இருந்தது. இவ்வங்கிகள் நிதித்துறை, கணக்குத் துறை, பொதுத்துறை என மூன்று பிரிவுகளைக் கொண்டு அவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த அலுவலரால் நிருவகிக்கப்பட்டன. நிருவாக முறை உறுப்பினர்களைக் கொண்ட பொதுச்சபையே ஜனநாயக முறையில் நிருவாக உறுப்பினர்களைத் தெரிவு செய்தது.

இதற்கு வேண்டிய நிதிகள் உறுப்பினரின் பிரவேசக் கட்டணம், பங்குமுதல், உழைத்த வருமானத்தில் ஏற்படுத்திய ஒதுக்கு நிதி, உறுப்பினர், உறுப்பினரல்லாதோரிடம் பெற்ற வைப்புக்கள் போன்றவையாகும். உறுப்பினர் பங்குமுதலைத் தவணை முறையில் செலுத்த அனுமதிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர்கள் பங்குமுதல் முழுவதையும் செலுத்திய பின்பே பங்குமுதலுக்கு இலாப ஈவு (வட்டி) பெறும் உரிமை பெற்றனர்.

இலங்கையிலும் இவ்வித வரையறுக்கப்பட்ட கடனுதவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அங்கத்தவரின் பொறுப்பு பங்குமுதலால் வரையறுக்கப்பட்டது. ஒரு உறுப்பினர் பெறும் கடனுக்கு அவரும் பிணை (சொத்து - ஆள்) யும் மட்டுமே பொறுப்பு ஏற்கின்றன. கடன் வழங்கும் நிபந்தனைகள் வரையறுக்கப்படாத கடனுதவு சங்கங்களிலும் பார்க்கக் கடினமானவையாக இருக்கும். இலங்கையிலும் இவ்வித சங்கங்கள் பெரும்பாலும் நகர்ப்புறங்களிலேயே ஆரம்பிக்கப்பட்டன. வரையறுக்கப்படாத ஐக்கிய நாணய சங்கங்களின் வளர்ச்சியோடு ஒப்பிடுகையில் இவை அதிக அளவு வளரவில்லை என்றே கூற வேண்டும். 1958-ம் ஆண்டு முடிவில் வரையறுக்கப்படாத கடனுதவு சங்கங்கள் 3680 வரை இருந்தன. வரையறுக்கப்பட்ட கடனுதவு சங்கங்கள் 163 ஆக இருந்தன.

சுமார் 45 ஆண்டு காலத்தில் 168 வரையறுக்கப்பட்ட கடனுதவு சங்கங்கள் உருவாகியதிலிருந்து அது இலங்கையில் வளர்ச்சியுறவில்லையென்பதை நாம் அறியக்கூடியதாக இருக்கிறது. அதே நேரத்தில் வரையறுக்கப் படாத கடனுதவு சங்கங்கள் 3680 உருவாகியதிலிருந்து வரையறுக்கப்படாத அமைப்பையே இலங்கை மக்கள் பெருமளவில் விரும்பினர் என்பதை அறியமுடிகிறது.

## இரு கடனுதவு சங்கங்களுக்குமிடையேயுள்ள வேறுபாடுகள்

| | பொறுப்பு வரையறுக்கப்படாதது | பொறுப்பு வரையறுக்கப்பட்டது |
|---|---|---|
| 1. | ஒவ்வொரு உறுப்பினரும் சங்கக் கடன்களைத் தீர்க்க தமது சொத்துக்களிலிருந்து ஈடு செய்யும் பொறுப்பையுடையவர்கள். | உறுப்பினர் ஒருவர் வழங்கிய பங்கு முதலுக்கு மேல் சங்கக் கடன்களுக்குப் பொறுப்பேற்க வேண்டியதில்லை. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 2. | தொழிற் பரப்பு சிறியது | தொழிற்பரப்பு பெரிதாக இருக்கும். |
| 3. | உறுப்பினர்களுக்கிடையில் நெருங்கிய தொடர்பும் அறிமுகமும் இருக்கும். | உறுப்பினர்களுக்கு இடையே நெருங்கிய தொடர்பு அறிமுகம் இருக்குமென நிச்சயமாகக் கூற முடியாது. |
| 4. | பங்குகளின் விலை குறைவானது. | பங்குகளின் விலை உயர்வானது |
| 5. | உறுப்பினர்களின் நேர்மைத் தன்மையைப் பிணையாகக் கொண்டு கடன் வழங்கப் படுவது | உறுப்பினர்களின் பங்குமுதல், அவர்களின் பிணையின் தன்மை, என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கடன் வழங்கப்படுவது |
| 6. | உறுப்பினர்கள் கடனை உரிய தேவைக்குப் பயன்படுத்துகிறார்களா என்பது நிருவாகத்தால் மேற்பார்வை செய்யப்படும். | பெருந் தொகையான உறுப்பினர்கள் இருப்பதால் மேற்பார்வை செய்வது கடினம். எனவே கடன் மேற்பார்வை செய்யப்படுவதில்லை. |
| 7. | உறுப்பினர்களுக்கு இலாபப் பகிர்வு செய்யப்படுவதில்லை. பங்கு முதலுக்குவட்டி வழங்கப்படுவதில்லை. | இலாபப் பகிர்வு, பங்கு முதலுக்கு வட்டி என்பன கொடுக்கப்படலாம். |
| 8. | நிருவாகக் கருமங்கள் யாவும் கௌரவ சேவையாக உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் செய்தல் வேண்டும். | சம்பளம் பெறும் பணியாளர்கள் நிருவாகக் கருமங்களில் பலவற்றைச் செய்வார்கள். |
| 9. | பொருளாதார நலன்கள் மட்டுமன்றி உறுப்பினர்களின் ஒழுக்கம், நேர்மை, ஒத்துழைப்பு முதலிய பண்புகளை வளர்க்க வாய்ப்புண்டு. | பொருளாதார நலன்களைக் கவனிப்பதன்றிப் பண்பு வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. இது இயலுந்தன்மையுமற்றது. |
| 10. | புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதில் பழைய உறுப்பினர்கள் பொதுக் கூட்டத்தில் பரிசீலனை செய்வார்கள். | புதிய உறுப்பினர்கள் இலகுவாகச் சேர்க்கப்படுவார்கள். பழைய உறுப்பினர்கள் கவனமாகப் பரிசீலனை செய்ய வேண்டிய அவசியமில்லை. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3' நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைச் சங்கம்

இலங்கையில் 1927-ம் ஆண்டளவில் பசறைப் பகுதியிலுள்ள பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் முதன்முதலாக ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டது. 1942-ம் ஆண்டுவரையில் இலங்கையில் பண்டகசாலைச் சங்கங்களின் வளர்ச்சி குறைவாகவே இருந்தது, இக்கால எல்லைக்குள் இலங்கை முழுவதிலும் 52 சங்கங்களே உருவாகியிருந்தன. இவற்றுள் 38 சங்கங்கள் பெருந் தோட்டங்களில் உள்ளவையாகும்.

1942-ம் ஆண்டளவில் இரண்டாவது மகாயுத்தத்தைத் தொடர்ந்து இலங்கையில் நுகர்ச்சிப் பொருள்களில் பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டது. கிடைக்கின்ற குறைந்தளவு பொருள்களை மக்கள் எல்லோருக்கும் பகிர்ந்தளிப்பதற்கு ஏற்றவழி கூட்டுறவுப் பண்டகசாலைகளே என்பதை அரசு உணர்ந்து கூட்டுறவுப் பண்டகசாலைகளை அமைப்பதற்குப் பிரசாரஞ் செய்து முயற்சிகளை எடுப்பதற்கு கூட்டுறவு அதிகாரிகளைத் தூண்டியது. இதன் பலனாக 1946-ம் ஆண்டில் 4034 பண்டகசாலைகள் பதியப்பட்டிருந்தன.

### நோக்கங்கள்

அங்கத்தவர்களின் பொருளாதார நிலையை விருத்தியாக்குதலும் அதிலும் விசேடமாகப் பின்வருவனவற்றைச் செய்தலும்.

1. பொது உபயோகத்திலுள்ள நல்ல தரமான சரியான அளவை அல்லது நிறையுள்ள பொருள்களை வாங்கி அங்கத்தவர்களுக்கு வழங்குதல்.
2. சிக்கனம், சுயஉதவி, கூட்டுறவு என்பனவற்றை அங்கத்தவரிடையே வளர்த்தல். கூட்டுறவுக் கொள்கைகளைப் பரப்புதல். திருந்திய வியாபார முறைகளினால் அங்கத்தவர்களின் பொருளாதார நிலையை விருத்தியாக்குதல்.
3. மேற்குறிப்பிட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு ஏதுவாகிய வேறெதையுஞ் செய்தல்.

உறுப்பினராகச் சேர்வதற்கு தகமைகள் முன் பொதுவாகக் கூறப்பட்ட தகமைகளாகும். ஒரு உறுப்பினரின் இழப்பினால் உரிமையடையும் உறுப்பினர் 18 வயதுக்குட்பட்டவராக இருப்பினும் சேர்த்துக் கொள்ளப்படுவர். உறுப்பினராகச் சேருவதற்கு ஒரு பங்கையாவது கொள்முதல் செய்தல் வேண்டும். ஒரு பங்கின் பெறுமதி 10 ரூபாவாகும். இத்தொகையைத் தவணைகளிற் கட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்கும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பங்கின் முழுப்பெறுமதியை யும் செலுத்தமுன் பங்கு இலாபமோ, தள்ளுபடியோ பெற முடியாது. இவை ஏதாவது ஒதுக்கப்படின் அவை பங்கு முதலுடன் சேர்க்கப்படல் வேண்டும். ஒருவர் இச் சங்கத்தில் சேருவதாயின் பங்கு முதலைக் கொள்முதல் செய்து சங்கத்துக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

நிருவாகசபை அங்கத்தவ விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்து ஏற்கலாம் அல்லது மறுக்கலாம். ஆயினும் இறுதி முடிவு செய்யும் அதிகாரம் பொதுச்சபைக்கே உண்டு. நிருவாகசபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுப் பொதுச் சபையின் அங்கீகாரம் பெறும்வரை ஒரு உறுப்பினர் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதைத் தவிர மற்ற எல்லா உரிமைகளையும் உடையவராவர்.

சங்கத்துக்கு வேண்டிய தொழிற்படு முதல் பின்வரும் வழிகளில் பெறப்படும். அவையாவன:

1. உறுப்பினரின் பங்கு முதல்
2. சேமப் பணங்கள்
3. வட்டிக் கடன்கள்
4. சம்பாதித்த வருமானம்

பொதுச்சபை அதிகாரங்களும் கடமைகளும் பொதுவான செயற்பாடுகளில் குறிக்கப்பட்டனவேயாகும். நிருவாக சபையைத் தெரிவு செய்வதும் அக்கடமைகளில் ஒன்றாகும். இந் நிருவாக சபையில் 9 பேர் இருத்தல் வேண்டும். இவர்கள் சுழல்மாற்று முறையில் தெரிவு செய்யப்படுவர். 9 பேரைத் தெரிவு செய்தபின் ஒவ்வொரு வருட முடிவிலும் $1/3$ பங்கினர் விலக வேண்டும். இதில் இரு வருடத்துக்குக்கும் யார்யார் விலகவேண்டுமென்பதைத் திருவுளச்சீட்டு முறை மூலம் தெரிவு செய்து முதலாவது நிருவாக சபைக் கூட்ட அறிக்கையில் பதிவு செய்து கொள்வர். முதலாம் வருட முடிவில் குறிக்கப்பட்டவர்கள் விலக அந்த இடத்துக்குப் புதியவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். பொதுச்சபை விரும்பினால் விலகியவர்களை மீண்டும் தெரிவு செய்யலாம். இம்முறை புதிய நிருவாகசபை உறுப்பினர் தெரிவு செய்யப்படின் அனுபவம் நிறைந்த நிருவாக உறுப்பினரிடமிருந்து செயல்முறைகளை அறிந்து கொள்ள உதவியாக இருக்கும். பொதுச்சபை விரும்பினால் முழு நிருவாக சபை உறுப்பினரையும் விலக்கி விட்டுப் புதிதாக 9 நிருவாகசபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கும் உரிமையுண்டு.

சங்கத் தலைவரையும், சங்க உபதலைவர் அல்லது உபதலைவர்களையும் தனாதிகாரியையும் நிருவாக உறுப்பினர்களினின்றும் தெரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட வேண்டும். இப்பதவி வகிப்போர் அடுத்த வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட நிருவாக சபையின் முதற் கூட்டம் வரை, நிருவாகசபை உறுப்பினர் பதவியை இழக்கும் வரை அல்லது நிருவாக சபையால் அப்பதவியில் இருந்து நீக்கப்படும்வரை கடமையாற்றுதல் வேண்டும். சங்க உத்தியோகத்தராகத் தான் செய்யும் கடமையெதற்கும் நிருவாகசபை உறுப்பினர் எவரும் கூலியாவது உபகாரப் பணமாவது பெறலாகாது.

## காரியதரிசி

காரியதரிசி நிருவாகசபை உறுப்பினர்களிடேயே இருந்து தெரிவு செய்யப்படலாம். அல்லது நிருவாக சபைக்கு வெளியே ஒருவரைக் காரியதரிசியாக நியமிக்கலாம். நிருவாக சபை உறுப்பினரிலிருந்து தெரிவு செய்யப்பட்ட காரியதரிசி நிருவாக சபை உறுப்பினரின் அதிகாரங்கள் கடமைகளுடன் காரியதரிசியின் கடமைகளையும் ஆற்றுதல் வேண்டும். இவர் ஆற்றும் பணிகளுக்கு வேதனமோ, சம்பளமோ பெறமுடியாது. வெளியிலிருந்து நியமிக்கப்படும் காரியதரிசி நிருவாக சபை, பொதுச் சபைக் கூட்டங்களில் கலந்து கொண்டு அறிக்கைகளைப் பதிவு செய்ய வேண்டும். ஆனால் வாக்குரிமை இல்லை. வேதனம் அல்லது சம்பளம் பெறலாம்.

## தனாதிகாரி

நிருவாக சபை உறுப்பினரிலிருந்து தெரிவு செய்யப்படும் ஒருவரே தனாதிகாரியாகக் கடமையாற்ற வேண்டும். இவர் வங்கியிலிருந்தும், உறுப்பினரிடமிருந்தும், பிறரிடமிருந்தும் சங்கத்திற்கு வரும் சகல பணத்தையும் தன் பொறுப்பில் ஏற்று நிருவாக சபையின் தீர்மானத்திற்கேற்பச் செலவு செய்தல் வேண்டும். மாதத்திற்கொரு முறையாவது கணக்குகளை முடித்து சரியென்பதற்கு அத்தாட்சியாகத் தனது கையொப்பமிடல் வேண்டும். தலைவர், நிருவாக சபை, கூட்டுறவுத் துறை உத்தியோகத்தர் கேட்கும் நேரத்தில் கையிருப்புப் பணத்தைக் காட்டக் கடமைப்பட்டவர் துணைவிதிகளில் விதிக்கப்பட்ட தொகைக்கு மேல் கையிருப்பில் வைத்திருத்தலாகாது. மேற்பட்ட பணத்தை பதிவாளரால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றிலிடல் வேண்டும். அப்பணத்தை மீட்பதற்கு தலைவர் அல்லது உபதலைவர், தனாதிகாரி, அல்லது காரியதரிசி ஆகிய இருவர் கையெழுத்திட்டு மீட்டல் வேண்டும்.

வரையறுக்கப்பட்ட பெரும்பாலான சங்கங்களில் நிதிப் பொறுப்புக்கள் பிணைப்பணஞ் செலுத்திய பணியாளராகிய முகாமையாளரிடமே ஒப்படைக்கப்படுகின்றது. பண்டகசாலைச் சங்கங்கள் போன்ற சிலவற்றில் மாத்திரம் கௌரவப் பணியாளரிடம் ஒப்படைக்கப்பட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுள்ளது. இவ்வித செயல் கூட்டுறவுக் கொள்கைகள் சிறந்த முறையில் செயற்படுவதற்கு ஏற்ற வழியாகும். உறுப்பினர்களின் நம்பிக்கைத் தன்மை, நேர்மைத் தன்மை, பொறுப்பை ஏற்றுத் திறம்படச் செயல் புரியுந்தன்மை, ஒருவர் அனைவருக்காகவும் உழைக்குந் தன்மை என்பவற்றை எடுத்துக் காட்டுவதாக இச்செயல் இருக்கின்றது.

### முகாமையாளர்

நிருவாக சபை சங்கத் தொழில்களை நடத்துவதற்காகக் காரியதரிசி, முகாமையாளர் தேவைப்படும் வேறு பணியாளர்களை நியமிக்கலாம். நடைமுறை விதி நிருவாகசபைத் தீர்மானங்கள் அளித்த அதிகாரத்துக்குட்பட சங்கத் தொழிலை திறம்படக் கொண்டு நடாத்தும் பொறுப்புடையவர். தினசரி தொழில் மூலம் கிடைக்கும் பணத்தை சிட்டைகளின்படி தனுதிகாரியிடம் ஒப்படைத்தல் இவரது கடமையாகும். நிருவாக சபை விதிக்கும் காசுப்பிணை ஆதனப்பிணை என்பவற்றை இவர் செலுத்தல் வேண்டும். ஏனைய பணியாளர்களின் வேலையை மேற்பார்வை செய்து அவர்களிடம் உரிய வேலையைப் பெறுவதும் இவரது கடமையாகும்.

நுகர்வோர் பண்டகசாலைகளின் நோக்கம் உறுப்பினர்களுக்கு நியாயமான விலையில் தரமான பொருள்களை சரியான அளவு நிறைகளில் கிடைக்கச் செய்தலாகும். இக்கருத்து இப்போதுதான் புதிதாகத் தோன்றியதல்ல. சங்க காலச் செய்யுள் ஒன்றில் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது.

" ............... ... . ............ ...
நடுவு நின்ற நன்னெஞ்சி னோர்
வடு அஞ்சி வாய் மொழிந்து
தமவும் பிறவும் ஒப்ப நாடி
கொள்வ தூஉம் மிகை கொளாது
கொடுப் பதூஉம் குறை கொடாது
பல் பண்டம் பகர்ந்து வீசும்
தொல் கொண்டித் துவன் றிருக்கை "

இவ்வித பண்புகள் ஒரு வியாபார நிறுவனத்திற்கு இருத்தல் வேண்டுமெனச் சங்க காலத் தமிழன் உணர்ந்தான். அன்று அவன் வகுத்த வியாபார இலக்கணத்துக்கு இலக்கியமாகத் திகழ்பவை இன்றுள்ள கூட்டுறவுப் பண்டகசாலைச் சங்கங்களேயாகும்.

கூட்டுறவுச் சங்கங்கள் பொருள்களைச் சந்தை விலைக்கு அல்லது அதிலும் குறைவான விலைக்கு விற்க வேண்டும் என்று பொதுவாகக் கூறப்படுகின்றது. ரொச்டேல் சமத்துவ முன்னோடிகள் தமது சங்கத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் சந்தை விலைக்கே பொருள்களை விற்பனை செய்து வருட முடிவில் கொள்வனவுக்கேற்ற ஆதாயத்தைத் திருப்பி உறுப்பினர்களுக்கு வழங்கினர். சந்தை விலையிலும் குறைவான விலையில் சங்கம் பொருள்களை விற்பனை செய்யின் அக்குறைந்த விலையில் பொருள்களை, வியாபாரிகள் வேறு ஆட்கள் மூலம் கொள்முதல் செய்வித்து தமதுரிமையாக்கி சங்கத்தில் அப்பொருளின் இருப்பு இல்லை என்றவுடன் பன்மடங்கு விலையை உயர்த்தி நுகர்வோரைச் சுரண்டுவார்கள். ஆகவே சந்தை விலையில் விற்றுப்பின் அங்கத்தவர்களுக்கு ஆதரவுக்கேற்ற ஆதாயத்தை வழங்குவதே சிறந்த முறை என்பர். ஆயினும் தட்டுப்பாடான சில பொருள்களின் சந்தை விலை மிக உயர்வாக இருக்கும் போது அவற்றை உறுப்பினர்களுக்கு நியாயமான விலையில் வழங்க வேண்டியது கூட்டுறவுப் பண்டகசாலைகளின் கடமையாகும். இவ்வித சூழ்நிலையில் அங்கத்தவர்களின் தேவைகளை ஆராய்ந்து பங்கீட்டுத் திட்டமொன்றைத் தயாரித்து அதனடிப்படையில் வழங்கலாம்.

ரொச்டேல் சமத்துவ முன்னோடிகள் வகுத்த வியாபாரக் கொள்கைகளில் முக்கியமான இன்னொன்று உடன் காசுக்கு விற்பனை செய்வதாகும். சிக்கனத்தை அடிப்படையாக வைத்தே இக்கொள்கை வகுக்கப்பட்டதாகும். அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய உடன் நுகர் பண்டங்களைப் பொறுத்த வரையில் இக் கொள்கை சரியானது. உயர் விலை கொண்டதும் நெடுங்காலப் பயனையுடையதும் வருமானத்தை ஈட்டக் கூடியதுமான பொருள்களைத் தகுந்த உத்தரவாதத்துடன் தவணை முறையில் பணம் பெறும் ஒழுங்கில் விற்பனை செய்வதே தற்கால வியாபார முறைகளுக்கு ஏற்றதாக அமையும். தையல் இயந்திரம் நீரிறைக்கும் இயந்திரம் போன்றவற்றை தவணை முறையில் பணஞ் செலுத்திக் கொள்வனவு செய்ய வசதியளிப்பின் உறுப்பினரின் பொருளாதாரநிலை உயரவும் வழிபிறக்கும். வளர்ச்சியுற்ற சங்கங்கள் கட்டுப்பாடுகளுக்கமையக் கடன் விற்பனையையும் மேற்கொள்கின்றன.

1946-ம் ஆண்டில் 4034 பண்டகசாலைச் சங்கங்கள் இருந்தன. இதன்பின் பண்டகசாலைகளின் தொகைகள் குறைந்து கொண்டே வந்துள்ளன. 1976-ம் ஆண்டு 101 கூட்டுறவுப் பண்டகசாலைகளேயிருந்தன. யுத்த காலம் முடிந்து பொருள் தட்டுப்பாடு நீங்கியதும் அங்கத்தவர்களின் ஆதரவின்மையால் பல சங்கங்கள் நட்டத்தில் இயங்கி மூடவேண்டிய நிலைக்குள்ளாயின. பல பண்டகசாலைச் சங்கங்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றமடைந்தன. அல்லது அதனோடு இணைந்தன. குறுகிய காலத்தில் பரந்த அளவில் கூட்டுறவுக் கொள்கைகளைச் செயல் முறையில் மக்களிடையே பரப்பியது பண்டகசாலைச் சங்கங்களேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. விளைபொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள்

இரண்டாவது மகாயுத்தம் முடிந்தபின் இலங்கை அரசு உணவுப் பொருள்களிலும் உப உணவுப் பொருள்களிலும் ஓரளவு தன்னிறைவு காணவேண்டுமென்ற கொள்கையைக் கடைப்பிடித்தது. இவ்வித நிலையை உருவாக்க கூட்டுறவே சிறந்த வழியெனக் கருதி விளை பொருள் உற்பத்தி விற்பனைச் சங்கங்களை கிராமங்கள் தோறும் ஆரம் பிக்க 1947-ம் ஆண்டளவில் முயற்சி எடுத்தது. நெல், வெங்காயம், மிளகாய் சிறுதானியங்கள் போன்ற இறக்குமதி செய்த பொருள் களுக்கு உத்தரவாத விலைத் திட்டம் வகுத்துக் கொள்முதல் செய்து ஊக்கமளித்தது. நிலம் திருத்தல், இயந்திரங்கள் கொள்வனவு செய் தல், கிணறு அமைத்தல் ஆகியவற்றுக்கு அங்கத்தவர்களுக்கும், பண்டகசாலைகள், கட்டடங்கள் அமைப்பதற்கு சங்கங்களுக்கும் 2½ வீத வட்டியில் நீண்டகாலத் தவணைக் கடன்களை கமத்தொழில் சேவை இலாகா வழங்கியது.

அரசாங்கத் தூண்டுதலின்றியே சில விளைபொருள் உற்பத்தி விற்பனைச் சங்கங்கள் ஆரம்பித்து நடைபெற்று வந்துள்ளன. யாழ்ப் பாணம் மலையாள புகையிலை ஐக்கிய வியாபாரச் சங்கம் 1934-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. குருநாகல் பகுதியில் 1934-ம் ஆண்ட ளவில் தெங்குப் பொருள் உற்பத்தி விற்பனைச் சங்கம் ஆரம்பமானது. 1951-ம் ஆண்டில் இவ்வித சங்கங்கள் 37 இலங்கையில் பதிவு செய் யப் பெற்றன. இறப்பர் உற்பத்தி விற்பனைச் சங்கங்கள், நெல் கொள்வனவுச் சங்கங்கள், சிகரட் புகையிலைச் சங்கங்கள் (இவை சிறிது காலத்தில் மூடப்பட்டன) சிற்றெனெல்லாப் புல்லெண்ணெய்ச் சங்கம் போன்றனவும் ஆரம்பிக்கப்பட்டது.

வடமாகாணத்தில் நெல், வெங்காயம், மிளகாய் போன்ற பொருள் களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் நோக்கங் கொண்ட விளை பொருள் உற்பத்தி விற்பனைச் சங்கங்கள் உருவாகின. வடமாகாணத்தி லுள்ள விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கங்கள் ஒன்று சேர்ந்து 1940-ம் ஆண்டளவில் வட பகுதி விளைபொருள் உற்பத்தியாளர் சமாசம் ஒன்றை நிறுவினர். இச்சமாசம் உறுப்பினர்களின் விளை பொருள்களைச் சந்தைப் படுத்துவதிலும், உறுப்பினர்களுக்குத் தேவையான இயந்திர வகைகளைப் பெற்றுக் கொடுப்பதிலும் பேரு தவி செய்தது. 1971-ம் ஆண்டின் சங்கங்களின் மறுசீரமைப்பின் போது அகில இலங்கை சந்தைப்படுத்தல் சமாசத்துடன் (மாக்பெட்) இணைக்கப்பட்டு விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளைபொருள் உற்பத்தி விற்பனைச் சங்கங்களின் நோக்கங்கள்

அங்கத்தவர்களின் பொருளாதார நிலையை விருத்தி செய்தலும், விசேடமாகப் பின்வரும் முறைகளில் விவசாய வளர்ச்சிக்கும், கால் நடை வளர்ப்பு விருத்திக்கும், விளைபொருள் விற்பனைக்கும் ஒழுங்கு செய்தலுமாகும்.

1. கூடிய அளவு நிலத்தைப் பயிரிடல்
2. விஞ்ஞான ரீதியானதும் சிக்கனமானதுமான பயிர்ச்செய்கை முறைகளைக் கையாளுதல்
3. திருந்திய முறையில் அமைக்கப்பட்ட விவசாயக் கருவிகளைப் பயன்படுத்தல்
4. நல்ல விதைகளை உபயோகித்தல்
5. திருந்திய கால்நடை வளர்த்தலைக் கையாளுதல்
6. விளைபொருள்களை சேகரித்து வைப்பதற்கும் ஏற்றிச்செல்வதற்கும் ஒழுங்கு செய்தல்
7. விளைபொருள்களை ஒன்று சேர்த்தல், தரப்படுத்தல், பதனிடல், தொகுத்தல், ஏற்றிச் செல்லல், சங்கத்தின் மூலம் விற்பனை செய்தல்
8. சங்கத் தொழில் விருத்திக்கேற்ற கட்டிடங்களை அமைத்தலும், இயந்திரங்களை நிறுவுதலும்
9. விதைகள், கால்நடைகள், கருவிகள், பசளைகள் திருந்திய முறையில் பயிர் செய்ய வேண்டிய ஏனைய உபகரணங்கள் ஆகியவற்றை அங்கத்தவர்களுக்கு வழங்கல்
10. விளைபொருள்களைப் பிணையாகக் கொண்டு அங்கத்தவர்களின் தொழில் முயற்சிகளுக்கு முற்பணம் வழங்கல்
11. நிபுணத்துவம் வாய்ந்த ஆலோசனைகள் வழங்கல்
12. விவசாயம், கால்நடை வளர்ப்பு போன்றவற்றில் புதிய பரிசோதனைகள் செய்து உறுப்பினர்களுக்கு வழிகாட்டல்
13. சிக்கனம், சுய உதவி, பரஸ்பர உதவி ஆகியவற்றை அங்கத்தவர்களில் வளர்க்க வல்ல வேறெதையும் செய்தல்

அங்கத்துவம் பெறுவதற்குப் பொது நிபந்தனைகளுடன் மேலதிகமாக உண்மையான விவசாயியாக இருத்தல் வேண்டும் என்னும் நிபந்தனையையும் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும். இறந்த உறுப்பினரின் பின்னுரித்தாளியாயின் 18 வயதுக்குக் குறைந்தவரும் அங்கத்தவராக இருக்கலாம். அங்கத்தவர் ஒவ்வொருவரும் ஒரு முழுப் பங்கினையாவது கொள்முதல் செய்தல் வேண்டும். பங்குப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதையும் ஒரே தடவையில் கட்டலாம். அல்லது பத்து ரூபா வீதம் பத்து வருடத் தவணையில் கட்டலாம். பங்கின் முழுப்பெறு மதியைக் கட்டும்வரை பங்கு இலாபமோ தள்ளுபடியோ பெறமுடியாது. இவை ஏதாவது இருப்பின் பங்கு முதலுடன் சேர்க்கப் பட வேண்டும்.

உறுப்புரிமை கோரி விண்ணப்பம் செய்பவர்களது விண்ணப்பங்களை நிருவாக சபை பரிசீலனை செய்து பொதுச் சபையின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கும். பொதுச்சபையின் அங்கீகாரத்தைப் பெறமுன் பொதுக் கூட்டங்களில் கலந்துகொள்ள முடியாது. ஏனைய உரிமைகளைப் பெற முடியும். உறுப்பினர்களோடு விளைபொருள் விற்பனை ஒப்பந்தங்கள் செய்யவும் ஒப்பந்தத்தை மீறும் உறுப்பினர்களுக்குத் தண்டம் விதிக்கவோ அல்லது நட்டஈடு பெறவோ துணை விதிகளின்படி அதிகாரம் இருக்கும்.

பொதுச்சபையால் ஒன்பது நிருவாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இவர்களும் வருடந்தோறும் சுழல் மாற்று முறையில் மூன்றுபேர் பதவி விலக அவ்விடங்களுக்கு வருடாந்தக் கூட்டத்தில் புதியவர்களையோ அவர்களையோ தெரிவு செய்வார்கள். நிருவாகசபை தமக்குள் ஒரு தலைவரையும் உபதலைவர்களையும் தெரிவு செய்யும். காரியதரிசி நிருவாக உறுப்பினரில் இருந்து தெரிவு செய்யப்படலாம். அல்லது வெளியிலிருந்து பணியாளராக ஒருவரை நியமிக்கலாம். நிருவாக சபை சங்க தொழில் முயற்சிகள் சரியான முறையில் நடைபெறுவதற்காக ஒரு முகாமையாளரையும் ஏனைய பணியாளர்களையும் நியமிக்கலாம். பொதுச் செயற்பாடுகளில் குறிக்கப்பட்ட விடயங்கள் இச் சங்கத்திற்கும் பொருந்தும்.

1941-ம் ஆண்டில் 71 விளைபொருள் உற்பத்தி விற்பனைச் சங்கங்களே இருந்தன. 1946-ல் 160 ஆக உயர்ந்து 1958-ல் கிட்டத்தட்ட 2000 சங்கங்களாக வளர்ச்சியடைந்தன; பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அமைப்பு முறை அறிமுகப்படுத்தியதும் பல சங்கங்கள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றமடைந்தன. மாற்றமடையாது விளைபொருள் உற்பத்தி விற்பனைச் சங்கங்களாகத் தொடர்ந்து இயங்கியவை 1976-ம் ஆண்டு மக்கள் வங்கிக் கணக்கீட்டின்படி 754 ஆகும். இச் சங்கங்கள் நெல், எள், சோளம், குரக்கன், கடுகு, மிளகு, மஞ்சள், பயறு, வெங்காயம், புளி, மிளகாய், இறுங்கு, காய்கறி வகைகளைப் பெருமளவில் பயிரிடவும் சந்தைப்படுத்தவும் உதவியுள்ளது. இலங்கை போன்ற விவசாய நாடுகள் பொருளாதார பலமடைய விளைபொருள் உற்பத்தி விற்பனைச் சங்கங்களின் வளர்ச்சியும் விருத்தியும், அவற்றின் திறன் மிக்க சேவையும் அதிகளவில் பயன்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள்

மரவரியிலிருந்த சீவல் தொழிலைக் கூட்டுறவுத் தொழில் முறையாகக் கலாநிதி N. M. பெரேரா அவர்கள் நிதிமந்திரியாக இருந்த காலத்தில் மாற்றியமைத்தார். இச் சங்கத்தின் தொழிற் பரப்பு பெரிதாக அமைந்தாலும் அமைப்பு சிற்றளவு முறையிலேயே அமைந்த சங்கம். சீவல் தொழில் புரிபவர்கள் சிறு தொகையினராகப் பரந்து இருத்தலே தொழிற் பரப்பு பெரிதாக அமைவதற்குக் காரணமாகும்.

### நோக்கங்கள்

கூட்டுறவுக் கொள்கைகளுக்கமைய உறுப்பினர்களின் பொருளாதார சமுதாய நலன்களை விருத்தி செய்வதும், சிக்கனம் • பரஸ்பர உதவி – சுய உதவி ஆகியவற்றின் உணர்ச்சியையும் பயிற்சியையும் உறுப்பினரில் வளர்ப்பதும் சங்கத்தின் முக்கிய நோக்கங்களாகும். இந்நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு பின்வருஞ் செயற்பாடுகளைச் சங்கம் செய்யும். அவையாவன:

1. சிக்கன சேமிப்புத் திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வரல்.
2. கள்ளு, கருப்பநீர் சீவுவதற்காக உறுப்பினர்களுக்கு மரங்களை ஒழுங்கு செய்தலும் ஒதுக்குதலும்.
3. கள்ளுச் சீவுவதற்குத் தேவையான உபகரணங்களை உறுப்பினர்களுக்கு வழங்கல்.
4. உறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்படும் கள்ளினைப் பெற்று அதன் மொத்த விற்பனைக்கும் சில்லறை விற்பனைக்கும் ஒழுங்கு செய்தல்.
5. உறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்படும் கருப்ப நீரைப் பெற்று பனங்கட்டி, சீனி முதலியன தயாரித்தல்.
6. பண நிதிகளைத் திரட்டி உறுப்பினர்களுக்கு கடன் – முற்பணம் என்பவற்றை வழங்கல்.
7. கள்ளைச் சேகரித்து நவீன முறையில் பதப்படுத்திச் சந்தைப் படுத்தல். (போத்தலில் அடைத்தல் போன்றவை)
8. சீவல் தொழிலில் திருந்திய முறைகளில் உறுப்பினர்களுக்கு பயிற்சியளித்தல்.
9. உறுப்பினர்களுக்கு வேலையாளர் நட்டவீட்டுத் திட்டத்தினை உருவாக்கி நடைமுறைக்குக் கொண்டுவரல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. ஆணையாளரின் முன் அனுமதியுடன் காணி, கட்டிடங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் ஆகியவற்றைச் சொந்தமாக்கல், கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல்.

11. இந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய அல்லது அனுகூலமான வேறெதையும் செய்தல்.

**அங்கத்துவம்**

சங்கத் தொழிற் பரப்பினுள் சீவல் தொழிலில் ஈடுபட்டவராயிருத்தல் வேண்டும் என்பதே சிறப்புத் தகமையாகும். ஏனையவை எல்லாச் சங்கங்களுக்கும் பொதுவாகவமைந்த பொதுத் தகமைகளேயாகும். ஒரு பங்கின் பெறுமதி 50 ரூபாவாகும். இப் பங்குப் பணத்தின் பெறுமதி முழுவதையும் ஒரே தடவையில் கட்டலாம் அல்லது 5 ரூபா வீதம் பத்து மாதத் தவணைகளில் செலுத்தலாம். ஒருவர் உறுப்புரிமைக்கு விண்ணப்பிக்கும்போது ஒரு பங்கின் முழுத் தொகையையும் அல்லது தவணை வீதம் செலுத்துவதாயின் மூதல் தவணைப் பணமாகிய 5 ரூபாவும் பிரவேசப் பணமாகிய ஒரு ரூபாவும் செலுத்துதல் வேண்டும். இவ்வாறு சேர்க்கப்பட்டவர்களை நிருவாக சபை அடுத்துவரும் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும். பொதுச் சபை அங்கத்தவராகச் சேர்க்கப்பட்டமையை அங்கீகரிக்கலாம். தகுதியற்றவர் நற்குணமில்லாதவர் என்ற காரணத்தால் நிராகரிக்கலாம்.

அங்கத்தவர்களின் பொறுப்புச் சங்கக் கடன்களுக்கு அவ்வுறுப்பினர் கையொப்பமிட்ட பங்குகளின் தோற்ற மதிப்பின் 5 மடங்கு வரை வரையறுக்கப்பட்டுள்ளது. ஒருவர் 50 ரூபா பங்கைக் கொள்முதல் செய்து 5 தவணைகளில் 25 ரூபாவைச் செலுத்தியிருப்பினும் சங்கத்தைக் கலைக்கும்போது சங்கக் கடன்களைத் தீர்க்க சங்கத்தில் பணமில்லையாயின் தனது சொந்தப் பணத்திலிருந்து 225 ரூபா வரை கொடுக்கக் கடமைப்பட்டுள்ளார். இன்னொருவர் 5 பங்குகளை 250 ரூபாவுக்குக் கொள்முதல் செய்து கையொப்பமிட்டிருப்பின் மேலும் 1000 ரூபா வரை தனது சொந்தப்பணத்திலிருந்து சங்கக் கடன்களுக்காகக் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளார். ஒரு உறுப்பினர் அங்கத்துவத்தை இழந்த பின்னும் இரு ஆண்டுகளுக்கு அவரின் பொறுப்பு வலிவுடையதாகும். ஆயினும் அவர் அங்கத்துவத்தை இழந்த திகதியிலுள்ள கடன்களுக்கு மட்டும் அவரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.

பொதுச் சபைக்குப் பொதுவாக ஏனைய சங்கங்களுக்கு அமைந்த கடமைகளும் அதிகாரங்களும் உண்டு. நிருவாக சபையால் இடைவிலக்கல் செய்யப்பட்ட உறுப்பினரின் நிலையை ஆராய்ந்து அவரை விலக்கல் அல்லது இடைவிலக்கலை ரத்துச் செய்தல் ஆகிய பொறுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுச் சபைக்கே உண்டு. இடைவிலக்கல் செய்யப்பட்ட உறுப்பினர் இப் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கருத்துக்களைத் தெரிவிக்கவும், வாக்களிக்கவும் உரிமை வழங்கப்படல் வேண்டும். விசாரணை நடாத்துவதற்கும் வேறு விசேட வேலைகளைச் செய்வதற்கும் விசேட சிற்சபைகளை நிறுவுதலும் பொதுச் சபையின் கடமைகளில் ஒன்றாக இச் சங்கத் துணைவிதிகளில் குறிக்கப்பட்டுள்ளது.

## நிருவாகசபை

பொதுச் சபை உறுப்பினர்களிலிருந்து 9 பேர் பொதுச் சபையால் தெரிவு செய்யப்படுவர். இவர்களுடன் ஆணையாளர் மூன்றுக்கு மேற்படாதவர்களை நியமனஞ் செய்யலாம். தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் சுழல் மாற்று முறையில் ஒவ்வோராண்டும் மூன்று பேர் விலகல் வேண்டும், அப் பதவிகளுக்குப் புதியவர்களோ அல்லது அவர்களோ திரும்பவும் தெரிவு செய்யப்படலாம். ஆயினும் தெரிவு செய்யப்பட்ட நிருவாக உறுப்பினர் மூன்று ஆண்டுகளுக்கு மேல் கடமையாற்றியிருப்பின் ஓராண்டு காலத்துக்காவது மீண்டும் தெரிவு செய்யப்படலாகாது. தனித்தோ கூட்டாகவோ தமது பதவிக்காலம் முடியுமுன் விலகியவர்கள் அவ்வாறு விலகிய திகதியிலிருந்து ஓராண்டுக்குள் மீண்டும் தெரிவு செய்யப்படத் தகுதியற்றவராவர்.

ஆணையாளரால் நியமனம் பெற்றவர்கள் நியமன காலம் முடியும் வரை நிருவாகசபை உறுப்புரிமை மட்டுமன்றிப் பொதுச் சபை உறுப்புரிமையையும் பெறுவர். இவர் பிரவேசப் பணமோ பங்குப் பணமோ கட்டவேண்டியதில்லை. ஏனைய உறுப்பினர்கள் மூன்றுமாத பங்கு முதல் தவணைப்பணம் நிலுவையிலிருக்கும் உறுப்பினர்கள் பொதுச் சபையில் கலந்துகொள்ள முடியாது. அங்கத்துவ முடிவு என்பதில் "தொடர்ச்சியாக மூன்று மாதங்களுக்குச் சீவல் தொழிலில் போதிய காரணங்களின்றி ஈடுபடாதிருத்தல்" என்பது மட்டும் இச் சங்கத்திற்குரிய சிறப்புக் காரணமாகும். ஏனைய காரணங்கள் மற்றச் சங்கங்களுக்குரிய பொதுக் காரணங்களாகும்.

உறுப்பினர்களுடன் சங்கம் உற்பத்தி விற்பனை ஒப்பந்தம் செய்து கொள்ளுதல் வேண்டும். உறுப்பினர்கள் தாம் உற்பத்தி செய்யும் கள்ளினை சங்கத்துக்கன்றி வேறு எவருக்கும் விற்பனை செய்யக்கூடாது, கள்ளு உற்பத்தியிலும் விற்பனையிலும் தொழிற் பரப்புக்குள் சங்கமே அத்தொழிலை நடாத்துவதற்கு தனியுரிமை பெற்றுள்ளது. இதற்காக பெருந்தொகைப் பணத்தை அரசுக்கு வரியாகச் செலுத்துகிறது. சங்கத் தொழிற் பரப்பில் உற்பத்தியாக்கப்படும் கள்ளு முழுவதும் சங்கத்திற்கே வந்து சேர்ந்து சங்கமே ஏகபோக விற்பனையாளராகத் திகழ்கின்றது. உறுப்பினரோ அல்லது உறுப்பினரல்லாதவரோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளை விற்பனை செய்தால் அவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கையின் மீது வழக்குத் தொடரச் சங்கத்திற்கும் மது பரிபாலன இலாகாவிற்கும் உரிமையுண்டு.

இச்சங்கங்கள் 73, 74-ம் ஆண்டுகளில் கள்ளு மட்டுமன்றி கருப்பநீரைச் சேகரித்து பனங்கட்டி செய்யும் தொழிற்சாலைகளையும் நிறுவி நடாத்தி வந்தன. 77-ம் ஆண்டில் சீனியின் விலை குறைந்தமையால் பனங்கட்டிக்கு கேள்வியின் தன்மை குறைந்து இத் தொழிற்சாலைகள் இயங்க முடியாத நிலையில் இருந்தன. சீனியின் விலை இப்போது அதிகரித்துள்ளமையால் இச்சங்கங்கள் பனங்கட்டித் தொழிற்சாலைகளை மீண்டும் புதுப்பித்து நடாத்தினுல் பொருளாதார இயலுந்தன்மையுடன் இயங்கலாம்.

## இச் சங்கத்தால் ஏற்பட்ட விளைவுகள்

1. சீவல் தொழிலாளரின் தொழில் பாதுகாப்பு ஏற்பட்டமை
2. உற்பத்தி செய்யும் கள்ளு முழுவதையும் விற்பனை செய்ய வசதி ஏற்பட்டமை
3. சீவல் தொழிலாளர் கடன், முற்பணம் பெற வசதி ஏற்பட்டமை
4. தொழில் செய்யும்போது ஏற்படும் அபாயங்களுக்கெதிராக நட்டவீடு பெறும் வசதி பெற்றமை
5. கள்ளு உற்பத்தி—விற்பனைத்துறையில் தனியுரிமை பெற்றமை
6. திருந்திய முறைகளைப் பின்பற்ற வசதியேற்பட்டமை
7. கள்ளு உற்பத்தி செய்வோர் கடன் விற்பனை செய்வதால் ஏற்படும் இழப்புக்களில் இருந்து நீங்கியமை
8. சீவல் தொழிலாளர்களுக்கு நிரந்தர வருவாய் கிடைக்க வழி வகுத்தமை
9. போத்தலில் அடைத்தல், நீண்ட காலத்துக்குப் பதப்படுத்தி வைத்திருத்தல் போன்ற புதிய முறைகளைக் கையாள வழி வகுத்தமை
10. விஞ்ஞான ரீதியான ஆய்வுகளை மேற்கொண்டு மேலும் உச்சப் பயன்களை எய்துவதற்குச் சாத்தியக் கூறுகள் இருத்தல்

இவற்றை விடப் பல சமூக நன்மைகளும் ஏற்பட்டுள்ளன. வயது வராதவர்கள், இளைஞர்கள் போன்றோர் இரகசியமாகக் கள் அருந்துஞ் செயலைத் தடுக்க உதவியமை, பல இடங்களில் தனிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டவர்கள் விற்பனை செய்வதால் அவர்களுக்கிடையே எழும் போட்டி பொறாமைகளால் ஏற்படும் சண்டை சச்சரவுகளைத் தவிர்த்தமை போன்றவற்றைக் கூறலாம்.

## 6. பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்கள்

மாணவப் பருவத்தில் உருவாகும் இலட்சியம், கொள்கை, பண்புகள் வாழ்வு முழுவதும் நிலைத்து நிற்கக் கூடியன. எனவே பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்களில் பொருளாதார நலன்களிலும் பார்க்க அறஞ் சார்ந்த கூட்டுறவுப் பண்புகள் மாணவர்களிடம் இடம்பெறக் கூடியதாகவும் கூட்டுறவுக் கொள்கைகள் பற்றிய தெளிவான சிந்தனையும் செயல்முறைப் பயிற்சியும் பெறக் கூடியதாகவும் இச்சங்கங்கள் அமைந்திருத்தல் விரும்பத்தக்கது. ஒத்துழைப்பு, சுய உதவி, பரஸ்பர உதவி, சிக்கனம் என்பனவற்றின் பொருளை அறிந்து அவற்றைக் கடைப்பிடிக்கும் மனப்பாங்கை ஏற்படுத்த வேண்டும். எதிர்காலக் கூட்டுறவாளர்களை உருவாக்கக் கூடிய பயிற்சிக் களங்களாகப் பாடசாலைக் கூட்டுறவுச் சங்கம் அமைதல் வேண்டும்.

## இச் சங்கத்தால் நிறைவேற்றக் கூடிய கடமைகள்

1. பாடசாலைப் புத்தகங்கள், கொப்பிகள், உபகரணங்களை விநியோகித்தல்
2. கூட்டுறவு முறையில் விவசாயம் செய்தல்
3. கூட்டுறவு முறையில் சிறு கைத்தொழில் பொருள்களை உற்பத்தி செய்தல்,
4. சிற்றுண்டிச்சாலைகளை நடாத்தல்.
5. கூட்டுச் சேமிப்புக்களை ஏற்படுத்தல்.
6. விடுதிச்சாலை மாணவர்கள் கூட்டுறவு முறையில் விடுதிச் சேவைகளை நடாத்துதல்.
7. சேமிப்புத் திட்டங்களில் சேர்தல்.
8. இவைபோன்ற பிற செயல்களைச் செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அங்கத்துவம்**

6-ம் வகுப்பிற்கு மேற்பட்ட மாணவர்களும் கல்லூரியில் தொழில் புரியும் ஆசிரியர்கள் ஏனைய ஊழியர்களும் ஒரு ரூபா பங்கு முதலைக் கொள்முதல் செய்வதன் மூலம் உறுப்பினராகலாம். இவர்களைக் கொண்டதே பொதுச் சபையாக இருக்கும்.

**நிருவாகசபை**

15 பேரைக் கொண்ட நிருவாக சபை ஒன்று இருக்கும். இதில் 10 மாணவர்களைப் பொதுக் சபை தெரிவு செய்யும். இவர்களுக்கு வயதுத்தகமை இல்லை. பெற்ரேர் ஆசிரியர் சங்கத்தில் (பாடசாலை அபிவிருத்திச் சபை) இருந்து மூவரும் ஆசிரியர்களிலிருந்து இருவரும் ஆணையாளரால் நியமிக்கப்படுவர்.

இச் சங்கங்களுக்கு எண்பார்வை கூட்டுறவு நிதிகளிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன. இவை பதிவு செய்யப்பட்டவையென்றும் அங்கீகரிக்கப்பட்டவையென்றும் இரு வகையில் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7: II பேரளவு முதனிலைச் சங்கங்கள் சிலவற்றின் விளக்கம்

பேரளவுச் சங்கங்கள் சிற்றளவுச் சங்க அமைப்பிலும் வேறு பட்டது. பரந்த தொழிற்பரப்பு அங்கத்தவர் அதிகரிப்பு, சேவைகளின் எண்ணிக்கை அதிகரிப்பு, சேவைகளின் அளவு அதிகரிப்பு ஆகிய காரணங்களால் நிருவாகத்தையும், சேவை அதிகரிப்புக்களையும் இலகுவாக்கும் பொருட்டு பல சிறு தொகுதிகளாக (கிளைகளாக) பிரித்த அமைப்பைக் கொண்டது. கிளைகளாகப் பிரித்த அமைப்பைக் கொண்ட சங்கங்களையே பேரளவு முதனிலைச் சங்கங்கள் என அழைக்கப்படுகின்றது.

## 1. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பத்தில் சிற்றளவு அமைப்பு முறையிலேயே ஆரம்பிக்கப்பட்டது. 1957-ம் ஆண்டில் கூட்டுறவுத் துறைக்குப் பொறுப்பாக இருந்த கௌரவ மந்திரி பிலிப் குணவர்த்தனுவின் திட்டத்துக்கமையவே பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாகின. கடன் பெறல், நுகர்ச்சிப் பொருட்களைப் பெறல், விவசாயத்துக்கு வேண்டிய விதைகள், பசளைகள், கிருமிநாசினி வகைகளைப் பெறல், உற்பத்தி செய்த விளைபொருட்களை விற்பனை செய்தல் போன்ற பல்வேறு தேவைகளை நிறைவு செய்வதற்காக, மக்கள் பல்வேறு சங்கங்களை அமைப்பதிலுள்ள சிரமங்களை நீக்கவும், பல்வேறு நிறுவனங்களை நாடிச் சென்று தமது தேவைகளை நிறைவேற்றுவதிலுள்ள சிக்கல்களை அகற்றுவதற்காகவும் அமைக்கப்பட்டதே பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

ஒரு கிராமத்திலுள்ள மக்கள் தங்களுக்கு வேண்டிய பல்வேறு தேவைகளையும் இச்சங்கத்தின் மூலம் பூர்த்தியாக்க வகைசெய்யும் வகையில் இதன் விதிகள் அமைக்கப்பட்டுள்ளன, பல பண்டகசாலைச் சங்கங்களும் பல விளைபொருள் உற்பத்தி விற்பனைச் சங்கங்களும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றியமைக்கப் பட்டன. இதில் அங்கத்துவம் பெறுபவர்கள் ஒரு பங்கையாவது கொள்முதல் செய்தல் வேண்டும். ஒரு பங்கின் விலை ஐம்பது ரூபா. இதைத் தவணை முறையில் செலுத்துவதற்கும் வசதி செய்யப்பட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருந்தது. நிருவாகசபை உறுப்பினர்கள் 9 பேர் பொதுச்சபையால் தெரிவு செய்யப்படுவர். இவர்கள் சுழல்மாற்று முறையில் தெரிவு செய்யப்பட்டுப் பதவி வகிப்பர். இச்சங்கங்கள் உறுப்பினர்களுக்கு குறுங்காலக் கடன், மத்திய காலக் கடன், நீண்டகாலக் கடன் என்பனவற்றை வழங்கியது. ஏனைய கருமங்கள் யாவும் பொதுச் செயற்பாடுகளில் குறிக்கப்பட்டவை போலவே இருந்தன.

## மறுசீரமைப்பு

இலங்கையில் உள்ள கூட்டுறவு அமைப்புக்களைத் திருத்தியமைக்கும் நோக்குடன் 1968-ம் ஆண்டு அக்டோபர் மாதம் டாக்டர் அலெக்சாண்டர் பிரேசர் லெயிட்லோ அவர்கள் தலைமையில் ஒரு ஆணைக்குழுவை அரசு நியமித்தது. இக்குழுவில் திரு. ஆர். எஸ். டீமெல் திரு. ரி. டி. பாணபொக்கே, திரு. எஸ். எஸ். புரி, திரு. கே. ஆழ்வாப்பிள்ளை ஆகியோர் உறுப்பினராகக் கடமையாற்றினர். இக்குழுவானது கூட்டுறவு இயக்கங்களின் செயற்பாடுகளை நன்கு ஆராய்ந்து அமைப்பிலுள்ள குறைபாடுகள், வளர்ச்சிக்குத் தடையாக இருந்த காரணிகள், சீரமைப்புச் செய்ய வேண்டிய முறைகள் போன்ற ஆலோசனைகளை அறிக்கை மூலம் 1969-ம் ஆண்டு சமர்ப்பித்தது. இவ்வறிக்கையில் சமர்ப்பித்த ஆலோசனைகளுக்கிணங்க 1971-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் மறுசீரமைக்கப் பட்டன. மறுசீரமைப்புக்கு முன் இலங்கை முழுவதிலும் சிறுசிறு சங்கங்களாக 4000க்கு மேற்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன.

இவற்றில் பல இயங்காதிருந்தன. பல தொடர்ந்து நட்டத்தில் இயங்கிக் கலைக்கப்பட வேண்டிய நிலையில் இருந்தன. மிகச் சிறிய அளவு சங்கங்களே மிகச் சொற்ப இலாபத்துடன் இயங்கிக் கொண்டிருந்தன. மறுசீரமைப்பின்போது ஒரு உள்ளூராட்சி மன்றப் பிரதேசத்தை ஒரு தொழிற்பரப்புப் பிரதேசமாகக் கொண்டு அது சிறிதாக இருப்பின் இரண்டு மூன்று உள்ளூராட்சி மன்றப் பிரதேசங்களைத் தொழிற்பரப்புப் பிரதேசமாகக் கொண்டு இலங்கை முழுவதிலும் சுமார் 310 பேரளவுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக சீரமைக்கப்பட்டன.

## மறு சீரமைப்பின் நோக்கங்கள்

1. சங்கங்களைப் பரந்த அளவில் அதிக அளவு அங்கத்தவர்களையும் கொண்டதாக அமைத்து பொருளாதாரப் பலமிக்கதாக உருவாக்கல்

2. நிபுணத்துவ சேவைகளைச் சங்கம் பெறக் கூடியதாக உருவாக்கல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பொருளாதார இயலுந்தன்மை கொண்ட நிறுவனங்களாக மாற்றியமைத்தல்

4. உறுப்பினர்களின் அதிக அளவு சேவைகளைப் பூர்த்தி செய்ய வாய்ப்பளித்தல்

5. சிறந்த ஊழியர்களைப் பெறவும் அவர்களுக்குத் தகுந்த சம்பளம், வேலை உத்தரவாதம் போன்றவற்றை ஏற்படுத்தவும் வசதி அளித்தல்

6. கிராமியப் பொருளாதார அபிவிருத்தியில் முக்கிய பங்கை வகிக்கச் செய்தல்.

7. சிறந்த நிருவாகிகளைத் தேர்ந்தெடுக்க வசதி செய்தல்.

8. உறுப்பினர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தக் கூடிய வகையில் தொழில் முயற்சிகளை ஆரம்பித்தல்.

9. கூட்டுறவுப் பண்ணைகளை அமைத்து திறம்பட இயங்க வழி வகுத்தல்.

10. உறுப்பினர்களின் உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்தும் வசதிகளையேற்படுத்தல்.

11. குடிசைத் தொழில், கைப்பணிப் பொருள்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்ய உறுப்பினர்களுக்கு ஊக்கமளித்தல்.

12. உறுப்பினர்களுக்குத் தகுந்த தொழில் நுட்ப ஆலோசனைச் சேவைகளை வழங்கல்.

13. உறுப்பினர்களிடையே வங்கிப் பழக்கத்தை ஏற்படுத்தல்.

14. கிராமப்புறங்களில் பயன்படுத்தப்படாதிருக்கும் மூலவளங்களைத் தகுந்த முறையில் பயன்படுத்தி பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

15. உறுப்பினர்களின் கலாச்சாரத் தேவைகளை நிறைவேற்றல் போன்றவையாகும்.


மறுசீரமைப்பு மூலம் பேரளவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டதும், அத்தொழிற் பிரதேசத்திலுள்ள சிறிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், பண்டகசாலைச் சங்கங்களும், விளைபொருள் உற்பத்தி விற்பனைச் சங்கங்களும் பேரளவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துடன் அவற்றின் சொத்துக்களும் பொறுப்புக்களும் இணைக்கப்பட்டு அவற்றின் பதிவு அழிக்கப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுசீரமைக்கப்பட்டபின்

# பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அமைப்பு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பகுதி முகாமையாளர்கள்:

1. நிதி முகாமையாளர் (கணக்காளர்)
2. ஆளணி முகாமையாளர்
3. கடன் முகாமையாளர்
4. கைத்தொழில் முகாமையாளர்
5. நுகர்ச்சி முகாமையாளர்
6 — 9 தேவையான வேறு பகுதி முகாமையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைப்பு முறை விளக்கம்

மக்கள் தங்கள் சகல தேவைகளையும் பூர்த்தி செய்வதற்காக அவர்களால் கூட்டுறவுச் சட்டம் விதிகளுக்கமைய அமைக்கப்படுவதே பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமாகும். சங்கம் பரந்த தொழிற்பரப்பையுடையதால் கிளைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். மக்கள் தாம் வசிக்கும் பிரதேசத்திலுள்ள கிளைகளின் மூலமாகவே உறுப்பினராகச் சேரமுடியும். ஒரு கிளையில் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்டதே அக்கிளையின் பொதுச்சபையாகும். ஒரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட கிளைப் பொதுச்சபைகள் இருக்கும். ஒவ்வொரு கிளை உறுப்பினர்களும் தமக்குள் இருந்து ஒன்பது பேரைக் கொண்ட கிளைக் குழுவைக் கிளைக் கருமங்களைக் கவனிப்பதற்காக நியமிப்பர். அவர்கள் தமக்குளிருந்து தலைவர், உபதலைவர், காரியதரிசி என்பவர்களைத் தெரிவு செய்வர். சங்கப் பொதுச் சபைக்குத் தமது கிளையின் பிரதிநிதிகளையும் தெரிவு செயவர்.

கிளைகளால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் 100 பேரைக் கொண்டதே சங்கப் பொதுச் சபையாகும். சங்கப் பொதுச்சபை சங்கத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றும் பொருட்டு இயக்குனர் சபைக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்யும். பொதுச் சபையால் தெரிவு செய்யப்பட்டவர்களும் ஆணையாளர் நியமிப்பின் அவர்களையும் கொண்டதே இயக்குனர் சபையாகும். இயக்குனர் சபை சங்கத்தின் நாளாந்தக் கருமங்களை மேற்பார்வை செய்வதற்காக ஒரு தலைவரையும் தலைவர் இல்லாத வேளைகளில் கருமமாற்றுவதற்காக ஒரு உபதலைவரையும் தெரிவு செய்வர். அத்துடன் சங்கக் கருமங்களையும் தொழில்களையும் நடாத்துவதற்கு ஒரு பொது முகாமையாளர், வேண்டிய பகுதி முகாமையாளர்கள், ஏனைய பணியாளர்கள், கிளைகளுக்கு வேண்டிய முகாமையாளர்கள் போன்ருேரை இயக்குனர் சபை நியமிக்கும். கிளை முகாமையாளர்களும் கிளைப் பணியாளர்களும் அக்கிளை உறுப்பினர்களுக்குச் சங்கம் ஆற்ற வேண்டிய சேவைகளை ஆற்றுவர். கிளை உறுப்பினர்களுக்குச் சரியான முறையில் கிளைப் பணியாளர்கள் சேவையாற்றுகிருர்களா என்பதைக் கிளைக் குழு மேற்பார்வை செய்யும். அத்துடன் வேண்டிய ஆலோசனைகளையும் கிளைப் பணியாளர்களுக்கு வழங்கும். சங்கக் கருமங்கள் யாவும் கூட்டுறவுச் சட்டம் விதிகளுக்கமைவாக நடைபெறுகின்றதா என்பதை கூட்டுறவுத் திணைக்கள ஊழியர்கள் மேற்பார்வை செய்து ஆலோசனை வழங்குவர்.

## நோக்கங்கள்

கூட்டுறவுக் கொள்கைகளுக்கமைய உறுப்பினர்களின் பொருளாதார, சமூக, கலாச்சார நலன்களுக்கு ஊக்கமளித்தல், உறுப்பினர்களிடையே சிக்கனம், ஒருவருக்கொருவர் உதவி, தன்னுதவி ஆகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றை உற்சாகப்படுத்தல் என்பனவே முக்கிய நோக்கங்களாகும். இந்நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டுத் துணைவிதிகளுக்கமையப் பின்வரும் அதிகாரங்கள் இருக்கும். அவையாவன:

1. சிக்கன சேமிப்புத் திட்டங்களைக் கையாளுதல்.
2. உறுப்பினர்களின் குடும்ப, விவசாய, கைத்தொழில் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.
3. எல்லா வகையான பொருள்களிலும் மொத்த சில்லறை வியாபாரத்தினை நடாத்தல்.
4. நிதிகளைத் திரட்டல், உறுப்பினர்களுக்குக் கடன்களையும் முற்பணங்களையும் வழங்கல், வேறு கூட்டுறவுச் சங்கங்களில் முதலீடு செய்தல்.
5. விளைபொருள், கால்நடை வளர்ப்பினுல் பெறப்படும் பொருள்கள், குடிசைக் கைத்தொழில் பொருள்கள் ஆகியவற்றைக் களஞ்சியப்படுத்தல், பதனிடுதல், சந்தைப்படுத்தல்.
6. உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தும் பொருட்டு ஒப்பந்தத்தில் அல்லது வேறு வகையில் வேலைகளை மேற்கொள்ளல்.
7. வேறு எவ்விதமான வியாபாரத்தையோ அல்லது முயற்சிகளையோ மேற்கொள்ளுதல் அல்லது ஈடுபடல்.
8. கூட்டுறவு ஆக்க ஆணையாளரின் முன் அனுமதியுடன் காணி, கட்டடம், இயந்திரங்கள் ஆகியவற்றைச் சொந்தமாக்கல், வாங்குதல், விற்றல்.
9. தனது நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அல்லது உதவத்தக்க அனைத்தையும் செய்தல்.

## தொழிற் பரப்பு

சங்கத்தின் தொழிற்பரப்பு துணைவிதிகளில் குறிப்பிட்டபடி ஒரு உள்ளூராட்சி மன்றப் பிரதேசமாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளூராட்சி மன்றப் பிரதேசங்களாகவோ அமைந்திருக்கும். ஆனல் ஆணையாளரின் முன் அனுமதியுடன் அவரால் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கமைவாக வேறு எந்தத் தொழிற் பரப்பிலும் சங்கம் செயற்படலாம். ஆணையாளரின் தீர்மானப்படி குறிக்கப்படும் கால எல்லையில் அந்த மேலதிக தொழிற் பரப்பும் சங்கத் தொழிற்பரப்புக்குட்பட்டதாகக் கருதப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறுப்புரிமை

பொதுச் செயற்பாடுகளில் குறிப்பிட்ட வயதுத் தகைமை, வதிவிடத் தகைமயுள்ளவர்கள் சங்க அங்கத்துவ விண்ணப்பப் பத்திரங்களின் இரு பிரதிகளைப் பெற்று அவற்றை நிரப்பிக் கையொப்பமிட்டுக் கிளை முகாமையாளரிடம் கொடுத்து ஒரு முழுப் பங்கின் பெறுமதியை யாவது கொள்முதல் செய்தவுடன் அவர் உறுப்பினராக அனுமதிக் கப்படல் வேண்டும். கிளை முகாமையாளர் உறுப்புரிமை கோரி விண் ணப்பித்தவர்களின் விண்ணப்பங்களை அடுத்துவரும் கிளைக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும். உறுப்புரிமைக்குத் தகமையற்ற விண்ணப்பங்களை நிராகரிக்கக் கிளைக்குழுவுக்கு அதிகாரமுண்டு. கிளைக் குழுவினுல் உறுப்புரிமை நிராகரிக்கப்பட்ட எவரும் அக் குழுவின் முடிவை எதிர்த்து இயக்குனர் சபைக்கு மனுச் செய்யலாம். இயக்கு னர் சபை கிளைக் குழுவின் முடிவை உறுதிப்படுத்தவோ மாற்றவோ அதிகாரமுண்டு. ஒரு கிளைக்குக் கிளைக்குழுவைத் தெரிவு செய்யும் வரை அக்கிளையின் உறுப்புரிமை விண்ணப்பங்களை இயக்குனர் சபை ஆலோசனைக்கு எடுத்து முடிவு செய்யும்.

உறுப்புரிமை கோரி விண்ணப்பித்தவரின் விண்ணப்பத்தை கிளைக்குழு நிராகரித்து, இயக்குனர் சபையும் நிராகரிக்கின் அவர் பதிவாளருக்கு மேன்முறையீடு செய்யலாம். பதிவாளரின் (ஆணையா ளர்) தீர்ப்பே முடிவானது. (கூட்டுறவுச் சட்டம் 60 இதைப்பற்றிக் கூறுகிறது)

உறுப்புரிமை கோரி விண்ணப்பித்து ஒரு பங்கின் முழுப் பெறு மதியையாவது கொள்முதல் செய்த ஒருவர் கிளைக்குழுவினுல் அவரின் விண்ணப்பம் ஏற்கும் வரை கிளை உறுப்பினர் கூட்டத்தில் கலந்து கொள்ளவோ அல்லது வாக்குரிமையைப் பயன்படுத்தவோ அல்லது கிளைக்குழுவுக்கு சங்கப் பொதுச் சபைக்கு இயக்குனர் சபைக்குத் தெரிவு செய்யப்படுவதற்கோ உரிமையற்றவர் என்ற நிபந்தனைக்குட் பட எல்லா உறுப்பினர்களுக்கும் துணைவிதிகள் கூட்டுறவுச் சட்டம் என்பவற்றில் குறிப்பிட்டுள்ள உரிமைகளும், பொறுப்புக்களும், கடமை களும் இருக்கும். ஒரு உறுப்பினர் சங்கத்தின் ஒன்றுக்கு மேற்பட்ட கிளைகளில் உறுப்புரிமை வகிக்க முடியாது. உறுப்புரிமை முடிவுறப் பொதுச் செயற்பாடுகளில் குறிப்பிட்டவையே இதற்கும் பொருந்தும்.

## உறுப்பினர்களை நீக்குதல்

எந்த உறுப்பினராவது துணைவிதிகளை மீறினுல் அவரை நீக்கு மாறு இயக்குனர் சபைக்கு ஏன் அறிவிக்கக் கூடாதென ஏழு நாட் களுக்குள் காரணங் காட்டுமாறு அவரைக் கேட்பதற்குக் கிளைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுவுக்கு அதிகாரம் உண்டு. கிளைக்குழுவின் கருத்துப்படி போதிய காரணங்கள் காட்டப்படாதுவிடினும், அவர் விளக்கங் கொடுத்திருந்தால் அவ் விளக்கம் திருப்தியற்றது என்பது பற்றியும் அறிக்கை ஒன்று இயக்குனர் சபைக்கு கிளைக்குழுவால் அனுப்பப்படல் வேண்டும். இயக்குனர் சபை தேவைப்படும் விசாரணையை நடத்திய பின்பு அடுத்த பொதுச் சபைக் கூட்டத்தில் ஆராய்வதற்கு விடல் வேண்டும். பொதுச் சபையின் கூட்டத்திற்குச் சமூகமளித்து வாக்களிப்பதற்கு உரிமையுள்ள பிரதிநிதிகளின் மொத்தத் தொகையில் ⅔ பங்கு பெரும்பான்மை வாக்குகளால் அவ்வுறுப்பினரை நீக்குவதற்குப் பொதுச் சபைக்கு அதிகாரம் உண்டு.

## உறுப்பினர்களின் உத்தரவாதம்

சங்கத்தின் கடன்களுக்கு ஓர் உறுப்பினரின் உத்தரவாதம் அவர் கொள்முதல் செய்த பங்குகளால் மட்டும் வரையறுக்கப்பட்டிருக்கும். ஓர் உறுப்பினரின் உறுப்புரிமை முடிவுறுங்கால் அச்சமயம் அச் சங்கத்துக்கிருந்த கடனுக்கு அவரது உத்தரவாதம் அவருடைய உறுப்புரிமை முடிவுற்ற திகதியிலிருந்து இரண்டு வருடத்திற்குச் செல்லுபடியாகும். இறந்த ஓர் உறுப்பினரின் சொத்துக்கள், அவர் இறந்த திகதியில் சங்கம் பெற்ற கடன்களுக்காக அவர் இறந்த திகதியிலிருந்து இரண்டு வருட காலத்திற்கு உத்தரவாதமாயிருக்கும்.

## பங்குகள்

ஒரு பங்கின் பெறுமதி ஒரு ரூபாவாகும்; சங்கத்தின் பங்குகளின் தொகைக்கு மேலெல்லை விதிக்கப்படவில்லை, உறுப்பினர் பெற விரும்பும் கடனுக்குக் குறிப்பிட்ட தொகைப் பங்குகளை வைத்திருக்க வேண்டுமென இயக்குனர் சபை காலத்திற்குக் காலம் விதிக்கலாகும் நிபந்தனைக்குட்பட ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு முழுப் பங்கினையாவது வைத்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு பங்கின் பெறுமதியும் அது வழங்கப்பட்டதும் முழுவதாகச் செலுத்தப்படல் வேண்டும். தனி உறுப்பினர் வைத்திருக்கக் கூடிய பங்கின் மேலெல்லை சங்கப் பங்கு முதலில் $\frac{1}{5}$ க்கு மேற்படலாகாது.

பங்குகளைத் திருப்பியெடுக்க இயலாது. ஆயினும் உறுப்புரிமை முடிவுற்றவர்களுக்கு சங்கத்துக்கு உறுப்பினரல்லாதவர்களிடம் பெற்ற வைப்புக்கள் கடன்கள் இல்லாதுவிடின் அவர் வைத்திருந்த பங்குகளின் வைப்புப் பெறுமதிக்கு மேற்படாத தொகையினை வழங்கலாம். வேறு ஒரு உறுப்பினருக்கோ அல்லது உறுப்புரிமைக்கு விண்ணப்பஞ் செய்துள்ள தகுதியுள்ள ஒருவருக்கோ இயக்குனர் சபையின் அனுமதியுடன் ஒருவர் பங்குகளை மாற்றஞ் செய்யலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினர் அல்லது உறுப்புரிமைக்குத் தகைமை வாய்ந்தவர் மட்டும் பங்குகளை வைத்திருக்கலாம். இலங்கை அரசாங்கத்திற்குப் பங்குகளை விற்கலாம். இதன் பயனுக எந்தக் கூட்டத்திற்கும் பங்குதாரர் என்ற முறையில் பிரதிநிதிகளை அனுப்பவோ அல்லது வாக்களிப்பதற்கோ அரசாங்கத்திற்கு உரிமையில்லை.

## கிளைகள்

சங்கம் பதிவு செய்யும் போது இணைக்கப்பட்ட சங்கங்கள் ஒவ்வொன்றும் பொதுவாக ஒவ்வொரு கிளையாக விளங்கும். ஆயினும் இயக்குனர்சபை காலத்துக்குக் காலம் புதுக் கிளைகளை ஆரம்பிக்கவோ கிளைகளை மாற்றியமைக்கவோ அதிகாரம் உடையது. ஒவ்வொரு கிளைக்கும் எல்லைப்பரப்பு வரையறை செய்யப்பட்டிருக்கும். ஒவ்வொரு கிளைக்கும் ஒவ்வொரு அலுவலகம் அமைக்கப்பட்டிருக்கும். அவ்வலுவலகத்திலுள்ள உறுப்பினர் பதிவேட்டில் இடம்பெறுபவர்கள் அக்கிளையாக விளங்குவர். அக்கிளைக்கு ஒரு கிளை முகாமையாளரும் வேறு பணியாளர்களும் நியமிக்கப்படுவர்.

## கிளைப் பொதுக் கூட்டங்கள்

எந்தக் கிளையிலாவது உறுப்பினர் பதிவேட்டில் பெயர் பதியப்பட்டவர்கள் முறைப்படி கூடுதலையே கிளைப் பொதுக் கூட்டம் என அழைப்பர். கிளைப் பொதுக் கூட்டங்களும் வருடாந்தப் பொதுக் கூட்டம் விசேட பொதுக் கூட்டம் என இரு வகைப்படும்.

## கிளைப் பொதுக் கூட்டங்களைக் கூட்டும் அதிகாரம்

1. ஆணையாளர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்டவரின் பணிப்புரை.
2. சங்கத் தலைவரின் பணிப்புரை.
3. இயக்குனர் சபையின் தீர்மானம்
4. கிளைத் தலைவர் பணிப்புரை
5. கிளைக்குழுத் தீர்மானம்
6. கிளைக்குழு உறுப்பினர்களில் பெரும்பான்மையோரின் எழுத்து மூலமான வேண்டுகோள்.
7. அக்கிளை உறுப்பினர் பதிவேட்டில் பெயர் பதியப்பட்டுள்ள உறுப்பினர் தொகையில் $1/3$ பகுதியினர் அல்லது 25 பேருக்குக் குறையாதவர்கள் (இத்தொகையில் எத்தொகை குறைவோ அத்தொகையினர்) எழுத்து மூலம் விண்ணப்பித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் காரணங்களுக்காகச் செயலாளர் பொதுக் கூட்டங்களைக் கூட்டுதல் வேண்டும். ஆணையாளரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டவரால் அழைக்கப்படும் பொதுக் கூட்டங்களைத் தவிர ஏனைய பொதுக் கூட்டங்களுக்கு குறைந்தது ஏழு நாள் முன்னறிவித்தல் கொடுக்கப்படல் வேண்டும். ஆணையாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டவர் 24 மணித்தியால அறிவித்தலுடன் ஒரு கிளைப் பொதுக் கூட்டத்தைக் கூட்டலாம். ஏனைய விடயங்கள் பொதுச் செயற்பாடுகளில் கூறிக்கப்பட்ட பொதுக் கூட்டங்களுக்குக் குறிக்கப்பட்டவை போன்றதே கிளைப் பொதுக் கூட்டத்தின் கூட்டக் குறிப்புக்கள் கிளை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் குறிப்பேட்டில் பதியப்படல் வேண்டும். தலைவரால் கையெழுத்திட்டு அத்தாட்சிப் படுத்தப்பட்ட இதன் பிரதியொன்று இயக்குனர் சபைக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

### கிளை வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள்

1. பொதுவாகச் சங்கத்தின் இயக்கம் பற்றியும் சிறப்பாக அக்கிளையின் இயக்கம் பற்றியும் ஆராய்தல்
2. நெறியாளர் குழுவின் ஆண்டறிக்கை, எண்பார்வை அறிக்கை, எண்பார்வையாளரின் அறிக்கை என்பனவற்றை ஆராய்தல்
3. தமது கிளைக்குழுவின் ஆண்டறிக்கையை ஆராய்தல்
4. சங்கத்தின் இயக்கம் பற்றிக் கருத்துக்கள் ஆலோசனைகள் தெரிவித்தல்
5. கிளை மேற்கொள்ள வேண்டிய சமூக, கல்வி, கலாச்சார பொழுதுபோக்குத் திட்டங்களைப் பற்றித் தகவுரை செய்தல்
6. கிளை உறுப்பினர்களின் பிரேரணைகள் இருப்பின் அவற்றினை ஆராய்தல்
7. சங்க இயக்குனர் சபையால் குறிப்பாக ஆலோசிக்கும்படி விடப்பட்ட விடயங்கள் பற்றி ஆராய்தல்

### விசேட கிளைப் பொதுக்கூட்டம்

இப்பொதுக் கூட்டங்கள் தேவையேற்படும்போது காலத்துக்குக் காலம் கூட்டப்படலாம். இக்கூட்டத்தில் எக்கருமங்களுக்காகக் கூட்டம் கூட்டப்பட்டதோ அக்கருமங்கள் மட்டும் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிளைக் குழுக்கள்**

சங்கத்தின் ஒவ்வொரு கிளைக்கும் அக்கிளையின் உறுப்பினர் பதிவேட்டில் பெயர் பதியப்பட்ட உறுப்பினர்கள் தம்க்குளிருந்து ஒன்பது பேரைத் தமது கிளைக்குழுவிற்கு ஆண்டுதோறும் தெரிவு செய்தல் வேண்டும். ஆண்டுதோறும் தெரிவுசெய்யப்பட வேண்டுமென்பது ஆரம்பகாலத் துணைவிதிகளில் விதிக்கப்பட்டிருந்தது. இப்போது இத்துணைவிதியை இரண்டு ஆண்டுகள் அல்லது மூன்று ஆண்டுகளுக்கொருமுறை எனப் பல சங்கங்கள் திருத்திக் கொண்டன.

ஆணையாளரால் ஆக்கப்பட்டு அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்படும் விதிகளுக்கமையக் கிளைக்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். தற்போதுள்ள விதிகளின்படி கிளைக்குழுத் தேர்தல்களை நடாத்துவதற்கு தேர்தல் அதிகாரிகளையும், உதவி அதிகாரிகளையும் ஆணையாளர் நியமித்து கிளைக்குழுக்களின் தேர்தல் திகதிகளையும் அறிவிப்பார். குறிக்கப்பட்ட தேர்தல் நாளன்று நியமனப் பத்திரங்களைப் பெறுவதற்கு குறிக்கப்பட்ட நேர அளவு கொடுக்கப்பட்டிருக்கும். அந்நேரத்துக்குள் ஒருவரைப் பிரேரிப்பவர் அல்லது அனுமதிப்பவர் இரு பிரதிகளில் நியமனப் பத்திரங்களைத் தேர்தல் அதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும். நியமனப் பத்திரம் கொடுக்கப்படும் நேரம் முடிந்ததும் நியமனப் பத்திரத்தின் ஒருபிரதி பகிரங்கமாக ஒட்டப்படும். நியமனப் பத்திரங்களைப் பற்றிய ஏதாவது ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றைத் தெரிவிப்பதற்குச் சிறிது கால அளவு அளிக்கப்படும்.

ஆட்சேபனைக்குரிய நேரம் முடிந்ததும், நியமனப் பத்திரங்கள் ஒன்பதுக்கு மேற்படின் அவர்களை அழைத்து அவர்களுக்குச் சின்னங்கள் ஒதுக்கப்படும். ஒன்பது அல்லது அதற்குக் குறைவாயின் அவர்கள் தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுவர். ஒன்பதுக்கு மேற்படின் சின்னங்கள் ஒதுக்கப்பட்டபின் தேர்தலுக்கு வாக்களிக்கும் நேரஎல்லை அறிவிக்கப்பட்டிருக்கும். அந்நேர எல்லைக்குள் அக்கிளையின் உறுப்பினர் இடாப்பில் உள்ளவர்கள் தமக்கு விரும்பிய ஒன்பது பேருக்கு வாக்களிக்கலாம். வாக்களிப்பு நேரம் முடிவுற்றதும் வாக்குகளின் எண்ணிக்கைப்படி தெரிவு செய்யப்பட்ட ஒன்பது பேரின் பெயர்களைத் தேர்தல் அதிகாரி அறிவிப்பார். மற்றவர்கள் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கையையும் அறிவிப்பார்.

கிளைக்குழு உறுப்பினராகத் தெரிவு செய்வதற்குள்ள தகுதியீனங்கள் பொதுவாக நிருவாகசபை உறுப்பினராகத் தெரிவு செய்வதற்கு ஏனைய சங்கங்களுக்குப் பொதுச் செயற்பாடுகளில் குறிப்பிட்டவை இதற்கும் பொருந்தும். சிறப்பான தகுதியீனமாக "சங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தில் பங்கீட்டுப் புத்தகம் அல்லது பங்கீட்டு அட்டை இணைக்கப் படாமை" கருதப்படும். கிளைக்குழு உறுப்பினர் பதவி இழப்பு, பதவி முடிவு என்பன நிருவாக சபை உறுப்பினர்களுக்குப் பொதுச் செயற்பாடுகளில் குறிக்கப்பட்டவை இதற்கும் பொருந்தும்.

## கிளைக்குழுவின் கடமைகள்

1. அக்கிளை உறுப்பினர்களின் நலவுரிமைகளைப் பேணும் பொருட்டு விழிப்புக் குழுவாயிருத்தல்.
2. கிளையோடு தாம் கொண்டுள்ள தொடர்புகளைப் பற்றி உறுப்பினர்கள் முறைப்பாடு செய்தால் அவற்றினைப் பெற்று விசாரணை செய்து தேவையேற்படின் கிளை முகாமையாளர், பொது முகாமையாளர் அல்லது நெறியாளர் குழுவுக்கு அறிவித்தல்.
3. கிளை முகாமையாளரின் வேலையை மேற்பார்வை செய்தல்
4. தேவை ஏற்படும்போது கிளை முகாமையாளருக்கு, பொது முகாமையாளருக்கு அல்லது நெறியாளர் குழுவுக்கு ஆலோசனைகள் வழங்கல்.
5. சங்கத்தின் நிருவாகிகளால் தமது கவனத்துக்கு விடப்படும் உறுப்பினர் கடன் விண்ணப்பம் பற்றி அந்நிருவாகிகளுக்குத் தகவல்கள் கொடுத்தல். கடன் விண்ணப்பங்கள் பற்றித் தகவுரை செய்தல்.
6. கிளை உறுப்பினர்களிடமிருந்து கடன்களை அறவிடுவதற்கும் நெறியாளர் குழுவினால் உதவி கோரப்படும். வேறு எவ்விடயத்திலும் நெறியாளர் குழுவிற்கு ஆலோசனை வழங்கி உதவி செய்தல்.
7. இயக்குனர் சபையால் அல்லது சங்கத்தின் பொதுமுகாமையாளரினால் கிளைக் குழுவுக்குக் குறிப்பாக விடப்படும் எல்லா விடயங்களைப் பற்றியும் கருத்துக்களையும் தகவுரைகளையும் வெளியிடல்.
8. உறுப்பினர் கல்விக்கான திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தல்
9. இயக்குனர் சபையினால் தமக்குப் பொறுப்பளிக்கப்படும் வேறு எந்தக் கடமைகளையும் நிறைவேற்றுதல்.
10. உறுப்பினர் அனுமதியை ஆராய்தல்.
11. துணைவிதிகளை மீறும் உறுப்பினர்களைப் பற்றி இயக்குனர் சபைக்கு அறிவித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. சங்கத்தின் பொதுச்சபைக்குப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்தல்

13. தமக்குள்ளிருந்து தலைவர், உபதலைவர், செயலாளர் ஆகியோரைத் தெரிவு செய்தல்

கிளைக்குழுக் கூட்டங்கள் தேவையேற்படும் போதும் குறைந்தது மாதம் ஒருமுறையாவது கூடுதல் வேண்டும். கிளைக்குழுத் தலைவர், கிளைக்குழு உறுப்பினரில் பெரும்பான்மையோர், சங்கத் தலைவர், ஆணையாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டவர் அழைக்கும் போதெல்லாம் செயலாளரால் கூட்டப்பட வேண்டும்.

ஒவ்வொரு கிளைக்குழுச் செயலாளரும் அக்கிளைக் குழுவின் கடிதத் தொடர்புகளைக் கவனிப்பதோடு கிளைக்குழு, கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களுக்குச் சமூகமளித்து அக்கூட்டங்களின் அறிக்கைகளை உரிய ஏடுகளில் பதிந்து அவ்வறிக்கைகளின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை இயக்குனர் சபைக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஒவ்வொரு கிளைக் குழுவிலும் ஏற்படும் வெற்றிடங்களுக்கு அக்கிளையின் உறுப்பினர் பதிவேட்டில் உள்ளவர்களை ஒத்துத் தேர்ந்தெடுப்பதற்கு ஒவ்வொரு கிளைக்குழுவுக்கும் அதிகாரம் உண்டு. கிளைக் குழுவின் உறுப்பினரிடையே ஏதாவது வெற்றிடம் இருப்பதினால் அல்லது அக்கிளைக்குழுவுக்கு எந்த உறுப்பினரையாவது தெரிவு செய்ததில் அல்லது நியமித்தலில் குறைபாடு இருப்பதினால், அக் காரணத்தின் நிமித்தம் அக்கிளைக் குழுவின் எந்தச் செயலோ நடவடிக்கையோ செல்லுபடியற்றதாகி விடாது.

ஒரு சங்கத்தின் சேவைகள் சகல அங்கத்தவர்களுக்கும் அதிக அளவில் பயன்படுவதற்கு ஒவ்வொரு கிளைக்குழுவும் சங்கத்துக்குப் பூரண ஒத்துழைப்பும் தகுந்த ஆலோசனைகளும் வேண்டிய உதவிகளையும் காலத்துக்குக் காலம் செய்தல் வேண்டும். கிளைக்குழுக்களின் செயற்பாட்டுத் திறனிலேயே அக்கிளைகளின் வளர்ச்சி தங்கியுள்ளது.

## பொதுச்சபை

இயக்குனர் சபை உறுப்பினர்களையும் கிளைகளால் தெரிவு செய்யப்பட்ட பொதுச்சபை உறுப்பினர்களையும் கொண்ட ஒரு பொதுச்சபை சங்கத்திற்கு இருக்கும். கிளைகளால் தெரிவு செய்யப்பட்ட பொதுச்சபைப் பிரதிநிதிகளுக்கு மட்டுமே வாக்குரிமையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெறுவதற்குக் குறைந்தது ஆறு வாரங்களுக்கு முன்னர் கிளைச் செயலாளருக்கு ஒவ்வொரு கிளையும் நியமிக்க உரிமைபெற்றுள்ள பிரதிநிதிகளின் தொகையை சங்கச் செயலாளர் அறிவித்தல் வேண்டும். பின்வரும் வாய்பாட்டிற்கேற்ப முழு எண்ணுக்குக் கிட்டத்தட்ட ஒவ்வொரு கிளையினதும் பிரதிநிதிகள் தொகை நிர்ணயிக்கப்படும்.

**வாய்பாடு**

$$\frac{\text{கிளையின் உறுப்பினர் தொகை} \times 100}{\text{சங்க மொத்த உறுப்பினர் தொகை}} = \text{பிரதிநிதிகளின் தொகை}$$

தொகையை நிர்ணயிக்கும்போது பின்வரும் நிபந்தனைகள் பின்பற்றப்படல் வேண்டும். அவையாவன.

1. ஒவ்வொரு கிளையும் ஆகக் குறைந்தது ஒரு பிரதிநிதியையாவது அனுப்ப உரிமை பெற்றிருக்கும்

2. ஒன்பது பிரதிநிதிகளுக்கு மேல் அனுப்புவதற்கு எந்தக் கிளைக்கும் உரிமை இல்லை

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு பிரதிநிதியும் ஒரு வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் இருந்து அடுத்த வருடாந்தப் பொதுக்கூட்டத்துக்கு நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு முதல் நாள் வரை அக்கிளையின் பிரதிநிதியாகக் கடமையாற்றுவர். இத்தகைய ஒவ்வொரு பிரதிநிதிக்கும் கிளைக்குழுத் தலைவரும் கிளைச் செயலாளரும் கையொப்பமிட்ட அதிகாரக் கடிதம் ஒன்று வழங்கப்படல் வேண்டும். இவ்வதிகாரக் கடிதத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி சங்கச் செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

பொதுக் கூட்டம் ஒவ்வொரு ஆண்டும் நடாத்தப்படல் வேண்டும். ஒரு வருடாந்தப் பொதுக் கூட்டத்துக்கும் அடுத்த வருடாந்தப் பொதுக்கூட்டத்துக்குமிடையில் 15 மாத காலத்துக்கு மேற்படலாகாது. பொதுக் கூட்டங்களைக் கூட்டுவதற்குரிய காரணங்கள் பொது செயற்பாடுகளில் கூறப்பட்டவையோடு சிறப்பாகக் கிளைக்குழுக்களில் ⅓க்குக் குறையாதவை அல்லது பொதுச்சபைப் பிரதிநிதிகளில் ⅓க்குக் குறையாதவர்கள் எழுந்துமூலம் வேண்டும்போது செயலாளரால் கூட்டப்பட வேண்டும் என்பது அமையும். பொதுச்சபை சம்பந்தமான ஏனைய விடயங்கள் பொதுச் செயற்பாடுகளில் கூறியதைப் போன்றதேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயக்குனர் சபை

சங்கத்துக்கு ஒரு இயக்குனர் சபை இருத்தல் வேண்டும். இச் சபையில் 15 உறுப்பினர்களுக்கு மேல் இருத்தலாகாது. இவர்களில் 5 பேரைத் தெரிவு செய்வதற்குப் பொதுச்சபைக்கு உரிமை உண்டு. எஞ்சியவர்களை ஆணையாளர் நியமிப்பர் என ஆரம்பகாலத் துணைவிதிகளில் விதிக்கப்பட்டிருந்தது. இப்போது பொதுச்சபையால் தெரிவு செய்யப்பட்ட ஏழு இயக்குனர்களைக் கொண்ட சபை இருக்குமென உபவிதி திருத்தப்பட்டுள்ளது. ஏனைய விடயங்கள் பொதுச் செயற்பாடுகளில் நிருவாகசபைக்குக் கூறப்பட்டவை இச்சங்க இயக்குனர் சபைக்கும் பொருந்தும்.

## கிராமிய வங்கி

உறுப்பினர்களின் வங்கித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மக்கள் வங்கியின் உதவியுடன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் வங்கிகளே கிராமிய வங்கிகளாகும். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு கிராமிய வங்கியைச் செயற்படுத்த மக்கள் வங்கி பலவகையான உதவிகளைச் செய்கின்றன. அவையாவன:

1. வங்கித் தொழில் பற்றி ஊழியர்களுக்குப் பயிற்சியளித்தல் (நகை அடைவு பிடித்தல், தொழிற்பயிற்சி போன்றவை)
2. கிராமிய வங்கிக்குத் தேவையான தளபாட உபகரணங்களை வழங்கி அதன் பெறுமதிப் பணத்தை தவணை முறையில் மீளப் பெறல்
3. பொதுச்சபை அங்கீகரித்த மேலெல்லைக்கு அமைவாக வங்கித் தொழிலுக்குத் தேவையான நிதி வசதிகளைக் காலத்துக்குக் காலம் வழங்கல்
4. தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கல்
5. கணக்கு வைத்தல் முறைபற்றி வழிகாட்டல்
6. உறுப்பினர் பெறும் கடன்கள் உரிய தேவைகளுக்குப் பயன்படுத்தப் படுகின்றதா என்பதை மேற்பார்வை செய்தல்
7. கிராமிய வங்கியிலுள்ள மேலதிக நிதிகளை வைப்புகளாகப் பெற்று உரிய வட்டி வழங்கல்
8. வேண்டிய வேறு ஆலோசனைகளை வழங்கல்
9. தொழில் முறைகளையும், கணக்கு முறைகளையும் காலத்துக்குக் காலம் பரிசோதனை செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உறுப்பினர்களுக்கு அளிக்கும் சேவைகள்

1. உறுப்பினர்களிடம் சேமிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி அவர்களிடமிருந்து வைப்புக்களைப் பெற்று அதற்கு நியாயமான வட்டி வழங்கல்

2. உறுப்பினர்களின் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்தல்

### வைப்புகளைப் பெறல்

கிராமிய வங்கி உறுப்பினர்களிடமிருந்தும் உறுப்பினர்களல்லாதவர்களிடமிருந்தும் வைப்புக்களைப் பெறலாம். இவ் வைப்புக்கள் வைக்கப்படும் முறையைக் கொண்டு நான்கு வகையாகப் பிரிக்கலாம். அவையாவன:

1. சேமிப்பு வைப்பு
2. நிலையான வைப்பு
3. முதலீட்டுச் சேமிப்பு வைப்பு
4. கூட்டுறுப்பினர் சேமிப்புக் கணக்கு

### கடன் வழங்கல்

கிராமிய வங்கிகளின் நோக்கம் ஏனைய வணிக வங்கிகளின் நோக்கத்தில் இருந்து வேறுபட்டது. வைப்புக்களைப் பெற்றுக் கடன்களை வழங்குவதன் மூலம் இலாபம் திரட்டும் வணிக வங்கிகளைப் போலல்லாது உறுப்பினர்களின் பொருளாதார மேம்பாட்டுக்கும் வருமான உயர்வுக்கும் தேவையான கடன்களை வழங்குவதே கிராமிய வங்கிகளின் முக்கிய நோக்கமாகும். இந்நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டே சேமிப்புக்களை ஊக்குவித்து வைப்புகளைத் திரட்டுகின்றது. கடன் திட்டம் உற்பத்திக்கும் வியாபாரத்திற்கும் ஏனைய தொழில் முயற்சிகளுக்கும் இடவசதி ஏற்படுத்தல் போன்றவற்றிற்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அத்துடன் உறுப்பினரின் அபிவிருத்தித் திட்டங்களை ஆராய்ந்து நிதி உபயோகத் தன்மையை மேற்பார்வையும் செய்கிறது.

### கடன் வகைகள்

1. விவசாயக் கடன்
2. அடைவுக் கடன்
3. வைப்புக்கு எதிரான கடன்
4. விரிவாக்கக் கடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. விவசாயக் கடன்

அரசாங்கக் கொள்கை, திட்டம், உத்தரவாதம் என்பவற்றுக் கமைய மக்கள் வங்கியிடமிருந்து பெறப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கும் குறுங்காலக் கடன்களாகும்.

### கடன் தொகையை நிர்ணயிக்கும் காரணிகள்

1. பயிர் வகை
2. பயிர் செய்யும் இடப்பரப்பு
3. பங்குகளின் தொகை
4. உறுப்பினர்களுக்கு அனுமதிக்கப்பட்ட உச்சக் கடனெல்லை

அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட பயிர்ச் செய்கைகளுக்கே இக்கடன் வழங்கப்படுகின்றது. நெல், வெங்காயம், மிளகாய், உருளைக் கிழங்கு போன்ற பயிர்ச்செய்கைகளாகும். குறிப்பிட்ட சில பயிர் வகைகளுக்கு ஆறுமாதக் கடன்களும் சிலவற்றுக்கு ஒன்பது மாதத் தவணைக் கடனும் வழங்கப்படுகிறது. தவணைக் காலத்துக் குள் பணஞ்செலுத்தப்படின் 9 வீத வட்டியும், தவணை தப்பின் 12 வீத வட்டியும் அறவிடப்படும், இரு உறுப்பினரின் பிணையுடன் கடன் வழங்கப்படுகிறது. தவணைமுறையிலும் வட்டி, பகுதிப் பணம் செலுத்த வசதியுண்டு.

## 2. அடைவுக் கடன்

உறுப்பினர்களுக்கும் உறுப்பினரல்லாதவர்களுக்கும் இக்கடன் வழங்கப்படுகின்றது. நகைகளைப் பிணையாகப் பெற்று இக்கடன் வழங்கப்படுகிறது ஒருவருடகாலத் தவணைக் கடனுகும். வட்டி மாதக் கணக்கிலன்றி நாட்கணக்கில் கணக்கிடப் படுகின்றது. உறுப்பினர்களுக்கு விவசாயத் தேவைகளுக்குக் கடன் வழங்கும் போது நகைகளின் பெறுமதிக்கு அளிக்கப்படுங் கடன்தொகை அதிகரிக்கப்படும்.

## 3. வைப்புக்கு எதிரான கடன்

முதலீட்டுச் சேமிப்பு வைப்பு, நிலையான சேமிப்புக் கணக்குள்ளவர்கள் அக்கணக்குக்கு எதிராகக் கடன் பெற வசதி செய்யப்பட்டுள்ளது. பெறுங் கடனையுந் தவணை மூலம் செலுத்த வசதி செய்யப் பட்டுள்ளது.

### விரிவாக்கக் கடன்

பல்வேறு தேவைகளுக்கு வழங்கப்படும் கடன் திட்டமே விரிவாக்கக் கடன் திட்டமாகும். இத் திட்டத்தினடிப்படையில் நீண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலக்கடன்கள், இடைக்காலங்கள், குறுங்காலக்கடன்கள், வழங்கப் படுகின்றன. கடன்களின் தன்மைக்கேற்ப சொத்துப்பிணை, ஆள் பிணை என்பவற்றின் அடிப்படையில் கடன்வழங்கப்படும்.

| கடன் நோக்கம் | பெறக்கூடிய உச்சத்தொகை | தவணைக் காலம் |
|---|---|---|
| 1. உற்பத்தி | 5000 ரூபா | 5 வருடம் |
| 2. கட்டடம் (திருத்தம், விஸ்தரிப்பு) | 5000 ,, | 5 ,, |
| 3. சிறு வியாபாரத் தொழில் முயற்சி | 5000 ,, | 5 ,, |
| 4. பாற்பண்ணை | 5000 ,, | 5 ,, |
| 5. கடன் மீளல் (அடைவு - ஈடு) | 5000 ,, | 5 ,, |
| 6. கோழிப் பண்ணை | 3000 ,, | 3 ,, |
| 7. மின்னிணைப்பு | 1000 ,, | 1 ,, |
| 8. நுகர்ச்சிக் கடன் | 1000 ,, | 1 ,, |
| 9. கைமாற்றுக் கடன் | 500 ,, | 1 ,, |
| 10. அவசரகாலக் கடன் | 200 ,, | 1 ,, |

கைத்தொழில் உற்பத்திக்கும். கட்டட விஸ்தரிப்புக்கும் 7500 ரூபா வரை உயர்த்தப்படலாம்.

இக் கடன் தொகைகளும் தவணைக் கால எல்லையும் மக்கள் வங்கியின் ஆலோசனைக்கிணங்க காலத்துக்குக் காலம் மாற்றப்படலாம்.

**கடன் மனுச் செய்யும் போது உறுப்பினர்களுக்கு இருக்க வேண்டிய ஏனைய தகமைகள்:**

1. கிராமிய வங்கியில் சேமிப்புக் கணக்குடையவராக இருத்தல்
2. கடன் மனுச் செய்யும் உறுப்பினர், அவரின் பிணைகாரர் ஆகியோரின் பொருளாதாரக் கூற்றுக்கள் (படிவம் 1126) கிளைக் குழுவால் பரிசீலனை செய்யப்பட்டுச் சங்கத்தில் இருத்தல் வேண்டும்.
3. கடன் மனுச் செய்யும் உறுப்பினர், அவரின் பிணைகாரர் ஆகியோருக்கு வழங்கக்கூடிய தனிக்கடனெல்லை (உச்சக் கடன் எல்லை) படிவம் (1) கிளைக்குழுவால் சிபாரிசு செய்யப்பட்டுச் சங்கத்தில் இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொருளாதாரக் கூற்று

இக்கூற்றில் உறுப்பினரின் பொருளாதார வரலாறு அடங்கியிருக்கும். உறுப்பினரின் முக்கிய தொழில், உபதொழில், அவற்றின் மூலம் கிடைக்கும் வருமானங்கள், குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை, அவர்களின் தொழில்கள், வருமானங்கள், சொத்துக்கள் – அவற்றின் மூலம் கிடைக்கும் வருமானங்கள், குடும்பத்தின் மொத்தச் செலவுகளின் பாகுபாடு, தேறிய வருமானம், கடன்கள் போன்ற விபரங்கள் இப்படிவத்தில் இருக்கும். மேற் கூறப்பட்டவற்றில் மாற்றங்கள் ஏற்படும்போது புதிதாகப் பொருளாதாரக் கூற்று ஒன்றைச் சங்கத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டியது உறுப்பினரின் கடமையாகும்.

### உறுப்பினர் தனிக் கடனெல்லை

கடன் பெற விரும்பும் உறுப்பினர் தாம் பெறவிரும்பும் சகல கடன்களதும் உச்ச அளவைக் கோரி தனிக்கடன் எல்லை விண்ணப்பப் படிவத்தில் (படிவம் 1) சங்கத்திற்கு விண்ணப்பித்தல் வேண்டும். அவர் உறுப்புரிமை வகிக்கும் கிளைக்குழு அவரின் விண்ணப்பத்தையும், அவிரால் சமர்ப்பிக்கப்பட்ட பொருளாதாரக் கூற்றையும், அவரின் நடத்தைகளையும், அவரின் பொருளாதார இயலுந் திறனையும் கருத்திற்கொண்டு அவர் விண்ணப்பித்த தனிக்கடனெல்லையை அல்லது அதற்குக் குறைவான தொகையை தனிக்கடனெல்லையாகச் சிபாரிசு செய்யும். இதுவே அவ்வுறுப்பினரின் அங்கீகரிக்கப்பட்ட தனிக்கடனெல்லையாகும். இத்தொகைக்கு மேற்பட்ட தொகையை அவ்வுறுப்பினர் சங்கத்திலிருந்து கடனாகப் பெறமுடியாது.

### கடன் பிணை

உறுப்பினர் இருவரின் பிணையைக் கொண்டு அல்லது சொத்துப் பிணையைக் கொண்டு கிராமிய வங்கி கடன் வழங்கும். உறுப்பினர் இருவரின் பிணையைக் கொண்டு கூடுதலாக எடுக்கக் கூடிய கடன் தொகை 1000 ரூபாவுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் அவரின் பங்குப் பணத்தின் பத்து மடங்குக்கு மேற்படலாகாது, 1000 ரூபாவுக்கு மேற்பட்ட கடன்கள் யாவும் சொத்துப் பிணையின் மீதே வழங்கப்படல் வேண்டும். சொத்தின் பெறுமதி வழங்கப்படும் கடனிலும் இருமடங்குக்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.

### கடன் வழங்கல்

பொருளாதாரக் கூற்று, தனிக்கடனெல்லைப் படிவங்கள் கொடுக்கப்பட்ட உறுப்பினர் கடனுக்கு விண்ணப்பித்தால், அக்கடன் விண்ணப்பத்தையும், தொழில் முயற்சிக்குரிய கடனாயின் தொழில் முயற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித் திட்டத்தையும் ஆராய்ந்து கிளைக்குழு சிபாரிசு செய்ய இயக்குனர் சபை அங்கீகரித்த பின், கடன் உடன்படிக்கை, பிணை உடன்படிக்கை என்பவற்றை நிறைவேற்றிக் கடன் வழங்கப்படும். கடன் பொருள்களாக வழங்கச் சங்கம் போதிய முயற்சி எடுக்கும். அத்துடன் திட்டத்தை பகுதி பகுதியாக நிறைவேற்றும் பொருட்டுப் பகுதி பகுதியாகக் கடன் வழங்கப்படும். நீண்ட காலக் கடன்கள், இடைக்காலக் கடன்கள் என்பவற்றை தவணை முறையில் அறவிடுவதற்கு ஒழுங்கு செய்யும். கடன் குறித்த நோக்கத்துக்குப் பயன்படுத்தப்படுகின்றதா என்பதை மக்கள் வங்கிப் பிரதிநிதியும், சங்கமும் மேற்பார்வை செய்யும். குறித்த நோக்கத்திற்குப் பயன்படுத்தாதுவிடின் உடன் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும்.

விரிவாக்கப்பட்ட திட்டங்கள் பலவற்றின் நோக்கம் வெளிப்படையாகவே தெரிகின்றன. இரு கடன்களின் நோக்கம் பற்றியே சிறிது விளக்க வேண்டியுள்ளது. அவையாவன:

1. கைமாற்றுக் கடன்
2. அவசரகாலக் கடன்கள்

### கைமாற்றுக் கடன்

கிராமப்புறங்களில் சிறுவருமானம் பெறுந்தொழிலை நடத்துபவர்கள் அதிக வட்டிக்குப் பணம் பெற்று நடாத்துவதால் பொருளாதார நிலையில் உயர முடியாதவர்களாக இருந்தார்கள். சிறிய அளவிலான கமத்தொழில், சிறுகைத்தொழில், சிறு வியாபாரம் செய்யும் ஏழை மக்கள் தங்களது தொழில்களை இலாபகரமான முறையில் செய்வதற்கு வேண்டிய முதலைச் சுலபமாகவும் விரைவாகவும் இலகுவான வட்டி வீதத்துடனும் பெறுவதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமே கைமாற்றுக் கடனாகும், கிராமிய வங்கியின் ஏனைய கடன் நிபந்தனைகள் இதற்கும் பொருந்தும். இரு உறுப்பினர் பிணையுடன் இக் கடனைப் பெறலாம். ஆகக் கூடிய கடன் தொகை 500 ரூபா. கடன் ஒப்பந்தத்தில் நாளாந்தம் வாராந்தம், மாதாந்தம், மூன்று மாதம், ஆறுமாதம் அல்லது ஒரு வருடத் தவணையில் திருப்பிச் செலுத்துவதாகக் குறிக்கப்படல் வேண்டும். தவணைக்கு முதலையும் வட்டியையும் திருப்பிச் செலுத்தியபின் மீண்டும் தொழில் முயற்சிக்காக இக் கடனைப் பெறலாம்.

### அவசரகாலக் கடன்கள்

கிராமிய வங்கியில் சேமிப்புக் கணக்குள்ளவர்கள் மிகுந்த அவசரத் தேவையின் பொருட்டு இக்கடனைப் பெறுவதற்காக இத்திட்டம் உருவாக்கப்பட்டது. கடும் நோய், மரணவீடு போன்ற உட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னடித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆகக் கூடிய கடன் தொகை 200 ரூபா. இக்கடனைப் பெறுவதற்கு கிராமிய வங்கிக்குச் செல்லாது தமது கிளையிலேயே பெறுவதற்குரிய ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

**வணிக வங்கியிலிருந்து மக்களுக்குச் சேவையளிப்பதில் கிராமிய வங்கிகளுக்குள்ள சிறப்பம்சங்கள்**

1. மக்களுக்கு அண்மையில் இருத்தல்
2. மக்களுக்கு வசதியான வேலைநேரங்களை அமைத்தல்
3. கணக்கை ஆரம்பிக்கும் நடைமுறைகள் இலகுவாக இருத்தல்
4. பணத்தை மீட்பதில் சிரமங்கள் குறைவு
5. உறுப்பினர்களின் கொடுக்கல் வாங்கல்களுக்கு முத்திரை வரி விலக்கு
6. தமது கிளைகளூடாக சேமிப்பு வைப்புக்களைச் செலுத்துவதற்கு வசதி
7. உடன் தேவைகளுக்குக் குறிக்கப்பட்ட சிறு தொகையைத் தமது சேமிப்பில் இருந்து எடுப்பதற்குக் கிராமிய வங்கிக்குச் செல்லாது தமது கிளைகளிலேயே மீட்பதற்குரிய வசதி

மக்கள் வங்கி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஆரம்பிக்கப்பட்ட திட்டம் ஓரளவுக்கு வளர்ச்சி அடைந்துள்ளதென்றே கூறவேண்டும். வளர்ச்சிப் போக்கைப் பின்வரும் அட்டவணை காட்டும்.

| வருடம் | கிராமிய வங்கிகள் | விசேட கிளைகள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1964 | 3 | — | 3 |
| 1965 | 8 | — | 8 |
| 1966 | 13 | — | 13 |
| 1967 | 27 | — | 27 |
| 1968 | 44 | — | 44 |
| 1969 | 68 | — | 68 |
| 1970 | 70 | — | 70 |
| 1971 | 111 | — | 111 |
| 1972 | 242 | — | 242 |
| 1973 | 341 | — | 341 |
| 1974 | 332 | 71 | 403 |
| 1975 | 338 | 109 | 447 |
| 1976 | 345 | 156 | 503 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இராமிய வங்கிகளின் கடன்சேவை வளர்ச்சித் தகவல்கள்

| ஆண்டு | சாதாரண கடன்கள் | நகை அடைவு கடன் |
|---|---|---|
| 1965 | 9 இலட்சம் ரூபா | 3 இலட்சம் ரூபா |
| 1971 | 71 ,, ,, | 22 ,, ,, |
| 1973 | 161 ,, ,, | 227 ,, ,, |
| 1975 | 373 ,, ,, | 498 ,, ,, |
| 1977 | 550 ,, ,, | 558 ,, ,, |

### 2. கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

சிறு சங்கங்களாக இருந்த கடற்றொழிலாளர் சங்கங்கள் புனரமைப்பின்போது பேரளவுச் சங்கங்களாக மாற்றியமைக்கப் பட்டன.

#### நோக்கங்கள்

1. கூட்டுறவுக் கொள்கைகளுக்கமைய தனது உறுப்பினர்களின் பொருளாதார, சமூக, கலாச்சார நலன்களை முன்னேற்றல்
2. தமது உறுப்பினர்களின் மத்தியில் சிக்கனம், பரஸ்பர உதவி, சுய உதவி போன்றவற்றுக்கான உற்சாகத்தையும் பழக்கத்தையும் ஊக்குவித்தல்

#### நோக்கங்களை அடையச் சங்கங்களுக்குரிய அதிகாரங்கள்

1. மீன்பிடிக் கருவிகள், மீன்பிடிச் சாதனங்கள், மீன்பிடி உபகரணங்கள், உள்ளிணை, வெளியிணை, கடலக இயந்திரங்கள், இவற்றின் உதிரிப்பாகங்கள், மீன்பிடிக் கலங்கள் ஆகியவற்றைச் சங்கத்தின் பாவனைக்காகக் கொள்முதல் செய்தல் அல்லது வாடகைக்குப் பெறல்
2. மேற்கூறப்பட்டவற்றை உறுப்பினர்களுக்கு விற்றல், அல்லது வாடகைக்கு விடல்
3. மேற்குறிப்பிட்ட பொருள்களைச் சங்கத்துக்குச் சொந்தமாக வைத்திருத்தல், இயக்குதல், பராமரித்தல்
4. ஆணையாளரின் அங்கீகாரத்தோடு சங்கத்துக்குத் தேவைப்படும் சொத்துக்களைக் கொள்வனவு மூலமோ வேறு வகையிலோ பெறல்
5. உறுப்பினர்களதும் சங்கத்தினதும் மீன், பதனிடப்பட்ட மீன், மீனிலிருந்து பெறப்படும் பொருள்கள் மற்றும் நீர்வாழ் பொருள்கள் ஆகியவற்றைச் சேர்த்தல், தரப்படுத்தல், பதனிடல், ஒன்றாக்கல், ஏற்றி இறக்கல், விற்றல், ஏற்றுமதி செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சங்கத்திடம் விற்பனைக்காக உறுப்பினர்களால் ஒப்படைக்கப்பட்ட மேற்கூறப்பட்ட பொருள்களைப் பிணைவைத்து முற்பணம் (கடன்) வழங்கல்

7. மீன்பிடிக் கலங்கள், மீன்பிடி சாதனங்கள், மீன்பிடி உபகரணங்கள், வெளியிணைக் கடலக இயந்திரங்கள், அவற்றின் உதிரிப் பாகங்கள், வெளியிணை இயந்திரங்களால் இயக்கப்படும் தெப்பம், வள்ளம், ஓரஸ், தும்புக்கண்ணடி வள்ளம் போன்றவற்றைக் கொள்வனவு செய்வதற்கும் பழுது பார்ப்பதற்கும் உறுப்பினர்களுக்குக் கடன் வழங்கல்

8. மீன்பிடிக் கலங்களை அமைப்பதனைப் பொறுப்பேற்றல், மீன்பிடிக் கலங்கள், உள்ளிணை. வெளியிணை இயந்திரங்கள் ஆகியவற்றைப் பழுதுபார்த்தல்

9. மீன்பிடிக்கும் சிறந்த முறைகளை உறுப்பினர்களுக்குக் கற்பித்தலும் நிபுணத்துவ அறிவுரை வழங்கலும்

10. உறுப்பினர்கள் ஊழியர்களது நன்மைக்காக ஆணையாளரின் அனுமதியுடன் நிதிகளை உண்டாக்குதலும் செயற்படுத்தலும்

11. மீன் பிடித்தலுக்காக இடம் பெயர்தலை மேற்கொள்ளலும் மேற்கொள்ளும் உறுப்பினர்களுக்கு உதவுதலும்

12. உறுப்பினர்களுக்கு வீட்டு வசதி, சுகாதார வசதி போன்றவற்றை ஏற்படுத்தல்

13. ஆணையாளரின் முன்னனுமதியுடன் இந்நோக்கங்களை அடைவதற்கு வேண்டிய எல்லா முயற்சிகளையும் தொழில்களையும் மேற்கொள்ளுதல்

**அமைப்பு**

இதுவும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பைப் போன்றது. கிளைப் பொதுச்சபை, கிளைக்குழு, சங்கப் பொதுச்சபை, இயக்குனர் சபை என்ற படிமுறையான அமைப்பைக் கொண்டது, இவை ஒவ்வொன்றுக்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் கூறப்பட்ட அதிகாரங்கள், பொறுப்புக்கள், கடமைகள் உண்டு.

**அங்கத்துவத் தகமை**

ஏனைய சங்கங்களுக்குப் பொதுவாக விதிக்கப்பட்ட வயது, வதிவிடத் தகமைகளுடன் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டவராயும் நல்லொழுக்கமுள்ளவராயும் இருத்தல் வேண்டும். இறந்த உறுப்பின

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரின் பின்னுரித்தாளர் 18 வயதுக்குக் குறைவாக இருப்பினும் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளலாம். சங்கத் தொழிற் பரப்பினுள் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்புரிமை பெறுவதற்குச் சங்கத் துணைவிதிகள் இடமளித்துள்ளன. மீன், பேணிய மீன், மீன் பிடிச் சாதனங்கள், மீன்பிடிக் கருவிகள், கலங்கள், உதிரிப்பாகங்கள் போன்றவற்றில் வியாபாரஞ் செய்பவர்கள் உறுப்பினராகச் சேர முடியாது. வேறொரு கடற்றொழிலாளர் சங்கத்தில் உறுப்பினராக உள்ளவரும் சேர முடியாது.

## பங்குகள்

ஆரம்பத்தில் ஒரு பங்கின் பெறுமதி 500 ரூபாவாக இருந்தது. இப்பணம் 25 ரூபா வீதம் 20 மாதத் தவணைகளில் செலுத்த வசதி செய்யப்பட்டது. அண்மையில் துணைவிதித் திருத்தத்தின் மூலம் ஒரு பங்கின் பெறுமதி 100 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. உறுப்பினர்களாகச் சேருபவர்கள் ஆகக் குறைந்தது ஒரு பங்கினையாவது கொள்முதல் செய்தல் வேண்டும்.

## அங்கத்தவர் பொறுப்பின் உத்தரவாதம்

சங்கத்தின் கடன்களுக்கு உறுப்பினர் ஒருவரின் பொறுப்பு அவரின் பங்குகளின் ஐந்து மடங்காக வரையறுக்கப்பட்டுள்ளது. ஒரு உறுப்பினர் இச்சங்கத்தில் இருந்து விலகும் திகதியிலுள்ள சங்கக்கடன்களுக்கு அத்தேதியிலிருந்து தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு அவர் பொறுப்பாயிருத்தல் வேண்டும். ஒரு உறுப்பினர் இறந்தால் அத்தேதியிலுள்ள சங்கக் கடன்களுக்கு அவரின் சொத்துக்கள் இரண்டு ஆண்டுகளுக்குப் பொறுப்பாயிருத்தல் வேண்டும்.

## கிளைக்குழு

சங்கத்தின் ஒவ்வொரு கிளையும் தமது உறுப்பினர் பதிவேட்டிலுள்ள உறுப்பினர்களிலிருந்து ஏழு பேர் கொண்ட கிளைக்குழுவொன்றைத் தெரிவு செய்யும். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக்குழுக்களின் அதிகாரங்கள் – பொறுப்புக்கள் – கடமைகள் பொதுவாக இவற்றுக்குமுண்டு. பொதுச்சபைக்குப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்தல் இவற்றின் கடமைகளில் ஒன்று. கிளை உறுப்பினர் பதிவேட்டிலுள்ள ஒவ்வொரு பத்து உறுப்பினருக்கும் ஒரு பொதுச் சபைப் பிரதிநிதி வீதம் தெரிவு செய்யலாம். எந்தக் கிளைக்குழுவும் ஒன்பது பிரதிநிதிகளுக்குமேல் தெரிவு செய்யக்கூடாது.

## இயக்குனர் சபை

ஒன்பது பேருக்கு மேற்படாத இயக்குனர் சபை இருக்கும். இதில் 3 பேர் பொதுச் சபையால் தெரிவு செய்யப்படுவர். 6 அங்கத்தவர்களுக்கு மேற்படாதவர்கள் ஆணையாளரால் நியமிக்கப்படுவர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஆரம்பத்தில் இருந்த துணைவிதி. இப்போது பொதுச் சபையால் தெரிவு செய்யப்படும் உறுப்பினர் தொகை ஐந்தாகத் திருத்தஞ் செய்யப்பட்டுள்ளது. ஏனைய அதிகாரங்கள் - பொறுப்புக்கள் - கடமைகள் என்பன பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குள்ளவை போன்றன.

ஏனைய விடயங்கள் சங்கப் பொதுச் செயற்பாடுகளில் குறிப்பிட்டனவும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் குறிப்பிட்டனவும் இதற்குப் பொருந்தும்.

## 3. புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

சிறு சங்கங்களாக இருந்த நெசவுக் கூட்டுறவுச் சங்கங்கள் புனரமைப்பின்போது பேரளவு சங்கங்களாக மாற்றியமைக்கப்பட்டன. முன்பு இருந்த சிறு சங்கங்கள் பெரிய சங்கத்தின் கிளைகளாக மாற்றியமைக்கப்பட்டன. யாழ்ப்பாண மாவட்டம் முழுவதற்கும் ஒரு சங்கமே அமைக்கப்பட்டது

கூட்டுறவுக் கொள்கைகளுக்கமைய உறுப்பினரின் பொருளாதார சமூக கலாச்சாரங்களை மேம்படுத்தலே முக்கிய நோக்கம். உறுப்பினர்களின் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு மூலப் பொருள்களைப் பெற்றுக் கொடுத்தல், உற்பத்திப் பொருள்களைச் சந்தைப் படுத்தல், மின்தறி மூலம் உற்பத்தி செய்தல், நெசவுக்குதவும் ஏனைய தொழில் முயற்சிகளை ஆரம்பித்தல் ஆகிய செயற்பாடுகளில் ஈடுபடும்.

உறுப்புரிமை பொதுத் தகைமைகளுடன் நெசவு தொழிலில் ஈடுபட்டவர்களாயிருத்தல் வேண்டும். நெசவு தொழிலில் ஈடுபட்டவர்கள் 18 வயதுக்குக் குறைந்தவர்களாயினும் துணைவிதி அனுமதிப்பின் சேர்க்கப்படுவர். அப்பகுதியிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் அங்கத்துவம் பெறத் துணைவிதிகள் அனுமதிக்கின்றன. ஒரு பங்கின் விலை 5 ரூபா ஒரு அங்கத்தவர் ஒரு முழுப் பங்கினையாவது கொள்முதல் செய்தல் வேண்டும்.

இயக்குனர் சபை உறுப்பினரில் 5 பேர் பொதுச் சபையால் தெரிவு செய்யப்படுவர். இரண்டுக்கு மேற்படாதவர்களை ஆணையாளர் நியமிப்பர். ஏனைய விடயங்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பொதுச் செயற்பாடுகளில் கூறப்பட்டவை போன்றதேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7: III இரண்டாம் நிலைச் சங்கங்கள் (சமாசங்கள்)

கூட்டுறவுச் சங்கங்களை உறுப்பினராகக் கொண்டதும் அச் சங்கங்களின் தொழில் முயற்சிகளைத் திட்டமிட்டு ஒருமுகப்படுத்தி உதவிகள் அளித்து விருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு அமைக்கப்படும் சங்கங்களே இரண்டாம் நிலைச் சங்கங்களாகும். மறுசீரமைப்பின் பின் இவ்வகைச் சங்கங்களில் பல பேரளவு முதனிலைச் சங்கங்களாக மாற்றியமைக்கப்பட்டன. சில தலைமைச் சங்கங்களுடன் இணைக்கப்பட்டன.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்கள், புடவை நெசவாளர் சமாசங்கள் போன்றவை பேரளவு முதனிலைச் சங்கங்களாக மாற்றியமைக்கப்பட்டன. வடபகுதி விளைபொருள் உற்பத்தி விற்பனைச் சங்கங்களின் சமாசம் இலங்கை நுகர்ச்சியாளர் சமாசத்துடன் (மாக்பெட்) இணைக்கப்பட்டது.

## 1. வடமாகாணக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

நோக்கம்

அங்கத்துவ சங்கங்கள், அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்கள் ஆகியோரின் கடற்றொழில் முயற்சிகளுக்குத் தகுந்த திட்டங்களிட்டு ஒருமுகப்படுத்தி ஆலோசனை வழங்கி விருத்தியுறச் செய்வதாகும். இந்நோக்கங்களை எய்தும் பொருட்டுக் கீழ்க்காணும் செயற்பாடுகளைச் சமாசம் மேற்கொள்ளும் அவையாவன.

1. உறுப்புரிமைச் சங்கங்களுக்கு வேண்டிய மூலவளங்களைத் தேடல், ஒதுக்கீடு செய்தல்.
2. கடற்றொழிலுக்கு வேண்டிய சாதனங்கள், கருவிகள், கலங்கள் போன்றவற்றை விநியோகஞ் செய்தல்.
3. மீன்பிடித்தல் தொழிலுக்கு வேண்டிய விஞ்ஞான தொழில் நுட்ப ஆலோசனையைப் பெற்று உறுப்புரிமைச் சங்கங்களுக்கு வழங்கல்.
4. மீன், பதனிடப்பட்ட மீன் ஏனைய நீர்வாழ் பொருள்கள் ஆகியவற்றைச் சந்தைப்படுத்தும் வசதிகளை செய்து கொடுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. உறுப்புரிமைச் சங்கங்களிடமிருந்து நீர்வாழ் பொருள்களைச் சேர்த்தல், பதனிடல், பண்டகசாலையிடல், போக்குவரத்து வசதி செய்தல், ஆகியவற்றுக்கு உதவல்.

6. கடற்றொழிலில் ஆராய்ச்சி செய்து புதிய முறையில் தொழில் நடாத்துவதற்கு உதவல்.

7. ஊழியர்களுக்குப் பயிற்சியளித்தல்.

8. ஊழியர்களுக்கு சேமலாப நிதித் திட்டங்களை உருவாக்கல்.

9. புதிய சங்கங்களை உருவாக்கல்.

10. அங்கத்துவ சங்கங்களைச் சுதந்திரமான முறையில் பரிசோதனை செய்து முன்னேற்றத்திற்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கல்.

11. நோக்கங்களை எய்துவதற்கு வேண்டிய எல்லாவற்றையும் செய்தல்.

**அங்கத்துவம்:-** வடமாகாணத்திலுள்ள கடற்றொழிலாளர் சங்கங்கள் யாவும் அங்கத்துவம் பெறலாம். தொழிற்பரப்பு வடமாகாணம். பங்கொன்றின் பெறுமதி 500 ரூபா. 100 ரூபா வீதம் தவணை முறையில் செலுத்த வசதியளிக்கப்பட்டுள்ளது.

பொதுச் சபை அங்கத்துவ சங்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்டதாகும். சுமார் 40 சங்கங்கள் உறுப்புரிமை பெற்றுள்ளன. ஒவ்வொரு அங்கத்துவ சங்கமும் தமது 300 உறுப்பினர்களுக்கொரு பொதுச் சபைப் பிரதிநிதி வீதம் அனுப்பலாம். ஆனால் ஒரு சங்கம் அனுப்பக்கூடிய ஆகக் கூடிய பிரதிநிதி மூன்றாகும்.

இயக்குனர் சபைக்குப் பொதுச் சபை 5 பேரைத் தெரிவு செய்யலாம். ஒரு உறுப்புரிமைச் சங்கத்தில் இருந்து ஒரு இயக்குனருக்கு மேல் தெரிவு செய்யக் கூடாது. ஆணையாளர் இரண்டுக்கு மேற்படாத இயக்குனர்களை நியமிக்கலாம். ஏனைய விடயங்கள் சங்கப் பொதுச் செயற்பாடுகளில் குறிக்கப்பட்டவை போன்றதாகும்.

## மேற்கொள்ளும் தொழிற்பாடுகள்

1. உறுப்புரிமைச் சங்கங்களுக்குச் சுழியோடும் சாதனங்கள் விநியோகித்தல்.

2. குங்கிலியம் விநியோகித்தல்.

3. கணக்குப் படிவங்கள் விநியோகித்தல்.

4. மீன்பிடி உபகரணங்கள் விநியோகித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. வலை விநியோகித்தல்.

6. கடலட்டைச் சட்டி விநியோகம்.

7. கடலட்டை ஏற்றுமதிக்கு உறுப்புரிமைச் சங்கங்களுக்கு உதவல்

8. சங்குகள் ஏற்றுவதற்கு உறுப்புரிமைச் சங்கங்களுக்கு உதவல்.

9. இறால், கருவாடு என்பவற்றில் மொத்த வியாபாரஞ் செய்ய உதவல்.

10. மீன்தூள் தொழிற்சாலை நடாத்தல்.

11. ஐஸ் கட்டித் தொழிற்சாலை நடாத்தல். (ஆரம்ப வேலைகள் நடைபெறுகின்றது)

இச் சமாசம் உறுப்புரிமைச் சங்கங்களைக் கொண்டு 1979-ம் ஆண்டில் சுமார் 2064 அந்தர் கடலட்டைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் 29888 சங்குகளை ஏற்றுமதி செய்வதற்கும் ஒழுங்குகள் அமைத்துக் கொடுத்துள்ளன. சங்கு, கடலட்டை ஏற்றுமதித் தொழிலில் தரகுக் கூலியாக 1977-ம் ஆண்டு 95145 ரூபா 96 சதமும் 1978-ம் ஆண்டு 2,86,757 ரூபா 57 சதமும் இச் சமாசம் பெற்றுள்ளது. 1980-ம் ஆண்டு மே மாதமளவில் மீன்தூள் அரைக்குந் தொழிற்சாலையை ஆரம்பித்துள்ளது. ஐஸ் கட்டித் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு வேண்டிய ஆரம்ப முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கின்றது.

## தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

உறுப்புரிமைச் சங்கங்களின் தொழில் முயற்சிகளுக்குத் தகுந்த திட்டங்களை வகுத்து ஒருமுகப்படுத்தி விருத்தியுறுவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்தலாகும். இந்நோக்கங்களை எய்தற் பொருட்டுக் கீழ்க்காணும் செயற்பாடுகளை மேற்கொள்ளும்.

1. பனம் பொருள், தெங்குப் பொருள் உற்பத்தி சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைகளை உறுப்புரிமைச் சங்கங்களுக்கு வழங்கல்

2. பனம் பொருள், தெங்குப் பொருள் உற்பத்தி சம்பந்தமான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்

3. பனம் பொருள், தெங்குப் பொருள் உற்பத்தி சம்பந்தமான பிரச்சாரங்களை மேற்கொள்ளல்

4. உற்பத்தி செய்யப்பட்ட உறுப்புரிமைச் சங்கங்களின் பொருள்களைச் சேர்த்தல், தரப்படுத்தல், பண்டகசாலையிடல், போக்குவரத்து வசதி செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தெங்கு, பனம் பொருள்களின் மூலப் பொருள்களைக் கொண்டு புதிய தொழில்களை ஆரம்பிக்க உறுப்புரிமைச் சங்கங்களைத் தூண்டல்
6. உறுப்புரிமைச் சங்கங்கள் ஒன்று திரட்டிய மூலப் பொருள்களைக் கொண்டு புதிய முயற்சிகளை ஆரம்பித்தல்
7. புதிய சங்கங்களை உருவாக்க முயற்சிகளை எடுத்தல்
8. ஊழியர்களுக்கு வேண்டிய பயிற்சி ஒழுங்குகளை மேற்கொள்ளல்.
9. உறுப்புரிமைச் சங்க அங்கத்தவர்கள் தொழில் முயற்சியிலீடுபடும்போது ஏற்படும் விபத்து நட்டவீட்டுத் திட்டங்களை மேற்கொள்ளல்.
10. ஊழியர் சேமலாபநிதித் திட்டங்களை மேற்கொள்ளல்.
11. சங்க நோக்கங்களை அடைவதற்கு அவசியமான வேறு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளல்.

வடபகுதியிலுள்ள தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனைச் சங்கங்கள் இதில் உறுப்புரிமை பெற முடியும். ஒரு பங்கின்விலை 1000 ரூபா இதை இரு தவணையில் செலுத்த வசதியளிக்கப்பட்டுள்ளது. உறுப்பினர்களின் பொறுப்பு பங்குகளால் வரையறுக்கப்பட்டது.

உறுப்புரிமைச் சங்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்டதே இதன் பொதுச் சபையாகும். உறுப்புரிமைச் சங்கங்கள் ஒவ்வொன்றும் தமது 200 உறுப்பினர்களுக்கு ஒரு பொதுச் சபைப் பிரதிநிதியைத் தெரிவு செய்து அனுப்பலாம். எந்தச் சங்கமும் மூன்று பொதுச் சபைப் பிரதிநிதிகளுக்கு மேல் அனுப்பமுடியாது. பொதுச் சபையால் ஏழு பேர் கொண்ட இயக்குனர் சபை தெரிவு செய்யப்படும். ஒரு உறுப்புரிமைச் சங்கத்திலிருந்து ஒரு இயக்குனருக்கு மேல் தெரிவு செய்யக்கூடாது.

### செயற்பாட்டுத் திட்டங்கள்

1. உறுப்புரிமைச் சங்கங்களுக்கு வேண்டிய கணக்குப் படிவங்கள் விநியோகஞ் செய்தல். (தற்போது நடைமுறையிலுள்ளது)
2. போத்தலில் கள்ளடைக்கும் தொழிற்சாலை ஒன்றை உருவாக்கல்.
3. உறுப்புரிமைச் சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு விபத்து நலச் சேவைத் திட்டமொன்றை உருவாக்கல்.
4. தும்புத் தொழிற்சாலை ஒன்றை உருவாக்கல்.

இரண்டாவது தொடக்கம் நான்காவது வரையுள்ள திட்டங்களைச் செயற்படுத்த வேண்டிய முயற்சிகளைச் சமாசம் மேற்கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7: IV மூன்றும் நிலைச் சங்கங்கள் (தலைமைச் சங்கங்கள்)

இவை அகில இலங்கை ரீதியில் கூட்டுறவுச் சங்கங்களை உறுப்பினர்களாகக் கொண்டு அமைக்கப்பட்ட சங்கங்களாகும். இவை உறுப்புரிமைச் சங்கங்களின் தொழில் முயற்சிகளைத் திட்டமிட்டு ஒழுங்கமைத்து ஒருமுகப்படுத்தி முன்னேற உதவலும், அவற்றுக்கு வேண்டிய உதவிகளையும் சேவைகளையும் ஆற்றுவதோடு உறுப்புரிமைச் சங்கங்கள் பின்பற்றக் கூடிய முறையில் தமது செயற்பாடுகளையும் ஒழுங்கு முறைகளையும் நிருவாகத்தையும் செயற்படுத்துவனவாகவும் இருக்கும். இலங்கையில் இவ்வித தலைமைச் சங்கங்கள் ஐந்து உண்டு. அவையாவன.

1. இலங்கை இறப்பர் கூட்டுறவுத் தலைமைச் சங்கம்
2. இலங்கைக் கைத்தொழில் கூட்டுறவுத் தலைமைச் சங்கம்
3. இலங்கைக் கூட்டுறவுச் சந்தைப்படுத்தல் தலைமைச் சங்கம் (மாக்பெட்)
4. இலங்கைத் தென்னம் பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவுத் தலைமைச் சங்கம்
5. இலங்கைக் கூட்டுறவு மீன் விற்பனவுத் தலைமைச் சங்கம்

## 1. இலங்கை இறப்பர் கூட்டுறவுத் தலைமைச் சங்கம்

நோக்கங்கள்

1. சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்கள் உற்பத்தி செய்யும் இறப்பரைச் சிறந்த தரத்தில் உற்பத்தி செய்ய உதவல்.
2. நவீன முறைகளைக் கையாண்டு சிறந்த ரகத்திலான இறப்பரை வளர்த்தல்.
3. கைத்தொழில்களுக்காக நவீன முறைகளில் இறப்பரை உற்பத்தி செய்வதற்குத் தேவையான ஒழுங்குகளை அளித்தல்.
4. இறப்பரைக் கொண்டு உற்பத்தி செய்யும் தொழில்களை ஆரம்பித்தல்.
5. உற்பத்தி செய்யும் இறப்பருக்கான உச்சப்பயனைக் கூட்டுறவுச் சங்கங்கள் பெற்றுக் கொள்வதற்கு கூட்டுறவுக் கொள்கைகளுக்கேற்ப நடவடிக்கைகளை எடுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. உறுப்புரிமைச் சங்கங்களின் ஆலோசனைகளை வெளிப்படுத்து வதற்கு வாய்ப்பு அளித்தல்.

7. கூட்டுறவுக் கொள்கைகளையும் இயக்கத்தையும் வலுப்படுத்த வேண்டிய கருமங்களை மேற்கொள்ளல்.

இந்நோக்கங்களை எய்தும் பொருட்டுக் கீழ்க்காணும் அதிகாரங் களையுடையதாயிருக்கும். அவையாவன:

1. சிக்கனச் சேமிப்பு பற்றிய செயற்றிட்டமொன்றை ஆக்கிக் கொள்ளல்.

2. இறப்பர் உற்பத்திக்கு அல்லது கைத்தொழிலுக்குத் தேவை யான பொருள்களை உறுப்புரிமைச் சங்கங்களுக்கு வழங்கல்.

3. நிதிகளை ஏற்படுத்தி உறுப்புரிமைச் சங்கங்களுக்கு வேண்டிய முற்பணங்களை வழங்கல்.

4. ஒவ்வொரு உறுப்புரிமைச் சங்கமும் உற்பத்தி செய்யும் இறப்பர் பொருள்களை ஒன்று சேர்த்தல், பண்டகசாலையிடல், தரப்படுத்தல், கட்டுதல், போக்குவரத்து வசதி செய்தல். இந்நாட்டில் சந்தைப்படுத்தல், ஏற்றுமதி செய்தல், இதனு டன் தொடர்புள்ள ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

5. மேற்படி செயல்களில் நவீன விஞ்ஞான முறைகளை உறுப் புரிமைச் சங்கங்கள் பின்பற்றுவதற்கு வாய்ப்பளித்தல்.

6. இந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான காணி கட்டடங்கள், இயந்திரங்கள் போன்றவற்றை ஆணையாள ரின் முன்னனுமதியுடன் காலத்துக்குக் காலம் கொள்வனவு செய்தல் அல்லது வேறு வகையில் உடமையாக்கல் விற்பனை செய்தல்.

7. ஊழியர்களைப் பயிற்றுவித்தல். அவர்களுக்கு சேமலாப நிதித் திட்டங்களை ஏற்படுத்தல்.

8. உறுப்புரிமைச் சங்கங்கள் தொடர்பான பரிசோதனையை மேற்கொள்வதற்காக ஒரு அமைப்பை ஏற்படுத்தல்.

9. நிபுணர்களின் ஆலோசனைகள் சிபார்சுகளைச் சங்கத்திற்குப் பெறல், உறுப்புரிமைச் சங்கங்களுக்கு வழங்கல்.

10. நவீன விஞ்ஞான முறைகளைக் கையாள்வதற்கும் உயர்ரக இறப்பரை பயிரிட்டு வளர்ப்பதற்கும் உறுப்புரிமைச் சங்கங் களுக்கு உதவல்.

11. உறுப்புரிமைச் சங்கங்களுக்கு வேண்டிய கடன்களை வழங்கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. இறப்பரை வளர்ப்பதற்காக உறுப்புரிமைச் சங்கங்களுக்குக் காணிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

13 உயர் ரக இறப்பரை உற்பத்தி செய்வதற்கான தொழிற் சாலைகளை அமைத்தலும் உறுப்புரிமைச் சங்கங்கள் அமைக்க உதவலும்.

14. இறப்பர் உற்பத்தியிலும் தொழில் முறைகளிலும் வேண்டிய பரிசோதனைகளை மேற்கொள்ளல்.

**உறுப்புரிமை**

இறப்பர் உற்பத்தி செய்பவர்கள் கூட்டுறவுச் சங்கங்களும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் உறுப்புரிமை பெறலாம். ஆணையாளரால் பெயர் குறித்து இயக்குனராக நியமிக்கப்படுபவர் நியமன காலம் வரைக்கும் உறுப்பினராகக் கருதப்படுவர். இவர் பொதுச் சபைக் கூட்டங்களில் கலந்து கொள்ளவும், கருத்துக் தெரிவிக்கவும் வாக்களிக்கவும் உரிமையுடையவர். இவ்வாறு நியமனம் பெறுவர் அரசாங்க அதிகாரியாயின் வாக்களிக்கும் உரிமையில்லை.

ஒரு பங்கின் பெறுமதி 200 ரூபாவாகும். உறுப்புரிமை கோரி விண்ணப்பிக்கும் சங்கம் தமது விண்ணப்பத்துடன் ஒரு பங்கின் பெறுமதி 200 ரூபாவும் பிரவேசப்பணம் 10 ரூபாவும் அனுப்புதல் வேண்டும். உறுப்புரிமைச் சங்கமொன்று குறைந்தது 5 பங்குகளையாவது கொள்முதல் செய்தல்வேண்டும். இப்பங்குகளை தவணை முறையில் கொள்வனவு செய்யலாம்.

அங்கத்துவ விண்ணப்பங்களை இயக்குனர் சபை அடுத்துவரும் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும். பொதுச் சபை விண்ணப்பங்களை ஏற்று உறுப்புரிமை வழங்கலாம். அல்லது நிராகரிக்கலாம். விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படின் பங்குப்பணம் திருப்பி வழங்கப்படும்.

பொறுப்பின் எல்லை உறுப்புரிமைச் சங்கங்கள் பெற்ற பங்கின் பெறுமதியின் ஐந்து மடங்குக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. உறுப்புரிமையிலிருந்து விலகிய திகதியிலுள்ள சங்கக் கடன்களுக்குத் தொடர்ந்துவரும் ஈராண்டுகளுக்கு விலகும் சங்கம் பொறுப்புடையதாக இருக்கும்.

சங்கத்தின் தொழிற்பரப்பு இலங்கை முழுவதையும் அடக்கியதாக இருக்கும். உறுப்புரிமை பின்வருங்காரணங்களால் முடிவுறும். அவையாவன:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. உறுப்புரிமைச் சங்கத்தின் பதிவழிக்கப்படல்
2. சங்கப் பொதுச்சபையால் நீக்கப்படல்
3. குறைந்தபட்சம் ஒருபங்கேனும் உரிமையில்லாது போதல்
4. சங்கத்துக்கு உறுப்புரிமைச் சங்கம் கடன் கொடுக்குமதியில்லையாயின் மூன்றுமாத அறிவித்தல் எழுத்து மூலம் கொடுத்து விலகல்.

இயக்குனர் சபை

சங்கக் கருமங்களை நடாத்துவதற்காக ஒன்பது உறுப்பினர்களுக்கு மேற்படாத ஒரு இயக்குனர் சபை இருத்தல் வேண்டும். பொதுச் சபையால் இயக்குனர் சபையைத் தெரிவு செய்கையில் மூன்று பேருக்குக் குறையாதவர்களை இறப்பர் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளிலிருந்து தெரிவு செய்யப்படல் வேண்டும். மூன்று பேருக்கு மேற்படாதவர்களை ஆணையாளர் நியமனஞ் செய்யலாம்.

பொதுச் சபையால் தெரிவு செய்யப்பட்ட இயக்குனர்கள் அடுத்த பொதுக் கூட்டத் தேதி வரை கடமையாற்றுவர். அடுத்த பொதுக் கூட்டத்தில் இவர்களின் பதவி முடிவுறும். பொதுச் சபையில் புதியவர்களையோ அல்லது பதவி முடிவுற்றவர்களையோ தெரிவு செய்யலாம். ஆயினும் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் ஓராண்டு காலத்திற்காவது மீண்டும் தெரிவு செய்யப்படலாகாது. ஆணையாளரால் நியமிக்கப்பட்டவர்கள் அவரின் நியமன காலம் முடியும் வரைக்கும் கடமையாற்றுவர். இயக்குனர் சபை தமக்குள்ளிருந்து தலைவர், உபதலைவர், காரியதரிசி என்பவர்களைத் தெரிவு செய்யும். ஆயினும் ஆணையாளர் விரும்பின் இயக்குனர் சபைக்குள்ளிருந்து இப்பதவிகளுக்கு ஆட்களை நியமிக்கலாம். ஏனையவை பொதுச் செயற்பாடுகளிலும் ஏனைய சங்கங்களிலும் குறிக்கப்பட்டதைப் போன்றதேயாகும்.

பொதுவிபரங்கள் சில

இத் தலைமைச் சங்கத்தில் 63 சங்கங்கள் உறுப்புரிமை பெற்றுள்ளன. இதன் பங்கு மூலதனம் 2-7-79-ம் தேதியன்றுள்ளபடி 1,84,702 ரூபா 53 சதமாகும். ஒதுக்கங்கள் 4,67,516 ரூபா 71 சதமாகும். இச் சங்கத்தின் நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு நீக்கிய பெறுமதி 3,63,881 ரூபா 33 சதமாகும். 78—79-ம் ஆண்டுக்குரிய தேறிய இலாபம் 18,164 ரூபா 44 சதமாகும். இச்சங்கம் 1957-ல் பதிவு பெற்றதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. இலங்கைக் கைத்தொழில் தலைமைக் கூட்டுறவுச் சங்கம்

கைத்தொழில் விருத்தியின் பொருட்டு 1974-ம் ஆண்டளவில் இச் சங்கம் பதியப்பட்டது. 1960-ம் ஆண்டளவில் பதிவு பெற்ற இலங்கைக் கைத்தொழில் யூனியனின் மறுசீரமைப்பே இச் சங்கமாகும். இச் சங்கம் பழைய கைத்தொழில் யூனியன் நடாத்தி வந்த மஹரகமவிலுள்ள நாவின்ன தொழிற்சாலை (இறப்பர் தும்புத் தொழிற்சாலை) உதுகொடவிலுள்ள இறப்பர் பால் தொழிற்சாலை, மாதம்பையிலுள்ள தும்பு பதனிடும் தொழிற்சாலை ஆகிய மூன்று தொழிற்சாலைகளையும் பொறுப்பேற்றது.

### நோக்கங்கள்

1. கூட்டுறவுக் கொள்கைகளுக்கமையவும், தேசிய அபிவிருத்தித் திட்டத்துக்கமையவும் இலங்கையில் கூட்டுறவுக் கைத் தொழிற்சாலைகளை அமைத்து வளர்ச்சியுறச் செய்தல்.
2. கூட்டுறவுக் கைத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியின் பொருட்டு அங்கத்துவ, கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சட்ட, தொழில்நுட்ப, முகாமைத்துவ, மற்றும் தேவைப்படுந்துறைகளில் ஆலோசனை வழங்கல்.
3. உறுப்புரிமைச் சங்கங்களுக்கிடையில் இணைப்பை ஏற்படுத்தி அவற்றின் வளர்ச்சிக்கு வசதிகளைச் செய்து கொடுத்தல்.
4. இலங்கையில் கூட்டுறவுக் கைத்தொழிற்சாலைகள் சம்பந்தமாகவும், சார்பாகவும் அபிப்பிராயங்களை வெளியிடல்.
5. கூட்டுறவுக் கைத்தொழிற்சாலைகளின் பொருட்டு செயற்படும் உள்நாட்டு வெளிநாட்டு, நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளல்.

இந்நோக்கங்களை அடையும் பொருட்டு பின்வரும் அதிகாரங்களைக் கொண்டதாக இருக்கும். அவையாவன:

1. மேற்குறிப்பிட்ட நோக்கங்களை அடையும் பொருட்டு சங்கம் சுயேச்சையாக அல்லது உறுப்புரிமைச் சங்கங்களுடன் இணைந்து தொழிற்சாலைகளை நிறுவ முடியுமோ என்றும், அல்லது இயங்கிக் கொண்டிருக்கும் கைத்தொழிற்சாலைகளை விஞ்ஞான ஆய்வுகளின் மூலம் அல்லது பரீட்சார்த்தத் திட்டங்களின் மூலம் அல்லது பெருப்பித்தல் மூலம் விஸ்தரிக்க முடியுமோ என்றும் தீர்மானித்தல்.
2. புதிய கைத்தொழில் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு அல்லது இயங்கிக் கொண்டிருக்கும் நிறுவனங்களை விஸ்தரிப்பதற்குத் தேவையான நிதியைப் பெறல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தொழிற்சாலைகள் அமைப்பதற்குத் தேவையான நிலம், கட்டிடத்தைக் கொள்வனவு செய்தல். குத்தகைக்குப் பெறல், சேவையாளரை நியமித்தல், இயந்திர சாதனங்களைக் கொள்முதல் செய்தல், வாடகைக்குப் பெறல், இறக்குமதி செய்தல்.

4. உறுப்புரிமைச் சங்கங்களின் கைத்தொழிற்பாட்டு முயற்சிகள் உச்சப்பயனைப் பெறத்தக்க முறையில் உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கல்.

5. தனது உற்பத்திப் பொருள்களையும் உறுப்புரிமைச் சங்கங்களின் உற்பத்திப் பொருள்களையும் சந்தைப்படுத்தல், விளம்பரப் படுத்தல், பண்டகசாலையிடல் விநியோக வழிகளை மேற்கொள்ளல்.

6. உறுப்புரிமைச் சங்கங்களுக்குத் தொழில் நுட்ப ஆலோசனை வழங்கல். முகாமையாளர்களுக்கும் பணியாளர்களுக்கும் பயிற்சியளித்தல்.

7. உள்ளூர் மூலப் பொருள்களைச் சேகரித்து தேவையான உறுப்புரிமைச் சங்கங்களுக்கு விநியோகித்தல், தேவையேற்படும் மூலப் பொருள்களை இறக்குமதி செய்து விநியோகித்தல்.

8. இச் சங்கத்திற்கும் உறுப்புரிமைச் சங்கங்களுக்கும் இந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான தொழில் நுட்ப, முகாமைத்துவ அபிவிருத்தி சம்பந்தமான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளல்.

**அங்கத்துவம்**

பதிவு விண்ணப்பத்தில் கையொப்பமிட்ட உறுப்புரிமைச் சங்கங்களும் பதிவழிக்கப்பட்ட அகில இலங்கைக் கைத்தொழில் யூனியனின் உறுப்பினர்களும் இச் சங்கத்தின் துணைவிதி 6 (2) க்கு அமைவாகச் சேர்க்கப்படுபவர்களுமே இதன் உறுப்பினர்களாவர்.

துணைவிதி 6 (2) இன்படி பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் உறுப்புரிமை கோரி இரு பிரதிகளில் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் இயக்குனர் சபையால் பரிசீலனை செய்யப்பட்டு ஏற்க அல்லது நிராகரிக்க முடியும். நிராகரிக்கப்பட்ட உறுப்புரிமைச் சங்கம் பொதுச்சபைக்கு மேன் முறையீடு செய்ய உரிமையுண்டு. பொதுச் சபையின் தீர்ப்பே முடிவானது.

ஒரு பங்கின் பெறுமதி 500 ரூபாவாகும். ஒரு உறுப்புரிமைச் சங்கம் ஒரு பங்கினையாவது கொள்முதல் செய்தல் வேண்டும். இப் பங்கின் பெறுமதியைத் தவணை முறையில் செலுத்த வசதி செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பிக்கும்போது 100 ரூபாவைச் செலுத்தி பின்பு மூன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதங்களுக்கொருமுறை 50 ரூபா வீதம் மீதிப்பணத்தைச் செலுத்த வேண்டும். சங்கக் கடன்களுக்கு உறுப்புரிமைச் சங்கங்களின் பொறுப்பு அவர்கள் கொள்முதல் செய்த பங்கின் ஐந்து மடங்கிற்கு வரையறுக்கப்பட்டுள்ளது. இதன் தொழிற்பரப்பு இலங்கை முழுவதாகும்.

**பொதுச் சபை**

உறுப்புரிமைச் சங்கங்களின் பிரதிநிதிகளையும், இயக்குனர் சபை உறுப்பினர்களையும் கொண்டதே இச்சங்கத்தின் பொதுச்சபையாகும். ஆணையாளரால் நியமிக்கப்பட்ட இயக்குனர்கள் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளவும் கருத்துத் தெரிவிக்கவும் உரிமையுடையர். ஆனால் வாக்களிக்க உரிமையில்லை. பொதுச் செயற்பாடுகளிலும், ஏனைய சங்கப் பொதுச் சபைகளுக்கும் கூறப்பட்ட அதிகாரங்கள் – கடமைகள் - பொறுப்புக்கள் இப் பொதுச் சபைக்கும் பொருந்தும்.

**இயக்குனர் சபை**

பொதுச் சபையால் தமக்குள்ளிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒன்பதுக்கு மேற்படாத உறுப்பினர்களையும், ஆணையாளரால் நியமிக்கப்பட்ட மூன்றுக்கு மேற்படாத உறுப்பினர்களையுங் கொண்டதே இயக்குனர் சபையாகும். கைத்தொழில் துறை, சந்தைப்படுத்தல்துறை, நீதித்துறை, முகாமைத்துறை என்பவற்றில் ஏதாவது சிறப்புத் தேர்ச்சியுடையவர்களை ஆணையாளர் நியமித்தல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட இயக்குனர்கள் அடுத்த வருடாந்தப் பொதுக் கூட்டம் வரை கடமையாற்றலாம். அடுத்த வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் அவர்கள் பதவி முடிவுறும். பின்பு தெரிவு செய்யப்படும்போது புதியவர்களோ அல்லது அவர்களோ தெரிவு செய்யப்படலாம். ஆயினும் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் ஓராண்டுக்காவது மீண்டும் தெரிவு செய்யப்படலாகாது. ஏனையவை பொதுச் செயற்பாடுகளிலும் ஏனைய சங்கங்களிலும் குறிப்பிட்டது போன்றவையேயாகும்.

**பொது விபரங்கள்**

இத்தலைமைச் சங்கத்தில் 145 கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்புரிமை பெற்றுள்ளன. இதனுடைய பங்கு மூலதன விபரம் கலைக்கப்பட்ட கைத்தொழில் சமாச பங்கு மூலதனம் 3,19,000 ரூபா. உறுப்புரிமைச் சங்கங்களின் பங்கு மூலதனம் 2,33,650 ரூபா, மொத்தம் 5,52,650 ரூபா. ஒதுக்கங்கள் 26,77,132 ரூபா. நிலையான சொத்துக்கள் (பெறுமானத் தேய்வு நீக்கி) 12,80,149 ரூபா 55 சதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வியாபார விளைவுகள்**

| | 1975 | 1976 | 1977 | 1979 |
|---|---|---|---|---|
| விற்பனை | 35,34,417-04 | 37,98,860-44 | 58,06,622-77 | 86,51,084-30 |
| வரி | 2,14,703-90 | 43,224-78 | 3,25,808-00 | 4,23,917-80 |
| வரி நீக்கிய இலாபம் | 3,98,735-81 | 78,339-34 | 6,05,074 02 | 7,87,275-92 |

## 3. இலங்கை சந்தைப்படுத்தல் தலைமைக் கூட்டுறவுச் சங்கம் (மாக்பெட்)

கூட்டுறவு மறுசீரமைப்பின் பயனாக 1-3-73-ல் இச் சங்கம் பதிவு செய்யப்பட்டது. இலங்கைக் கூட்டுறவாளர் நுகர்ச்சி யூனியன். இலங்கை விளைபொருள் உற்பத்தி விற்பனை யூனியன், வடபகுதி விளைபொருள் உற்பத்தி விற்பனைச் சங்கங்களின் சமாசம் மூன்றும் இதனுடன் இணைக்கப்பட்டது. இதன் தொழில் பரப்பு இலங்கை முழுவதையும் அடக்கியது.

நோக்கங்கள்

1. உற்பத்திச் சங்கங்களின் உற்பத்திப் பொருள்களை நுகர்ச்சிச் சங்கங்களினூடாக விநியோகஞ் செய்வதன் மூலம் உற்பத்தியாளரையும் நுகர்ச்சியாளரையும் இணைத்து உற்பத்திச் சங்கங்களின் தலைமைச் சங்கமாகவும் நுகர்ச்சிச் சங்கங்களின் விநியோகச் சங்கமாகவும் விளங்குதல்.

2. உத்தரவாத விலைத்திட்டத்திற்கு அமையாத பொருள்களை அங்கத்துவ சங்கங்களிடம் கொள்வனவு செய்து சந்தைப் படுத்துவதில் தமது திறனை நிலைநாட்டல்.

3. சந்தைப்படுத்தல், விநியோகித்தல் சம்பந்தமாக உறுப்புரிமைச் சங்கங்களுக்கு வேண்டிய போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தல்.

4. பழுதடையக் கூடிய பொருள்களைப் பாதுகாக்கும் பண்டகசாலைகள் பதனிடும் தொழிற்சாலைகள் ஆகியவற்றை அமைத்தல். உறுப்புரிமைச் சங்கங்கள் இவற்றை நிறுவ உதவல்.

5. உற்பத்திக்குத் தேவையான தொழில் நுட்ப ஆலோசனைகளை உறுப்புரிமைச் சங்கங்களுக்கு வழங்கல்.

6. நுகர்ச்சியாளர்களுக்குத் தேவையானதும், உள்ளூரில் உற்பத்தி செய்யப்படாததுமான பொருள்களை இறக்குமதி செய்து விநியோகித்தல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. உற்பத்திக்குத் தேவையான உபகரணங்கள், இயந்திரங்கள் போன்றவற்றை இறக்குமதி செய்து உறுப்புரிமைச் சங்கங்களுக்கு விநியோகித்தல்.

8. உறுப்புரிமைச் சங்கங்களுக்கு தொழில் முயற்சிக்கு வேண்டிய முற்பணங்களை வழங்கல்.

9. இந்நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு வேண்டிய காணி கட்டிடங்கள் இயந்திரங்கள் போன்றவற்றைக் கொள்வனவு செய்தல், குத்தகைக்கு எடுத்தல், வாடகைக்கு எடுத்தல்.

10. சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றக் கூடிய அவசியமான வேறு எல்லாக் கருமங்களையுஞ் செய்தல்.

**அங்கத்துவம்**

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் வினைபொருள் உற்பத்தி விற்பனைச் சங்கங்களும் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்களும் உறுப்புரிமை பெறலாம். ஒரு பங்கின் பெறுமதி 1000 ரூபாவாகும். இவ்வுறுப்புரிமைச் சங்கங்கள் ஒவ்வொன்றினதும் பொதுச் சபைப் பிரதிநிதிகளைக் கொண்டதே பொதுச் சபையாகும்.

**மத்திய குழு**

ஒவ்வொரு கூட்டுறவு ஆக்க உதவியாணையாளர் பிரிவுக்கும் ஒவ்வொருவராக 26 மாவட்டத்துக்கும் 26 பேரை பிரதிநிதிகளில் இருந்து பொதுச் சபை தெரிவு செய்யும், ஆணையாளர் 5 பேரை மத்திய குழுவுக்கு நியமிக்கலாம். அவர்கள் சங்கத் தொழில் முயற்சிகளில் ஏதாவதொன்றில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவராக இருப்பர்.

நெறியாளர் குழு

நெறியாளர் குழு 7 பேருக்குக் குறையாமலும் 9 பேருக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். மத்திய குழுவுக்குத் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளிலிருந்து 4 பேர் தெரிவு செய்யப்படுவர்: ஆணையாளர் 3 பேருக்குக் குறையாமலும் 5 பேருக்கு மேற்படாமலும் நியமனஞ் செய்வர்.

**ஆலோசனைக் குழு**

சேவைகளை விரைவாகவும், இலகுவாகவும் செயற்படுத்துவதற்காகவும் தொழிற்பாடுகளின் உச்சப் பயனைப் பெறுவதற்காகவும் வேண்டிய ஆலோசனைகளைப் பெறுவதற்காக இக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவுக்கும் ஒவ்வொரு ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டிருக்கும். இக்குழுவில் அப்பகுதியிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர்கள் அங்கம் வகிப்பர். இக் குழுக்கள் தலைமைச் சங்கத்துக்கு வேண்டிய புள்ளி விபரங்களைத் திரட்டிக் கொடுத்தல், தொழில் முயற்சிகள் சம்பந்தமான ஆலோசனைகளை வழங்கல், சந்தைப் படுத்தும் முயற்சியில் வேண்டிய உதவிகளைச் செய்தல் ஆகிய பணிகளைப்புரியும்.

ஏனைய விடயங்கள் பொதுச் செயற்பாடுகளிலும் ஏனைய சங்கங்களின் நடவடிக்கைகளிலும் குறிக்கப்பட்டவை போலவேயிருக்கும்.

இத் தலைமைச் சங்கத்தின் பொது விபரங்கள் சில

இச் சங்கத்தின் பங்கு முதல் 30-10-79-ம் திகதியன்று 6,50,275 ரூபாவாகும். ஒதுக்கீடுகள் சுமார் 58,79,000 ரூபாவாகும். 1979-ம் ஆண்டு கார்த்திகை மாதம் வரை சுமார் 6,00,00,000 ரூபா உத்தேச இலாபமாக அடைந்துள்ளது.

சில்லறை வியாபார நிலையங்கள் கொழும்பில் நான்கும் பேராதனையில் ஒன்றும் நடாத்துகின்றது. பாலுணவுப் பொருள்கள், தகரமீன், பம்பாய் வெங்காயம், பைசிக்கிள் போன்ற பல பொருள்களை இறக்குமதி செய்து அங்கத்துவ சங்கங்கள் மூலமும் சில்லறை விற்பனை நிலையங்கள் மூலமும் விநியோகிக்கின்றது. சோவியத் ரஷ்யாவிலுள்ள கூட்டுறவு நிறுவனமான ''சென்ட்ரோ சோயுஸ்'' கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து இறக்குமதி செய்யக் கூடிய பொருள்களின் விபரங்கள் பெறப்பட்டு தொடர்ந்தும் உரையாடல்கள் நடைபெறுகின்றன.

மூன்று விவசாய சேவை நிலையங்களை நடாத்துகின்றது. இவற்றுள் ஒன்று யாழ்ப்பாணத்தில் பரந்த அளவில் செயற்பாடுகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. உறுப்புரிமைச் சங்கங்களிடமிருந்து விவசாயப் பொருள்களான செத்தல் மிளகாய், காய்கறி வகை, பழவகை போன்ற பொருள்களையும் மீன் கருவாடு போன்றவற்றையும் கொள்வனவு செய்து சந்தைப்படுத்துகின்றது.

விவசாயிகளுக்குத் தேவையான உரப்பசளை வகைகள், விதைகள், நீரிறைக்கும் இயந்திரங்கள், கிருமிநாசினிகள் சிறிய டிராக்டர்கள், தெளி கருவிகள் போன்றவற்றை விநியோகிக்கும் சேவையைச் செய்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாய இயந்திரங்கள் உபகரணங்களைத் திருத்தும் நிறுவன மொன்றையும் எரிபொருள் நிரப்பு நிலையங்களையும் நடாத்துகின்றது. போக்கு வரத்துச் சேவைகளை நடாத்துவதற்காகப் பல்வேறு வகை யான 60 மோட்டார் வாகனங்களை வைத்திருக்கின்றது. காய்கறி களைச் சேகரிப்பதற்கும் சந்தைப்படுத்துவதற்கும் 5 மத்திய நிறுவனங் களையும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் பயன்படுத்துகின்றது.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பாரம்பரியமற்ற ஏற்றுமதிப் பொருள்களான வெற்றிலை, கயிறு, தும்புப் பொருள்கள் போன்ற வற்றை உறுப்புரிமைச் சங்கங்கள் மூலம் ஏற்றுமதி செய்வதற்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7: V கூட்டுறவு தேசிய நிறுவனம்

## ஸ்ரீ லங்கா தேசியக் கூட்டுறவுச் சபை

இது கூட்டுறவுச் சங்கங்களின் மறுசீரமைப்பின் பயனாக 26-7-1972-ம் தேதி பதிவு செய்யப்பட்டது. இதற்கு முன் இயங்கிய இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனம், வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை ஏனைய பகுதிகளின் ஐக்கிய மேற்பார்வைச் சபைகள் யாவும் பதிவு நீக்கப்பட்டு இதனுடன் இணைக்கப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்களின் கொள்கைகள் உயர் நிறுவனமாகவும் தேசிய ரீதியான கூட்டுறவு உயர் நிறுவனமாகவும் விளங்குகின்றது. அத்துடன் சர்வதேச கூட்டுறவு இணைப்பில் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டு சர்வதேசக் கூட்டுறவு இயக்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இலங்கை முழுவதையும் தொழிற்பரப்பாகக் கொண்டுள்ளதோடு பதிவு செய்யப்பட்ட எந்தக் கூட்டுறவுச் சங்கமும் இதில் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். உறுப்புரிமையைப் பெறுவதற்கு ஒரு பங்கினையாவது கொள்முதல் செய்தல் வேண்டும். ஒரு பங்கின் பெறுமதி 50 ரூபாவாகும்.

### நோக்கங்கள்

1. இலங்கையில் கூட்டுறவு இயக்கத்தை அபிவிருத்தி செய்தல்.
2. இலங்கையில் கூட்டுறவு இயக்கத்தை விரிவுபடுத்தி விருத்தி செய்து பலப்படுத்துவதற்கு மக்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு அவர்களுக்கு வழிகாட்டியாக இருந்து உதவியளித்தல்.
3. இலங்கையில் கூட்டுறவு இயக்கத்தை விரிவுபடுத்தல்.
4. இலங்கையிலுள்ள கூட்டுறவு நிறுவனங்களின் சார்பாக அவற்றின் நோக்கங்கள் கருத்துக்கள் என்பவற்றை வெளிப்படுத்தல்.

இந்நோக்கங்களை அடையும் பொருட்டுப் பின்வருஞ் செயற்பாடுகளை மேற்கொள்ளல். அவையாவன.

1. கூட்டுறவுக் கல்வியையும், பயிற்சி நெறிகளையும் அமைத்தல். அங்கத்தவர் மத்தியில் கூட்டுறவு நடைமுறைகளைப் பிரபலப்படுத்தல்.
2. கூட்டுறவு உறவுகளை அபிவிருத்தி செய்யவும் கூட்டுறவு இயக்கத்தின் நடைமுறைகளை இணைப்பதற்கும் உதவல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. கூட்டுறவு இயக்கத்தோடு தொடர்புடைய ஆராய்ச்சிகளை நடத்துதலில், அமைத்தலில் இணைந்துதவல்.

4 கூட்டுறவோடும் அதனோடு சம்பந்தப்பட்ட பாடங்களிலும் தொடர்பான கட்புல, செவிப்புல சாதனங்களை, இலக்கியத்தை தயாரித்தல். பிரசுரப்படுத்தல். ஒழுங்கு செய்தல்.

5. கூட்டுறவு நடவடிக்கை, கூட்டுறவு சம்பந்தமான புதினப் பத்திரிகைகள் சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், புத்தகங்கள் ஆகியனவற்றைப் பிரசுரித்தல்.

6. கூட்டுறவு இயக்கத்தை அபிவிருத்தி செய்யக்கூடிய சாதகமான ஒரு சூழ்நிலையை உருவாக்கும் விதத்தில் சஞ்சிகைகள் பத்திரிகைகள், துண்டுப் பிரசுரங்கள், புத்தகங்கள், சினிமா, வானொலி ஆகியவற்றின் மூலம் கூட்டுறவுச் சாதனைகளைப் பற்றி விளம்பரஞ் செய்தல்;

7. ஒரு நூலகத்தையும் தகவல் நிலையத்தையும் நடத்தல்.

8. இலங்கையில் கூட்டுறவு இயக்கத்தைச் சாரும் கொள்கைகளை வகுக்க உதவும் விதத்தில் கூட்டுறவுப் பிரச்சினைகளைக் கலந்துரையாடலிலும் கூட்டுறவு அபிப்பிராயங்களைத் தெரிவித்தலிலும், ஒரு மத்திய உறுப்பாகத் தொழிற்படல்.

9. இலங்கைக் கூட்டுறவு இயக்கத்தின்; தேசிய, சர்வதேச அரங்கின் சீரிய பிரதிநிதியாகத் தொழிற்படல், கூட்டுறவுக் கொள்கை சம்பந்தமான அபிப்பிராயங்களைத் தெரிவித்தல்.

10. கூட்டுறவுக் கருத்தரங்குகள், கூட்டங்கள் தேசிய உடன்படிக்கைகள், மகாநாடுகள் ஆகியவற்றை அமைத்தல், இயக்குதல், நடத்தல்.

11. புதிய கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தலில் உதவுதல்.

12. கூட்டுறவை வளர்த்தலுக்காக நிதி, பொதுநிதி அல்லது விசேட நிதி திரட்டி, அப்படித் திரட்டப்பட்ட நிதியைப் பாவித்தல்.

13. காணியை வாங்குதல், வைத்திருத்தல், விற்றல், மாற்றுதல், அடைமானம் வைத்தல், வாடகைக்குக் கொடுத்தல். குத்தகைக்குக் கொடுத்தல், கட்டிடங்களை அமைத்தல், உடைத்தல், பழுது பார்த்தல் மாற்றுதல் அல்லது அக்கட்டிடங்களை நிர்வகித்தல்.

14. உறுப்புரிமைச் சங்கங்களுக்கு ஏதாவது ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக பொதுவான அல்லது குறிப்பான வழிகாட்டல் அல்லது கூட்டுறவுச் சபையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது ஏதாவது ஒரு உறுப்புரிமைச் சபையின் குறிக்கோள்களை மேலும் வலுப்படுத்தும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

15. கூட்டுறவுச் சபையின் குறிக்கோள்களை அடைவதற்குச் சாதகமானதும், அவசியமானதும், விரைவுபடுத்துவதுமான காரியங்களைத் தேவைப்படும் போதே செய்தல்.

## நிருவாக அமைப்பு

1. மாவட்டப் பொதுச் சபை
2. மாவட்டக் குழு
3. பொதுச் சபை
4. மதியுரைக் குழு
5. இயக்குனர் சபை

### மாவட்டப் பொதுச் சபை

ஒவ்வொரு கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் பிரிவுக்கொன்றுக 26 மாவட்டக் கிளைகள் உண்டு. அப்பிரதேசத்தில் உள்ள உறுப்புரிமைச் சங்கங்களைக் கொண்டதே அம் மாவட்டப் பொதுச் சபையாகும், ஒவ்வொரு மாவட்டக் கிளையும் வருடாந்தப் பொதுக் கூட்டத்தையும் விசேட பொதுக் கூட்டங்களையும் நடாத்தும். மாவட்ட வருடாந்தப் பொதுச் சபைக்கூட்டத்தில் கவனிக்கப்படவேண்டிய விடயங்கள்

1. மாவட்டக் குழுவுக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்தல்.
2. மாவட்டக் குழுவின் செயற்பாடுகள் பற்றிய வருடாந்த அறிக்கையை ஆராய்தல்.
3. மாவட்டத்தில் கூட்டுறவு இயக்கத்தை வளர்ப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் வேண்டிய திட்டங்களை ஆராய்தல்.
4. உறுப்புரிமைச் சங்கங்களால் அனுப்பப்படும் பிரேரணைகளை ஆராய்தல்.

மாவட்டக்குழு உறுப்பினர்கள் ஏழுபேரைப் பின்வரும் முறைப்படி மாவட்டப் பொதுச் சபை தெரிவு செய்தல் வேண்டும்.

1. நான்கு உறுப்பினர்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளிலிருந்து தெரிவு செய்தல் வேண்டும்.
2. கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து ஒரு உறுப்பினர் தெரிவு செய்யப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. விவசாய, பாற்பண்ணை, கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து ஒரு உறுப்பினர் தெரிவு செய்யப்படல் வேண்டும்.

4. ஏனைய சங்கங்களிலிருந்து ஒரு பிரதிநிதி தெரிவு செய்யப்படல் வேண்டும்.

**மாவட்டக் குழு**

மாவட்ட பொதுச் சபையால் தெரிவு செய்யப்பட்ட ஏழு உறுப்பினர்களையும் ஆணையாளரால் நியமிக்கப்பட்ட மூன்றுக்கு மேற்படாத உறுப்பினர்களையும் கொண்டதே மாவட்டக் குழுவாகும். ஆணையாளரால் நியமிக்கப்படுபவர்கள் சமூக, கலாசாரக் கல்வித் துறையில் தேர்ச்சியும் ஈடுபாடுமுள்ளவர்களாக இருப்பர். ஒவ்வொரு மாவட்டக் கிளைக்கும் ஒவ்வொரு கிளைக் காரியாலயம் உண்டு. மாவட்டக் கருமங்களைச் செய்வதற்காக ஒவ்வொரு மாவட்டக் கிளைக் காரியாலயத்துக்கும் ஒவ்வொரு மாவட்டச் செயலாளரும், கல்வி உதவியாளரும் வேறு பணியாளர்களும் ஸ்ரீ இலங்கா தேசிய கூட்டுறவுச் சபையால் நியமிக்கப்படுவர். அத்துடன் ஒவ்வொரு மாவட்டக் கிளையினது மேற்பார்வையுடன் கூட்டுறவு ஊழியர் பயிற்சிக்கான பாடசாலையொன்றும் ஸ்ரீ இலங்கா தேசிய கூட்டுறவுச் சபையினால் நடாத்தப்படும்.

**மாவட்டக் குழுக்களின் கடமைகள்**

1. இயக்குனர் சபையால் ஒழுங்குபடுத்தப்பட்ட அங்கத்துவக் கல்வி, பணியாளர் பயிற்சி, கருத்தரங்குகள் போன்றவற்றைச் செயற்படுத்த உதவல்.

2. இளைஞர்களைக் கூட்டுறவு இயக்கத்தில் அங்கத்துவம் பெறுவதற்கு வேண்டிய முயற்சிகளையும் செயற்பாடுகளையும் மேற்கொள்ளல்.

3. கூட்டுறவு நிறுவனங்களின் மூலம் கலை கலாச்சார நிகழ்வுகளையும் சமூக நலத் திட்டங்களையும் செயற்படுத்த ஊக்கமளித்தல்.

4. இயக்குனர் சபையால் திட்டமிடப்பட்ட புதுவகைக் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குவதற்கு வேண்டிய முயயசிகளை எடுத்தல்.

5. மாவட்டத்திலுள்ள கூட்டுறவு நிறுவனங்களைப் பற்றிய தகவுரை வழங்கல்.

6. உறுப்புரிமைச் சங்கங்களோடும் அரசாங்க இலாகாக்களோடும் நல்ல தொடர்புகளை ஏற்படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. தகவல் நிலையமொன்றையும் கூட்டுறவு நூல் நிலையமொன்றையும் நடாத்துதல்.

8. இயக்குனர் சபையால் திட்டமிடப்பட்ட அல்லது நெறிப் படுத்தப்பட்ட கூட்டுறவுக் கருத்தரங்குகள், கூட்டங்கள் கலந்துரையாடல்கள், மகாநாடுகளை நடாத்தல், நடாத்த உதவல்.

9. இயக்குனர் சபையால் விடப்படும் சகல நோக்கங்கள், கருமங்கள் பற்றிய தகவுரைகளைச் செய்தல்.

10. வலுவிழந்த அல்லது குறைந்த தரமுள்ள கூட்டுறவுச் சங் கங்களை நன்னிலைப்படுத்துவதற்குரிய தேவையான நடவடிக் கைகளையும் முயற்சிகளையும் எடுத்தல்.

**பொதுச் சபை**

உறுப்புரிமைச் சங்கங்களின் பிரதிநிதிகளையும், தெரிவு செய்யப் பட்ட மாவட்டக் குழு உறுப்பினர்களையும், இயக்குனர் சபை உறுப் பினர்களையும் கொண்டதே பொதுச் சபையாகும். இதுவே உயர் அதிகாரங் கொண்டதாகும். ஏனைய சங்கங்களுக்குக் கூறப்பட்ட அதி காரங்களும் கடமைகளும் இப்பொதுச் சபைக்கும் உண்டு. விசேட மாகத் தலைவரையும் உப தலைவரையும் தெரிவு செய்யும் அதிகாரம் இச் சபையின் பொதுச் சபைக்கே உண்டு.

**மதியுரைக் குழு**

ஒவ்வொரு மாவட்டக் குழுவின் தலைவர்களையுங் கொண்டதே மதியுரைக் குழுவாகும். மதியுரைக் குழுவின் கூட்டம் மூன்று மாதத் துக்கொருமுறை நடைபெறும். இக் கூட்டத்தில் மாவட்டக் குழுத் தலைவர்கள் கலந்துகொள்ள முடியாவிடின் உபதலைவர் அல்லது குழு உறுப்பினர்களில் குழுவால் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் கலந்து கொள்ளலாம்.

இயக்குனர் சபையால் தயாரிக்கப்படும் கூட்டுறவு அபிவிருத்தி, கல்வி, பயிற்சித் திட்டங்களை மதிப்பீடு செய்தல், ஆலோசனை வழங் கல், உதவல், கூட்டுறவு இயக்கங்களுக்கிடையே தொடர்புகளை ஏற் படுத்துவதற்குரிய ஆலோசனை, மதிப்பீடு, உதவிகளை வழங்கல், தேசிய அபிவிருத்தியில் கூட்டுறவு இயக்கத்தின் செயற்பாடுகளை ஏற்படுத்து வதற்குரிய ஆலோசனைகளை வழங்கல். கூட்டுறவுச் சபை கூட்டுறவு அபிவிருத்தியின் பொருட்டு எடுக்க வேண்டிய செயல்கள் பற்றிய ஆலோசனைகளை வழங்கல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இயக்குனர் சபை**

இயக்குனர் சபை 12 உறுப்பினர்களுக்கு மேற்படாது அமைந்திருக்கும். இதில் பொதுச் சபைப் பிரதிநிதிகளில் இருந்து மாகாணத்துக் கொருவர் வீதம் பொதுச் சபை தெரிவு செய்யும். தலைமைச் சங்கப் பிரதிநிதிகளிலிருந்து மூன்று பேரை ஆணையாளர் நியமிப்பார்.

கூட்டுறவுக் கொள்கைகள், கூட்டுறவு இயக்கம் பற்றிய அபிப்பிராயங்கள் வெளியிடல், பொதுச்சபைத் தீர்மானங்களை நிறைவேற்றல், மாவட்டக் குழுக்கள், ஏனைய உப குழுக்கள் ஆகியவற்றின் அறிக்கைகளை ஆராய்ந்து கூட்டுறவு அபிவிருத்திக்குரிய நடவடிக்கைகள் எடுத்தல் போன்ற கடமைகளுடன் ஏனைய சங்கங்களின் நிருவாக சபை அல்லது இயக்குனர் சபை ஆகியவற்றுக்குரிய அதிகாரங்கள், பொறுப்புக்கள், கடமைகள் இதற்குமுண்டு.

## நிருவாகம்

இலங்கை முழுவதையும் தொழிற் பரப்பாகக் கொண்டமையால் கொழும்பில் தலைமைக் காரியாலயமும் 26 மாவட்டங்களிலும் 26 மாவட்டக் காரியாலயங்களும் அமைக்கப்பட்டுள்ளது. கொழும்புக் காரியாலயம் இயக்குனர் சபையினதும் தலைவரதும் மேற்பார்வையிலும் கட்டுப்பாட்டிலும் மாவட்டக் காரியாலயங்கள் மாவட்டக் குழுக்களினதும் தலைவரதும் மேற்பார்வையிலும் கட்டுப்பாட்டிலும் இயங்குகின்றன

## தலைமைக் காரியாலய நிருவாகம்

சபையின் கருமங்களை இலகுவாக்குவதற்காகவும், விரைவாக்குவதற்காகவும் தலைமைக் காரியாலயம் ஐந்து பிரிவுகளாக இயங்குகின்றது. அவையாவன.

1. நிருவாகப் பிரிவு
2. கல்வி விஸ்தரிப்புப் பிரிவு
3. பிரசுர விற்பனைப் பிரிவு
4. கட்டிடக் கலைஞர் பிரிவு
5. வடக்குக் கிழக்கு மாகாணப் பிரிவு

சபையின் கருமங்களைக் கவனிப்பதற்காக பொதுச் செயலாளர் ஒருவரும் உதவிச் செயலாளரும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு பதவி நிலை உத்தியோகத்தரும் மாவட்டச் செயலாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். கல்வி விஸ்தரிப்பு பிரிவுக்கு கல்வி உத்தியோகத்தர்களும் வாசிகசாலைப் பொறுப்பாளரும், பிரசுர விற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனைப் பகுதிக்கு பத்திரிகை ஆசிரியர் ஒருவரும் உதவிப் பத்திரிகை ஆசிரியர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர். சிறப்பான இப்பதவிகளை விட ஒவ்வொரு பிரிவுக்குந் தேவையான வேறு பணியாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**மாவட்டக் காரியாலயங்கள்**

பதவி நிலை உத்தியோகத்தர் அல்லது மாவட்டச் செயலாளர், கல்வி உதவியாளர் என்பவர்களுடன் வேண்டிய வேறு பணியாளர்களும் நியமிக்கப்பட்டுக் கருமங்கள் ஆற்றப்படுகின்றன.

**முக்கிய செயற்பாடுகள்**

**கல்வி**

**பணியாளர் பயிற்சி :-** கூட்டுறவுப் பயிற்சிப் பாடசாலைகளை 26 மாவட்டங்களிலும் நிறுவி பணியாளர்களுக்குப் பயிற்சியளித்து பொல்கொல்லைக் கூட்டுறவுக் கல்லூரியைக் கொண்டு பரீட்சை நடாத்தி தராதரப் பத்திரங்கள் வழங்குகின்றது. கண்டி, காலி, யாழ்ப்பாணம் ஆகிய கூட்டுறவுப் பயிற்சிப் பாடசாலைகளில் உயர்தர, சாதாரண பயிற்சி வகுப்புக்களையும் ஏனைய 23 மாவட்டங்களிலும் சாதாரண தரப் பயிற்சி வகுப்புக்களையும் நடாத்துகின்றது. ஏழு கூட்டுறவுப் பயிற்சிப் பாடசாலைகள் தமிழ்மொழி மூலமும் ஏனையவை சிங்கள மொழி மூலமும் பயிற்சியளிக்கின்றன. பயிற்சியில் வந்து கலந்துகொள்ள முடியாதவர்களுக்கு வசதியளிக்கும் பொருட்டு சாதாரண பயிற்சி வகுப்பு தபால் மூலமும் கற்பிக்கப்படுகின்றது.

முகாமைத் தரத்திலுள்ள பணியாளர்களுக்கும் ஏனைய பணியாளர்களுக்கும் உதவுமுகமாக கருத்தரங்குகள், குறுங்காலப் பயிற்சி வகுப்புக்கள் என்பவற்றை கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகள், கூட்டுறவுக் கலாசாலை, மாவட்டக்குழு என்பவற்றின் உதவியுடன் நடாத்துகின்றது. இயக்குனர்கள், கிளைக்குழு உறுப்பினர்கள், அங்கத்தவர்கள், கடனுதவு சங்கங்கள், கைத்தொழிற் சங்கங்கள் மகளிர் பாவனையாளர்கள் ஆகியோர்களுக்குத் தனித்தனி பயிற்சி வகுப்புக்களும் கருத்தரங்குகளும் நடாத்தி வருகின்றது.

தலைமைக் காரியாலயம் உட்பட மாவட்டக் காரியாலயங்கள் தோறும் நூல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றை விருத்தி செய்யும் நோக்கோடு கூடுதலான அளவு புத்தகங்கள் நூல் நிலையங்களுக்கு வழங்கும் முயற்சிகளை எடுக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரசாரம்

"சமூபகாரய" என்னும் சிங்களப் பத்திரிகை யொன்றை தலைமை அலுவலகம் வெளியிடுகின்றது. இதன் தரத்தை உயர்த்துவதற்குரிய முயற்சிகளைக் காலத்துக்குக் காலம் எடுத்து வருகிறது.

"ஐக்கிய தீபம்" என்னும் தமிழ்ப் பத்திரிகையை யாழ்ப்பாண மாவட்டக் கிளை வெளியிட்டு வருகின்றது. கூட்டுறவு சம்பந்தமான நூல்களையும் வெளியிட்டு வருகின்றது. கூட்டுறவு நாட் குறிப்பேடு களை வருடந்தோறும் வெளியிடுகின்றது.

சினிமாக் காட்சி காட்டும் இயந்திரமும் மோட்டார் வாகனமும் உண்டு. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நடைபெறும் கூட்டுறவு சம்பந்தமான திரைப்படச் சுருள்களைப் பெற்று மாவட்டக் குழுக்க ளின் வேண்டுதலுக்கிணங்கத் திட்டமிடப்பட்டுப் பொதுமக்களுக்கு சினிமாக் காட்சிகள் காட்டப்படுகின்றன.

கூட்டுறவு தின விழாக்களை மாவட்டக் குழுக்கள் மூலமும் உறுப் புரிமைச் சங்கங்கள் மூலமும் சிறப்பாக நடைபெறச் செய்து, விளை யாட்டு, கலைநிகழ்ச்சிகள், பிரசாரங்கள் போட்டிகள் மூலம் பொதுமக்க ளிடையே கூட்டுறவு பற்றிய கருத்துக்களையும் உணர்வையும் ஏற் படுத்துகின்றது.

## கூட்டுறவுச் சங்கங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல்

கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொதுவான பிரச்சினைகளையும், சில வகைச் சங்கங்களுக்குள்ள சிறப்பான பிரச்சினைகளையும் ஆராய்ந்து பிரச்சினைக்குரிய நிறுவனங்கள், இலாகாக்கள், கூட்டுத்தாபனங்கள் அமைச்சர்களுடன் தொடர்பு கொண்டு ஏற்ற நடவடிக்கைகளைக் காலத்துக்குக் காலம் எடுத்து வருகிறது. இவை சம்பந்தமாக 1979-ல் பின்வரும் விடயங்களில் தீர்வு காணப்பட்டது.

1. சங்கங்களிடமிருந்து நெல் சந்தைப்படுத்தும் சபை கொள் முதல் செய்யும் வெற்றுச் சாக்குப் பைகளின் விலை அதிக ரிப்புச் சம்பந்தமாகப் பேச்சு வார்த்தை நடாத்தி விலை அதிகரிக்கப்பட்டது.

2. சங்கங்கள் நெல் கொண்டு செல்வதற்காக வழங்கப்படும் கட்டணத்தை உயர்த்த வழிவகுத்தமை.

3. சங்கங்களின் தேர்தலை நடாத்தும் போது சமூகமளிக்கின்ற கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்களின் பிரயாணச் செலவைத் திணைக்களமே ஏற்கச் செய்தமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. உள்ளூர் புடவை வகைகள் 'சலுசலா' மூலம் சந்தைப்படுத்த நடவடிக்கை எடுத்தமை.

## நடவடிக்கை எடுக்கப்படும் பிரச்சினைகள்

1. கூட்டுறவுச் சங்கங்களின் தேறிய இலாபத்தில் 35 வீதம் வருமான வரியாக அறவிடப்படும் பிரச்சினை.
2. புகையிலைக் கூட்டுத்தாபனத்தின் முகவர் பதவிகளைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பெறுதல்.
3. சீமேந்துக் கூட்டுத்தாபனம், மட்பாண்டக் கூட்டுத்தாபனம், பசளைக் கூட்டுத்தாபனம், கட்டிடப் பொருள் கூட்டுத்தாபனம், பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்றவற்றில் சங்கங்கள் பொருள் பெறுவதிலுள்ள பிரச்சினைகள்.
4. பருத்தி நூல் வகைகளின் சுங்கத் தீர்வைகளைக் குறைத்தல் போன்றவை-

## புதிய வகைச் சங்கங்களை உருவாக்கும் முயற்சிகள்

1. கூட்டுறவு வங்கிகள் :- இவை மக்கள் வங்கிகளோடு இணைக்கப்பட்டுவிட்டன. மக்கள் வங்கியே கூட்டுறவுச் சங்கங்களுக்கான வங்கியாக இப்போது இருக்கின்றது. கூட்டுறவுச் சங்கங்களுக்கென ஒரு வங்கி இருக்க வேண்டுமென்ற அபிப்பிராயம் பொதுவாகக் கூட்டுறவுச் சங்கங்களிடையே நிலவுவதால் அவை பற்றிய கருத்துக்களைத் திரட்டி கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் அபிப்பிராயங்களும் பெறப்பட்டு கூட்டுறவு அமைச்சரிடம் ஒப்படைத்திருக்கிறது.

2. காப்புறுதிக் கூட்டுறவுச் சங்கம் :- இவ்வகைச் சங்கம் அமைப்பதற்குரிய தகவல்களைத் திரட்டிக் கூட்டுறவுத் திணைக்களத்தினதும் கூட்டுறவு அமைச்சரதும் அங்கிகாரத்தைக் கோரியுள்ளது.

3. இந்திய யாத்திரிகள் கூட்டுறவுச் சங்கம் :- இந்தியா செல்லும் யாத்திரிகர்களது வசதிகளை அதிகரிக்கும் பொருட்டு ஒரு சங்கம் ஒன்றினை அமைக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளது இது சம்பந்தமாக இந்தியாவிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்கும் ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றது.

## சர்வதேசத் தொடர்புகள்

ஸ்ரீ இலங்கா தேசியக் கூட்டுறவுச் சபை சர்வதேசக் கூட்டுறவு இணைப்பில் அங்கத்துவம் பெறுவதன் மூலம் கூட்டுறவுத் தேசிய நிறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனங்களுடனும் ஏனைய நிறுவனங்களுடனும் தொடர்பு கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றுள்ளது. சர்வதேசத் தொடர்பினால் இலங்கைக் கூட்டுறவு இயக்கத்துக்குப் பின்வரும் வசதிகளும் உதவிகளும் கிடைக்கின்றன. அவையாவன.

1. தொழில் வசதிகள்
2. புலமைப் பரிசில்கள்
3. ஆலோசனைகள்
4. கல்வி பிரசுர விடயங்களில் ஒத்துழைப்பு
5. யூனஸ்கோ, சர்வதேசத் தொழில் நிறுவனம் என்பவற்றுடன் இணைந்து செயலாற்றல், அவற்றின் உதவிகளைப் பெறல்.
6. உறுப்புரிமைச் சங்கங்களுக்கு வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
7. ஏனைய தொடர்புகள்.

## புலமைப் பரிசில்கள்

கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், பணிப்பாளர்கள், உறுப்பினர்கள், கூட்டுறவுத் திணைக்கள ஊழியர்கள், கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் எனப் பல்வேறு வகைப்பட்டோருக்கும் கூட்டுறவு இயக்கம் வளர்ச்சி பெற்ற நாடுகளின் கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து பயிற்சி வகுப்புக்களுக்கும், கருத்தரங்குகளுக்கும் புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு வழங்கப்படும் புலமைப் பரிசில்களை ஸ்ரீ இலங்கா தேசியக் கூட்டுறவுச் சபை பெற்று உரியவர்களுக்கு வழங்கும் நடவடிக்கையை மேற்கொள்ளுகின்றது. சோவியத் ரஷ்யா, யப்பான், மலேசியா, மேற்கு ஜேர்மனி, இங்கிலாந்து, இந்தியா, ஈராக், இஸ்ரவேல், சுவீடன், நெதர்லன்ட் போன்ற நாட்டின் தேசிய கூட்டுறவு நிறுவனங்களும் யூனஸ்கோ, சர்வதேச தொழில் நிறுவனம் போன்றவைகளும் புலமைப் பரிசில்கள் வழங்குகின்றன.

## 1979-ம் ஆண்டில் பெற்ற ஏனைய உதவிகள்

1. நெதர்லன்ட் தேசிய கூட்டுறவு நிறுவனத்தின் உதவியோடு சிறு விவசாயிகள் பற்றிய ஆய்வொன்றினை நடாத்தல்.
2. சர்வதேசக் கூட்டுறவு இணைப்பின் 1979-ம் ஆண்டு நன்னீர்க் கொள்வனவுத் திட்டத்தின் கீழ் வரட்சியான பகுதிகளில் கிணறுகளைத் தோண்ட உதவல்.
3. சுவீடன் தேச "சீடா" நிறுவன உதவியுடன் கூட்டுறவு ஆசிரிய பயிற்சித் திட்டம், கூட்டுறவு மகளிர் பாவனையாளர் கல்வித்திட்டம் என்பன செயற்படுத்தப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுறவு ஆசிரியர் பயிற்சித் திட்டம்

சுவீடன் கூட்டுறவு 'சீடா' நிறுவனத்தின் நிதியுதவியுடனும், நிபுணர்களின் உதவியுடனும் இச் சபையால் நடாத்தப்படுகின்றது. வெளிநாட்டு நிபுணர்கள் உட்பட 13 நிபுணர்கள் இத்திட்டத்தில் கடமையாற்றுகின்றனர்.

ஆரம்ப வருடச் செலவுகளுக்கென சுவீடன் தேச கூட்டுறவு 'சீடா' நிறுவனம் 3,83,564 ரூபாவை வழங்கியுள்ளது. ஸ்ரீ இலங்கா தேசியக் கூட்டுறவுச் சபை 72,685 ரூபாவை வழங்கியுள்ளது.

கூட்டுறவுக் கல்வியை புதிய கல்வி முறைகளுடன் இணைத்துப் பயனுள்ள கல்வி முறையாகச் செயற்படுத்துவதற்குரியவர்களைத் தோற்றுவிப்பதே இக் கல்வியின் நோக்கம். கற்பித்தல் முறைகளில் கட்புல செவிப்புல சாதனங்களைப் பயன்படுத்தல், புதிய கல்வி முறைகளைப் புகுத்தல், கூட்டுறவு பற்றிய சரியான கருத்துணர்வுகளை கூட்டுறவில் தொடர்புள்ள சகலருக்கும் ஏற்படுத்தல் போன்றவையே இத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

பொல்கொல்லைக் கூட்டுறவுக் கலாசாலையுட்பட கண்டி, கொழும்பு, குருநாகல், காலி, கம்பஹா, யாழ்ப்பாணம் ஆகிய கூட்டுறவுப் பாடசாலைகளில் இத் திட்டத்தை நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கு ஆறு பொதுப் பாடத்திட்டங்களும் விசேட பாடத்திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன. இத் திட்டத்தின் நிபுணர்கள் பல்வேறு கூட்டுறவுப் பாடசாலைகளுக்கும் விஜயம் செய்து அவற்றினை விருத்திசெய்வதற்கான சிபாரிசுகளைச் செய்வர்.

கூட்டுறவு மகளிர் பாவனையாளர் திட்ட உத்தியோகத்தர்களுக்கு கட்புல, செவிப்புல பாடத்திட்டங்கள் மூலம் போதிக்க வேண்டிய முறைகளைப் பற்றிய பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. காலி, கொழும்பு, யாழ்ப்பாண மாவட்டங்களின் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்களைப் பயிற்றுவிப்பது தொடர்பான விடயங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கூட்டுறவு இலங்கையில் ஆரம்பித்த காலந்தொட்டு இத் திட்டம் ஆரம்பிக்கும் வரை கூட்டுறவு ஆசிரிய பயிற்சி பெறுதவர்களால் அவர்கள் எண்ணப்படி கல்வி புகட்டப்பட்டது. திட்டமிடப்பட்டு பயிற்சி பெற்றவர்களால் அளிக்கப்படுங் கல்வி கூட்டுறவு இயக்கத்தை வளர்க்க உதவி செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுறவு மகளிர் பாவனையாளர் தகவல் கல்வித் திட்டம்

இத் திட்டத்தை சுவீடன் சர்வதேச அபிவிருத்தி அதிகார சபை (சீடா) சுவீடன் கூட்டுறவு நிலையம், சுவீடன் பாவனையாளர் வட்டங்களின் சமாசம் என்பவற்றின் உதவியுடன் சர்வதேச கூட்டுறவு இணைப்பு தென்கிழக்காசிய வலையக் காரியாலயத்தின் ஆலோசனையுடன் ஸ்ரீ இலங்கா தேசிய கூட்டுறவு சபை நடாத்துகின்றது.

திட்டத்துக்கு வேண்டிய நிதியில் சுவீடன் தேச கூட்டுறவு நிறுவனங்கள் 15,00,000 ரூபாவும் ஸ்ரீ இலங்கா தேசிய கூட்டுறவுச் சபை 10,00,000 ரூபாவும் வழங்கும். சுவீடன் கூட்டுறவு நிறுவனங்கள் பின்வரும் உதவிகளையும் வழங்கும். அவையாவன.

1. சர்வதேச நிபுணர்களின் சேவை
2. கட்புல, செவிப்புல சாதனங்கள்
3. மேலதிக விளக்கத்துக்குத் தேவையான கருவிகள்
4. பிரதி பண்ணல் இயந்திரம் (டுப்பிளிக்கேற்றிங்)
5. டீசல் மோட்டார் வாகனம்
6. இத்திட்டத்தில் ஈடுபடும் ஸ்ரீ இலங்கா தேசியக் கூட்டுறவுச் சபை ஊழியரின் வேதனத்தில் 25 வீதமும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் இத்திட்டத்திலீடுபடுகின்ற ஊழியர்களின் வேதனத்தையும் சுவீடன் தேசத்துக் கூட்டுறவு நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ளும்.

**நோக்கங்கள்**

1. பாவனையாளர்களுக்கான தகவல்கள், போஷாக்கு என்பனவற்றின் முக்கியத்துவம் பற்றிப் பாவனையாளர்களுக்கு விசேடமாக இல்லத்தரசிகளுக்கு உணர்த்தல்.
2. உணவு வகைகளின் தரம் பற்றிய விடயத்தில் கவனஞ் செலுத்துதல்.
3. பாவனையாளர்களைப் பாதுகாப்பதில் கூட்டுறவு எந்த வகையில் ஒத்துழைக்க முடியுமென்பதைப் பற்றி எடுத்துக் காட்டல்.

இந் நோக்கங்களை அடையும் பொருட்டுப் பின்வருவனவற்றைச் செய்தல்.

1. சுகநலம், போஷாக்கு, குடும்பப் பொருளாதாரம் என்பவற்றில் அறிவினைப் பெற வசதி செய்தல். பாவனையாளர்களுக்கான பொதுப் பொருளாதார அறிவை ஏற்படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அடிப்படை போஷாக்குடன் கூடிய உணவு வகைகளைத் திரட்டல். அவற்றைப் பிரபல்யப்படுத்தல்.

3. பாவனையாளர்களுக்குக் கல்வியூட்டுவதற்கான, உணவு தயார்படுத்தும் மாதிரி சமையலறை, ஆய்வுகூடம் என்பவற்றை நடத்துதல் தொடர்பான சாத்தியக் கூறுகளைத் தேடுதல்.

4. பாவனைப் பொருள்கள், பாவனையாளர்களுக்கான சேவை என்பவை பற்றித் தேடுதல் புரிதல். அவற்றின் பலாபலன்களைப் பிரபல்யப்படுத்தல்.

5. பாவனையாளர் கல்வி, வேலைத்திட்டத்தில் பயன்படுத்திக் கொள்வதற்கான தகவல்களைப் பிரசுரங்களாக வெளியிடல்.

6. பாவனையாளர் கல்வி அங்கத்தவர் தொடர்பு வேலைத் திட்டங்களில் இல்லத்தரசிகளின் ஆர்வத்தினை அதிகரித்தல்.

7. கூட்டுறவு பாவனையாளர் விடயங்களை ஊக்குவித்தல் தொடர்பாக பங்கு கொள்ளுதல்.

இத்திட்டம் 1979-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, ஆரம்பத்தில் கண்டி மாவட்டத்தில் உள்ள 5 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவு செய்யப்பட்டு அமுல் நடத்தப்பட்டது. 1980-ஆம் ஆண்டு இலங்கை முழுவதிலுமுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் 10 தெரிவு செய்யப்பட்டு இத்திட்டம் அமுல் நடத்தப்படுகின்றது. 1980-ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட சங்கங்களில் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் ஒன்றுகும். இத்திட்டங்களை அமுல் நடாத்த இரண்டு ஆண்டுகளுக்கு சுவீடன் நாட்டுக் கூட்டுறவு நிறுவனங்கள் உதவி அளிக்கும். பின்பு ஸ்ரீ இலங்கா தேசியக் கூட்டுறவுச் சபையின் ஆதரவுடன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்ந்து இத்திட்டத்தினைச் செயற்படுத்தும்.

தெரிவு செய்யப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகள் தோறும் கூட்டுறவு மகளிர் பாவனையாளர் தகவல் கிளைக் குழுக்களை அமைத்து மேற்படி நோக்கங்கள் செயற்படுத்தப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7: VI சர்வதேச நிறுவனங்கள்

## சர்வதேசக் கூட்டுறவு இணைப்பு நிறுவனம்

கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியின் சின்னமே சர்வதேசக் கூட்டுறவு இணைப்பு நிறுவனமாகும். கூட்டுறவு இயக்கம் பரவி யிருந்த நாடுகள் ஒன்று சேர்ந்து 1895-ம் ஆண்டு இந்நிறுவனத்தை உருவாக்கின. காலத்துக்குக் காலம் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச் சிக்கேற்ப இந் நிறுவனமும் வளச்சியடைந்து கொண்டே வந்தது. இதன் தலைமை அலுவலகம் இங்கிலாந்தில் உண்டு. இதன் செயற் பாடுகள் அதிகரிக்க அவற்றை இலகுவாக்கவும் விரிவாக்கவும் பரந்த அளவில் செயற்படுத்தவும் பிராந்திய அலுவலகங்களை ஆரம்பித்தது, தென்கிழக்கு ஆசியாவில் உள்ள நாடுகளின் செயற்பாடுகளைக் கவ னிக்கும் பொருட்டு புதுடில்லியில் (இந்தியா) ஒரு பிராந்திய அலு வலகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆபிரிக்க நாடுகளின் செயற்பாடு களைக் கவனிப்பதற்காக தன்சனியாவில் (Tanzania) பிராந்திய அலு வலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தில் சுமார் 67 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இந்நாடுகளில் உள்ள கூட்டுறவுத் தேசிய நிறுவனங்களின் ஒவ் வொரு பிரதிநிதிகள் இந்நிறுவனத்தின் பொதுச்சபையில் அங்கம் வகிப்பார்கள். இப்பிரதிநிதிகள் சுமார் 25 கோடி கூட்டுறவாளர்க ளைப் பிரதிநிதித்துவப் படுத்தி அங்கம் வகிக்கிறார்கள். இப்பிரதி நிதிகள் காலத்துக்குக் காலம் கூட்டுறவு இயக்கம் சம்பந்தமான கருத்துக்களைப் பரிமாறவும், கூட்டுறவு இயக்கத்தை உலக ரீதியாக அபிவிருத்தி செய்வதற்குரிய திட்டங்களைத் தயாரித்துச் செயற் படுத்தவும் பல்வேறு இடங்களில் கூடுவார்கள்.

### நோக்கங்கள்

1. கூட்டுறவுக் கொள்கைகளை அதன் இலட்சியத்தில் இருந்து மாருத வகையிலும் கால மாற்றங்களின் தேவைகளை அனு சரித்தும் பல்வேறு நாடுகளின் தனித்தன்மை வாய்ந்த கலாச்சாரப் பண்பாடுகளுக்கு முக்கியத்துவமளித்தும் பொதுக் கொள்கைகளை உருவாக்கி சர்வதேச ரீதியான அங்கீகாரத்தைப் பெறல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அங்கத்துவ நாடுகளிலுள்ள கூட்டுறவு இயக்கம் சம்பந்த மான புள்ளி விபரங்களையும் தகவல்களையும் காலந்தோறும் சேகரித்தல்

3. அங்கத்துவ நாடுகளுக்குத் தேவைப்படும் கூட்டுறவு இயக் கச் செயற்பாடுகளுக்குத் தேவையான நிபுணத்துவ ஆலோ சனைகளைக் காலத்துக்குக் காலம் வழங்கல்.

4. கூட்டுறவுக் கல்வி, பிரசாரம், கருத்தரங்கு என்பவற்றுக் குரிய தகுந்த திட்டங்களைக் காலத்துக் காலம் தயாரித் துச் செயற்படுத்தல்.

5. உறுப்புரிமை நாடுகளுக்கிடையே தொடர்புகளை வலுமிக்க தாக ஏற்படுத்துவதற்குரிய முயற்சிகளை எடுத்தல்.

6. வளர்ச்சியுற்ற நாடுகளின் கூட்டுறவு நிறுவனங்களின் பொருளாதார உதவியுடன் வளர்ச்சியுற்று வரும் நாடுக ளில் கூட்டுறவு இயக்க அபிவிருத்திக்குரிய திட்டங்களைத் தயாரித்து செயற்படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு உதவும் நிறுவனங்கள்

கூட்டுறவு அமைப்பாக இல்லாதுவிடினும் கூட்டுறவு இயக்கத்தை வளர்ப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் செயற்றிட்டங்களை நிறைவேற்றுவதற்கும் உதவும் பல்வேறு வகையில் உதவும் பல்வேறு நிறுவனங்கள் உள்ளன. அவற்றுள் சிலவற்றைப் பற்றிய விபரங்கள் தரப்படுகின்றன,

## 1. கூட்டுறவு முகாமைச் சேவைகள் நிலையம்

ஸ்ரீ இலங்கா தேசிய கூட்டுறவுச் சபை, சர்வதேச கூட்டுறவு இணைப்பு நிறுவனம் என்பவற்றின் முயற்சியால் சுவீடன் தேசக் கூட்டுறவு நிறுவனங்கள், சர்வதேச தொழில் நிறுவனம் ஆகியவற்றின் நன்கொடைகளோடு இலங்கை அரசின் ஆதரவுடன் 1973-ம் ஆண்டு கூட்டுத்தாபன விசேட சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது.

இலங்கையிலுள்ள கூட்டுறவு நிறுவனங்களின் முகாமைத் திறன்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் அத்நிறுவனங்களின் உறுப்பினர்கள் சேவைகளின் உச்சப்பயனைப் பெற உதவலாகும். இந்நோக்கத்தை அடையும் பொருட்டுப் பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்ளும். அவையாவன,

1. கூட்டுறவு நிறுவனங்களில் முகாமைச் சீர்திருத்தத்தை ஏற்படுத்தல்.
2. கூட்டுறவு நிறுவனங்களிலுள்ள முகாமைத் தன்மைகளை ஆராய்ந்து திருத்தங்கள் பற்றிய ஆலோசனைகளை வழங்கல்.
3. புதிய முகாமைத் திட்டங்களைத் தயாரித்து வெளிப்படுத்தல்.
4. சிறந்த முகாமைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல். நடைமுறைப்படுத்தலுக்கு வேண்டிய ஆலோசனைகள் வழங்கல்.
5. முகாமைச் சேவைகளை வழங்கல்
6. முகாமைத்துறை பற்றிய பிரசுரங்களை வெளியிடல்
7. முகாமைக் கல்விக்கு ஏற்பாடு செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. முகாமை மட்டத்திலுள்ள ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்கும் ஒழுங்குகளைச் செய்தல்.

9. கூட்டுறவு நிறுவனங்களில் முகாமைத் திறனை வளர்க்கக் கூடிய ஏனைய கருமங்களை மேற்கொள்ளல்.

பணிப்பாளர் சபை பரந்த அனுபவமுள்ளவர்களையும் கூட்டுறவுத் துறையில் அனுபவமுள்ளவர்களையும் ஏனைய நிறுவன நடவடிக்கைகளுடன் இந்நிறுவனத்தின் நடவடிக்கைகளை இணைக்கக் கூடியவர்களையும் கூட்டுறவு இயக்கத்தைப் பண்படுத்தக் கூடியவர்களையும் கொண்டுள்ளது. பணிப்பாளர் சபை ஏழு உறுப்பினர்களைக் கொண்டது. விபரம் பின்வருமாறு:

1. அமைச்சரால் நியமிக்கப்பட்ட ஒரு தலைவர்
2. கூட்டுறவு ஆணையாளர்
3. மக்கள் வங்கி உத்தியோகத்தர்
4. கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தின் உத்தியோகத்தர்
5. ஸ்ரீ இலங்கா சந்தைப்படுத்தல் சங்கத் தலைவர்
6. கமத்தொழில் அபிவிருத்திப் பணிப்பாளர்
7. முகாமை அபிவிருத்தி உற்பத்திப் பணிப்பாளர்

பணிப்பாளர் சபையை விட ஆலோசனைச்சபை ஒன்றுமுண்டு.

## இதுவரை நிறைவேற்றிய செயல்கள்

1. கியூ (வரிசை) முறையை ஒழிக்குந் திட்டம்
2. விநியோக முறையில் திருத்தங்கள் செய்தமை
3. முகாமை சம்பந்தப்பட்ட கருத்தரங்குகள்
4. முகாமை சம்பந்தப்பட்ட பயிற்சி வகுப்புக்கள்
5. முகாமை சம்பந்தப்பட்ட துண்டுப்பிரசுரங்கள்
6. விற்பனைச் சிட்டையில் சீர்திருத்தத் திட்டம்
7. பின்வருவனவற்றில் நூல்கள் வெளியிட்டமை
   - (அ) வரவு செலவுக் கட்டுப்பாடு
   - (ஆ) ஊக்க நிதிக் கொடுப்பனவு
   - (இ) பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமை அபிவிருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு உணவுக் கூட்டுறவு அமைச்சின் கீழ் இயங்கி வருகின்றது. 1972-ம் ஆண்டு 12-ம் இலக்கக் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் இதற்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டது. இக் குழுவுக்குத் தலைவர், செயலாளர், உதவிச் செயலாளர், உறுப்பினர்கள் ஆகியோரை அமைச்சு நியமிக்கும். கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர் நியமனம், பதவி உயர்வு, சம்பளம், லீவு, ஒழுக்காற்று விசாரணை, தண்டனை போன்ற விடயங்களை ஒழுங்கு படுத்தல், மேற்பார்வை செய்தல், பிரச்சனைகளுக்குத் தீர்வு காணல், ஆகிய கடமைகளைச் செய்கின்றது. இதன் பிரமாணங்களின் விபரங்கள்பற்றி இலங்கைக் கூட்டுறவுச் சட்ட மூலங்கள் என்னும் அத்தியாயத்தில் 62-ஆம் பக்கத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

## 3. உணவுத் திணைக்களம்

இதுவும் உணவுக் கூட்டுறவு அமைச்சின் கீழ் இயங்குகின்றது, இரண்டாம் மகாயுத்த காலந் தொடக்கம் அரிசி, மா, சீனி ஆகிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதில் தனியுரிமை பெற்றிருந்தது. இப்போது தனியாருக்கும் இப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது. ஆயினும் இன்னும் இப் பொருள்களில் நாட்டில் பற்றுக்குறை ஏற்படாமல் பாதுகாக்கும் பொருட்டுப் போதிய அளவு பொருள்களை இறக்குமதி செய்து பண்டகசாலைகளில் சேமித்துக் காலத்துக்குக் காலம் விநியோகிக்கின்றது.

நுகர்ச்சிச் சேவைகளை அளிக்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான அளவு இப்பொருள்களைக் காலத்துக்குக் காலம் வழங்குகின்றது. இவ்வுணவுப் பொருள்களைக் குறுங்காலக் கடன் அடிப்படையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குகின்றது. அத்துடன் உணவு முத்திரைகளைச் சேகரிக்கும் அதிகாரத்தையும், அவற்றைக் கொண்டு உணவுப் பொருள்களின் கடன்களையும் தீர்க்கும் ஒழுங்குகளையும் ஏற்படுத்தியுள்ளது. உத்தரவு பெற்ற உணவுப் பொருள் வியாபாரிகளுக்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இப் பொருள்களைக் குறுங்காலக் கடனுகப்பெற்று உணவு முத்திரைகளுக்கு விற்பனை அல்லது அம் முத்திரைகளைக் கொண்டு கடனைத் தீர்ப்பதற்கும் வசதி செய்துள்ளது,

## 4. கூட்டுறவு அபிவுருத்தித் திணைக்களம்

விவசாயப் பகுதித் தலைவரே கூட்டுறவுச் சங்கங்களின் பதிவையும் மேற்பார்வையையும் 1930-ம் ஆண்டுவரை செய்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயப் பகுதித் தலைவர் பல பொறுப்புகளுக்கு மத்தியில் கூட்டுறவு சம்பந்தமான வேலைகளையும் கவனித்தமையால் கூட்டுறவு இயக்கம் போதிய அளவு வளர்ச்சி அடையவில்லை. எனவே 1930-ம் ஆண்டில் விவசாயப் பகுதியில் இருந்து கூட்டுறவுத்துறை தனியாக்கப்பட்டு புதியதொரு இலாகா உருவாக்கப்பட்டது. கூட்டுறவுப் பதிவாளர் (ஆணையாளர்) ஒருவர் தனியாக நியமிக்கப்பட்டு கூட்டுறவு இயக்கத்தை வளர்க்கும் பொறுப்புக்களும் அதிகாரங்களும் சட்டமூலம் அவருக்கு அளிக்கப்பட்டன. கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கேற்ப காலத்துக்குக் காலம் கூட்டுறவு இலாகாவும் விருத்தியும் வளர்ச்சியும் அடைந்தது.

கூட்டுறவுப் பதிவாளரின் (ஆணையாளர்) கீழ் பல்வேறு பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளன. 26 மாவட்டங்களிலும் கூட்டுறவு இலாகாவின் காரியாலங்கள் அமைக்கப்பட்டுக் கூட்டுறவு இயக்கம் வளர்ச்சியடைய முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

பின்வரும் முக்கிய கடமைகளைக் கூட்டுறவு இலாகா இப்போது ஆற்றி வருகின்றது. அவையாவன:

1. கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்தல்
2. கூட்டுறவுச் சங்கங்களை மேற்பார்வை செய்தல்
3. எண்பார்வை செய்தல்
4. சங்கங்களைப் பரிசோதனை செய்தல்
5. சங்கங்களில் விசாரணை செய்தல்
6. நிருவாகத்துக்கு வழிகாட்டல்
7. நிருவாகத்துக்கு ஆலோசனைகள் வழங்கல்
8. கூட்டுறவுக் கல்வி, பிரச்சாரத்துக்கு உதவல்
8. கூட்டுறவு ஊழியர் பயிற்சிக்கு உதவல்
10. கூட்டுறவுச் சட்டம், விதி, துணைவிதிகள் பற்றி விளக்கம் கொடுத்தல்
11. கூட்டுறவில் அரசின் கொள்கைகளைச் செயற்படுத்த நடவடிக்கைகள் எடுத்தல்
12. கூட்டுறவுச் சங்கங்களின் அபிவிருத்திக்கும் ஒழுங்குக்கும் தேவையான ஏனைய கருமங்களை மேற்கொள்ளல்

## 5. கூட்டுறவுக் கல்லூரி

1940-ம் ஆண்டுக்குப் பின் கூட்டுறவு இயக்கத்தில் ஏற்பட்ட திடீர் வளர்ச்சி கூட்டுறவு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்தது. கூட்டுறவு உத்தியோகத்தர்கள் தங்கள் கட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைகளைச் சரியாகவும் திறமையாகவும் செயலாற்ற அவர்களுக்குத் தகுந்த கல்வியும் பயிற்சியும் அளிக்க வேண்டும் என்பதை உணர்ந்த கூட்டுறவு இலாகா 1943-ம் ஆண்டில் கண்டி மாவட்டத்திலுள்ள பொல்கொல்லை என்னுமிடத்தில் கூட்டுறவுக் கல்லூரியொன்றை ஆரம்பித்தது. இதற்குப் பொறுப்பாக உதவி ஆணையாளர் ஒருவரையும் நியமித்தது. ஆரம்பத்தில் கூட்டுறவுச் சங்க ஊழியருக்கும் கூட்டுறவுப் பரிசோதகர்கள், உப பரிசோதகர்கள் ஆகியோருக்குப் பயிற்சியளித்தது. நூல்நிலைய வசதிகளும், விடுதி வசதிகளும் இங்குண்டு. தற்போது கூட்டுறவு உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வகுப்புக்களையும் கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கான சாதாரண - உயர்தரப் பரீட்சைகளையும் நடாத்துகின்றது. கூட்டுறவுப் பயிற்சியாளர்களுக்குத் தேவையான நூல்களையும் காலத்துக்குக் காலம் வெளியிடுகின்றது. இலங்கையில் கூட்டுறவுக் கல்விப் பயிற்சியின் தலைமை நிறுவனமாக விளங்குகின்றது. பொதுவாகக் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கும் சிறப்பாகக் கூட்டுறவுக் கல்வியின் விருத்திக்கும் தேசிய ரீதியில் தன்னாலான பங்கை அளிக்கின்றது.

## 6. கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் (C. W. E.)

கூட்டுறவு நுகர்வோர் சங்கங்களின் வளர்ச்சி காரணமாக அவற்றின் தொழிற்பாடுகளுக்கு உதவும் நோக்கோடு கூட்டுறவுப் பண்டகசாலைச் சமாசங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இவை கூட்டுறவு நுகர்வோர் சங்கங்களுக்கு வேண்டிய பொருள்களைக் கொள் முதல் செய்து கொடுத்து உதவின. இச் சமாசங்களுக்குத் தேவையான பொருள்களை இறக்குமதி செய்து கொடுப்பதற்கு ஒரு நிறுவனம் தேவையென உணர்ந்த கூட்டுறவு இலாகா 1943-ம் ஆண்டு இந் நிறுவனத்தை ஆரம்பித்தது.

மனித வாழ்க்கைக்கு அத்தியாவசியம் தேவையான உணவு, உடை போன்ற பொருள்களை இறக்குமதி செய்து கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகஞ் செய்வதே இதனுடைய முக்கிய நோக்கமாக விளங்கியது. ஆரம்ப காலத்தில் நாடு முழுவதும் சுமார் 38 விநியோக நிறுவனங்களை ஆரம்பித்து தன்து தொழிலை மேற் கொண்டது. இந்நிறுவனத்தின் தொழில் முயற்சிகள் அதிகரித்தமையால், அவற்றை விரைவில் நிறைவேற்றுவதும், அவற்றால் எழும் பிரச்சினைகளுக்கு உடன் தீர்வு காண்பதும் இலாகா வழி நிருவாகத்தால் இயலாத காரியம் என்பதை அரசு உணர்ந்து ஒரு வியாபார நிறுவனமாக மாற்றியமைக்க வேண்டுமெனத் தீர்மானித்தது.

1949-ம் ஆண்டில் 47-ம் இலக்கக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் பிரகாரம் இதுவொரு வியாபாரக் கூட்டுத்தாபனமாக மாற்றப்பட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டது. பழைய நிறுவனத்தின் சொத்துக்களில் சுமார் 50 வீதம் நன்கொடையாகவும் மீதிச் சொத்துக்கள் 30 வருடகாலத் தவணைக் கடனில் $1\frac{1}{2}$ வீத வட்டியுடன் கட்டித் தீர்க்கும் ஒழுங்குடன் இந் நிறுவனத்துக்கு மாற்றப்பட்டது.

ஆரம்பத்தில் பொருள்களை இறக்குமதி செய்து விநியோகிக்கும் நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டாலும் கூட்டுத்தாபனமாக மாற்றமடைந்ததும் அதன் நோக்கங்களும் விரிவுபடுத்தப்பட்டன. அவையாவன,

1. இறக்குமதி, ஏற்றுமதித் தொழிலில் ஈடுபடல்
2. மொத்த வியாபாரத்தை மேற்கொள்ளல்
3. நாட்டின் பலபாகங்களிலும் விற்பனை நிலையங்களை நிறுவிச் சில்லறை வியாபாரத்தினை மேற்கொள்ளல்
4. உள்ளூர் உற்பத்தித் தொழில்களுக்கு முக்கியமாக விவசாய, கைத்தொழில் உற்பத்திகளுக்கு ஆதரவு அளித்தல்.

இக் கூட்டுத்தாபனத்தை நிருவகிப்பதற்காக ஒரு தலைவரையும் இயக்குனர் சபை உறுப்பினர்களையும் மந்திரியவர்கள் நியமிப்பார்கள். இவ்வியக்குனர் சபை ஏழு பேருக்கு மேற்படாமலும் ஐந்து பேருக்குக் குறையாமலும் உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும். இதில் மூன்று உறுப்பினர்கள் ஸ்ரீ இலங்கா தேசியக் கூட்டுறவுச் சபையின் ஆலோசனைக் கிணங்க நியமிக்கப்படுவர்.

இதன் தொழிற்பாடுகள் அதிகரித்தமையால் இது பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இதன் தொழிற்பாடுகள் நிகழ்கின்றன. ஆயினும் 'இதற்கு ஒப்படைக்கப்பட்ட தொழிற்பாடுகளைப் பூரணமாகவும் திருப்திகரமாகவும் நிறைவேற்றுவதில் தாமதங்களும் நடைமுறைக் கஷ்டங்களும் இருந்தமையால் சில தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கெனக் குறிப்பிட்ட சில நிறுவனங்களை அரசு கூட்டுத்தாபன அமைப்பில் உருவாக்கியது அவையாவன:

1. சலுசலா
2. ஸ்ரீலங்கா வர்த்தகக் கூட்டுத்தாபனம்

சலுசலா புடைவைகளை இறக்குமதி செய்து விநியோகிப்பதிலும், உள்ளூர் உற்பத்திப் புடைவைகளைக் கொள்முதல் செய்து சந்தைப்படுத்துவதிலும் பொறுப்புடையதாக விளங்குகின்றது. இறக்குமதி செய்யப்பட்ட புடைவைகளில் பெரும்பகுதியை கூட்டுறவுச் சங்கங்களுக்கூடாகவே விநியோகம் செய்கின்றது. எனவே இதுவும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவும் நிறுவனமாகவே விளங்குகின்றது. ஸ்ரீ இலங்கா வர்த்தகக் கூட்டுத்தாபனத்துக்கு மோட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டார் வாகனங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் போன்ற குறிப் பிட்ட சில பொருள்களில் இறக்குமதி செய்து விநியோகிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

## 7. மக்கள் வங்கி

கூட்டுறவுச் சமஷ்டி வங்கி, கூட்டுறவு மாகாண. மாவட்ட வங் கிகளின் குறைபாடுகளைக் கொண்ட அறிக்கையொன்றை 1954-ம் ஆண்டு மத்திய வங்கி ஆளுனர் நிதிமந்திரிக்கும், கூட்டுறவுத் துறைக்குப் பொறுப்பாக இருந்த மந்திரிக்கும் கொடுத்தார். முக் கியமாக இவ்வறிக்கையில் கூட்டுறவு வங்கிகளின் நிதிப் பற்றாக் குறையினால் அவை தமது வங்கிச் சேவைகளைத் திறம்பட நடாத்த முடியவில்லை என்பதும், போதிய நிதிவசதிகளைப் பெறக்கூடிய முறை யில் இவ்வங்கிகள் மறுசீரமைக்கப்பட வேண்டுமென்பதும் ஆணித்தர மாகச் சுட்டிக்காட்டப்பட்டது. இவ்வறிக்கையின் அடிப்படையில் போதிய நிதிவசதிகளைப் பெறக்கூடியதும், நாட்டின் பொருளா தார வளர்ச்சியில் பங்குகொள்ளக் கூடியதும், நாட்டின் பல பாகங் களிலும் கிளைகளைக் கொண்டதுமான கூட்டுறவு அபிவிருத்தி வங்கி யொன்றை நிறுவ மந்திரியவர்கள் விரும்பினார். ஆயினும் அத்திட் டம் காலதாமதமாகியது. இக்காலகட்டத்தில் வங்கிகளின் சேவைத் தன்மையைப் பற்றி அரசு ஆராய்ந்தது. இந்நாட்டில் இருந்த வணிகவங்கிகளில் ''இலங்கை வங்கி''யைத் தவிர ஏனைய வங்கிகள் யாவும் வெளிநாட்டு வங்கிகளாக இருந்தன. இலங்கை வங்கியும் வியாபாரத் தொழில் முயற்சிகளுக்கு குறுங்காலக் கடன்களை வழங்கி இலாபமீட்டும் நோக்குடன் இயங்கியதேயன்றி நாட்டின் உற்பத்தித்துறை வளர்ச்சிக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் உத வக்கூடிய முறையில் அக்காலகட்டத்தில் இயங்கவில்லை.

கூட்டுறவுத்துறைக்கென மட்டும் வரையறுக்கப்பட்ட தனிக் கூற்று வங்கி முறை கூட்டுறவு இயக்கத்தின் தேவைகளைப் பூரண மாகப் பூர்த்தி செய்யக்கூடிய முறையில் இயங்க முடியாது எனக் கருதப்பட்டது. கூட்டுறவு இயக்கத்துக்கென சேவையாற்ற விசே டத்துவம் பெற்ற, ஆனால் அதேவேளையில் மேற்படி இயக்கத்துக்குப் போதிய அளவு நிதி வழங்கவும், அத்தகைய கடன் வசதிகளை அளிப்பதன் மூலம் ஏற்படக் கூடிய ஆபத்துக்களைத் தாங்கிக் கொள்வதற்குப் பலம் வாய்ந்ததுமான ஒரு வங்கி தேவையென அரசு கருதியது. கூட்டுறவுத் துறைக்கு முக்கியத்துவமளிக்கும் அதே நேரத்தில் ஏனைய வணிக முயற்சிகளையும் கொண்ட வங்கியொன்றை ஆரம்பிக்க முயற்சிகள் எடுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவுச் சமஷ்டி வங்கியை 1961-ம் ஆண்டு மக்கள் வங்கியாக அரசு மாற்றியமைத்தது. அதன் பங்குகளைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை செய்தது. இதே வேளையில் கூட்டுறவு மாகாண வங்கிகள் இயங்கிக் கொண்டிருந்தன. அவற்றைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தைத் தன்னகத்தே கொண்டிருந்தது. படிப்படியாக கூட்டுறவு மாகாண வங்கிகளைகளைத் தன்னுடன் இணைத்துக் கொண்டது.

இதன் அனுமதித்த மூலதனம் 60 கோடி ரூபாவாகும். இது பங்கொன்று 50 ரூபா வீதம் பிரிக்கப்பட்டுள்ளது. இப்பங்குகளில் 50 வீதத்தை அரசுக்காகத் திறைசேரிக் காரியதரிசி கொள்முதல் செய்துள்ளார். மீதிப் பங்குகள் கூட்டுறவுச் சங்கத்துக்கு விற்பனை செய்யப்படும். கூட்டுறவுச் சங்கங்கள் விரும்பினால் திறைசேரிக் காரியதரிசி கொள்முதல் செய்த பங்குகளை விலைகொடுத்து வாங்க முடியும். இதன் மூலதனத்தை அதிகரிப்பதாயின் பாராளுமன்றச் சட்டத்தின் மூலமே அதிகரிக்க முடியும். 1961-ம் ஆண்டு கூட்டுறவுச் சமஷ்டி வங்கியின் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் ஏற்றுக் கொண்டது. கூட்டுறவு மாகாண வங்கிகளின் சொத்துக்களும் பொறுப்புக்களும் அவை இணைக்கப்படும்போது மக்கள் வங்கியால் பொறுப்பேற்கப்பட்டன. 1970-ம் ஆண்டுடன் சகல கூட்டுறவு மாகாண வங்கிகளும் மக்கள் வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ளன.

## முக்கிய நோக்கங்கள்

1. கூட்டுறவு இயக்கத்தை இலங்கையில் வளர்ப்பதற்குரிய சகல உதவிகளையுஞ் செய்தல்
2. வங்கிப் பழக்கத்தைக் கிராம மக்களிடையே பரவச் செய்தல்
3. விவசாயத்துறை, கைத்தொழில் துறையில் ஈடுபட்டவர்களுக்கு வேண்டிய நிதிவசதிகளை இலகுவான முறையில் பெற உதவல்

## கூட்டுறவுச் சங்கங்களுக்குச் செய்யும் சேவைகள்

1. கூட்டுறவுச் சங்கத்திற்குச் செய்யும் சேவைகள்

   1. கூட்டுறவுச் சங்கங்களின் வைப்புக்களைப் பெறல்
   2. தேவையான குறுங்கால, இடைக்கால, நீண்டகாலக் கடன்களை வழங்கல்
   3. பிற நிறுவனங்களில் கடன் பெறுவதற்கு உத்தரவாதமளித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பெறுமதியான ஆவணங்கள், சொத்துக்களுக்கு பாதுகாப்புச் சேவையளித்தல்
5. கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிகர்த்தாவாகக் கடமையாற்றல்

2. இராமிய வங்கிச் சேவைகள்

கிராமிய வங்கியைப் பற்றிய பகுதியில் தரப்பட்டுள்ளது.

3. ஏனைய சேவைகள்

1. ஆலோசனைச் சேவைகளை வழங்கல்
2. கடன் மேற்பார்வைக்கு உதவல்
3. தொழில்நுட்ப அறிவுரைகள் வழங்கல்
4. சாத்தியக் கூற்று அறிக்கைகளை மதிப்பீடு செய்தல்

மக்கள் வங்கியின் 50 வீதத்துக்கதிகமான பங்குகளைப் பெற்ற போதும் அதன் நிருவாகப் பொறுப்புக்களில் கூட்டுறவுச் சங்கங்களுக்குரிய பங்கு அளிக்கப்படவில்லை. நிருவாகப் பொறுப்பில் அரசால் நியமிக்கப்படும் பணிப்பாளர்களின் ஆதிக்கமே மேலோங்கி இருக்கின்றது.

இதன் நிருவாகப் பொறுப்பு எட்டுப் பணிப்பாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவர்களில் ஒருவரையே தலைவராக அமைச்சர் நியமிப்பார். அபிவிருத்தித் திட்டமிடல், நிருவாகம், பரிசோதனை, வெளிநாட்டு விடயங்கள், உள்நாட்டுக் கடன், இயக்கம், சேவை, கூட்டுறவு அபிவிருத்தி, கடன் அறவிடல், ஆளணிப் பகுதி, என்னும் பகுதிகளாகப் பிரித்துச் சேவைகளைத் திறம்பட ஆற்றுகின்றது. இலங்கை முழுவதும் 16 பிராந்திய தலைமைக் காரியாலயங்களையும் 400க்கு மேற்பட்ட கிளைகளையும் கொண்டு மக்களுக்கு வங்கிச் சேவையாற்றுகின்றது.

## 8. ஏனைய நிறுவனங்கள்

**விற்பனைத் திணைக்களம் :-** கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உறுப்பினர்களிடமிருந்து விளைபொருள்களை (காய்கறி, பழவகை, வெங்காயம், மிளகாய்) கொள்முதல் செய்து உதவுகிறது.


**நெற் சந்தைப்படுத்துஞ் சபை :** கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் நெல்லைக் கொள்வனவு செய்கின்றது.

உற்பத்தியில் ஈடுபடுகின்ற ஏனைய கூட்டுத்தாபனங்களும் பொருள் விநியோகத்தில் முகவர்களாக நியமிக்கின்றது. அல்லது பொருள் விநியோகத்தில் முன்னுரிமை வழங்குகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. கூட்டுறவில் அரசின் அதிகாரப் பரவல்

**அதிகாரப் பரவல் அமைப்பு :**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைப்பு முறை விளக்கம்

## பாராளுமன்றம்

ஒரு ஜனநாயக நாட்டில் அதிகாரத்தின் பிறப்பிடம் பாராளுமன்றமேயாகும். சட்டத்தின் மூலம் பாராளுமன்றம் அதிகாரங்களை உருவாக்கி அவற்றைச் செயற்படுத்துவதற்காக உரியவர்களுக்கு அவ்வதிகார தத்துவங்கள் சிலவற்றை வழங்குகின்றது. சில அதிகாரங்களைத் தானே வைத்துக் கொள்ளுகின்றது. அதிகார தத்துவங்களைச் சட்டத்தின் மூலம் அல்லது சட்டத்தில் கூறப்பட்ட வழிமுறைகளின் மூலம் வழங்குகின்றது.

கூட்டுறவுத்துறையைப் பொறுத்தமட்டில் சட்டத்தின் மூலம் மந்திரிக்கும் ஆணையாளருக்கும் (பதிவாளர்)) அவர்களால் அதிகாரம் அளிக்கப்பட்டவர்களுக்கும் சில அதிகார தத்துவங்கள் வழங்கப்பட்டுள்ளன. சில அதிகார தத்துவங்களைத் தானே வைத்திருக்கின்றது.

## பாராளுமன்றத்தின் அதிகாரங்கள்

1. கூட்டுறவுத்துறை சம்பந்தமான சட்டங்களை உருவாக்குதல்,
2. கூட்டுறவுத்துறை சம்பந்தமான சட்டங்களில் திருத்தங்கள் மாற்றங்களை ஏற்படுத்தல்.
3. விசேட ஏற்பாடுகள் சட்டங்களை உருவாக்கல்.
4. ஆணைக்குழுக்கள், விசாரணைக் குழுக்கள் ஆகியவற்றை நியமித்தல்.
5. அவற்றின் அறிக்கைகளை ஆராய்ந்து நடைமுறைப் படுத்த வேண்டியவற்றைத் தீர்மானித்தல்.
6. மந்திரியால் உருவாக்கும் விதிகளை ஆராய்ந்து அங்கீகரிப்பதனை முடிவு செய்தல்,
7. இலங்கையில் அல்லது அதன் எப்பாகத்திலும் உற்பத்தி செய்யப்படும் விளைபொருள்களை அங்கத்தவர், அங்கத்தவரல்லாதோர் அப்பிரதேசத்திலமைந்த கூட்டுறவுச் சங்கத்துக்கே விற்பனை செய்யவேண்டுமென அமைச்சரினால் பிறப்பிக்கப்பட்ட கட்டளையை ஆராய்ந்து அங்கீகரித்தல் அல்லது மறுத்தல்.
8. சட்டத்தின் மூலம் எந்த ஒரு அதிகாரிக்காவது ஒதுக்கப்படாத கருமங்கள் யாவற்றையும் செய்யும் அதிகாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மந்திரி

மந்திரியானவர் தமக்குள்ள அதிகாரங்களையும் தத்துவங்களையும் தானே பயன்படுத்தலாம். அல்லது செயலாளர் பிரதிச் செயலாளர் உதவிச் செயலாளர் போன்றோருக்குத் தத்துவமளித்து அவர்கள் மூலம் பயன்படுத்தலாம்.

### அதிகாரங்கள்

1. பாராளுமன்றச் சட்டங்களை நிறைவேற்றுதல்

2. சட்டத்துக்கமைய ஆணைக்குழுக்களை நியமித்தல்

3. ஆணைக்குழுக்களுக்குரிய பிரமாணங்களைச் சட்டத்துக்கமைய ஆக்கி வெளியிடல்

4. சட்டத்துக்கமைய வேண்டிய விதிகளை உருவாக்குதல்

5. ஆணையாளரால் பதிவு மறுக்கப்பட்ட சங்கம் சம்பந்தமாகச் செய்யப்படும் மேன்முறையீடுகளை ஆராய்ந்து இறுதி முடிவு செய்தல்.

6. சில சந்தர்ப்பங்களில் இலங்கையில் அல்லது இலங்கையின் எப்பாகத்திலும் உற்பத்தி செய்யப்பட்ட விளைபொருள்களைப் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்துக்கே சங்கத்தின் உறுப்பினர், உறுப்பினரல்லாதோர் யாவரும் கட்டாயமாக விற்பனை செய்தல் வேண்டுமெனக் கட்டளையிட்டு வெளிப்படுத்தல்.

7. மேற்படி கட்டளையை நீக்கிவிடல்

8. ஆணையாளரால் (பதிவாளர்) சங்கமொன்றைக் கலைப்பதற்குக் கட்டளையிட்ட தேதியிலிருந்து இருமாதகால எல்லைக்குள் உறுப்பினர் அல்லது கடன் கொடுத்தவர் ஒருவரோ பலரோ கலைத்தற் கட்டளைக்கெதிராகச் செய்யும் மேன்முறையீடுகளை ஆராய்ந்து இறுதி முடிவு செய்தல்.

9. பதிவழிக்கப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கமொன்றின் கடன் கொடுப்போராயுள்ள வங்கியொன்று, ஒழிப்போனால் அல்லது பதிவாளரினால் இடப்படும் ஏதேனும் கட்டளைக்கெதிராக அக்கட்டளையிடப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாத கால எல்லைக்குள் செய்யப்படும் மேன் முறையீடுகளை ஆராய்ந்து இறுதி முடிவு செய்தல்.

10. சட்டத்திலுள்ள எதனையும் பொருட்படுத்தாது அமைச்சர் ஒவ்வொரு விடயத்திலும் சிறப்புக் கட்டளை மூலமும் அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமத்தக் கூடிய நிபந்தனைகளுக்கமையவும் பதிவு பற்றி இச் சட்டத்தின் தேவைப்பாடுகள் எவற்றிலிருந்தும் ஏதே னும் சங்கத்துக்கு விலக்களித்தல்.

11. சட்டத்தின் ஏற்பாடுகள் எவற்றிலிருந்தும் ஏதேனும் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்துக்கு அல்லது கூட்டுறவுச் சங்க வகுப்புக்களுக்குப் பொதுவான அல்லது சிறப்பான கட்டளைகள் மூலம் விலக்களித்தல்.

12. சட்டத்தில் செய்யப்பட்ட திரிபுகளுடன் கூடிய ஏற்பாடுகள் ஏதேனும் சங்கத்துக்கு அல்லது சங்க வகுப்புகளுக்கு ஏற் புடையனவாதல் வேண்டுமெனப் பணித்தல்.

13. சட்டத்தின் கீழ் அல்லது விதிகளின் கீழ் பதிவாளருக்குள்ள தத்துவங்கள் எல்லாவற்றையும், அல்லது அவற்றுள் எவற் றையும் பொதுவான அல்லது சிறப்பான கட்டளையினுல் பிரதி, சிரேஷ்ட உதவி, அல்லது உதவி ஆணையாளருக்கு அளித்தல்.

14. பதிவாளரால் மறுக்கப்பட்ட சங்கத்தின் துணைவிதித் திருத் தம் பற்றிய மேன் முறையீட்டுக்களை ஆராய்ந்து இறுதி முடிவெடுத்தல்.

## கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் (பதிவாளர்)

இலங்கைக் கூட்டுறவுச் சட்டம் பதிவாளர் ஒருவரையும் (ஆணை யாளர்) அவசியமாகக் கூடிய எண்ணிக்கையரான பிரதி, சிரேஷ்ட உதவி, உதவி பதிவாளர்களையும் (ஆணையாளர்கள்) நியமிக்க வகை செய்துள்ளது.

பிரதி ஆணையாளர்கள் ஆணையாளரின் பல்வேறு பொறுப்புக்களை யும் பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் பொறுப்பாக ஒவ் வொரு பிரதி ஆணையாளர்கள் நியமிக்கப்படுவார்கள். நிருவாகம், நுகர்ச்சி விடயங்கள், விவசாயம், கைத்தொழில், எண்பார்வை போன்ற விடயங்களைக் கொண்ட பகுதிகளாகப் பிரிக்கப்படலாம்.

ஆணையாளரின் அல்லது பிரதி ஆணையாளரின் செயல்களுக்கு உதவ அல்லது அவரின் பொறுப்புக்கள் சிலவற்றை ஏற்க சிரேஷ்ட உதவி ஆணையாளர்கள் நியமிக்கப்படுவார்கள். இவர்களுக்கும் ஒவ் வொரு துறை பொறுப்பாக ஒப்படைக்கப்படலாம்.

ஆணையாளர், பிரதி ஆணையாளர், சிரேஷ்ட உதவியாணையாளர் கள் என்போருக்கு உதவியாகவும், அவர்களின் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்வதற்குமாக பிரதான காரியாலய உதவி ஆணையா ளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடு முழுவதிலுமுள்ள கூட்டுறவு விடயங்களை இலகுவாகவும் விரைவாகவும் செயற்படுத்த அமைக்கப்பட்ட பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களக் காரியாலயங்களுக்கு ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உதவி ஆணையாளர்கள் நியமிக்கப்படுவார்கள். பொதுவாகப் பிராந்திய காரியாலயங்களுக்கு அபிவிருத்தி, பிரதி, எண்பார்வை என உதவி ஆணையாளர்கள் நியமிக்கப்படலாம்.

பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களக் காரியாலய உதவி ஆணையாளர்கள் அப்பிரதேசத்துக்கு ஆணையாளரின் பிரதிநிதியாக விளங்குவர். ஆணையாளரால் அளிக்கப்பட்ட அதிகாரங்களுக்குட் படத் தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதற் காக கூட்டுறவுப் பரிசோதகர்கள், கூட்டுறவு உப பரிசோதகர்கள் முதலானோரை நியமிப்பர். இவர்கள் உதவி ஆணையாளரின் பிரதி நிதிகளாக கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சென்று தமது கடமைகளை ஆற்றுவர். பிரதி, சிரேஷ்ட உதவி, உதவி ஆணையாளர்களுக்கு இரு வகையில் அதிகாரங்களும் தத்துவங்களும் கிடைக்கலாம். அவை யாவன.

1. ஆணையாளர் தமது பிரதிநிதி என்ற வகையில் தமது அதி காரங்கள் தத்துவங்களில் சிலவற்றை இவர்களுக்கு அளிக் கலாம்.

2. மந்திரியின் பொதுவான அல்லது சிறப்பான கட்டளை யொன்றினால் ஆணையாளருக்குள்ள அதிகாரங்கள் தத்துவங் கள் முழுவதையுமோ அல்லது அவற்றில் சிலவற்றையோ இவர்களுக்கு அளிக்கலாம்.

## ஆணையாளர் (பதிவாளர்) அதிகாரங்கள்

1. கூட்டுறவுச் சங்கப் பதிவு விண்ணப்பத்தை ஏற்றுப் பதிவு செய்தல்.

2. கூட்டுறவுச் சங்கப் பதிவு விண்ணப்பத்தை மந்திரிக்கு மேன் முறையீடு செய்யலாம் என்ற நிபந்தனையுடன் பதிவை நிராகரித்தல்.

3. துணைவிதிகள், துணைவிதி திருத்தங்கள் என்பவற்றை அங்கீ கரித்தல் அல்லது மறுத்தல்.

4. சங்க உறுப்புரிமை மறுக்கப்பட்ட விண்ணப்பதாரரின் மேன் முறையீட்டை ஆராய்ந்து இறுதித் தீர்ப்பளித்தல்.

5. உறுப்புரிமை கோரும் அங்கத்தவரின் வயதுத் தகமை வதி விடத் தகமை என்பவற்றில் பிரச்சினை ஏற்படும்போது இறுதித் தீர்ப்பு அளித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பொதுக் கூட்டத்தை ஆணையாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டவர் அழைத்தல்.

7. எந்தப் பொதுக் கூட்டத்திலும் ஆணையாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டவர் கலந்துகொள்ளல்,

8. நிருவாகசபை, இயக்குனர் சபை, கிளைக்குழு, கிளைப் பொதுச் சபை என்பவற்றை அழைத்தல்

9. மேற் கூறப்பட்டவற்றில் கலந்து கொள்ளல்.

10. புதிதாகப் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்துக்கு ஒரு தற்காலிக பணிப்பாளர் சபைக்கு உறுப்பினர்களை நியமித்தல்.

11. நியமித்த உறுப்பினர்களை நீக்குதல்

12. துணைவிதிகள் மாருக இருப்பினும் எந்தவொரு கூட்டுறவுச் சங்கத்தின் நிருவாக சபைக்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களை நியமித்தல்.

13. எந்தவொரு சங்கத்துக்கும் தலைவர் அல்லது உப தலைவர் அல்லது இருவரையும் நியமித்தல்

14. குறிப்பிட்ட காலத்துக்குரிய சங்கக் கணக்குகளின் விபரங்களை (பரீட்சை மீதி வியாபார இலாப நட்டக் கணக்கு, ஐந்தொகை) குறிப்பிட்ட திகதிக்கு முன் சமர்ப்பிக்கும்படி கட்டளையிடல்

15. அவ்விதம் சமர்ப்பிக்காதுவிடின் தானே ஆட்களை நியமித்து கணக்குகளைத் தயாரிக்கச் செய்வித்தல். அதற்குரிய செலவினங்களைச் சங்கத்தில் இருந்து அறவிடல்

16. தகுதியற்ற நிருவாக உறுப்பினர், அலுவலர் ஆகியோரை அப்பதவியில் இருந்து நீங்கும்படி கட்டளையிடல்

17. நிருவாக சபை (இயக்குனர்சபை)யைக் கலைத்தல்

18. நிலையான சொத்துக் கொள்முதலுக்கு அங்கீகாரம் அளித்தல்

19. இலாபப் பங்கீட்டுக்கு அங்கீகாரம் அளித்தல்

20. கலைக்கப்பட்ட சங்க அலுவலர்களை இயங்கும் சங்கங்களில் வெற்றிடம் உள்ள பதவிகளில் நியமிக்குமாறு கட்டளையிடல்

21. வருடமொரு முறையாவது சங்கத்தின் கணக்கினை ஆய்வு செய்தல். பதிவாளர் அல்லது எழுத்து மூலமான பொது அல்லது சிறப்புக் கட்டளை பெற்றவர் கணக்காய்வினைச் செய்வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. அமைப்பு, தொழிற்பாடு, நிதிநிலை பற்றி பதிவாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டவர் விசாரணை செய்தல்

23. பதிவாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டவர் புத்தகங்களைப் பரிசோதனை செய்து நுண்ணாய்வு செய்தல்

24. நுண்ணாய்வு விசாரணையின்போது மோசடிகள் கண்டுபிடிக்கப்படுமிடத்து சங்கத்துக்குரிய ஆவணங்கள், புத்தகங்கள் சொத்துக்கள் போன்றவற்றைத் தமது அல்லது தம்மால் அதிகாரமளிக்கப்பட்டவரது பாதுகாப்பில் வைத்திருத்தல்

25. விசாரணை, நுண்ணாய்வுகளில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு உரியவர்களைப் பணித்தல்

26. சங்கத்தைக் கலைத்தல்

27. சங்கத்தைக் கலைப்பதற்கு ஒழிப்போன் அல்லது ஒழிப்போர்களை நியமித்தல்

28. ஒழிப்போர்களை விலக்கல், மாற்றல்

29. ஒழிப்போனால் கஷ்டமுறும் எத்திறத்தவரது கோரிக்கைளை விசாரணை செய்து முடிவு செய்தல்

30. சங்கப் பிணக்குகள் சம்பந்தமான முறையீடுகளை ஏற்று விசாரணை செய்து தானே முடிவு செய்தல்

31. சங்கப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு மத்தியஸ்தர்களை நியமித்தல். விலக்கல், மாற்றல்

32. மத்தியஸ்தர்களால் துன்புறுவோரின் முறையீடுகள் சம்பந்தமாக இறுதி முடிவு செய்தல்

33. பிணக்குகள் சங்கத் தொடர்புடையதா இல்லையா என்னும் பிரச்சனை எழும்போது அதற்கு இறுதித் தீர்வு அளித்தல்

34. சங்க உறுப்பினர், ஊழியர் சங்கத்தில் உரிமை உடையவராக இருக்கின்றாரா இல்லையா என்னும் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. சங்கத்தின் அமைப்பிலும் தொழிற்பாட்டிலும் பங்குபற்றியிருந்த எவரேனும் ஆள் அல்லது ஆள் தொகுதியிடமிருந்து சங்கத்துக்கு வருமதியான தொகைகளைச் செலுத்துமாறு பணித்தல்

36. சட்டம் எவ்வாறு இருப்பினும் ஏதேனும் சங்கம் வங்கியுடன் நடாத்திய கொடுக்கல் வாங்கல் பற்றி வங்கியிடம் ஏதேனும் தகவல்களைக் கேட்டல்

37. சங்கம் வங்கியுடன் வைத்திருந்த கணக்கின் விபரங்கள் அடங்கிய படியொன்றைக் கேட்டல்

38 சங்கத்தினால் வரவுக்குச் செலுத்தப்பட்ட அல்லது சங்கத்திற்கு புறக் குறிப்பிட்ட எவையேனும் காசோலைகளைக் காண்பிக்கும்படி கேட்டல்

39. கூட்டுறவு மேல்மிகை நிதியை சட்டம் அனுமதித்த செயல்களுக்கு சுயவிருப்பின் பேரில் அளித்தல்.

40. சட்டம் விதி, துணைவிதிகள் சம்பந்தமான விளக்கங்கள் பற்றிய இறுதி முடிவு வழங்கல்

இவற்றைப் பற்றி சட்டம், விதி. துணைவிதி என்பவற்றில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. இந்நூலில் பொதுச் செயற்பாடுகள் என்றும் அத்தியாயத்திலும், சட்ட மூலகங்கள் என்னும் அத்தியாயத்திலும் இவற்றுட் பல விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. இலங்கைக் கூட்டுறவு இயக்கத்தின் முக்கிய நிகழ்வுகள்

| ஆண்டு | நிகழ்வுகள் |
|---|---|
| 1909 | இலங்கையிலுள்ள விவசாயிகளின் நிலையை ஆராய்வதற்காக விவசாய வங்கிக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அக்குழுவால் கடன் உதவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனச் சிபார்சு செய்யப்பட்டமை. |
| 1911 | கூட்டுறவுக் கட்டளைச் சட்டம் (கடனுதவு சங்கங்கள் அமைப்பதற்கு) இயற்றப்பட்டமை. |
| 1912 | முதலாவது கடனுதவு சங்கம் வெல்லபட பத்து என்னும் கிராமத்தில் உருவாகிப் பதிவு செய்யப்பட்டமை. |
| 1913 | விவசாய இலாகாப் பணிப்பாளர் கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்யும் பதிவாளராக நியமனம் பெற்றமை |
| 1916 | உள்ளூர்க் கடனும் அபிவிருத்தி நிதியும் உருவாக்கல் பற்றிய 1916-ம் ஆண்டு 220-ம் இலக்கக் கூட்டுறவுக் கட்டளைச் சட்டம் இயற்றப்பட்டமை. |
| 1921 | கடனுதவு சங்கங்கள் மட்டுமல்லாது ஏனையவகைச் சங்கங்களும், மேல் சங்கங்களும் பதிவு செய்வதற்கு ஏற்ற வகையில் கூட்டுறவுக் கடனுதவு சங்கங்கள் கட்டளைச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டமை. |
| 1924 | கொழும்பில் கூட்டுறவு மாகாண சமாசம் பதிவு செய்யப்பட்டமை. அதுவே முதலாவது பதிவு செய்யப்பட்ட மேல் சங்கமாகும். |
| 1926 | கூட்டுறவுச் சங்கங்களுக்கான இணைப் பதிவாளராக W, K. H. கெம்பல் அவர்கள் பதவி ஏற்றமை |
| 1927 | முதலாவது கூட்டுறவுப் பண்டகசாலைச் சங்கம் தோட்டத் தொழிலாளரிடையே (பசறைத் தோட்டம்) ஆரம்பித்துப் பதிவு செய்யப்பட்டமை. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1929 1 முதலாவது கூட்டுறவு மாகாண வங்கி யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டமை.

2 கூட்டுறவுச் சங்கங்களைப் பரிசோதனை செய்வதற்காகக் கௌரவ பரிசோதகர்கள் நியமிக்கப்பட்டமை.

1930 விவசாய இலாகாவில் இருந்து தனியாகக் கூட்டுறவு இலாகா பிரிக்கப்பட்டுத் தனியாக இயங்க ஆரம்பித்தமை.

1934 யாழ்ப்பாணம் மலையாள புகையிலை விற்பனவுச் சங்கம் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டமை;

1935 திரு. W. K. H. கெம்பல் அவர்கள் பதிவாளர் பதவியிலிருந்து நீங்கல். திரு; H. கல்வேட் அவர்கள் ஒரு வருடத்துக்குப் பதிவாளராக நியமனம் பெற்றமை

1936 கூட்டுறவுச் சங்கங்களின் சட்டங்களைச் சட்டங்களை ஒன்றிணைப் பதற்கான திருத்தம் செய்யப்பட்டமை.
மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டமை.

1937 வடமாகாண கூட்டுறவு மேற்பார்வைச் சங்கம் ஆரம்பிக்கப் பட்டுப் பதிவு செய்யப்பட்டமை.
நிருவாக கணக்குப் பரிசோதனை நிதி ஒன்று உருவாக்கப் பட்டமை

1938 கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் பதவிக்கு முதல் தடவையாக இலங்கையர் ஒருவர் நியமிக்கப்பட்டமை (J. D. சொய்சா அவர்கள்)

1942 இரண்டாவது மகாயுத்தம் காரணமாக ஏற்பட்ட பொருள் தட்டுப்பாட்டின் காரணமாகக் கிடைக்கும் பொருள்களை எல்லா மக்களுக்கும் இலகுவாகக் கிடைக்கச் செய்யும் பொருட்டு அரசு கூட்டுறவுப் பண்டகசாலைகளை அமைக்கும் பிரசார இயக்கத்தை மேற்கொண்டு பல கூட்டுறவுப் பண் டகசாலைகள் பதிவுசெய்யப்பட்டமை.

தென்னை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட் டுப் பதிவு செய்யப்பட்டமை.

வடபகுதி விவசாய விளைபொருள் உற்பத்தி விற்பனையாளர் சமாசம் ஆரம்பித்துப் பதிவு செய்யப்பட்டமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1943 கூட்டுறவுக் கல்லூரி பொல்கொல்லையில் ஆரம்பிக்கப்பட்டமை. கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் கூட்டுறவு இலாகாவால் ஆரம்பிக்கப்பட்டமை.

கூட்டுறவுப் பண்டகசாலைகளின் சமாசங்கள் உருவாக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டமை.

1945 கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் ஒன்று நிறுவப்பட்டமை.

1947 விவசாய விளைபொருள் உற்பத்தி விற்பனைச் சங்கங்களை உருவாக்கும் முயற்சியிலீடுபட்டு இச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டமை.

1949 கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திணைக்களமும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திணைக்களமும் ஒன்றிணைக்கப்பட்டமை.

கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனம் கூட்டுத்தாபன அமைப்பு முறைக்கு மாற்றியமைக்கப்பட்டமை.

கூட்டுறவுச் சமஷ்டி வங்கியொன்று உருவாக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டமை.

1950 கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் 6000 பேர் கலந்துகொண்ட அகில இலங்கை மகாநாடு கொழும்பில் நடைபெற்றமை.

1952 இலங்கை மீன் விற்பனவுச் சங்கம் உருவாக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டமை.

1955 இலங்கைக் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம் உருவாக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டமை.

1956 கூட்டுறவுத் திணைக்களத்தில் வெளிப்புறக் கல்வி விஸ்தரிப்புப் பகுதி நிறுவப்பட்டமை.

1957 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டுப் பல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டமை.

1961 மக்கள் வங்கி உருவாக்கப்பட்டமை.

1962 இலங்கை விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் உருவாக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டமை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1964 இலங்கை கூட்டுறவுக் கைத்தொழில் சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டமை.

1966 இலங்கை நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டமை.

1968 இலங்கையின் கூட்டுறவு இயக்கம் சம்பந்தமான விடயங்களை ஆராய்வதற்காக லெயிட்லோ தலைமையில் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டமை.

1970 லெயிட்லோ ஆணைக்குழு அறிக்கையின் அடிப்படையில் இலங்கைக் கூட்டுறவுச் சங்கங்களின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டமை.

1971 தேசிய வீடமைப்பு அபிவிருத்திச் சங்கமொன்று உருவாக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டமை.

1972 இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனம் புனரமைக்கப்பட்டு ஸ்ரீ இலங்கா தேசிய கூட்டுறவுச் சபை உருவாக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டமை.

1973 கூட்டுறவு முகாமைச் சேவைகள் நிலையம் ஒன்று உருவாக்கப்பட்டமை

1976 கூட்டுறவு வியாபார நிலையங்கள் நவீனமயப்படுத்தியமை. ஊக்குவித்தல் கொடுப்பனவு முறை கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு நடைமுறைப்படுத்தியமை.

1978 கூட்டுறவு முயற்சிபற்றி ஆராய்ந்து சிபார்சு செய்வதற்காக கூட்டுறவுப் புனரமைப்புக் குழு (தேவநாயகம் குழு) நியமிக்கப் பட்டமை.

கூட்டுறவு விசேட ஏற்பாடுகள் சட்டம் (இல. 12) நிறைவேற்றப்பட்டமை.

1979 உணவுப் பங்கீட்டுப் புத்தகமுறை ஒழிக்கப்பட்டு உணவு முத்திரைத் திட்டம் அமுலாக்கப்பட்டு உணவு முத்திரைகளைத் திரட்டும் நிறுவனமாகப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நியமிக்கப்பட்டமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. கூட்டுறவின் தந்தை

பொருளியலின் தந்தை அடம் ஸ்மித். பொதுவுடைமைத் தத்துவத்தின் தந்தை கார்ல்மார்க்ஸ் என்று அறிஞர்கள் கூறுவதைக் கேட்டிருக்கின்றோம். முதன் முதல் குறிப்பிட்ட துறையின் கருத்துக்களை ஒழுங்குபடுத்தி அறிவியல் ரீதியாக வெளியிட்டவர்களை அத் துறையின் தந்தை எனப் பாராட்டுவது அறிஞர்கள் மரபு. கூட்டுறவு இயக்கத்தின் தந்தை என றேபேட் ஒவன் அழைப்பதற்கு உரிமை பெற்றவராவர்.

இவர் இங்கிலாந்திலுள்ள நியூட்டன் நகரில் 1771-ம் ஆண்டு மே மாதம் 14-ந் தேதி பிறந்தார். இளமையில் வறுமையில் வாடி தொழிற்சாலைகளிலும் கடைகளிலும் பணியாற்றினர். அவரது அயராத உழைப்பாலும் திருமணத்தின் வழியாகவும் கிளாஸ்கோ நகரிலுள்ள தொழிற்சாலைக்கு அதிபரானர். ஆலைச் சீர்கேடுகளை எண்ணிப் பார்த்து அவற்றைச் சீர்திருத்த தானே வழிகாட்டியாகத் தமது ஆலைகளில் சீர்திருத்தங்களைச் செய்தார்.

கைத்தொழிற் புரட்சியின் பின் ஏற்பட்ட பொருளாதார அமைப்பு முறை பற்றிய சிந்தனைகளைப் பல அறிஞர்கள் வெளியிட்டனர். பொருளியலமைப்பில் போட்டி நிலவினுல் சமூகச் சீர்கேடுகள் மறைந்துவிடும் என்று அடம் ஸ்மித், ரிகார்டோ, மால்தஸ் போன்றோர் கருத்துக்களை வெளியிட்டார்கள். புரட்சியின் மூலம் உற்பத்திக் காரணிகளைக் கைப்பற்றி சமுதாய உடமையாக்கி சமுதாய நலனை இலட்சியமாகக் கொண்ட பொருளாதார அமைப்புப் பற்றிய சிந்தனைகளை கார்ல்மார்க்ஸ் வெளியிட்டார். கூட்டுறவின் மூலம் போட்டியைத் தவிர்த்து, கூட்டுறவுக் கொள்கைகளின் அடிப்படையில் சங்கங்கள் இயக்கங்கள் மூலம் பொருளாதார சமத்துவமும் அறஞ்சார்ந்த வாழ்வு நெறிகளையும் கொண்ட சமுதாயத்தை அமைக்கலாம். நாம் மற்றவர்களுக்காகவும் மற்றவர்கள் நமக்காகவும் வாழ்கின்ற உயர் இலட்சிய சமுதாயம் உருவாகும் என்ற சிந்தனையை றேபேட் ஒவன் வெளியிட்டார்.

தொழிலாளர்கள் குறைகளை நிவர்த்தி செய்தல் பற்றித் தனது கட்டுரைகளை '' த இக்னேமிஸ்ற் '' ( The Economist ) என்னும் பத்திரிகையில் வெளியிட்டார். 1832-ம் ஆண்டு த கிறைசிஸ் ( The Crisis ) என்னும் பத்திரிகையை ஆரம்பித்து சமூக சீர்திருத்தக் கருத்துக்களையும் கூட்டுறவு இயக்கக் கருத்துக்களையும் வெளியிட்டார்; தமக்குத் தேவையான ரொட்டிகளை ஒவ்வொருவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்தனியே தமது வீடுகளில் தயாரிப்பதை விட பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து ஒரே இடத்தில் தயாரிப்பதினுல் உற்பத்திச் சிக்கனமும் உழைப்புச் சிக்கனமும் ஏற்பட்டு எல்லோரும் இலாபம் அடையலாம் என்பதை விளக்கினுர். தொழிலாளர்கள் பிறரது தயவை எதிர்பாராமல் தமது சொந்த முயற்சியினுலேயே முன்னேற வேண்டும் என்ற கருத்தினை வெளியிட்டார். நீங்களே உங்கள் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும். நீங்களே உங்கள் வியாபாரியாக வேண்டும். அப்போது உங்களுக்குத் தேவையான நல்ல பொருள்களைக் குறைந்த செலவில் பெறமுடியும். என்ற கருத்தையும் வெளியிட்டார்.

## தமது ஆலையில் மேற்கொண்ட சீர்திருத்தங்கள்

1. தொழில் புரியும் வேலைநேரத்தைக் குறைத்து நியாயமான வேலைநேரமாக்கியது
2. நியாயமான கூலி (சம்பளம்) வழங்கியமை
8. சிறுவர்களை வேலையிலிருந்து நீக்கி அவர்களுக்குக் கல்வி வசதி வழங்கியமை
4. தொழிற்சாலையில் சுகாதார வசதிகள் ஏற்படுத்தியமை
5. கூலியை விடத் தொழிலாளர்களுக்கு இலாபத்தில் ஒரு பகுதியை வழங்கியமை
6. தொழிலாளர்கள் புரியுந் தவறுகளுக்கு தண்டனை வழங்கும் முறைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தியமை போன்றவையாகும்.

## சீர்திருத்த முயற்சிகள்

### (1) இங்கிலாந்தில் தொழிலாளர் குடியிருப்புத் திட்டம்

தொழிலாளர்கள் முன்னேற அவர்களின் வீட்டுச் சூழ்நிலைகளை மாற்ற வேண்டும். அதற்காகத் தொழிலாளர் குடியிருப்புத் திட்டங்களை ஏற்படுத்த முயற்சித்தார். அக்குடியிருப்புக்களில் உள்ள தொழிலாளர்கள் பொதுச்சங்கம் அமைத்து தமது பொதுப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். அங்கு உயர்வு, தாழ்வு என்ற பேதமிருக்காது. போட்டி மனப்பான்மை, இலாப வேட்கையற்ற குடியிருப்பாக அமைக்கப்படும். இதற்குரிய திட்டத்தைத் தயாரித்து அரசாங்க ஆதரவை நாடினுர். அரசாங்கம் ஆதரவு கொடுக்க மறுத்து விட்டது. செல்வந்தர்களும் மதவாதிகளும் இத்திட்டத்தை ஏளனம் செய்தனர். பொதுமக்களும் ஒப்புதல் அளிக்கவில்லை. இதனுல் மனமுடைந்து அமெரிக்கா சென்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### (2) அமெரிக்காவில் தொழிலாளர் குடியிருப்புத் திட்டம்

அமெரிக்காவில் உள்ள இண்டியான மாகாணத் தலைவரைச் சந்தித்து நியூஹார்மனி என்னும் இடத்தில் 30,000 ஏக்கரை வாங்கித் தொழிலாளர் குடியிருப்பை ஏற்படுத்தினர். இக்குடியிருப்பில் பண்ணைகள், சிறு தொழிற்சாலைகள், மாதாகோயில் என்பவற்றை அமைத்தார். இக்குடியிருப்புகள் கூட்டு உழைப்பு, கூட்டுப் பொறுப்பு என்ற தத்துவங்களின் அடிப்படையில் இயங்கத் திட்டங்கள் வகுத்தார். தொழிலாளரின் கல்வி அறிவின்மை, சுயநலம், திறமையின்மை போன்ற காரணங்களால் இக்குடியிருப்புகள் வெற்றி பெறவில்லை. எனவே ரொபேட் ஓவன் இங்கிலாந்து திரும்பினர்.

### (3) உழைப்புப் பத்திரத் திட்டம்

சமுதாய அநீதிகளுக்கு மூலகாரணம் இலாப வேட்கை. இலாப வேட்கை எழுவதற்கு பண உபயோகமே காரணம். பணத்துக்குப் பதிலாக உழைப்புப் பத்திரத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தினர். பொருள் உற்பத்தியில் உழைப்பு நேர அளவைக் கணித்து இப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. இங்கிலாந்தில் கூட்டுறவு'அமைப்பை ஒத்த ''தேசிய சமஉழைப்புப் பரிவர்த்தனை நிலையம்'' ஒன்றை அமைத்தார். தரமில்லாத பொருள்களையும், விலைபோகாத பொருள்களையும் தொழிலாளர் கொண்டுவந்து குவித்தனர். உழைப்புப் பத்திரத்தை வாங்கவும் விற்கவும் கள்ளச் சந்தைகள் தோன்றின. இதனுல் அவரது திட்டம் வெற்றிபெற முடியவில்லை.

இம் முயற்சிகளால் ரோபேர்ட் ஓவன் தனது திரண்ட செல்வத்தை இழந்தார். அவரது இறுதிநாட்கள் துயரமிகுந்தவை. வறுமையும் பிணியும் வாட்டும் அனுதையானர். ''நான் என் காலத்தை விட முந்திப் பிறந்து விட்டேன். எனது வாழ்க்கை பயனற்றதாகி விடவில்லை. முக்கியமான சில உண்மைகளை உலகுக்கு எடுத்துக் கூறியுள்ளேன்'' என மரணப் படுக்கையில் கூறினர்.

''நல்லெண்ணத்துடன் சகலரும் ஒன்றிணைந்து பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்வது சர்வதேச மனித சமுதாயத்தின் அதிர்ஷ்டமாகும்'' எனப் பிரித்தானியக் கூட்டுறவு இயக்கம் இந்த வாக்கியங்களை அவரது கல்லறையில் பொறித்து அவருக்கு அமரத்துவம் வழங்கியுள்ளது.

அவரது தீர்க்க தரிசன வார்த்தைகள் பொய்த்து விடவில்லை. சர்வதேச ரீதியாக அவரது கருத்துக்கள் இடம்பெற்று விட்டன. அவர் கண்ட கூட்டுறவுச் சமுதாயத்தை அமைக்கும் அணியில் 25 கோடி மக்கள் திரண்டுள்ளனர். அவரது கனவுகள் செயலுருப் பெறுங் காலத்தைக் கூட்டுறவாளர்கள் அண்மித்துக்கொண்டிருக்கிறர்கள். எனவே ரோபேர்ட் ஓவனின் இலட்சியக் கூட்டுறவுச் சமுதாயம் அதிவிரைவில் மலரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூல் உருவாக உதவியவை

### (I) நூல்கள்

1. கூட்டுறவு அல்லது ஐக்கிய வாழ்வு
   திரு. அ. அருளம்பலம்
2. கூட்டுறவு உத்தியோகத்தர் தராதரப் பத்திரம்
   பொல்கொல்லைக் கூட்டுறவு வெளியீடு
3. கூட்டுறவுக் கொள்கைகள்
   திரு. P. E. வீரமன்
4. இலங்கைக் கூட்டுறவு இயக்கம்
   திரு. G. குருகுலசூரியா
5. **Multi - Purpose Cooperative Societies in South-East Asia:**
   (தென் கிழக்காசியாவில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்)
   திரு J. M. Rana
6. கூட்டுறவு திரு. அ. குழந்தை
7. இந்தியக் கூட்டுறவுச் சட்டங்கள்
8. பல வணிக பொருளியல் நூல்கள்

### (II) சட்டமூலங்கள்

1. 1972-ம் ஆண்டு 5-ம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம்
2. 1978-ம் ஆண்டின் 12-ம் இலக்க கூட்டுறவுச் சங்கங்களின் விசேட ஏற்பாடுகள் சட்டம்
3. 1973-ம் ஆண்டின் கூட்டுறவுச் சங்க விதிகள்
4. கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுப்பிரமாணங்கள்
5. பலவகைச் சங்கங்களின் பல துணைவிதிகள்

### (III) பத்திரிகை சஞ்சிகைகள்

1. ஐக்கியதீபம் 2. பொருளியல் நோக்கு

### (IV) ஏனையவை

1. பல்வேறு சங்கங்களின் எண்பார்வை அறிக்கைகள்
2. ,, ,, வருடாந்த அறிக்கைகள்
3. கூட்டுறவு ஆணையாளர், கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சுற்று நிருபங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச கூட்டுறவு இணைப்பு நிறுவனம்
1966-ல் பிரகடனப்படுத்திய

# ஆறு கூட்டுறவுக் கொள்கைகள்

- தன் விருப்பார்ந்த தடையற்ற (திறந்த) உறுப்புரிமை
- ஜனநாயக முறையில் அமைந்த நிருவாகமும் கட்டுப்பாடும்
- முதலுக்கு வரையறுக்கப்பட்ட வட்டி வீதம்
- இலாபம் (மேலதிகம்) அங்கத்தவரிடையே சமத்துவமாகப் பகிரப்படல்
- கூட்டுறவுக் கல்வி
- கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே ஒத்துழைப்பு

**தெல்லிப்பளைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
தெல்லிப்பளை.**

விவேகானந்தா பிறின்ரேஸ் லிமிட்டெட், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org